திருக்குறளும் பிற உரையாசிரியர்களும்

டாக்டர். மு. கோவிந்தசாமி

அண்ணாமலைப்
பல்கலைக்கழகம்

திருக்குறளும்

பிற உரையாசிரியர்களும்

நூலாசிரியன் :

டாக்டர். மு. கோவிந்தசாமி, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,

தமிழ்த் துணைப்பேராசிரியர்,

திருக்குறள் ஆராய்ச்சித் துறை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அண்ணாமலை நகர்

முதற் பதிப்பு: 1975

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,

திருக்குறள் ஆராய்ச்சி வெளியீடு - 3

விலை ரூ. 12

பிற திருக்குறள் வெளியீடுகள் :

காப்பியங்களில் திருக்குறள்
ச. தண்டபாணி தேசிகர்

திருக்குறள் பொருளகராதி
டாக்டர் மு. கோவிந்தசாமி

சரஸ்வதி பிரஸ், கடலூர் - 2

உள்ளுறை

பக்க எண்

துணைவேந்தர் முன்னுரை
பேராசிரியர் முன்னுரை
நூலாசிரியர் முன்னுரை

1. திருக்குறளும் இளம்பூரணரும் 1
2. திருக்குறளும் நச்சினார்க்கினியரும் 77
3. திருக்குறளும் சேனாவரையரும் 153
4. திருக்குறளும் பேராசிரியரும் 165
5. திருக்குறளும் அடியார்க்கு நல்லாரும் 182
6. திருக்குறளும் தெய்வச்சிலையாரும் 189
7. திருக்குறளும் நக்கீரரும் 204
8. திருக்குறளும் திருவாய்மொழி வியாக்கியானமும் 209
9. திருக்குறளும் திருப்பாவை வியாக்கியானமும் 256
10. திருக்குறளும் பத்துப்பாட்டு உரையும் 262
11. திருக்குறளும் கலித்தொகை உரையும் 281
12. திருக்குறளும் பரிபாடல் உரையும் 284
13. திருக்குறளும் பதிற்றுப்பத்து உரையும் 288
14. திருக்குறளும் புறநானூற்று உரையும் 290
15. திருக்குறளும் சிலப்பதிகார உரையும் 294
16. திருக்குறளும் சீவகசிந்தாமணி உரையும் 301
17. திருக்குறளும் நீலகேசி உரையும் 306
18. திருக்குறளும் புறப்பொருள் வெண்பாமாலை உரையும் 307
19. திருக்குறளும் திவாகரமும் 311

Foreword

Tirukkural like all great classics has attracted many kinds of researchers scholarly, sentimental and critical. Naturally it has had a great influences on contemporary and subsequent thought and literature. References to the Kural in other writings offers a rich source of investigation to the serious student of the subject. After a direct and somewhat exhaustive exploration of the fountainhead, diversions into the side-lines of incidental references calls for a careful study. Dr. M. Govindasamy in his **Tirukkuralum Pira Uraiaciriyarkalum** enters this comparitively new field of investigation. Commentators on other classical works-grammatical and literary have quoted couplets from the Kural and interpreted them. The author has collected all these references; classified and evaluated them. This is laborious work needing patience, courage and critical acumen. Dr. M. Govindasamy possesses all these qualities in plenty. This literary excursion of the main-line off traditional study throws much new light on many thoughts of Thiruvalluvar. This book will further enhance the reputation of the author as a Kural scholar of discernment and ability.

The Kural wing of the Tamil Department of the Annamalai University under the over-all guidance of Dr. V. SP. Manickam has given a good account of itself. This is the fourth book that it is bringing out-all of good vintage. It is with great pleasure that I write these few lines to launch it forth.

Annamalai University,
Annamalainagar
8-8-75

S. P. Adinarayan

பதிப்புரை

டாக்டர் மு. கோவிந்தசாமி பலவுரைகளை ஆய்ந்து எழுதிய 'திருக்குறளும் பிறவுரையாசிரியர்களும்' என்ற நூலினை வள்ளற் பெருந்தகை அரசர் அண்ணாமலையார் நிறுவிய அண்ணாமலைப் பல்கலைக் கழகம், என்று பிறந்தவள் என்று உணரகில்லாத் தமிழ்த்தாயின் கன்னித் திருவடிக்கண் மூன்றாவது நாண்மலராகக் கைகூப்பி வைத்து வாழ்த்துப் பெறுகின்றது.

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருவாசகம், திவ்வியப்பிரபந்தம், சிவஞானசித்தியார் என்றினைய தமிழ் நூல்கள் நல்ல உரைகளைப் பெற்றிருந்தாலும் திருக்குறள் போல் உரைவளம் பெற்ற ஒரு நூல் யாண்டுமில்லை. பாரதியார் சொல்லில் வைத்துப் பாராட்டின், இது உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை.

தருமர், மணக்குடவர், பரிதி, காளிங்கர், பரிமேலழகர், குழந்தை, நாமக்கல்லார், பாவாணர் என்றவாறு திருக்குறளுக்கென்று தனியே உரை வரைந்த மூலவுரையாசிரியர் என ஓர் உரைக்கூட்டம் உண்டு. ஆனால் இவ்வுரைகள் மட்டுமே திருக்குறள் உரைகள் என்று சொல்லிவிடுதற்கில்லை. திருக்குறட்குப் பின்தோன்றிய எல்லாத் தமிழ் நூல்களுமே, வடிவு எதுவாயினும், குறளுரைகள் என்று பொதுப் படையாக மதிக்கத்தக்கவை.

சிறார் முதலாகக் கற்பவர்க் கெல்லாம் திருக்குறட் கல்வி அடிப்படையாக இருந்து வருவதனாலும், அதனைக் கற்றார் கேட்டார் சொன்னார் எல்லாம் மேன்மேலும் சிந்திப்பதனாலும், தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மானக் கற்றனைத்து ஊறும் தமிழறிவு என்று கருதுவதனாலும், வாழ்வு, மொழி முதலாக எல்லா இலக்கணத்துக்கும் இஃது இலக்கியப் பகுதியாகக் கதிரொளி வழங்குகின்றமையானும், எவ்வகை எழுத்தாளர்க்கும் பண்டைத்தாய்போலக் கருத்துப்பால்

சுரத்த லானும், எவர்தம் எழுத்திலும் கட்டளைக்கல்லில் பொன்கீற்றுப் போலத் திருக்குறட்கு உரையொளி வீசக் காண்கின்றோம்.

இந்நூற்றாண்டில் திருக்குறள் பற்றி எழுந்த உரைநடை - நூல் களிலும் தனிக்கட்டுரைகளிலும் குறட்குப் புத்துரைக் குறிப்புக்கள் உள. பிற பொருள் பற்றி எழுதப்பெற்ற நூல்களிலும் கட்டுரை களிலுங்கூட இவை இல்லாமல் இல்லை. இவை ஒரு பாலாகப் பன்-மொழியில் வந்துள்ள மொழிபெயர்ப்புக்களும் குறட்குப் புதுக்கருத்து நல்குவன. இவ்வெல்லாம் தேனீயனைய ஒருவர் முயற்சியால் தொகுக்-கப்படின் அது திருக்குறளின் தேனிறாலாகச் சுவைதரும்.

டாக்டர் மு. கோவிந்தசாமி எழுதியுள்ள இந்நூல் திருக்குற-ளைத் தம் உரைகளில் மேற்கோளாக எடுத்தாண்ட இடைக்கால இலக்-கண இலக்கிய வுரையாசிரியர்களின் மேலது. தமிழ்ப் பெரு முதனூலான தொல்காப்பிய இலக்கணத்தின் உரையாசிரியர்கள் ஆகிய இளம்-பூரணர் நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்-சிலையார் தம் உரைகளில் வந்திருக்கும் குறள்கள் அனைத்தையும் தொகுத்துக் காட்டுகின்றார். எவ்வெவற்றுக்கு அவை மேற்கோள் ஆகும் என்று தந்திருப்பதோடு எவ்வாறு மேற்கோளாம் எனத் திற-னாய்வு விளக்கமும் விரிவுறச் செய்துள்ளார். இத்திறன் இவ்வாய்வு நூலின் தனிச் சிறப்பு.

திருக்குறள் மக்கள் வாழ்வுக்கு இலக்கியமாகப் போற்றப்படு-வதை அறிவோம். எழுத்துக்கும் சொல்லுக்கும் அகத்திற்கும் புறத்-திற்கும் யாப்புக்கும் அணிக்கும் என்றினைய இலக்கணத்துறைக் கெல்லாங்கூட இவ்வளவு இலக்கியச் சோலையாகத் திருக்குறள் விளங்கியிருக்கின்றதே என்று இத்தொகுப்பால் அறியும்போது இறும்-பூது கொள்கின்றோம். 'எல்லாப் பொருளும் இதன்பாலுள' என்ற மதுரைத் தமிழ் நாகனார் பாராட்டின் மெய்ம்மையை உளங் கொள்கின்-றோம். விழுங்குதற்கு எளிய இனிய நிற மாத்திரை போலக் குறள் காட்டவும் கொள்ளவும் கற்பிக்கவும் சிறிதாக அமைந்திருத்தலின் திருக்குறள் இலக்கணவுரையாசிரியர்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

ஆசிரியர் டாக்டர் கோவிந்தசாமி நூலின் பிற்பகுதியில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், சிந்தாமணி, திவ்வியப்

பிரபந்த உரைகளில் திருக்குறட் சொற்களுக்குக் காணலாகும் புதுப்-பொருள்களையும் பொருள் விளக்கத்தையும் தம் குறிப்பொடு தந்துள்-ளனர். இப்பகுதி உரைக்குறிப்புத் தொகுதியாக இருந்தாலும், திருக்-குறட்கு இதுவும் ஓர் ஆராய்ச்சிப் பார்வை என்ற போக்கினைச் சாற்று கின்றது. இவ்வழிப்பட்ட ஆய்வு மேலும் பெருக வேண்டும் என்பது இதன் நோக்கம்.

அண்ணமலைப் பல்கலைக் கழகம் திருக்குறளை மேலோட்டமாகத் தொகுத்து அமையாமல் அதன் செறிவையும் தடங்களையும் ஆட்சியை-யும் ஆராயும் நுண் செலவுடையது. இம் முறையினை இதுவரை வந்த நூல்களும் இந்நூலும் 'வள்ளுவரும் கம்பரும்' என்ற நூலும் புலப்-படுத்தும். தமிழ்த் துறையாசிரியன்மார் அண்மையில் நடத்திய கருத்-தரங்கில் புதிய தலைப்புக்களில் ஆய்வுக்கட்டுரைகள் படித்தனர் என்பது குறிப்பிடத்தகும்.

தமிழ்த்துறையில் இதுகாறும் வெளிவந்த திருக்குறள் ஆய்வுகள்போல எதிர்காலத்து வரும் ஆய்வுகளும் ஈராயிரம் ஆண்டுக-ளாக வள்ளுவ வேந்தன் அறிவுலகில் குறளென்னும் ஒரு தனியாழியை உருட்டி இலக்கியச் செங்கோல் ஓச்சிவரும் தமிழாட்சியை விரிவுபட எடுத்துக் காட்டுவனவாகவே இருக்கும் என்று தமிழ்ப் பைஞ்ஞிலத்-துக்கு மகிழ்வொடு சொல்லிக் கொள்கின்றேன்.

வ. சுப. மாணிக்கம்,
தமிழ்ப்பேராசிரியர்.

திருக்குறளும் பிற உரையாசிரியர்களும்

முன்னுரை

இந்நூலில் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நக்கீரர் முதலிய இலக்கண உரையாசிரியர்களும் அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், புறநானூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, நீலகேசி, புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றின் பழைய உரையாசிரியர்கள் முதலிய இலக்கிய உரையாசிரியர்களும் எவ்வாறு குறட்பாக்களைத் தம் உரைகளில் மேற்கோள் காட்டுகின்றனர் என்பதும் அவர்தம் உரைக் குறிப்புக்கள் குறள் விளக்கத்திற்குதவுகின்றன என்பதும் விரிவாக ஆராயப் பெறுகின்றது.

இதனில் இலக்கண உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டுவது முற்பகுதியாகவும் இலக்கிய உரையாசிரியர்களின் உரைக் குறிப்புக்கள் குறள்களுக்கு விளக்கமாக அமைவது பிற்பகுதியாகவும் அமையும். இலக்கண உரைகாரர்களும் நாலாயிரப் பிரபந்த வியாக்கியான ஆசிரியர்களும் ஒரு காலத்தவர்களும் ஒருவர்க்கொருவர் தூண்டுதலளித்தவர்களுமாக இருந்திருக்கவேண்டும். இலக்கிய உரைவகையில் திருவாய்மொழி திருப்பாவை வியாக்கியானங்கள் குறள் விளக்கத்திற்கு அரியதொரு பெருந்துணையாக அமைகின்றன.

இலக்கண உரையாசிரியர் பற்றிய குறிப்புக்களை முன்பும் தமிழறிஞர்கள் தொகுத்துள்ளனர். இக்குறள் இவ்விலக்கணக் குறிப்பிற்காக மேற்கோள் காட்டப் பெற்றதெனத் தொகுத்தும் காட்டியுள்ளனர். ஆனால் இந்நூல் ஒவ்வொரு ஆசிரியரின் குறிப்புக்களையும் ஒரேயிடத்தில் வரிசைப்படுத்தித் தொகுத்துள்ளது. மற்றும் அக்குறள் பற்றிய ஒரு புது விளக்கமும் திறனாய்வும் விரிவான முறையில் செய்துள்ளது. இது தொல்காப்பிய இலக்கணக் குறிப்பிற்குக்கூட ஒரு நல்ல விளக்கமாக அமைகின்றது.

இப்பதிப்பின் அமைப்பு : அதிகார வரிசைப்படித் திருக்குறளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதனால் மேற்கோளாகக் காட்டப் பட்ட குறள்கள் வரிசையாகத் தெளியப்படும். ஓர் இலக்கண உரை-யாசிரியர் ஒரு நூற்பாவிற்குப் பல குறள்களை மேற்கோளாகக் காட்டி இருப்பரேல் முதலாவது நிற்கும் குறளைக் குறள் வரிசையில் அமைத்-திருக்கிறோம். அதன் பின்னர் உரிய இலக்கண நூற்பாவையும் அந்நூற்பாவிற்கு உரையாசிரியர் எழுதிய உரையையும் காட்டியிருக்-கின்றோம். அதன்பின்னர் முதற்குறள் நீங்கிய ஏனைமேற்கோள் குறள்கள் இடம் பெற்றுள்ளன. அக் குறள்கள் உரிய அதிகாரவைப்பு வரிசையிலும் இடம் பெறும். அங்ஙனம் இடம் பெறும்போது 'பார்க்க' என்ற குறிப்பை மட்டும் தந்துள்ளோம்.

குறள், இலக்கண நூற்பா, உரை இவற்றிற்குப் பின் விளக்கம் என்ற தலைப்பில் என் கருத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. சில நூற்பா-விற்கு மேலுள்ள குறள்கள் 'பார்க்க' எனக் குறிப்பிட்டிருந்தாலும் கீழுள்ள நூற்பாவிற்குரிய எடுத்துக் காட்டாகவும் கொள்ள வேண்டும்.

நூற்பாவிற்கு முந்திய குறள் அந்நூற்பாவிற்குரிய மேற்கோள் குறள் என்பது இதன் கருத்து.

பிற் பகுதியாகிய இலக்கிய உரைக் குறிப்பு விளக்கங்களும் இந்நூலுக்கொரு புதிய ஆராய்ச்சியிணைப்பாகும். பழைய இலக்கிய உரைகாரர்களும் வியாக்கியான உரைகாரர்களும் பல சொற்களுக்கும் தொடர்களுக்கும் தம் உரையில் விளக்கம் கூறுகின்றனர். அவ்-விளக்கங்களை அப்படியே அத்தகைய (குறள்) சொற்களுக்கும் தொடர் களுக்கும் கூட்டிப் பொருள் கொண்டால் குறட்பாக்கள் எவ்வளவோ தெளிவும் ஒளியும் பெறுகின்றன. எனவே இப்பகுதி குறள் ஆராய்ச்சி யில் ஒரு திருப்பு முனையாக நிற்கின்றது.

இவ்வாராய்ச்சியில் 469 குறள்கள் விளக்கம் பெறுகின்றன. உரையாசிரியர்கள் மேற்கோளாகக் கொண்டன 285 குறள்கள். ஒரே குறளைப் பல உரைகாரர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். இருவர், மூவர், நால்வர் கூடக் காட்டியுள்ளனர். இதனால் அவ்விலக்கணக் குறிப்புக்களை விளக்குவதில் குறட்பாக்கள் மிகவும் இன்றியமையாமை-யுடையன என்பது போதரும்.

இம் முயற்சியில் பேருக்கமும் ஆக்கமும் காட்டி இதனை முற்றுவித்த அறிவும் ஆராய்ச்சியும் சான்ற பேராசிரியர் டாக்டர் மாணிக்கம் அவர்கட்கும், இந்தமிழ் முயற்சிகளில் பேரார்வமும் ஆதரவுங்காட்டி வரும் எம் துணைவேந்தர் டாக்டர் ஆதிநாராயண அவர்கட்கும், தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் போற்றி வளர்க்கும் பெருமனம் வாய்ந்த இணைவேந்தர் டாக்டர் முத்தைய செட்டியார் அவர்கட்கும் மற்றும் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினர்க்கும் என் மனஞ்சேர்ந்த நன்றி என்றும் சார்ந்ததாகும்.

இப்பதிப்பில் படியெடுத்தும் அச்சுப் படிவங்களை ஒப்பு நோக்கியும் பல்வகைக் குறிப்புக்களைத் தொகுத்தும் பேருதவி புரிந்த ஆராய்ச்சி மாணவர் திரு. சா. மு. பாலசுப்பிரமணியன், எம். ஏ., அவர்களுக்கு என் பாராட்டும் வாழ்த்தும் உரியனவாகும்.

மு. கோவிந்தசாமி

திருக்குறளும் இளம்பூரணரும்

கடவுள் வாழ்த்து — 2

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

தொல்காப்பியம் : பொருள் : செய்யுளியல் : 364.

நூற்பா : : "அளவுஞ்சிந்தும் வெள்ளைக்குரிய"

உரை :

அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்குரிய, தளைவகை ஒன்றாத்தன்மைக் கண்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. (12)

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். (14)

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (3)

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (5)

தொல்காப்பியத்தில் இளம்பூரணர் உரையிற் காணப்பெறும் திருக்குறள் பகுதிகள் இங்குத் 'திருக்குறளும் இளம்பூரணரும்' என்ற தலைப்பின்கீழ்த் தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன.

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது. (606)

விளக்கம் : நூலாலும் உரையாலும் தொல்காப்பியர் போன்ற பண்டைய இலக்கண ஆசிரியரைப் பின்பற்றி வள்ளுவர் யாப்பை அமைத்துக் கொண்டவர். சிந்தடி 7-9 அளவடி 10-14 எழுத்துக்களைக் கொண்டன. இவற்றிற்கு 2, 3, 5, 12, 14 ஆகிய குறள்களைக் காட்டுகிறார் உரையாசிரியர். 14-க்கு மேல் வருவது நெடிலடி. இதற்கும் 606-ஆவது குறளைக் காட்டுகிறார்.

எனவே நெடிலடியும் வெண்பாவிற்குரிய தாகின்றது. ஆனால் யாப்பருங்கலக்காரிகையில் நெடிலடி என்பது நாலடிக்கு மேற்பட்டதாகும். அந்த வெளி விருத்தத்திற்குத்தான் அது வருகின்றது. பாவினத்திற்கன்றிப் பாவிற்கு வருதலில்லை.

எனவே "ஒன்றுந் தன்மைக்கண் நெடிலடியும் சிலவரும் என்று கொள்க" என இளம்பூரணர் கூறிய தொல்காப்பிய மரபுக்கேற்பக் குறள் யாக்கப் பெற்றுள்ளது. ஆனால் குறளில் யாப்பருங் கலக்காரிகையின் ஒரு அருமையான இலக்கணம் அமைந்துள்ளது.

இங்குக் கூறிய சிந்தடியும் அளவடியும் ஒரே பாவில் அமைந்திருப்பதே அது. குறளின் முதலடியில் நாற்சீரும் (அளவடி) இரண்டாமடியில் முச்சீரும் (சிந்தடி) அமைந்துள்ளன. காலத்துக் கேற்பக் குறள் விளக்கந்தரும் என்பதற்கு இதுவும் எடுத்துக் காட்டாகலாம்.

குறள் முதலாம் நூல்களை எழுத்தெண்ணிப் படிப்பது பற்றித்தான் கேட்கிறோம். ஆனால் தொல்காப்பிய மரபினர் பாடல்களையும் நூல்களையும் எழுத்தெண்ணி எழுதியுமுள்ளனர். எதையும் எண்ணி (ஆராய்ந்தும் அளவிட்டும்) நூலெழுதிய வள்ளுவர் தம் பாடல்களை எழுத்தெண்ணி யாத்துள்ளார் எனத் தெரிகின்றது பிற்காலத்தும் கட்டளைக் கலித்துறை எழுத்தெண்ணி யமைந்ததொரு பாவின வகையாகும். வைணவப் பிரபந்த உரையாசிரியர்களும் தெய்வச் சிலையாரும் 6000 படி

— 9000 படி யென எழுத்தாலேயே அளவு குறிக்கின்றனர். கால மாறுதலுக்கேற்பப் பண்டையோர் செய்யுளிலும் பின்னையோர் உரைநடையிலும் எழுத்தெண்ணினர்.

சிந்தடியென்பது ஓரளவு குறள் (குறுகிய) தன்மையுடையதாம். அளவடியென்பது மிகுதியும் குறைவுமின்றி அளவாகிய தன்மையுடைய தென்பதாம். பொருளிலும் அளவாகவும் சுருக்கமாகவும் எழுதிய வள்ளுவர் யாப்பிலும் அம்முறையினைக் கைப்பிடித்தனர்.

அளவும் சிந்துமென்பதில் பிறழ்ந்து கூறியதாக ஆசிரியர்கள் அமைதிபல கூறுகின்றனர். வெண்பாவிற்குச் சிந்தினும் அளவடி சிறந்தமையான் அதனை முதலில் வைத்தனர் போலும். சிறப்புடையவற்றைத் தேர்ந்து மேற்கொள்வது வள்ளுவர்க்கு வழக்கமாகலின் அவர் தம் நூலுக்கு அளவடியை மேற்கொண்டனர் ஆகலாம். (1)

கடவுள் வாழ்த்து – 3.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் [பார்க்க: குறள்–2] (2)

கடவுள் வாழ்த்து — 4

வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

தொல் : பொருள் ; செய்யுள்.

நூ : *“இருவகை யுகரமோடு இயைந்தவை வரினே*
நேர்பும் நிரைபும் ஆகும் என்ப” *(313)*

“நிரையவண் நிற்பின் நேரும் நேர்பும்” *(380)*

“நேரீற்றியற்சீர் நிரையும் நிரைபும்” *(379)*

உரை : (நேரசையும் நிரையசையும்) குற்றியலுகரமும் முற்றியலுகரமும் பொருந்திவரின் நேர்பசையும் நிரைபசையு மெனப் பெயராகும்: 313.

(வெண்பாவின் ஈற்றயற்சீர்) நேரீற்றியற் சீராயின் நிரையசையும் நிரைபசையும் சீராம் தன்மையைப் பெற்று முடியும் : 379.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். (10)

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (5)

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (7)

விளக்கம் :

இந்நூற் பாக்கள் மூன்றும் தொல்காப்பியத்திற்கே உரிய உரியசை பற்றியவாகும். அவை குற்றியலுகர முற்றியலுகர அசைகளாகும். நேர்க்கு முன் நிரையும் நிரைபும் நிரைக்கு முன் நேரும் நேர்பும் வருமென்பது.

இம் மூன்றற்கும் மேற்கோள் காட்டுகையில் பேராசிரியர் (ஒரு குறள் தவிர) பெரிதும் தனிச் சொற்களைக் காட்டுகிறார். இளம்பூரணர் நச்சினார்க்கினியர் ஆகியோர் இலக்கியப் (குறட்) பாடல்களை மேற்கோள் காட்டுகின்றனர். நச்சினார்க்கினியர் முதல் நூற்பாவுக்குக் குறளைக் காட்டவில்லை.

இளம்பூரணர் திருவள்ளுவரை மேற்கோள் காட்டுதற்குரிய மிக நெருங்கியவராகக் கருதுவார் போலும். இவர்கள் இருவரும் குறளிலிருந்து மிகுதியாக மேற்கோள் காட்டுகின்றனர்.

தொகையும் பாட்டுமாகிய சங்கப் பாடல்களில் மேற்கோள் கொடுக்காமல் இந் நூற்பாக்களுக்கு இவர்கள் குறள், நாலடியார், முத்தொள்ளாயிரம் முதலிய வெண்பாப் பாடல்களையே மேற்கொள்ளுகின்றனர், இயற்சீர் பற்றிய வாகலின். அவற்றுள் குறட்பாக்கள் சிறந்தன வென்பதில் ஐயமில்லை. அதனாலேயே அவற்றை மேற்கொண்டனர்.

இளம்பூரணர் 5, 7, 10 ஆகிய குறள்களை மூன்று நூற்பாக்களிலும் எடுத்தாளுகிறார். நச்சினார்க்கினியரும் 5, 7, 10 ஆகிய குறள்களை எடுத்துக்கொள்ளுகிறார். (3)

கடவுள் வாழ்த்து – 5.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு
[பார்க்க: குறள் – 2; 4] (4)

கடவுள் வாழ்த்து – 7.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது [பார்க்க: குறள் – 4] (5)

கடவுள் வாழ்த்து – 10.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார் [பார்க்க: குறள்–4] (6)

வான்சிறப்பு – 12.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை [பார்க்க: குறள்–2] (7)

வான்சிறப்பு — 14.

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். [பார்க்க: குறள்–2]

தொல் – சொல் – எச்சம் 450.

நூ : *"வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய"*

உரை :

குன்றியக்கால் என்னும் வினையெச்சம் குன்றிக்கால் என நின்றது. ஓர் எச்சம் திரிந்து ஓர் எச்சமாகியும் நிற்கும் இலக்கணத்தினையுடைய என்றவாறு.

இஃது இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் கூறும் விளக்கம். மற்ற சொல்லதிகார உரையாசிரியர்கள் இதற்குக் குறளைக் காட்டவில்லை,

விளக்கம் :

குன்றியக்கால் என்பதனைக் குன்றிக்கால் எனச் செய்யுள் அமைப்பின் 'ய' என்ற ஓரெழுத்தே குன்றியது. குன்றியக்கால் எனவே செய்யுள் அமைக்கக் குறளாசிரியரால் முடியும். செய்வது குறள் (சுருக்கம்) ஆகலின் ஓரெழுத்தைச் சுருக்குகிறார். ஓரெழுத்தையும் எளிதாகக் கருதாமல் குறுங்கிச் சுருக்கி நூல் செய்வது ஆசிரியர் நோக்கம் என்பது இதனால் போதரும்.

புறனடை போன்ற இச்சூத்திரத்தில் இக்குறளை வைத்த தால் குறளாசிரியர் நேராய இலக்கணத்திற்கப்பாற்பட்டும் இலக் கியம் எழுதினர் என்பது கருத்தாகலாம். இதனைச் செய்யுள் விகாரமெனில் புதிதாக ஒன்றுஞ் சொல்லத் தேவையில்லை. விரி வான இலக்கணக் குறிப்புக்களைக்கொண்டு எழுதியனுற்றுன் இவ்வாறு புறனடைக்குள் இதனை அடக்க வேண்டியதாயிற்று.

குன்றிக்கால் என்பது செய்து என்னும் எச்சமாகக் கருதப் படலாகாதென்பதற்கே குன்றியக்கால் என்பது செயவெனெச்ச மாகும் என நினைவூட்டுகின்றுர் என்னலாம். இன்னெலியாதல் செய்யுட்டொடையாதல் காரணமாக யகரம் குறைந்து நின்ற தென நுண்பொருளுரைகாரர் கூறுகிறுர். இதனுல் இன்னேசை படவெழுதலும் குறள் யாப்பின் நோக்கம் என்பதாயிற்று. (8)

நீத்தார் பெருமை — 22.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

தொல் - பொருள் - உவமை — 282.

நூ : *" அவைதாம், அன்ன ஏய்ப்ப ....*
.... பல் குறிப்பினவே "

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின் (965)

விளக்கம் :

அன்ன, ஏய்ப்ப முதலிய உவமை யுணர்த்துஞ் சொற்களுக்கு (உருபுகளுக்கு) இவ்விரு குறள்களையும் இளம் பூரணர் எடுத்துக் காட்டுகின்றார். அன்னது அற்றது என இரண்டும் ஒன்றேயாகலாம். அன்ன என்ற முதல் உருபுக்கே இக்குறள்களை எடுத்துக் காட்டுகிறார். பின்னர் உருபுகளைப் பிரிக்கையில் இதனை வினைப்பாலுவமம் என்றார். அங்கும் முதற் பிரிவில் இவ்வுருபு நிற்கின்றது.

எவற்றுள்ளும் சிறந்ததனை, முதன்மையாவதனை எடுத்துக் கொள்ளுதல் வள்ளுவர் வழக்கெனப் பரிமேலழகர் கூறுவது இங்கு பொருத்தமாகிறது. மற்றும் அன்ன என்பது மிகவும் எளிமையானது. குறள் மிகவும் எளிமை உடையது என்பதற்கு இது பொருந்தலாம்.

இந்த "அன்ன" என்பதற்கு மட்டும் தொல்காப்பியர் தனிச் சிறப்பு விதி செய்வர். இது நான்குவமம் (வினை, பயன், மெய், உரு) பற்றியும் வருமென்பதாம். இத்தனைச் சிறப்புடைமையாற்றான் இக் குறள்களையே பேராசிரியரும் எடுத்துக் காட்டுகிறார். இக் குன்றியுவமையில் வினை முதலிய நான்குவமைகளும் அமைந்துள்ளமை காண்கிறோம். எனவே இவ்வுருபை ஆசிரியர் ஆண்டது குன்றினையை பெருமையினதாகும். அப்பெருமையை எண்ணியளவிடுதல் இறந்தாரை யெண்ணிக் கொண்டற்றாம்.

தொல்காப்பியர் கூறும் 36 உவம உருபுகளுள் "ஒப்ப ஒட்ட, நிகர்ப்ப, போல, புரைய என்பன மற்றுஞ் சிலச் சிறப்புருபுகளாம்." இலக்கியங்களுள் பயின்று வருவன இவையாகும். மற்ற சங்கப் பாடல்கள் இருக்கக் குறட்பாடல்களை இவ்வுரை யாசிரியர் தேர்ந்தெடுத்தது இவர்தம் திருக்குறட்பற்றைக் காட்டும். குறளாசிரியர் இயன்ற விடங்களிலெல்லாம் உவமையைக் கையாளுபவர். முதல் அதிகாரத்திலேயே 2–3 உவமைகள் மறைந்தோ வெளிப்பட்டோ இருக்கின்றன. தனக்குவமை இல்லாதானென "உவமை" யென்ற சொல்லையே ஆசிரியர் கையாளுகிறார்.

பார்க்க ; பேராசிரியர். (9)

அறன் வலியுறுத்தல் — 32.

அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

தொல் - பொருள் - அகத்திணை யியல் - 44

நூ : ஒன்றாத்தமரினும் ....
ஊதியங் கருதிய ஒருதிறத்தானும்.... ....
கிழவோன்மேன.

உரை :

தலைமகற்குக் கூற்று நிகழும் இடங்களில் ஊதியங் கருதிய திறமும் ஒன்று. மேற்சொல்லப்பட்ட பொருள்வயிற் பிரிதலன்றி அறத்தின் காரணமாகப் பிரியும் பிரிவு என இதனை விளக்குகின்றார் இளம்பூரணர்.

விளக்கம் :

பிரிவுகளில் 'பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்' பிரியும் பிரிவு வகையினை இது சேர்ந்ததாகலாம். போர் (பகை) மேலன்றி அமைதிக்காலத்தும் பிரியும் பிரிவாக இதனைக் கொள்ளலாம். தொல்காப்பியர் பிரிதலைத் தெளிவாகக் கூறும் ஐவகைப் பிரிவுகளில் இதுவுமொன்றாம். பரத்தையிற் பிரிவினைத் தொல்காப்பியர் குறிக்கிறாரன்றிப் பிற்காலத்தார் போன்று பிரிவுகளில் ஒன்றாகத் தனித்துக் குறிக்கவில்லை. மாயப்பரத்தை யென்கிறார் ஓரிடத்தில் (கற்–145). கற்பியலில் 185 'பரத்தையிற் பிரிந்த காலையான' என ஒரு வரியே கூறுகிறார்.

"வீடு பேற்றிற் குதவியாகிய நூல்களை ஓதற்குப் பிரிவுழியு மென்பதாம்" என நச்சினார்க்கினியர் இதற்கு உரை யெழுதுகிறார். இளம்பூரணர், 'ஏதமின்மாதவ ராகையாலே மேற்கூறிய அறப் பொருளைக் கொண்டிருக்கலாம்.

முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும் (தொல்: 30)

என்ற சூத்திரத்திற்கு உரையெழுதும் இளம்பூரணர் தேவரது பூசை முதலாயினவும் மக்களும் முறைமை தப்பியவழி தப்பாது அறம் நிறுத்தல் காரணமாகவும் பொருளாக்குதல் காரணமாகவும் பிரிவுளதாம் என்றவாறு எனக் கூறுகிறார்.

" காவல், பொருட் பிரிவு எனப் பிற நூலகத்து ஓதப்பட்ட இருவகைப் பிரிவும் ஈண்டு ஓதப்பட்டதென்று கொள்க" எனவும் அவர் ஒரு குறிப்பெழுதுகின்றார். 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்' (75) என்னுஞ் சூத்திரத்தான் இல்லறமும் துறவறமும் கூறினார். 'இங்ஙனம் இந் நிலையாமையானும் பிற வாற்றானும் வீட்டிற்குக் காரணங் கூறினார்' எனப் பொருளதி காரத்தைப்பற்றி நச்சினார்க்கினியர் கூறுகிறார். எனவே அகத் திணை அறத்திணையாகவும் நிற்கின்றது.

'முல்லை முதலாப் பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்' என்றதனால் நாட்டில் (தமிழுக்கே சிறப்பாய) அகத்திணை வாழ்க்கை பிழைத்தலாகாதென்பது கருதப்பட்டது. எனவே ஊதியம் என்பது ஒருவற்கு 'அறம்' என்பது இளம்பூரணரால் வற்புறுத்தப் பெறுகின்றது. ஆண்மகற்குப் போர்க்காலத்தில் பகைமேற் சேறலும் அமைதிக்காலத்தில் அறத்தின்மேற் சேற-லும் பிரிவுகளாகக் கொள்ளப் பெறவேண்டும் என இங்கு வற்-புறுத்தப் பெறுகின்றது.

'அறத்தினூஉங்காக்கம்' என்பதில் அறத்தை யாக்குதலும், மறத்தலினூஉங் கென்பதில் அதற்கிடையூறு வாராமல் காத்தலும் பெறப்படும். ஊதியங் கருதிய என்றவிடத்து இக்குறளை இளம்-பூரணர் எடுத்துக் கொண்டது மிக்க நுட்பமுடையதாகும். (10)

அறன் வலியுறுத்தல் — 37.

அறத்தா றிதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை

தொல் – பொருள் – செய்யுளியல் – 423.

நூ : நெடு வெண்பாட்டே குறு வெண்பாட்டே.........
.... வெண்பா யாப்பின.

ஊருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னூர் உடைத்து [667]

விளக்கம் :

வெண்பா யாப்பில் வரும் பாடல் வகைகளை இங்குக் குறிக்கிருர். அதற்கு 'அறத்தாறிதுவென' என்ற குறளைக் காட்டியமையால் (முற்கூறியபடி) திருக்குறளிலும் அறத்திலும் அவர்க்குள்ள ஈடுபாடு புலப்படும்.

இங்குக் குறுவெண் பாட்டு வகையது திருக்குறள். குறளில் கைக்கிளை காமத்துப்பாலிலும், பரிபாடல் கடவுள் வாழ்த்து காமத்துப்பால் ஆயவற்றிலும், அங்கதம் அறத்துப்பால் பொருட் பால்களிலும் விரவி வருகின்றன. உரம் அஃதில்லார் (600) மரம் என்கையில் "அங்கதம்" அங்கிடம் பெறுவதனைக் காண்கிருேம்.

நச்சினுர்க்கினியர் இதற்கு உரையெழுதுகையில் பெரும் பான்மை குறித்த பொருளை மறையாமற் செப்பிக் கூறலே அதற் கிலக்கணமாயிற் றென்கிருர். திருக்குறளும் அறப்பொருளை மறையாமற் செப்பிக் கூறுகின்றது. கைக்கிளை பரிபாட்டங்கதச் செய்யுள்களும் குறித்த பொருளைப் பற்றியவேயாம். கலிவெண்பாட்டாக இக்காலத்தோர் கூறும் உலாச் செய்யுளும் புறப்புறக் கைக்கிளை யென்கிருர் நச்சினுர்க்கினியர். "கைக்கிளை தானே வெண்பாவாகி ஆசிரியவியலான் முடியவும் பெறுமே" (424) என்பதால் அதற்கு முதற் சிறப்புச்செய்யுள் வெண்பாவாகின்றது. பரிபாடல் எல்லாப் பாவாலும் வரப்பெறும். (11)

வாழ்க்கைத் துணைநலம் — 51.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

பொருள் – கற்பு – **151.**

நூ : நல்லவை யுரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக் குரிய ஆகுமென்ப.

தெய்வந் தொழா அள் கொழுநற் றெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. [55]

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். [56]

விளக்கம் :

தலைவிக்கறிவுரை கூறுதல் செவிலியின் கடனாகும். நற்றாயின் தோழியே செவிலி; தலைவியின் வளர்ப்புத்தாய். இக்குறள் களை இதற்கு இளம்பூரணர் எடுத்துக்காட்டுதலால் வள்ளுவர் தமிழினத்தின் செவிலியாகக் கருதப் பெறுகிறார் எனலாம். சான்றோனெனக் கேட்டு உவத்தற்குரியவள் தாயாதலால் மக்களைச் சான்றோராக ஆக்குதற்கும் அவள் உரியள் ஆவாள். ஈன்று புறந்தருதல் அவள் கடனென்ற புறநானூறு ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே எனவும் கூறுதலால் சான்றோனெனக் கேட்கும் பேற்றினையும் அது கருதுகின்றது "ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என் மற்றுச் சான்றோர் முகத்துக்களி" யென்றவிடத்துச் சான்றோரால் பழிக்கத்தக்க களியைத் தாயும் பழித்தலால் அவளும் சான்றோள், அவள் விரும்புவதும் சான்றாண்மை யென்று பெறப்படும்.

இங்குப் பெண்ணுக்கறிவு கொளுவுதலில் குறளை உரையாசிரியர் எடுத்துக் காட்டுதலால் அறிவறிந்த மக்கட்பேறென்பதற்கு ஆண் மக்களையன்றிப் பெண் மக்களையும் அவர் பேறாகக் கருதுகிறார் எனப போதரும். "தெய்வந்தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள்" என்பதில் நல்லவை யுரைத்தலுடன் தெய்வந் தொழாஅளென்பதில் அல்லவை கடிதலும் குறிக்கப் பெறு கின்றது.

அடுத்து வரும் தொல்காப்பிய சூத்திரங்களில் செவிலியின் இச் செயல்கள் அறிவர்க்கு முரியனவெனவும் அவர் இடித்துரைத்துத் திருத்துதற்கு முரியரெனவும் கூறப் பெறுகின்றன. இடித்து வழக்கறியும் நட்பினர் போன்றவள், அறிவரைப் போன்றவள் செவிலியென்றாகின்றது.

இவ்விடத்தில் நச்சினார்க்கினியரும் இக்குறள்களையே தருகின்றார். (12)

வாழ்க்கைத்துணை நலம் – 55

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை [பார்க்க: – 51] (13)

வாழ்க்கைத்துணை நலம் – 56.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் [பார்க்க: – 51] (14)

அன்புடைமை — 74.

அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

பொருள் – செய்யுள்–4. 7.

நூ : தெரிந்தனர் விரிப்பின் வரம்பிலவாகும்.

உரை : (தொடையினை ஆராய்ந்து விரிப்பின் வரம்பிலவாகி விரியும் என்னும், இதற்கு உரை விளக்கம்) நெடின்மோனை வல்லின மெல்லின இடையின வெதுகைகள் ஆயவற்றிற்கிவை உவமைகளாக வந்தன.

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும். [114]

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. [299]

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். [399]

விளக்கம் :

முன் சூத்திரத்தில் 13699 தொடை விகற்பங்களைப்பற்றிக் கூறி அடுத்து வரம்பிலவாகும் என விரிவைக் கூறுகிறார். தொடை விகற்பமென்பது சொற்களைத் தொகுத்தலில் உறும் யாப்பழகு என்று பொருள். அத்தனைக்கும் மேம்பட்ட வளர்ச்சிக்கும் குறளை மேற்காட்டலால் குறள் வளர்ச்சிகட்கெல்லாம் இடமளிப்பதென்பது புலனாகும்.

தொல்காப்பியர் காலத்திற்குப்பின் விரிந்த பல்வகைத் தொடைகளைத் திருக்குறளில் காண்கிறுர் போலும் இளம்பூரணர்!
— பார்க்க : நச்சினுர்க்கினியர் (15)

அன்புடைமை — 76

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை

பொருள் : களவு - 89

நூ : இன்பமும் பொருளும் அறனு மென்ருங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை.

உரை :

இன்பமும் பொருளும் அறனும் என்று சொல்லப்பட்ட அன்பொடு புணர்ந்த நடுவண் ஐந்திணை.

அஃதேல் ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பனவும் அன்பொடு புணர்ந்தனவாம். இஃதிளம்பூரணர் இந் நூற்பாவுக்குச் செய்யும் நுண்ணுரையாகும். நச்சினுர்க்கினியரும் அதே கருத்தினை இக் குறள் மேற்கோளுடன் எடுத்துரைக்கிறுர்.

விளக்கம் :

அறத்திற்குத்தான் அன்புதவும், மறத்திற்கும் அன்புதவுமா எனில் உதவுதலை எடுத்துக் காட்டுவர் இவ்வுரைகாரர் இருவரும். வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மீளாத காதல் நோயாளனைக் குறிப்பது பிரபந்தப் பாடல். அங்கிருவரிடமும் அன்புண்டாகின்றது. போரில் அன்புடையார் பலர் கூடுவரென்பது, வீரர்க்குள் தோழமை யன்பு அல்லது நாடு அரசன் ஆகியோரிடமுள்ள (தேசபக்தி, இராஜபக்தி) பற்று அல்லது மெலியாரைப் பகைனை நீக்கித் துன்புறும் அந்நாட்டு மக்களைக் காக்கும் அன்பு என்பது பொருந்தமாகும். தடித்தவோர் மகனை அடிக்கும் தாய்க்கு இருப்பதும் அன்புதான்.

அறிவில்லார் செய்யும் மறத்தையும் அன்பு வெல்லுமென இக் குறளுக் குரை செய்வார் பரிதியார். பரிமேலழகரும் இக் குறளைப் பற்றியே, ஒருவன் செய்த டகையைப் பற்றி உள்ளத்து மறம் நிகழ்ந்துழி, அவனை நட்பாகக் கருதி அவன்மேல் அன்பு செய்ய அது நீங்கு மாதலின் மறத்தை நீக்குதற்குத் துணையா மென விளக்குவார்.

பகைவர்க்குமருளும் அன்பு பற்றியது இக்குறளுரைகாரரது கருத்து.

அகத்திணையும் புறத்திணையும் பிரிக்கவியலாதன. 'வெட்சிதானே குறிஞ்சியது புறனே' என அகமும், புறமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாதலைத் தொல்காப்பியம் எடுத்தியம்புகின்றது. எனவே அகத்திற்கு (அகத்திணைக்கே) உரியதெதுவும் புறத்திற்கும் உரியதாகலாம். அன்புமப்படியே. இதனை உரையாசிரியர்கள் தங்கள் நுண்ணுணர்வால் (மூலத்தில் இல்லாவிடினும்) எடுத்துக் காட்டுகின்றனர். வள்ளுவர் அதனைத் தெளிவாக நேரே எடுத்துரைக்கின்றார்.

ஒன்னார் விழையுஞ் சிறப்பு 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்' எனக்கூறும் வள்ளுவர்க்குப் பரிமேலழகர் போன்றாருரை பொருந்துவதாகும். போரில் பகைவரிடம் செலுத்தும் அன்பு (ஊராண்மை) என்பதனையே இளம்பூரணர் முதலியோர் எண்ணி உரை செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்தம் எழுத்து வடிவம் வீரர்தம் நட்பு, நாட்டு அன்பு என்பதனைக் குறிப்பதாக அமைந்துவிட்ட தாகலாம்.

ஒருவன் அனைத்துயிர்மாட்டும் வைக்கின்ற உள்ளன்பானது தான் நடத்துகின்ற இல்லத்தினுக்கே சால்பமைந்தது என்பர் அறியாதார், ஈண்டுப்பாவமாகிய மறத்திற்கும் அவ்வன்பே துணை என்றவாறு எனக் காலிங்கர் எழுதுகிறார். இங்குக் காலிங்கர் என்ன கருதுகிறார் என்பதனை ஆராயவேண்டும். வேள்வியில் உயிர்க்கொலை செய்தலையும் வாய்மையிடத்ததாகிய பொய்மையையும் தாய் பசித்திருக்கையில் திருடுதலையும் (அறவழிப்பட்ட) மறமாகக் கருதி இவ்வாறு காலிங்கர் எழுதுகிறாரோவெனத் தோன்றுகின்றது. (16)

அன்புடைமை — 79

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு.

பொருள் - மெய்ப்பாடு - 256.

நூ : ஆங்கவை ஒரு பாலாக........
உடைமை இன்புறல் நடுவுநிலை யருளல்....
.... அவையு முளவே.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. [118]

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. [126[

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. [127]

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. [124]

குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனனிலனாம் ஏமாப் புடைத்து. [868]

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். [445]

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு. [1015]

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர். [1017]

நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது. [1215]

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும். [1203]

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். [608[

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். [1095]

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். [511]

ஆயும் அறிவினர் அல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. [918]

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். [508]

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும். [625]

பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர். [199]

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். [168]

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். [487]

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு. [1081]

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். [168]

விளக்கம் :

இச்சூத்திரத்தில் தொல்காப்பியர் எண் வகை மெய்ப்பாடு களைத் தவிர்த்த சில மெய்ப்பாடுகட் கிலக்கணம் கூறுகிறார். அவற்றிற்கு மேற்கோளாக இக் குறள்களை எடுத்தாளுகிறார் இளம் பூரணர். நடுவுநிலைமை, 118; அடக்கம் 126; அன்பு 79);

கைம்மிகல் 868; சூழ்ச்சி 445; நாணல் 1015; 1017; அரற்று 1215; நினைத்தல் 1203: மடி 608; கருதல் 1095; ஆராய்ச்சி 511–918–508; இடுக்கண் 625; பொச்சாப்பு 199; பொருமை 168 வியர்த்தல் 487; ஐயம் 1081; மிகை 158; — என்பனவே அவர் காட்டும் குறள் மேற்கோள்கட்குரிய பிறமெய்ப்பாடுகள். கலித் தொகையில் நச்சினார்க்கினியரொருவரே இத்தகைய மெய்ப்பாடு களை உரையில் எடுத்தாளுகிறார். குறளுரையாசிரியர் எவரும் இந் நெறியைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை.

ஈண்டுக் குறித்த முப்பத்திரண்டும் மேல் தொல்காப்பியச் சூத்திரத்திற்கண்ட முப்பத்திரண்டும் போல அகத்திற்கும் புறத் திற்கும் பொதுவாகி நிற்கும் மெய்ப்பாடென்கிறார் நச்சினார்க்கினியர். வள்ளுவரும் அகத்திலும் புறத்திலும் (பொருள் – அறப்பால்கள்) இம் மெய்ப்பாடுகட்குரிய குறள்களை யமைத்திருக்கிறார். உள்ள நிகழ்ச்சி யொவ்வொன்றும் (சிறு துளியும்) ஒரு மெய்ப்பாடேயாகும்; குணங்கள் மெய்ப்பாட்டின் உட்கூறும் செயல்கள் அவற்றின் புறக்கூறுமாகும். அறப்பாலில் இக் கூறுகள் மிகுதி. பொருட்பாலிலும், பொருள் செயல்வகையெனில் உடைமை யெனவும் நன்றியில் செல்வம் எனில் துன்புறல் எனவும் அம் மெய்ப்பாடுகளை விவரிக்கின்றனர். மெய்ப்பாடுகளை நெறிப்படுத்துவதன் மூலம் வள்ளுவர் மனிதகுண வொழுக்கங்களை நெறிப்படுத்துகிறார் என்பதாம்.

எனவே தொல்காப்பியரும் வள்ளுவரும் மனித வாழ்க்கையின் உணர்ச்சிகள் முழுவதையும் செம்மைப் படுத்துதற்கே மெய்ப்பாட்டியல்புகளை விவரிக்கின்றனர். அன்பு, அடக்கம், நடுவு நிலைமை, மடிபொருமை, பொச்சாப்பு, ஐயம், நினைத்தல், ஆராய் தல் முதலாகிய ஆழ்ந்த குணங்களைப் பற்றிய மெய்ப்பாடுகளை இளம்பூரணர் குறள்களைக்கொண்டு விளக்குகின்றார் என்பதிலிருந்தே இக்கருத்து வலிமையுறும். இவ்விடங்களில் பேராசிரியர் எக்குறட்பாடலையும் எடுத்துக் காட்டவில்லை. (17)

விருந்தோம்பல் — 90

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

பொருள் : உவமை : 278.

நூ : *சுட்டிக் கூறு உவம மாயின்*
பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே........

விளக்கம் :

சுட்டிக் கூறு உவமை என்பது உவமிக்கப்படும் பொருளுக்கு உவமை இதுவெனச் சுட்டிக் கூறுமை. இஃதிளம்பூரணர் உரை. இங்கு "அதுபோல" எனச் சுட்டிக் கூறவில்லையாம். அதாவது உவம உருபினை வெளிப்படுத்திக் கூறவில்லை என்பதாம். எதனிலும் சுருக்கங் கருதிக் "குறள்" செய்த வள்ளுவர், இங்கெல்லாம் உவம உருபினையும் மிகுதியெனக் கருதி விடுத்தனர் போலும்! வள்ளுவர் மிகப்பல விடங்களில் வேறுபட வந்த உவமங்களாகவும் சுட்டிக் கூறு உவமங்களாகவும் கூறியுள்ளார். மற்றும் குணப் பொருள்களையே உவமங்காட்டுவது குறளில் பலவாக இருத்தலால் உவமம் இன்னதெனச் சுட்டிக் கூற முடியவில்லை போலும்.

வினை, பயன், மெய், உரு ஆகிய ஒப்புமைக் குணத்தைச் சுட்டிக் கூறுமை யென்கிறார் பேராசிரியர். பவளம் போல் செந்துவர் வாயெனில் செம்மை அங்கு சுட்டிக் கூறியதென்கிறார்.

பவளம் போல் செவ்வாய் என்றுற்றான் அவர்க்குச் சுட்டிக் கூறிய தென்கிறார். அவர் கருத்தில் (மோப்பக்) குழையும் (நோக்கக்) குழையும் என்ற பொதுக்குணம் சுட்டிக் கூறிய உவமமாகலாம். பேராசிரியரின் இவ்வுரை பொருந்தாது எனக் கூறலாம். பெரிதும் இலக்கிய உவமங்களில் பொதுக் குணத்தைச் சுட்டிக் கூறுவதில்லை. மதியன்ன முகம் என்பதில் அழகிய, குளிர்ந்த என்பனவாகிய பொதுக் குணங்களை வெளிப்படுப்பதில்லை. எனவே இளம்பூரணர் உரையே பொருந்துவதாகலாம்.

இஃது உவமம் இது பொருள் எனச் சுட்டிக் கூறுமையும் இதற்குப் பொருளாகலாம். முற்கூறியபடி (குணப்) பொருளையே உவமமாகக் குறிக்கையில் இந்நிலையுறும். "அழுக்காறுடையான் கண் ஆக்கம் போன்றில்லை, ஒழுக்கமிலான் கண் உயர்வு"

என்ற விடத்து எதனையும் உவமமாக அன்றிப் பொருளாகக் கொள்ளலாம், எந்தத் தலைப்பின்கண் பேசப்படுகிறது என்பதைக் கொண்டே பொருளை அறிய வேண்டும்.

இச் சூத்திரத்திற்கு "அழுக்காறு டையான் கண்" என்ற குறளை மேற்கோளாக்கினால் இப்பொருளையே கொள்ளவேண்டி வரும். "அதுபோல்" எனச் சுட்டிக் கூறுத என, இளம்பூரணர் கூறுமிடத்தில் இப்பொருளும் இருக்கக்கூடும் எனத் தெரிகிறது. (18)

செய்ந்நன்றியறிதல் — 109.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

பொருள் - உவமை : 283.

நூ : *அன்ன ஆங்கு மான இறப்ப*
.... எட்டும் வினைப்பாலுவமம்.

விளக்கம் :

முன்பும் இவ் "அன்ன" என்பது பற்றியும் உவம உருபு களைப் பற்றியும் ஆராயப்பெற்றது. இவை வினையுவம உருபுச் சொற்கள்.

"அன்ன" என்னும் இம்முதல் உருபிற்குக் குறளை எடுத்-துக் காட்டி மற்றவற்றிற்கு வேறு இலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டுவது உரையாசிரியர் குறளுக்குத் தந்த சிறப் பாகும்.

முப்பத்தாறு உருபுகளைப் பற்றிப் பொதுவாகக் கூறிய விடத்துக் குறளை மேற்கோள் காட்டிய பேராசிரியர் இங்குச் சிறப்பு விதி கூறியபொழுது குறளை மேற்கொள்ளவில்லை.

பார்க்க : பேராசிரியர். (19)

செய்ந்நன்றியறிதல் — 110

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

பொருள் – செய்யுள் : 320.

நூ : ஈரசை கொண்டு மூவசை புணர்த்தும்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே.

உரை :

இரண்டசை கொண்டும் மூவசை கொண்டும் புணர்த்து ஓசை பொருந்தி யிற்றது சீரெனப்படும். "சீரியைந் திற்றலென்பது" வழக்கியல் செய்யுளாமாற்றுல் யாப்பினும் பொருள் பெறப். பகுத்துப் பதமாகி அவற்றுச் சேறல்.

சீரென்றதென்னை யெனின் பாணி போன்று இலயம்பட நிற்ற-லான் அது சீரெனத் தொழிற் பெயராம். இயைதல் என்பது அசைவகை ஒன்ருென்றனேடு தொடர்ந்தவழியில்லாச்சீர்க்கு அலகு பெறலாகா தென்றவாறு. எனவே அவ்வாறு இலயம்பட நின்றன வாயினும் புணர்ச்சி எய்தும் என்பதாம்.

— இவை பேராசிரியம்.

அற்று நிற்பது சீரென்று சிறப்பித்துச் சொல்லப்படும். சீர் புணர்த்தும் சீரெனப்படும். அவ்வாறன்றி அச்சீர்தான் ஒரு சீரோடொருசீர் தொடரப் பிறர் கூட்டப்பட்டு நின்ருலும் சீரென்று சொல்லப்படும் எனக் கொள்க.

" இயைந்து " என்றதனுன் ஒரு சீர்க்கண் பலசொல் தொடர்ந்து வரினும் ஒன்றுபட்டு நிற்றல் வேண்டுமென்றுணர்க. இனிப் புணர்த்து என்றதனுன் அச்சீர்கள் அவ்வாறற்று நிற்குமேனும் பிறர் தொடர்பு படுத்தும் வழிப் புணர்ச்சி விகார மெய்தாமல் தம்முள் தொடர்ந்து நிற்றலும் புணர்ச்சிக்கு விகாரம் எய்தியும் தொடர்ந்து நிற்றலும் உடைய என்பதூஉம் கொள்க.

— இவை நச்சினுர்க்கினியம்.

விளக்கம் :

பல பாடல்களை உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டி-னுலும் குறளில் சீர்கள், உரையாசிரியர் பேராசிரியர் நச்சினுர்க்-கினியர் ஆகியோர் கூறிய இலக்கணங்களை யெல்லாம் பெற்று வந்துள்ளன என்பது கொள்ளப்படலாம். இலயம்பட நிற்றலும்

அற்று நிற்றலும் பல சொற்கள் ஒன்றுபட்டு நிற்றலும் புணர்ச்சி விகார மெய்தியும் எய்தாமலும் தொடர்ந்து நிற்றலும் ஆகிய தன்மைகளே இவ்வுரை காரர்கள் குறித்தவையாம். (20)

நடுவு நிலைமை — 114

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும். [பார்க்க : 74] (21)

நடுவு நிலைமை — 118

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. [பார்க்க : 79; 126] (22)

அடக்க முடைமை — 124

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. [பார்க்க : 74] (23)

அடக்கமுடைமை : 126

ஒருமையுள் ஆமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து. [பார்க்க : 79]

பொருள் - புறத்திணை : 75.

நூ : கூதிர் வேனில் என்றிரு பாசறை........

உரை :

அரும்பகை தாங்கும் ஆற்றல் (771) தொல்லுயிர் வழங்கிய அவிப் பலி (776) கடிமனை நீத்த பால் (148) கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை (126, 131, 118, 172, 181, 201, 161, 158) பிழைத்தோர்த் தாங்கும் காவல் (151) பொருளொடு புணர்ந்த பக்கம் 354, 351, 381, 731, 745, 756, 632, 787, 764. 585, 986.

அருளொடு புணர்ந்த அகற்சி. 241, 321, 291, 287, 928, 341, 360.

கூதிர்ப்பாசறை முதலாகச் சொல்லப்பட்ட பதினெட்டுத் துறையும் வாகைத் துறையாம்.

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்னின்று கன்னின் றவர். [771]

இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். [776]

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற வொழுக்கு. [148]

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். [131]

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. [118]

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். [172]

(பா-ம்) பழிப்பன.

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. [181]

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு. [201]

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு. [161]

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். [158]

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. [151]

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லாத வர்க்கு. [354]

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். [359]

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. [381]

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. [731]

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீரது அரண். [745]

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். [756]

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்ட தமைச்சு.]632]

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்கண் அதுவே படை. [787]

கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. [585]

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது. [686]

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. [241]

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும். [321]

வாய்மை யெனப்படுவதி யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். [291]

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்க ணில். [287]

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉம் ஆங்கே மிகும். [928]

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். [341]

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். [360]

விளக்கம் :

தொல்காப்பியர் கருத்தில் வாகையென்பது போர் வெற்றியென்பதைவிட வாழ்க்கையில் வெற்றி என்பதேயாகும். அதனாலேயே ஆடல், பாடல், சொல், நால்வருணத்தார் ஆகியோருக்கு வெற்றி பற்றிப் பொருளிலக்கணங்கள் குறிப்பிடுகின்றன. அகத்திணைக்குப் (அன்பினைந் திணைக்கு) புறம், புறத்திணை யென்பதே தொல்காப்பியம். எனவே இல்லறத் துறவற வாழ்க்கை கட்குப்புறமே போர்வெற்றி (வாகை) என்பதாம். வள்ளுவரும், படைச்செருக்கு, அரண் முதலியவற்றை அறத்துப்பாற் கடுத்துப் பொருட் பாலிலேயே வைக்கிறார். குறளின் ஒரு பகுதியே இச் சூத்திரத்திற்கு விளக்கமாக அமைந்தது போலும்.

அரும்பகை தாங்கும் ஆற்றலும் தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியும் போருக்கெனப் பேசப்பட்டாலும் அவை அகத்திணைக்கும் (இல்லறத்திற்கும்) பொருந்துவனவாம். அன்புடையார் என்பு முரியர் பிறர்க் கென்பது அவிப்பலியேயாம்.

கடிமனை நீத்த பாலும் கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமையும் இல்லறத்திற்குரியன. இல்லற வெற்றிக்குப் பிறன் மனை நயவாமை இன்றியமையாதது. அருளொடு புணர்ந்த அகற்சி துறவறத்திற் குரியது. பொருளொடு புணர்ந்த பக்கம் (பொருள்) அரசுக்கும் இல்லறத்திற்கும் உரியது.

கட்டமை யொழுக்கத்தில் அடக்கம் ஒழுக்கம் முதலியவற்றையும் அருளொடு புணர்தலில் கொல்லாமை, பொய்யாமை முதலியவற்றையும் தொல்காப்பியர் கருதினரா என்பதனை யறிய வேண்டும்.

காமஞ் சான்ற கடைக்கோட் காலை யென்பதால் அவர் இவற்றைக் கருதியிருக்கலாம்.

அவ்வாருயின் வள்ளுவர் தொல்காப்பியரை அப்படியே பின்பற்றியிருக்கிருர் என்னவேண்டும். மற்றும் இது சங்க காலத்துச் சான்ருேரால் வகுக்கப் பெற்றதோர் வாழ்வு நெறி யெனத் தெளியவிருக்கிறது.

நச்சிஞர்க்கினியரும் இச்சூத்திர முழுவதற்கும் இளம்-பூரணரை அப்படியே தழுவி யெழுதுகிருர். இவ்வுதாரணங்-களையே கொடுக்கிருர்.

பொருளொடு புணர்ந்த பக்கத்தில் ஆறங்கங்களையும் குறிக்கிருர். அரசற்கு மட்டுமன்றி அகத்திணை (இல்லத்தார்க்கும்) யார்க்கும் இப்பொருள் வெற்றி பொருந்தும்.

பொருள் செயல்வகை, நன்றியில் செல்வம், ஈகை, ஒப்புரவு முதலியவதிகாரங்களில் இப் பொருள் வாகையை வள்ளுவர் வற்-புறுத்துகிருர், (24)

அடக்க முடைமை — 127

யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு [பார்க்க : 79] (25)

ஒழுக்க முடைமை — 131

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினு மோம்பப் படும் [பார்க்க : 126] (26)

பிறனில் விழையாமை — 148

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்ருேர்க்
கறனென்ருே ஆன்ற ஒழுக்கு [பார்க்க : 126] (27)

பொறை யுடைமை — 151

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை [பார்க்க : 126] (28)

பொறை யுடைமை — 158

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தான்தன்
தகுதியான் வென்று விடல் [பார்க்க : 126] (29)

அழுக்காறுமை — 161

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு [பார்க்க : 126] (30)

அழுக்காறுமை — 168

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும் [பார்க்க : 79] (31)

வெஃகாமை — 172

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர் [பார்க்க : 126] (32)

புறங்கூறுமை — 181

அறங்கூறுன் அல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற லினிது [பார்க்க : 126] (33)

புறங்கூறுமை — 184

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னேக்காச் சொல் [பார்க்க : 126] (34)

பயனில சொல்லாமை — 199

பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர் [பார்க்க : 79] (35)

தீவினை யச்சம் — 201

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு [பார்க்க : 126] (36)

ஈகை — 223

இலனென்னும் எவ்வ முரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள,

பொருள் - புறத்திணை - 74

நூ : *அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்*
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
அனைநிலை வகையொடு .... தொகைநிலைபெற்றது.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு [421]

சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனல்
உழந்தும் உழவே தலை [1031]

கருமம் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில் [1021]

இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர் [1035]

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். [648]

விளக்கம் :

வாகைத்திணை எழுவகைப் பிரிவினுள் அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கத்தில், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆயவற்றுள் ஓதுவித்தல் என்பதற்கு எண்பொருளவாகச் செலச்சொல்லி (424) என்ற குறளை யும், ஈதல் என்பதற்கு 'இலனென்னும் எவ்வ முரையாமை ஈதல்' (223) என்ற குறளையும், எடுத்துக் காட்டுகிறார்.

இருமூன்று மரபின் ஏனோர் (வணிகர்) பக்கமும் என்பதில் உழவு, உழவொழிந்த தொழில், விருந்தோம்பல் ஆகியவற்றிற்கு [1031, 1021, 1035] 'சுழன்றும் ஏர்ப்பின்னது', 'கருமம் செய வொருவன்', 'இரவார் இரப்பார்க் கொன்றீவர்' ஆகிய குறள் களை முறையே கொடுக்கிறார்.

அனை நிலைவகை என்பதில் சொல்வென்றிக்கு 'விரைந்து தொழில் கேட்கு ஞாலம்' என்பதனைக் கூறுகின்றார்.

நால்வகை வருணப் பிரிவுகள் இடைச்செருகலோ என்ற ஐயம் பலர்க்கெழுவதுண்டு. அகத்திணையியல், மரபியல், புறத்திணையியல் ஆகிய பலவிடங்கள் நூலின் பகுதியே போன்று அமைந்திருத்தலால் இவற்றைப்பற்றிய சூத்திரங்களைத் தள்ளி விடற்கில்லை. இது வேதகாலப் பிரிவுகளாதலால் தொல்காப்பியர் காலத்து மிருந்திருக்கும். உள்ளதற்கிலக்கணம் கூறியிருக்கலாம். வள்ளுவரும் நால்வரையும் பெயரால் குறிப்பிடுகின்றார். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வர்க்கும் இங்கு வாகை (வென்றி) கூறுகிறார். இவை தொழில் வென்றிகளாகவன்றிப் பிறப்பு வென்றியாகத் தெரியவில்லை. பார்ப்பனரை வள்ளுவர் அறுதொழிலோர் என்றே குறிக்கிறார். சொல்வென்றி — 648 (ஆடல் பாடல்வென்றி) ஆயவற்றைக் கடைசியில் கூறுதலால் இவை அனைவர்க்கும் பொதுவாய கலைவென்றி யெனப்படலாம்; சொல்வென்றி அமைச்சர் முதலியோர்க்காவது போலும். (37)

அருளுடைமை — 241

அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள [பார்க்க : 126] (38)

தவம் — 264

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும்.

எழுத்து : தொகை மரபு – 158.

நூ : மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
உயர்திணைமருங்கின் ஒழியாது வருதலும்.

விளக்கம் :

இது ஐகாரவேற்றுமைத் திரிபு. நம்பியைக் கொணர்ந்தானென்பது உயர்திணை மருங்கின் ஒழியாது வந்தது.

ஒழியாதென்றதனல் ஒரோவழி ஒழிந்தும் வரும். ஒன்னார்த் தெறலும் எனவும் இவை உயர்திணையுள் ஒழிந்துவந்தன. உதாரணங்களைப் பார்க்கையில் உரைநடையில் ஒழியாது வருமென

வும், செய்யுளில் சில போதுகளில் ஒழிந்துவரும் எனவும் அறியப் படும். (39)

கள்ளாமை — 287

களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்கண் இல் [பார்க்க : 126] (40)

வாய்மை — 291

வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல் [பார்க்க : 126] (41)

வாய்மை — 299

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு [பார்க்க : 74] (42)

இன்னா செய்யாமை — 315

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை. (315)

பொருள் - செய் - 536

நூ : *சின்மென் மொழியால் சீர்புனைந்தியாப்பின்*
அம்மை.

உரை :

அம்மை, அழகு, முதலிய எண்வகைச் செய்யுள் வனப்புக்களில் அம்மை என்பது முதலாகும். சிலவாய் மெல்லியவாய மொழியினால் அடிநிமிர்வின்றித் தொடுக்கப்பட்டது அம்மை.

விளக்கம் :

சில மெல்லிய மொழிகட்குக் குறளைவிடச் சிறந்த எடுத்துக் காட்டில்லை. முதல் செய்யுள்வகைக்கே குறளை எடுத்துக் காட்டியதிலிருந்து குறளின் சிறப்பு பெறப்படும். அம்மை யென்பது தாயின் பெயர். சில மெல்லியவே கிளவி எனப் பெண்ணின் மொழிகளைச் சங்கப்பாடல் பாராட்டுகின்றது. எனவே தாய்ச்சொல்லின், (தாய்மொழியின்) தனிச் சிறப்பினையுடையது

அம்மை போலும்! சில் சீர்புனைந்தெனக் கொண்டு குறுகிய எழுசீர் கொண்டது என்பதனையும் கூறலாம். அடி நிமிர்வின்றே என்-பதினிலும் இக் கருத்து உள்ளது. மொழி யென்றதால், இழுமென் மொழியால் விழுமியது பயத்தலும் கொள்ளப்படும். அம்மை யென்பதில், அம் என்னும் அழகுக் குறிப்பும் உள்ளது. இக் குறள் "அம்மை"க்கு எடுத்துக் காட்டப்பெறும் எனக் குற ளுரை யாசிரியர்கள் எழுதவில்லை.

யாப்பருங்கல விருத்தி, காரிகை, ஆகியவற்றின் உரை காரர்கள் இதனை "அம்மைக்கு" எடுத்துக் காட்டுகின்றனர். (43)

கொல்லாமை — 321

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும் [பார்க்க : 126] (44)

கொல்லாமை — 323

ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று (323)

பொருள் - செய்யுள் - 504

நூ : இது நனிபயக்கும் இதன் மாறென்னும்
தொகுநிலைக்கிளவி பயனெனப் படுமே.

விளக்கம் :

செய்யுளில் "பயன்" என்பது சொன்னவதனுல் இன்னது பயக்கு·மென்பதுணர்த்தும். காலமுதலிய செய்யுளுறுப்புக்களுள் இஃதொன்று சிறந்தது. ஒன்ருக நல்லது என்ற குறளால் நன்மை வேண்டுவோர் இவ்வாறு செய்தல் வேண்டுமென்பது பயன். எனவே செய்யுளின் பயனை யுணர்த்துவது பயன். குறள் பயனற்ற செய்யுட்களை செய்யாத நூலென்பதாம். பயனில பாரித்துரைக்கும் உரை அங்கில்லை. இங்ஙனம் பயனுறுப்பாகவே செய்யுள் வருமாறுணர்க என்கிருர் நச்சினர்க்கினியர். கலை கலைக்காகவே (Art for art sake) என்ற கொள்கைக்கு வேருகக் 'கலை ஒரு பயனையும் உடையது' என்பார் கொள்கைக்கு இசைந்

தது "பயனை" க்கூறும் தொல்காப்பியர் கொள்கை என்று மாகலாம். வள்ளுவரும் அவ்வழியினரே யாவர். (45)

துறவு — 341

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனி னதனி னிலன் [பார்க்க : 126] (46)

மெய்யுணர்தல் — 354

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு [பார்க்க : 126] (47)

மெய்யுணர்தல் — 359

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய் [பார்க்க ; 126] (48)

மெய்யுணர்தல் — 360

காமம் வெகுளி ம்யக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் [பார்க்க : 126] (49)

இறைமாட்சி — 381

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறு
முடையா னரசரு ளேறு [பார்க்க : 126] (50)

கல்வி — 399

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் [பார்க்க : 74] (51)

கல்லாமை — 410

விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

பொருள் - உவமை - 293

நூ : *இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே.*

விளக்கம் :

உவமை இரண்டு சொல்லொடு அடுத்துவருவதோடு உவமிக்கப்படும் பொருளும் இரண்டு பொருளாகி வருதல் வேண்டும். அவ்வழி இரண்டு சொல்லும் ஒரு நீர்மைப்பட்டு வரும்.

விலங்கொடு மக்கள்; கற்ருரோடேனையவர் என்பன அவ்வாறு வந்தன.

அடையும் அடையடுத்த பொருளுமென இரண்டாகச் சொல்லப்படுங் கிளவி எனப் பேராசிரியர் கூறிப் பொன்காண் கட்டளை – புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பு எனக் காட்டுகிருர்.

இரட்டைக் கிளவியில் ஒரு பொதுத்தன்மை யுள்ளதாகலான் கற்ருேரும் ஏனையவரும் மக்களே. விலங்கொடு மக்களென்பதில் பொதுத்தன்மை எது? ஐந்தறிவா? விலங்குபோன்ற மக்களும் மற்றைய மக்கட்டன்மை உடைய மக்களும் என்ருகலாம்; இங்கும் இருவரும் மக்களே. (52)

அறிவுடைமை — 421

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா வரண் [பார்க்க : 223] (53)

அறிவுடைமை — 422

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

பொருள் – களவு – 95.

நூ : பெருமையும் உரனும் ஆடூஉமேன.

விளக்கம் :

ஆற்ருமையால் பதட்டம் கொள்ளாமல் வரைந்தெய்துந் துணையும் பொறுத்திருக்கும் பெருமையும் அறிவும் ஆணிடத்தும், அச்சமும் நாணமும் மடமும் பெண்ணிடத்தும் இருப்பது பற்றியே இச் சூத்திரங்கள் (95–96) கூறுகின்றன. ஆனல் மேற்கொண்டது 'சென்றவிடத்தால்' என்ற அறிவுபற்றிய பொதுக் குறள்.

அடுத்த சூத்திரத்தில் 'அச்சமும் நாணும் மடமும் பெண்பாற்குரிய' என்கிறார். இதுகொண்டு அறிவு ஆண்பாற்குரியது எனவும் மடம் போன்ற அறியாமை பெண்பாற் குரியது எனவும் வாதாடுவோர் பலர். குறள், தொல்காப்பிய உரையாசிரியர் பலரும் இப்போக்கில் உரை எழுதியதுண்டு. எழுத்ததிகார முதல் சூத்திரத்திலேயே 'னகாரம்' வீடுபேற்றிற் குரிய ஆண்பாலை யுணர்த்தும் சிறப்புப்பற்றி வைக்கப்பட்டதென்கிறார்.

தொல்காப்பியருக்கு இக்கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. பொருளியலில் 'அறிவும் அருமையும் பெண்பாலான' என்கிறார் (206). ஆனால் இங்குத் தொல்காப்பியரே வேறொரு நோக்கத்துடன் பெருமையும் உரனும் ஆடூஉமேன என்கிறார்.

அறிவறிந்த என்றதனுன் 'மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது (61), சிறப்புடை மகற்காயிற் கற்றல் வேண்டும்' (391) என்றெல்லாம் எழுதும் பரிமேலழகருக்கு ஆண் மகனே அறிவுக்குரியன் என்ற கருத்துள்ளது போலும். அன்று உரையாசிரியர் காலம்! இக்கருத்து அவர் பலர்க்கும் இருந்துள்ளது.

'அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற' என்கையில் குறளாசிரியரும் பெண்ணொழித்துப் பேசவில்லை. தந்தை மகற்காற்றும் நன்றி, 'சான்றோன் எனக் கேட்டதாய்' என்றவிடத்து ஏதாவதொருவரை வைத்துச் சொல்லவேண்டும், ஆணைவைத்துச் சொல்லினர், அவ்வளவே. இஃதெம்மொழியிலும் மரபேயாகும். இங்கும் வள்ளுவர் " சென்ற விடத்தால் " என்ற குறளைப் பொதுவாகவே கூறியுள்ளார்.

பார்க்க: நச்சினார்க்கினியர் பொருள் – 98. (53)

பெரியாரைத் துணைக் கோடல் — 445

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் [பார்க்க : 79] (54)

காலமறிதல் — 487

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர் [பார்க்க : 79] (55)

இடனறிதல் — 495

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கி னதனைப் பிற.

பொருள் – செய்யுள் – 502.

நூ : *ஒருநெறிப் பட்டாங் கோரியல் முடியும்*
கரும நிகழ்ச்சி இடனென மொழிப.

உரை :

அகம், புறம், அகத்தின்கண் களவு என்பனபோன்றவற்றுள் அவற்றின் விரி வகையில் ஒன்றுனும் பற்றிவருதல் ' இடம் ' என்ற செய்யுள் உறுப்பாகும். தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் இடங்களுமாம்.

செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. [951]

உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார். [922]

விளக்கம் :

இங்கு முதற்குறள் அகத்தில் கற்பு. அடுத்த குறள் புறத்தில் இடமறிதல். மூன்றுவது குறள் வாகை பற்றியதாகலாம். வள்ளுவர் முறையாகப் பகுத்துப் பால், இயல், அதிகாரம் எனக் கொண்டு நூலெழுதியவர். அவர் செய்யுளில் ஒவ்வொரு குறளும் சிறந்ததொரு இடவுறுப்பினைக் கொண்டதாகும்.

நச்சினுர்க்கினியர் இதற்குக் குறளை மேற் காட்டவில்லை. அவர் உரை : 'பலவும் ஒருவழித் தொக்கவற்றுக் கெல்லாம் ஓரிலக்கணத்தான் முடியும் கரும நிகழ்ச்சியை இடமென்று கூறுப. களமெனினும் இடமெனினும் ஒக்கும். ஒரு செய்யுட் கேட்டால் இது இன்னவிடத்து நிகழ்ந்ததென்றறிதற்கு ஏதுவாயதோ ருறுப்பு. இது புறத்திணைக்கு மொக்கும்.'

இருவர் கருத்தும் ஏறக்குறைய ஒன்றே யென்னலாம். இளம்பூரணருக்கு இவ்வுறுப்பு குறளில் நிறைந்திருப்பதாகத் தெரிகின்றது.

செய்யுட்குத் தொல்காப்பியர் கூறும் பலவுறுப்புகட்கும் குறள் மேற்கோள் தருகின்றது. செய்யுட்டன்மை நிறையவுடையது குறளென்பது இதனால் தெரியலாம். (56)

தெளிந்து தெளிதல் — 508

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும் [பார்க்க : 79] (57)

தெரிந்து வினையாடல் — 511

நன்மையுந் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும் [பார்க்க : 79] (58)

செங்கோன்மை — 542

வானோக்கி வாழு முலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி.

சொல் - வேற்றுமை மயங்கியல் - 89.

நூ : இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம் ....ஏதுவுமாகும்

விளக்கம் :

நோக்கிய நோக்கமும், நோக்கல் நோக்கமும் என இரண்டு பொருளும் உடைத்து வானோக்கி வாழுமென்பது. இது கண்ணால் நோக்கியதன்மையின் நோக்கல் நோக்கம் ஆயிற்று. வானுடைய உபகாரம் நோக்கி வாழும் என்பது. இஃதுரையாசிரியர் உரை.

மனத்தால் நோக்கும் நோக்கம் — 'நோக்கல் நோக்கம்' என நச்சினார்க்கினியர் வெளிப்படையாக எழுதுகிறார்.

சேனாவரையரும் இக்குறளையே மேற்கொள்கிறார். அறங் கூறும் வள்ளுவர் பொறியால் நோக்கும் நோக்கமன்றி

மனத்தால் நோக்கும் நோக்கமே பெரிதுடையராகலின் அவர் குறளை எடுத்துக்கொண்டார் இளம்பூரணர். செய்யுளில் 'நோக்கு' என்ற உறுப்பும் இப்பொருளே பெரிதுடையது போலும்.

வள்ளுவர் இங்கு 'நோக்கம்' என்பதற்கு மட்டும் இடம் வைத்தாரன்றி இச் சூத்திரத்திற்குரிய வேற்றுமை மயக்கவுருபு களில் எதனையும் இக்குறளில் விரித்துக் கொள்ளுமாறு இடம் கொடுத்திருக்கிறார். (59)

ஒற்றாடல் — 585

கடாஅ வுருவொடு கண்ணஞ்சாது யாண்டு
முகாஅமை வல்லதே யொற்று [பார்க்க : 126] (60)

மடியின்மை — 608

மடிமை குடிமைக்கண் தங்கின்றன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும். [பார்க்க : 79] (61)

ஆள் வினையுடைமை — 615

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

பொருள் - கற்பு - 144.

நூ : *கரணத்தின் அமைந்து முடிந்த காலை....*
பதினொரு மூன்றும் .... எண்ணருஞ் சிறப்பின்
கிழவோன் மேன.

விளக்கம் :

பன்னல் சான்ற வாயிலாவது, நீ என் செய்தனை ? இவள் வெகுடற்குக் காரணமென்னை என ஆராய்தலிற் பொருந்திய தோழி என்க.

கற்பில், தலைவற்குக் கூற்று நிகழுமிடங்களில் இங்குக் காட்டிய (நான்கு) குறள்களை நச்சினார்க்கினியரும் காட்டுகிறார். அவர் காட்டும் ஒரு குறளை இளம்பூரணர் காட்டவில்லை. 1315-1319

– 1307 – 1329 ஆகிய குறள்களைப் பன்னல் சான்ற வாயிலுக்கும் சீறடி புல்லிய இரவினுக்கும் இருவரும் கொள்ளுகின்றனர்.

யாரினுங் காதல மென்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று [1314]

(பா-ம்) என்மோ

தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. [1318]

(பா-ம்) நமருள்ள –

இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். [1315]

(பா-ம்): பிறப்போ; என்றேமா–

தன்னை யுணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று. [1319]

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. [1313]

ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று. [1307]

ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா. [1329]

(பா-ம்): ஒளியிழாய் —

ஊடலில் தோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். [1322]

இந் நிகரன கூறியவழித் தலைவன் கூற்று நிகழும். இவ் வழிக் கூறுங் கூற்று காமமாகத் தோன்றாது பொருளாகத் தோன்றும், காமத்திற்கு மாறாகக் கூறவேண்டுதலின்.

இன்பம் விழையான் வினை விழைவான்..............,,
எனவரும் 615

இம்மைப் பிறப்பில் என்றதனுல் மறுமையினும் மாருத தொடர்பினையே வள்ளுவரும் தொல்காப்பியரும் கருதுவர்போலும். யாரினும் காதலம் என்பதில் 'வாழ்க்கைத் துணை' ஒருவர்க்கொருவர், முதல் துணை என்பதாம். மெல்லென் சீறடி புல்லிய என்பதனைக் காண்கையில் தலைவியின் திருவடிகளில் வீழும் தலைவன் அறத்துப்பால் 'தெய்வந் தொழாஅள்' என்பதில் பெண்ணை அடிமைப்படுத்தி விட்டார் வள்ளுவர் என்பது எங்ஙனம் பொருந்தும்.

இருவரும் எடுத்துக் காட்டியமையின் வள்ளுவர் கருத்துக்கள் இவ்விடங்கட்குச் சிறந்த மேற்கோள்போலும் !

இவ்வழிக் கூறுங் கூற்று காமமாகத் தோன்ருது பொருளாகத் தோன்றும், காமத்திற்கு மாருகக் கூறவேண்டுதலின். இவ்விடங்களில் தலைவன் அறம் பொருள் ஆகியவற்றிற்குக் காமத்தினும் முதலிடம் தரவேண்டியுள்ளது என்பதே கருத்தாகத் தெரிகின்றது. நெடுநல் வாடையில் 'சிலரொடு திரிதரும் வேந்தன் பலரொடு முரணிய பாசறைத் தொழிலிலும்' இவ் வாகையே குறிக்கப் பெறுகின்றது. காமத்திலேயே அழுந்தி விட்டானுனல் தலைவன் பொருளுக்குப் பிரியமுடியாது.

எனவே காமத்துப்பாலில் இன்பமிருப்பினும் அவ்வின்பத்திலேயே ஆழ்ந்து மற்ற பேறுகளை மறவா நடுநிலையையே இவ் விடத்தில் இளம்பூரணர் குறித்து 'இன்பம் விழையான் வினை விழைவான்' என்ற குறளை எடுத்துக் காட்டுவார் போலும்! (62)

இடுக்கணழியாமை — 625

அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்க ணிடுக்கட் படும் [பார்க்க : 79] (63)

அமைச்சு — 632

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு [பார்க்க : 126] (64)

வினைத்திட்பம் — 662

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.

பொருள் – பொருளியல் – 193

நூ : *" இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே
அசைதிரிந் திசையா "*

உரை :

சொல்லொடு சொல் தொடர்வுபடும் வாய்பாட்டால் தொடராது பிறிதோர் வாய்பாட்டால் தொடுப்பினும் பொருட்டொடர்பு உண்டாயிற் பொருள் இயையும்வழி அசைச் சொற்கள் திரியாது, நின்ற நிலையே பொருள் படுமாறுயிற்று.

விளக்கம் :

ஊறொரால் என்ற குறளில் இரண்டென்னும் தொகைக்கு ஊறொராமை எனப் பொருள் உரைக்கவேண்டும் என்கிறார்.

ஊறொரால் ஊறொராமை எனத் திரித்துக்கொண்டு பொருளுரைக்க வேண்டும். ஒராமை, ஒல்காமை என்ற இரண்டும் ஒருமாதிரியாகும். நச்சினார்க்கினியர் இதற்கு இன்னுஞ் சிறிது விரிவாகப் பொருள் செய்வதாய்த் தெரிகின்றது. சொற்கள் தத்தம் பொருள் உணர்த்தாது வேறுபட்டிசைப்பினும் இவ்வதி காரத்துயாத்த பொருள்கள் நாடகவழக்கும் உலகியல் வழக்கு மாகிய புலனெறி வழக்கிற்றிரிந்து இயன்றிசைப்பினும் அவை மிகவும் பொருளேயாய்ப் பொருந்தும் என்கிறார். மற்றும் செய்யு ளில் சொற்பொருளானன்றி தொடர்பொருளாற் பொருள்பட விசைத்தலும் 'பொன் செய்வாம்' என்பது போல விளைவிற் பயவாது இறை பயந்தாற் போல நிற்பனவுங் கொள்க என்கிறார்.

அகத்திணைக்குரிய வழுவே ஈண்டுக் கூறுகின்றது என வும் அவர் விளக்குகின்றார்.

பொருள் விளக்கத்திற் கேற்பச் சொற்களை மாற்றியும், திரித்தும் கொள்ளலாம். ஆனால் சொற்களின் அமைப்பிற் கேற்பப்

பொருளைக் கொள்ளலாகா தென்பதே கருத்து. பயனில் சொற்களை வெறுத்துப் பயனுடைய பொருளையே வற்புறுத்தும் வள்ளுவர்க்கு இக்கோட்பாடு உரியதே யாகும். (65)

வினைத்திட்பம் — 667

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து [பார்க்க : 37] (66)

தூது — 686

கற்றுக்க ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது [பார்க்க : 126] (67)

நாடு — 731

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு [பார்க்க : 126] (68)

அரண் — 745

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர தரண் [பார்க்க : 126] (69)

பொருள் செயல் வகை — 756

உறுபொருளு முல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் [பார்க்க : 126] (70)

படைச்செருக்கு — 771

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர் [பார்க்க : 126] (71)

படைச்செருக்கு — 774

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்''

பொருள் - புறத்திணை - 72.

நூ : தானையானை குதிரை யென்ற .... மூவகை நிலையும்

விளக்கம் :

நாற்படையுள் முப்படையைச் சொல்வது இச்சூத்திரம். வள்ளுவர் கடலோடா கால்வல் நெடுந்தேர்; கல்லாமா என்ற குறள்களில் தேர் பரிப்படைகளைக் குறிக்கிறார். இது தும்பைத் திணை நூற்பா. களிற்றிற்குரிய குறளை உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். தும்பைக்குக் களிற்றுப் போரே சிறந்தது. 'களி றெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்பது புறநானூறு. ஆயிரம் யானைகளைக் கொன்று வென்ற வீரர்க்குப் பாடுவது பரணி யென்பதால் களிற்றுப் படைச்சிறப்பு புலப்படும்..

அதனாலேயே படைச்செருக்கில் வள்ளுவர் மற்ற தேர், பரியிருக்கக் களிற்றுப் படையைச் சிறப்பிக்கின்றார். இங்கும் சூத்திரத்தில் யானையே முதலிற் கூறப்படுகிறது.

மதத்தாற் கதஞ்சிறந்து தானும் போர் செய்யும் யானை யென்கிறார் நச்சினார்க்கினியர். (72)

படைச்செருக்கு — 776

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை யெடுத்து [பார்க்க : 126] (73)

நட்பு — 787

அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்ல லுழப்பதாம் நட்பு [பார்க்க : 126] (74)

பகைமாட்சி — 868

குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனனிலனாம் ஏமாப் புடைத்து [பார்க்க : 79] (75)

வரைவின் மகளிர் — 914

பொருட் பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயு மறிவினவர்.

பொருள் - கற்பு - 180

நூ : *"மொழியெதிர் மொழிதல் பாங்கற் குரித்தே"*

உரை :

களவிற்கும், கற்பிற்கும் பொது :—

களவுக்காலத்துக் கழறலும், கற்புக்காலத்துப் பரத்தையிற் பிரிவிற் குடம்படாது கூறலும் இவைபோல்வனவும் பாங்கற் குரித்து என எழுதுகின்றுர் இளம்பூரணர்.

விளக்கம் :

இருப்பதைக் கூறல், இருக்க வேண்டுவதைக் கூறல் என நூலாசிரியர்க்கு இரண்டு குறிக்கோள்கள். தொல்காப்பியர் இருப்பதாகிய நிலேயைக் கூறிஞரன்றி அவர்க்குப் பரத்தைப் பிரிவு அவ்வளவு உடன்பாடன்றென முன்பும் ஆராயப்பட்டது. அதனுற்றுன் அவர் ஐந்துடன் (பிற்காலத்தார் போல ஆருவதாகப்) பரத்தைப் பிரிவைக் கூருமல் பின்னர் ஓரிருவிடங்களில் குறிக்குமளவிற் செல்கிறுர்.

அதனுற்றுன் போலும் பரத்தையிற் செல்லுதலே இளம்பூரணர் மொழியெதிர் மொழிகிறுர் (கழறுகிறுர்). இவ்விடத்தில் நச்சிஞர்க்கினியர் மேற்கோள் ஏதும் காட்டாமல் ‘வந்துழிக் காண்க’ என விட்டுச் செல்கிறுர். (76)

ஆனுல் புறத்தொழுக்கத்தைக் கடிந்து 168-வது நூற்பாவில் இக்குறளே அவர் மேற்காட்டுகிறுர்.

வரைவின் மகளிர் — 918

ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு [பார்க்க : 79] (77)

கள்ளுண்ணுமை — 928

களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும் [பார்க்க : 126] (78)

மானம் — 965

குன்றி னனேயாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனேய செயின் [பார்க்க : 22] (79)

பெருமை — 972

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

பொருள் – *களவு* – 90

நூ : " ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒத்தகிழவனும் கிழத்தியும் காண்ப "

விளக்கம் :

கிழவற்கும், கிழத்திக்கும் உள்ள ஒப்புக்கள் – பிறப்பு, குடிமை, ஆண்மை, முதலிய பத்தாகத் தொல்காப்பியர் மெய்ப் பாட்டியலில் கூறுகிறுர். இங்குப் பிறப்பினைக் குல மென்றும், குடிமை என்பதனை அக்குலத்திலுள்ளாருள் சிறப்பாதற்காம் ஒழுக்கமெனவும் உரையாசிரியர் விளக்குகிறுர். கல்வி முதலிய வற்ருல் நாற்பால் குலத்தவருள்ளும் உயர்ந்தோர் தாழ்தலும் தாழ்ந்தோர் உயர்தலும் பற்றிப் புறநானூறு பேசுகின்றது. நச்சிஞர்க்கினியர் குலம் கல்வி பிராயம் முதலியவற்ருல் மிகுதல் எனக் கூறி அதனைச் *சிறப்பாக* அந்தணர்க்கும், அரசர்க்கு மாக்குகிறுர்.

ஆயர் வேட்டுவர் முதலாஞேரையும் இக் குடியினருள் அடக்கியமையாற் சிறப்பென்பது அந்தணர் முதலோர்க்குரிய வருண (சாதி) வொழுக்கமென்று படாது. கல்வியறிவு, கொடை, ஈகை அருஞ்செயல்கள் முதலியவற்ருல் ஒரு குலத்துள்ளும் சில குடும்பங்கள் சிறந்து மேம்படுதலேயே அது குறிப்பதாகலாம்.

பிறப்பொக்கும் என்ற குறளில் ஒக்கும் என்பது குலமென் றும், சிறப்பு என்பது ஒழுக்கமெனவும் ஆசிரியர் கருதுகிறுர். ஒழுக்கமுடைமை குடிமை யென்றதும் அதுவேயாகும். ஆனுல் பரிமேலழகர் சிறப்பென்பது வருணத்திற்கேற்ற ஒழுக்கமென்பது அவ்வளவு பொருந்தவில்லே. அது மனிதப் பொதுவொழுக்க மென்பதே பொருந்தலாம். (80)

நாணுடைமை — 1015

பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு [பார்க்க : 79] (81)

நாணுடைமை — 1017

நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணுள் பவர் [பார்க்க : 79] (82)

நல்குரவு — 1044

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்

பொருள் - மெய்ப்பாடு - 250

நூ : "மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு"
— இளிவரல்

அறஞ்சாரா நல்குர வீன்ற தாயானும்
பிறன்போல நோக்கப் படும் — 1047

செற்றார் பின்செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று — 1255

விளக்கம் :

மூப்பு முதலிய நான்கன் காரணமாக இளிவரல் பிறக்கும். அவற்றுள் இரண்டனுக்கு மட்டுமே வள்ளுவரை மேற்கோள் காட்டுகிறார் உரையாசிரியர். பேராசிரியர் அவற்றையும் காட்டவில்லை. வருத்தமும் மென்மையும் (ஊழானன்றி) விளைவன போலக் கொண்டு அவற்றை நீக்கிக் கொள்ளலாம். (கொள்ள வேண்டும்). ஆகலின் அவ்விரண்டற்கும் குறளை மேற்கொண்டார் போலும்! மற்றும் பகைவர்க்கு அடிமையாதலும் வறுமையுள் வாடுதலும் ஒரு நாட்டின் மிக்க இளிவரல் ஆகலானும் அவை நீங்கிய வாழ்வே மான வாழ்வாகலாலும் (மானம் பேசும்) வள்ளுவரை மேற்கொண்டாராகலாம். இலேசான வேறுதாரணங்கள் இருக்கலாம். அவற்றை விட்டு நாட்டில் இம் மெய்ப்பாட்டின்

மூலம் உணர்த்தத்தக்க சிறந்த கோட்பாடுகட்கே மேற்கோள்களை எடுக்கிறார் இளம்பூரணர். (83)

தகையணங் குறுத்தல் — 1081

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு [பார்க்க : 79] (84)

தகையணங்குறுத்தல் — 1085

" கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து "

பொருள் — மெய்ப்பாடு — 257

நூ : *" புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்*
நகுநய மறைத்தல் சிதைவு பிறர்க்கின்மையொடு "

என்றாற்போலக் கூறியவழி, ஒருவாது நிற்றல்.

விளக்கம் :

அகத்திற்கேயுரிய மெய்ப்பாடுகளில் முதலாவது புகுமுகம் புரிதல். தலைமகன் புணர்ச்சிக் குறிப்பினை மாறுபடாது பொருந்துதல் ஐந்திணைக்கே இன்றியமையாததும் முதன்மையாவது மாகிய மெய்ப்பாடு இது. நோக்காக்கால் நோக்கி மெல்ல நகுதலும், கண்ணொடு கண்ணிணை நோக்கொத்தலும் இதுவே யாகும். முதலில் தலைவியிடம் ஏற்படும் இசைவுக் குறிப்பும் இன்பக் குறிப்பும் இம் மெய்ப்பாடேயாகும்.

முகம்புரிதல் என்பதற்குக் கண்புரிதலை மேற்கொண்டது : கண்ணிற் சிறந்தது பிறிதில்லை, முகக்குறிப்பினும் கண்குறிப்பே சிறந்ததாகலான். அவள் கண்ணூட்டி. இவன் கண்ணுள னென்பதும் அதனாலேயாம். (85)

தகையணங்குறுத்தல் - 1085

" கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து "

பொருள் — உவமையியல் — 308

நூ : " தடுமாறு வரலும் கடி வரையின்றே "

உரை :

உவமை ஐயமுறுதலாக வருதலுமுண்டு என்பதற்கு இது காட்டு. உவமைக்குள் தடுமாறுதலோடு உவமை பொருள் ஆகிய வற்றுள் எதுவோவெனத் தடுமாறுதலுமாம். உவமையைப் பொருளாக்கியும் பொருளை யுவமையாக்கியும் கூறுதலைப் பேரா சிரியர் கூறுகின்றார்.

விளக்கம் :

"பொருளே யுவமஞ் செய்யுமிதுவும் ஒரு தடுமாற்றந் தானே". மற்றும் அவர் உவமையையும் பொருளையும் உவமை யாகவே கொள்வதனையும் கூறித் 'திருமுகமும் திங்களும் செத்து ஐயத்து நின்றதரா' என எடுத்துக்காட்டுகின்றார். இக் குறள் இவ்விளக்கங்கள் அனைத்திற்கும் இடந்தருகின்றது.

இக்குறளில் உவமம் மட்டும் தடுமாறவில்லை. தலைவனின் மனமும் தடுமாறியுள்ளது. இத்தகைய குறளை இளம்பூரணர் எடுத்துக்கொண்டது மிகப் பொருத்தமாகும். (86)

தகையணங்குறுத்தல் — 1090.

உண்டார் கணல்ல தடுநறுக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்த லின்று.

தொல் — பொருள் — களவு. — 92

நூ : வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம்
...... நின்றவை களையும் கருவி யென்ப.

விளக்கம் :

ஐயப்பாட்டான் (தலைவன்) துணிதற்குக் கருவி கூறு கின்றது எனக் குறிப்பு எழுதுகிறார் உரையாசிரியர். கண்,

பூ முதலிய தலைவியை மக்களுள்ளாள் எனத் துணியச்செய்கின்றன. கண்டார் மகிழ் செய்தல் எனக் கண்ணைப் பற்றிய குறளைக் கொடுத்தது கண்ணிற் சிறந்தது குறிப்பறி வித்தற்த வேறொன்று மில்லை யாகலான். இதனைக் குறிப்பறிதலில் (பொருட்பாலில்) வள்ளுவரும் கூறுகிறார்.

வண்டு முதல் நான்கும் புறத்தன கண்முதனான்கும் அகத்தன. அதுவும் பெரிதும் கண்ணுக்குரியன. அடுத்துவரும் இரண்டு நூற்பாக்கள் கண்ணினால் உறுதிகொள்ளற் பற்றியவே யாகும்.

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்கு; குறிப்பே
குறித்தது கொள்ளுமாயின் ஆங்கவை நிகழும்

என்பன அவை. (87)

குறிப்பறிதல் — 1093.

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

பொருள் — களவு. — 94.

நூ : *குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்*
ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்.

உரை :

ஒருவர் குறிப்பு ஒருவர் குறித்ததனைக் கொள்ளுமாயின் கண்ணினான் வருங் குறிப்புரை நிகழும்!

அசையியற்கு உண்டுஆண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும். [1098]

விளக்கம் :

இங்கு வேறு குறள்களிரண்டினைக் காட்டுகிறார், பொருளும் வேறு செய்கிறார். தலைவன் புணர்ச்சி வேட்கையே தலைவி

கொள்ளுமாயின் புகுமுகம் புரிதல் முதலியன நிகழும் என அவர் கொள்கிறார். கண்ணொடு கண்ணிணை, கண் களவு கொள்ளும் சிறு நோக்கம் ஆகிய குறள்களை யெடுத்துக் காட்டுகிறார்.

குறிப்புரை தலைவனிடத்தே தான் நிகழும். புகுமுகம் புரிதல் முதலியன தலைவியினிடத்தே தான் நிகழும். இரண்டுரை-யாசிரியர்களும் வேறு வேறு பொருள்களைக் காட்டுகின்றனர்.

அடிப்படையில் இருவரும் ஒரே கருத்துடைய ரென்பது அவர்கள் காட்டும் உதாரணங்களால் தெரியும். இளம்பூரணர் தம் விளக்கத்தில் நச்சினார்க்கினியர் மேற்கோள் – கருத்தடங்கி யிருப்பதனை உணரலாம். (88)

குறிப்பறிதல் — 1095

குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும் [பார்க்க : 79] (89)

குறிப்பறிதல் — 1098

அசையியற் குண்டாண்டோ ரேஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும் [பார்க்க : 1093] (90)

குறிப்பறிதல் — 1100

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

பொருள் – களவு – 107.

நூ : *காமம் சொல்லா நாட்ட மின்மையின்*
ஏமுற இரண்டும் உளவென மொழிப.

உரை :

தலைவியின் வேட்கைக் குறிப்பு கண்ணால் அறியலாமென்பதும் அச்சம் நீங்கிய வழியும் அவட்கு நாணமும் மடனும் நீங்கா வென்பதும் இதனாலுரைக்கப்பட்டது.

கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏருப்
பெண்ணிற் பெருந்தக்கது இல். [1137]

விளக்கம் :

கடலன்ன என்பது வேட்கையையும் மடலேறு வென்பது நாணம் மடம் ஆகியவற்றையும் கண்ணொடு என்பது குறிப்பையும் புலப்படுத்துவன.

இந் நூற்பாவிற்குக் கரும நிகழ்ச்சிக்கண் தலைவி தோழியினிடம் கூறுமுகமாதற்கண் நாணும் மடனும் கெடுமென்றே நச்சினார்க்கினியர் எழுதுகிறார். **(91)**

புணர்ச்சி மகிழ்தல் — 1101

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள. — *நுகர்ச்சி யுற்றமை*

பொருள் - களவு - 99.

நூ : மெய்தொட்டுப் பயிறல், பொய் பாராட்டல்.

உரை :

அவ்வழித் தலைமகன் கூறிய சொற்கேட்டு இஃதறிவும் அருளும் நாணமு முடையார் செய்யார் எனக் கூறிய வழித் தலைமகன் கூறியதற்குச் செய்யுள்.

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்று ரேறும் மடல். [1133]

அறிவிலா ரெல்லாரும் என்றே யென்காமம்
மறுகில் மறுகும் மருண்டு. [1139]

(பா-ம்) அறிகிலார் -

நீங்கிற் றெறூஉம் குறுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்று ளிவள். [1104] -*பெற்றவழி மகிழ்ச்சி.*

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். [1105] — *தீராத்தேற்றம்*

வீழு மிரு வர்க் கினிதே வளியிடைப்
போழப் படாஅ முயக்கு. [1108] — *கூடுதலுறுதல்*

களவிற் கூட்டம் நான்கிடத்தும் தலைவன் கூற்று நிகழுமாறும் காதல்மிக்கு ஆற்றாமை கையிகப்பின் தலைவனு மியலும் கூறுதல் என்பதுரை.

விளக்கம் :

வீழுமிருவர்க்கினிதே யென்ற குறளால் மெய்யுறு புணர்ச்சியை விளக்குகிறார் இளம்பூரணர். இருவர் உணர்ச்சியும் விருப்பமும் ஒரே யளவிற்றாயினன்றிப் புணர்ச்சி யின்பமில்லை என்பது காமநூல் வல்லார் அனைவரின் கருத்தும். அதனை வீழு மிருவர் என்பது நன்கு தெளிவிக்கின்றது.

வேட்ட பொழுதின் அவையவை போலுமே தோட்டார் கதுப்பினுள் தோள் என்பதனைத் தீராத் தேற்றத்திற்குக் காட்டு கிறார். இயற்கைப் புணர்ச்சியுடன் முடியாத தெளிவிற்கு விரும் பிய பொருள் விரும்பிய போது கிடைத்தால் அவ்வின்பம் மேன் மேலு மெழுவது போன்றதெனக் குறித்தது சிறப்பாகும்.

ஐம்புலவின்ப மில்லார்க் கிவ்வுலகமில்லை. கண்டு கேட்டு என்பதால் நுகர்ச்சியுற்றமையை விளக்குகிறார். 'மாசறு பொன்னே' என்ற சிலப்பதிகாரப் பாராட்டில் ஐம்புல வின்பத்தையே, இக் குறளைக்காட்டி அடியார்க்கு நல்லார் விளக்குகிறார். அத்தகைய குறளை இங்கும் காட்டியது நுட்பமுடையது.

நீங்கிற் றெறூஉம் என்பதில் ஒரு புதிய தீயைக் கண்டு பிடித்த அறிவியலார் ஆகிறார் வள்ளுவர். அளப்பில்லாத இன்பில் பிறந்த கற்பனை இவ்வாறு எண்ணியது. பிற புலவர்கள் செய்யாத கற்பனை இது.

— பார்க்க இ. க. உரை.

தலைமகன் நாணத்தையு மறந்து மடலேறுகிறான். நாணு மாண்மையும் தலைவியின் ஒண்ணுதலைக் காண்டற்கு முன்பிருந் தன. அவளைக் கண்டதும் அவை போயின. எனினும் அவன் தலைமை போகவில்லை. பிறப்பே குடிமை ஆண்மையாவும் தலைவி யினும் சிறந்தோனாகத்தானிருந்தான். நாணொடு நல்லாண்மை; அறிவிலா ரெல்லாரும் என்ற குறள்கள் இதற்குக் காட்டப் பெறு கின்றன.

(92)

புணர்ச்சி மகிழ்தல் — 1104

நீங்கிற் றெறூஉங் குறுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்ற ளிவள் [பார்க்க : 1101] (93)

புணர்ச்சி மகிழ்தல் — 1105

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள் [பார்க்க : 1101] (94)

புணர்ச்சி மகிழ்தல் — 1107

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

பொருள் - மெய்ப்பாடு - 255.

நூ : செல்வம் புலனே புணர்வு விளையாட்டென உவகை நான்கே.

உரை :
உவகை யாமாறும் அதன் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

விளக்கம் :

இதனைச் செல்வப் பொருளால் வந்த உவகையாக உரையாசிரியர் கூறினார். தம்மில் தமது பாத்து என்ற உவமையொரு தனிச்சிறப்பு உடையது. தான் கொண்டாளிடம் தன்னில்லத் தனுபவிக்கும் இன்பமன்றிப் பிற வொருத்தியிடம் அனுவிப்பது உண்மை யுவகைக்குக் காரணமாகா தென்ற குறிப்பு மிங்குண்டு.

இவ்வுவமையை மேற் காட்டியதனால் உவகைக்குரிய செல்வமென்ற முதற் பொருளுக்கு மேற்கோள் கொண்டதூஉம் உவகையின் முதற் காரணம் செல்வமென்பதூஉம் பெறப்படும். அரியதொரு (பொதுவுடமைப்) பொருட் கொள்கையை இந்நூற் பாவும் மேற்கோள் குறளும் காட்டுகின்றன. (95)

பார்க்க : நச்சினார்க்கினியர் – பொருள் – 97

புணர்ச்சி மகிழ்தல் — 1108

வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு [பார்க்க : 1101] (96)

நலம்புனைந் துரைத்தல் — 1114

காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கும்
மாணிழை கண்ணெவ்வே மென்று.

பொருள் - களவு - 100.

நூ : பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும் ....

பரிவுற்று மெலியினும் : தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை யுழக்குந் துயர்.

பகற்குறிக்கண் பெற்றுமலிதல் : காணிற் குவளை. [1135]

மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன். [1116]

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. [1118]

விளக்கம் :

பரிந்த உள்ளத்துடன் மெலிதலுறுதலும்: பரிவுற்றுத் தோழி மெலிதலாவது 'உடம்படு வனியான்' என்ருற்போல வருவது. அவ்வழித் தலைமகன் கூற்று எனத் 'தொடலை' என்ற குறளை இளம்பூரணர் காட்டுகிருர்.

நச்சினர்க்கினியர் கூறுவது:

இருவகைக் குறியிடத்தும் தலைவியை எதிர்ப்படும் ஞான்றும் எதிர்ப்பட்ட ஞான்றும் எதிர்ப்படா நின்ற ஞான்றும் பல வாயவழி அவன் பரிந்த உள்ளத்தனுய் மெலியினும் எனவும்,

இன்னும் புணர்ந்து நீங்கும் தலைவன் ஆற்ருது கூறுவன வும் வரும்புனங் கண்டு கூறுவனவும் தோழி இற் புணர்ச்சிக்கண் தன்னிலைக் கொளீஇக் கூறுவனவும் இரவுக் குறிக்கண் வருகின் ருள் தலைவியை ஐயுற்றுப் பாங்கற்குக் கூறுவனவும் என இதற் குப் பொருள் கொள்கிருர்.

மேற் கோளாகக் 'களித் தொறும் கள்ளுண்டல் வேட்டற் ருல்' என்ற குறளைக் கொள்ளுகிருர்.

அவட்பெற்று மலியினும் என்பதற்கு இருவரும் ஒரே பொருளை எழுதுகின்றனர். தோழி யுடம்பாட்டினைப் பெற்று மகிழ்தல். இரட்டுற மொழிதலான் தலைமகளை இருவகைக் குறியிலும் பெற்று மகிழினும் என்கின்றனர்.

இளம்பூரணர் 'காணிற்றவளை' என்ற மேற்கோளைப் பகற்குறிக்குக் கொடுக்கிறார். நச்சினார்க்கினியர் அதனையே இரவுக் குறிக்கண் மகிழ்தற்குக் கொடுக்கிறார். பரிவுற்று மெலியினும் என்பதற்கு நச்சினார்க்கினியர் உரை விரிவும் விளக்கமும் உடையதாக இருக்கின்றது.

அவட் பெற்றுமலியினும் என்பதற்கு இருவரும் கொடுத்திருக்கும் மேற்கோள் இடங்களைப் பார்த்தால் இரட்டுற மொழிதலில் இருவகைக் குறியிடத்து மகிழ்தலுக்கே அவற்றைக் கொடுத்துள்ளனர். இதனால் தோழி யுடம்பாட்டினைப் பெற்று மகிழ்தல் என்பதனைவிட இருவகைக் குறியிடம் பெற்று மகிழ்தல் என்பதே இத் தொல்காப்பிய விதிக்குரிய பொருளாகக் கூடும்.

பரிவுற்று மெலியினும் என்பதற் களித்த மேற்கோளாலும் மெலிதலைத் தோழிக்கேற்றி யுரைப்பதிலும் தலைவற் கேற்றி யுரைப்பதே சிறந்ததெனப் புலப்படுகின்றது. (97)

நலம் புனைந்துரைத்தல் — 1116

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன் [1114]

காதற் சிறப்புரைத்தல் — 1126

கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.

பொருள் - மெய்ப்பாடு - 266

நூ : இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்.

இன்பத்தை வெறுத்தல் (1127); துன்பத்துப் புலம்பல் (1166); எதிர்பெய்து பரிதல் (1126); ஏதமாய்தல் (1165); பசியட நிற்றல்

(1128); பசலை பாய்தல் (1188); உடம்பு நனி சுருங்கல் (1234); கண்டுயில் மறுத்தல் (1168); கனவொடு மயங்கல் (1217); அறனழிந் துரைத்தல் (1209); ஆங்கு நெஞ்சழிதல் (1295); ஒப்புமை கோடல் (1222); உறுபெயர் கேட்டல் (1199).

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து. [1127]

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. [1166]

(பா-ம்) அது (அடுங்கால்)

துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர். [1165]

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து. [1128]

பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பா ரில். [1188]

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். [1234]

மன்னுயிர் எல்லாந் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை. [1168]

நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்னெம்மைப் பீழிப் பது. [1217]

விளியுமென் இன்னுயிர் வேறல்ல மென்பார்
அளியின்மை யாற்ற நினைந்து. [1209]

பெறுஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அறுஅ இடும்பைத்தென் நெஞ்சு. [1295]

புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை. [1222]

நசைஇயார் நல்கா ரெனினும் அவர்மாட்
டிசையும் இனிய செவிக்கு. [1199]

விளக்கம் :

பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுணர்த்துதலில் தேறுத லொழிந்த காமத்தின்பாற் படுவனவும் மிக்க காமத்தின் மிடலின் பாற் படுவனவுமாம் என்கிறார் இளம்பூரணர்.

இந் நூற்பாவில் வரும் பெரும்பான்மைப் பிரிவுகளுக்குக் குறளையே மேற்கோள் காட்டுகிறார். மூன்றிடங்கட்குக் குறுந் தொகை கலித்தொகை யாகியவற்றைக் காட்டுகிறார். பரிமே-லழகர் இங்குக் காட்டப்பெற்ற குறள் எதற்கும் பெருந்திணைக் குரியதென உரை யெழுதவில்லை. களவியல் கற்பியல் எனத்தான் காமத்துப்பாலைப் பிரித்துள்ளனர். படர் மெலிந் திரங்கல், நெஞ் சொடு புலத்தல், கண் விதுப்பழிதல், கனவுநிலை யுரைத்தல், பசப்புறு பருவரல் முதலிய அதிகாரங்களே குறளில் உள்ளன. இத்தனைப் பெருந்திணைக் குறள்கள் காமத்துப்பாலில் உள்ளனவா என்பதில் வியப்பே ஏற்படுகின்றது. பேராசிரியர் இவ்விடங்கட்கு ஒன்றனுக்குக்கூடக் குறளைக் காட்டவில்லை.

பிரிவிலும் ஆற்றுமையிலும் ஏற்படும் பல குறிப்புக்களை இவ் வொழுக்கங்களிற் காண்கிறோம். உரையாசிரியர், உலகில் பெரும்பான்மையாக நிகழக் காணப்படுவது பற்றிப் பெருந்திணை யெனப் பெயரிட்டார் என எழுதுகின்றனர். அதற்கேற்ப இக் குறள்கள் பொருந்தும் போலும். (98)

காதற் சிறப்புரைத்தல் — 1127.

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து. [பார்க்க : 1126]

பொருள் - களவு - 109.

நூ : மறைந்தவற் காண்டல் தற்காட்டுறுதல்

உரை :

தலைவிக்கு இயற்கைப் புணர்ச்சி — கூற்று நிகழுமிடம் உணர்த் தல். பிரிந்த வழிக்கலங்கியதற்குச் செய்யுள் ;

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து [1128]

(பா-ம்) கரப்பறிந்து

விளக்கம் :

தலைவன் பிரிந்த வழிக் கலக்கமுறினும் என்றவாறு. அது தாளா ணெதிரும் பிரிவு என்பது இளம்பூரணர் உரை.

இத் துறைகளுள் 'வந்தவழி எள்ளினும்' என்பதற்கே இரு குறள்களை எடுத்துக் காட்டும் நச்சினார்க்கினியர் பிரிந்தவழி என்பதற்குக் களவு அலராகாமல் யான் பிரிந்துழித் தலைவி கலங்குவளென்றஞ்சித் தலைவன் பிரியாதுறைதலின் பிரிவைக் கருதப் பெறாத தலைவி அவ்வாறன்றிப் பிரிந்துழிக் கலங்கினும் என எழுதுகிறார்.

பிரிவாற்றாமை, தனிப்படர் மிகுதி முதலிய அதிகாரங்களே குறளில் உள்ளன. தலைவன் உடலால் பிரிந்திருக்கிறான், அருகிலில்லை என்பதனை நெஞ்சத்தார், கண்ணுள்ளார் என அழகும் கற்பனைநயமும்படக் கூறுகிறார். இது நச்சினார்க்கினியர் கருத்திற்கு நெருங்கிய (பொருத்தமுடைய)தாகத் தோன்றுகின்றது. (99)

காதற் சிறப்புரைத்தல் — 1128

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து [பார்க்க : 1126] (100)

நாணுத் துறவுரைத்தல் — 1137

கடலன்ன காம முழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். [பார்க்க : 1100]

பொருள் – களவு – 107.

நூ : காமஞ் சொல்லா நாட்ட மின்மையின்........

உரை :

வேட்கை யுரையாத கண் உலகத்தின்மையால் தலைவன் ஏமுறற் பொருட்டு நாணும் மடனும் உளவாம் என்றவாறு.

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில. [1100]

விளக்கம் :

இதனாற் சொல்லியுது மேல் தலைவிக்கு இயல்பாய்க் கூறப் பட்ட அச்சமும் நாணமும் மடனும் என்பனவற்றுள் வேட்கை யால் அச்சம் நீங்கினவழி நாணும் மடனும் நீங்காவோ என்று ஐயுற்றுற்கு அவை தலைமகற் கேம மாதற் பொருட்டு நீங்காவாம் என்பதூஉம் வேட்கைக் குறிப்புக் கண்ணினால் அறியலாமென்ப தூஉம் உணர்த்தியவாறு, என்னை ? நாணும் மடனும் இல்லா தாரைத் தலைமக்கள் அவமதிப்பாராதலால் – என்பது இளம்பூரணம்.

கடலன்ன என்ற குறளில் மடலேறு என்பதில் நாணும் மடனும் உண்மையையும் கண்ணொடு என்பதில் கண்ணினால் அறியலா மென்பதனையும் குறிப்பிக்கிறார்.

இதற்கு நச்சினார்க்கினியர் எழுதுவது :

இது, கரும நிகழ்ச்சிக்கண் வரும் நாணும் மடனும் தந்தன்மை திரிந்து வருமென்கின்றது.

கரும நிகழ்ச்சியிடத்துக் கூற்று நிகழாத காமம் புலனெறி வழக்கின்கணின்மையின் முற்கூறிய நாணும் மடனும் தந்தன்மை திரிந்துவர நாட்டுதல் உளவென்று கூறுவர் புலவர் என்றவாறு. என்றது,

தோழியிற் கூட்டத்துத் தலைவி கூற்று நிகழ்த்துவள் என்பதூஉம் நிகழுங்கால் நாணு மடனும் பெரும்பான்மை கெட்டு அக் கூற்று நிகழுமென்பதூஉம் அங்ஙனம் கெடுதலையும் முந்து நூற்கண் ஆசிரியர் நாட்டுதல் உளவென்பதூஉம் கூறியவா றாயிற்று.

இனி நாணும் மடனும் கெட்ட கூற்றுத் தோழியை நோக்கிக் கூறுமென மேற் கூறுகின்றார், சொல்லெதிர் மொழிதல் என்ற சூத்திரத்து.

இங்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உரை செய்வதில் முரண்படுவது போலத் தோன்றுகிறது. இளம்பூரணர், தலைமகற் கெதிரே தலைவிக்கு நிகழும் கூற்று எனக் கொள்வதால் நாணும் மடனும் தங்குமெனவும்,

தோழி யிடத்துத் தலைவிக்கு நிகழுமென்பதாக நச்சினார்க்கினியர் கொள்வதால் அவை யிரண்டும் நீங்குமெனவும்,

அவரிருவரும் கொண்டதில் முரண் இருப்பதாகத் தோன்றவில்லை. ஒரே கருத்தை இருவரும் முரண்படுவது போலக் கூறியுள்ளனர் எனவே தோன்றுகின்றது.

இதற்கு முன்னும் பின்னும் உள்ள நூற்பாக்களைக் கொண்டு இதற்குப் பொருள் காண வேண்டியுள்ளது. (101)

நாணுத் துறவுரைத்தல் — 1138

நிறையரியர் மன்னளியர் என்னாது காமம்
மறுகின் மறுகும் மருண்டு.

(பா–ம்) மன்எளியர்

பொருள் - களவு - 112.

நூ : நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
........தோழி மேன

உரை :

களவொழுக்கத்தின் கண் தோழிக்குரிய கிளவிகள்.
அஃதல ராகுமென்று கூறுதல்.

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பே மெனல். 1148

(பா–ம்) எரிநுதுபோம் —

விளக்கம் :

எண்ணுதற்கரிய பல நகையாட்டுக்களைத் தலைவனிடம் குறித்த வகையும் கூற்று நிகழும். அஃது அலராகுமென்று கூறுதல்.

பல்லாற்றானும் தலைவற் கறிவுறுத்தவழிப் பின்னும் புணர்ச்சி வேண்டினும் ஆண்டுத் தோழி கூற்று நிகழும்.

நச்சினார்க்கினியர், புணர்ச்சி வேண்டினும் என்பதற்குத் தலைவன் பகற்குறியையும் இரவுக்குறியையும் விரும்பிக் கூறு மிடத்தும் என எழுதுகிறார்.

அலரைப் பற்றிய, நெய்யால் எரிநுதுப்பேம் என்ற உவமை மிகவும் பொருத்தமும் நுட்பமும் உடையதாகும்.

இக் குறளுக்குப் பரிமேலழகர் அலர் கூறி வரைவு கடாஅயது எனவே எழுதுகிறார். இங்கு இளம்பூரணர் கருத்தும் *பரிமேலழகர் கருத்தும் ஒன்றாகவே யுள்ளன.* (102)

அலரறி வுறுத்தல் — 1143

உறுஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

பொருள் — களவு — 105.

நூ : இருவகைக் குறிபிழைப்பாகிய விடத்தும்
கிழவோன் மேன —

* உறுஅதோ என்பது உறுஅது என இளம்பூரணரால் பாடம் கொள்ளப்பட்டுள்ளது.

உரை :

தோழியிற் கூடிய தலைமகன் வரைந்தெய்துங்காறும் கூறும் பொருண்மை யுணர்த்துதல்.

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

இது புனைந்துரை யென்று கருதிக் கூறியது.

விளக்கம் :

உரூஅது என்பதற்கு இளம்பூரணர் ஊரறிந்த கௌவை நன்றே காண் .... என்றமையானும் தமர் வரைவுடன் படுவர் எனக் கூறியவாறும், இது மெய்யாகக் கொண்டு கூறியது என எழுதுகிறார்.

களித்தொறும் என்ற உவமையும் அலரின் இன்றியமை யாமையைக் கூறிய வாறும் குறட் பகுதிகளில் சிறந்துள்ளன.

(103)

— பார்க்க : நச்சினார்க்கினியர்.

அலரறி வுறுத்தல் — 1145

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. [பார்க்க : 1143] (104)

அலரறிவுறுத்தல் — 1146.

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

பொருள் – கற்பு – 160

நூ : "களவும் கற்பும் அலர்வரை வின்றே"

உரை :

களவினும் கற்பினும் அலராகுமென்று கூறுதல் வரைவின்று என்றவாறு. 'தொகுத்துக் கூறல்' என்பதனாற் களவும் ஈண் டோதப்பட்டது. கண்டது மன்னும் – இது களவு

விளக்கம் :

நச்சினார்க்கினியரும் இதே கருத்துடன் இக் குறளையே எடுத்துக் காட்டி யிருக்கிறார். வள்ளுவர் கொண்ட

உவமைகள்தாம் கருத்தினைத் தெளிவு படுத்துவதில் தனித்தன்மை யுடையன.

திங்கள் என்பது தலைவியையும், பாம்பு கொண்டற் றென் பது அலர் விரைவில் நீங்குமென்பதையும் குறிப்பிக்கின்றன.

காட்சி யின்றியும் அலர் பரக்கின்ற இவ்வொழுக்கம் இனியாகாது எனப் பரிமேலழகர் எழுதிய குறிப்பினை இவ்வுவமை நன்கு விளக்குவது போன்றுள்ளது. (105)

அலரறி வுறுத்தல் — 1147.

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்.

பொருள் - கற்பு - 161.

நூ : " அலரில் தோன்றும் காமத்து மிகுதி "

விளக்கம் :

உரை கூறுமலே இக்குறள் மேற்கோளுடன் இளம்பூரணர் விட்டு விடுகிறார். எனவே இக்குறளே பொருளை விளக்கிவிடுவ தாக அவர் கருதியிருக்கலாம்.

தோன்றும் காமத்து மிகுதி என்பதனை எருவாக நீராக நீளும் என்பன எவ்வளவு தெளிவாக விளக்கு கின்றன! நச்சினார்க்கினியர் உரையும் எழுதி, இக் குறளுடன் 'நெய்யால் எரிநுதுப்பேம்' என்ற குறளையும் எடுத்துக் காட்டுகிறார்.

" சுருங்குதற் கேதுவாவனதாமே விரிதற் கேது வாகாநின்றன " எனப் பரிமேலழகர் குறிப்பு எழுதுகிறார். ஆற்றல் வேண்டும் எனச் சொல்லெடுப்பிய வழி (தலைவி)ச் சொல்லியது என்பது அவர் உரைக்கொளு. (106)

அலரறி வுறுத்தல் — 1148

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல் [பார்க்க : 1138] (107)

பிரிவாற்றுமை — 1151.

செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

(பா-ம்) எமக்குரை

பொருள் - அகத்திணை - 45

நூ : எஞ்சியோர்க்கும் எஞ்சுத லிலவே........

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான் [1153]

விளக்கம் :

இஃது அவரை யொழிந்த (நற்றுய் செவிலி முதலோர்) தலைமகட்கும், பாங்கர்க்கும் கூற்று நிகழுமாறு உணர்த்துதல்.

செல்லாமை யுண்டேல் என்று பிரிவுணர்த்திய தோழிக்குக் கூறியது. அரிதரோ தேற்றம் என்பது பிரிவாற்றுமைக்குச் செய்யுள். இதற்கு நச்சினுர்க்கினியர் குறளை எடுத்துக் காட்டவில்லை.

செல்லாமை யென்ற குறளைப் பரிமேலழகர் தோழி கூற்றுக்குகிருர். தலைமகற் கூற்றுக்குவாரும் உளர் எனக் குறிப்பு எழுதுகிருர். தலைவியோடு தன்னை ஒன்றுக்கிக் கொண்டு தோழி கூறுகிருள் என்பதினும் இச் சூத்திரத்திற்குத் தக இதனைத் தலைவி கூற்றுக்குதலே பொருத்தமாம். (108)

இளம்பூரணர் கருத்திதுவேயாகும்.

பிரிவாற்றுமை — 1151.

செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

பொருளியல் - பொருள் - 222

நூ : " வருத்த மிகுதி சுட்டுங் காலை
உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம் "

உரை :

எனவே வருத்த மிகுதியைச் சுட்டாதவழி மனை வாழ்க்கையுள் இரக்கம் இன்றெனக் கொள்ளப்படும்.

விளக்கம் :

இக் குறளைக் காட்டி 'இதுவுமோர் மரபுவழுவமைத்தது' என்கிறார் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் உய்த்துக் கொண்டுணர்தல் (666) என்பதனால் இக் குறளை மேற்கோள் காட்டுகிறார். அவர் தோழியும், அறிவரும் தலைவி தலைவர் ஆகியோர்க்கு வருத்தம் நீக்கக்கருதிக் கூற்று நிகழ்த்துமிடத்து, வாழ்க்கையுள் இரக்கத்தைத் தாம் மேற்கொள்வர் என்றெழுதுகிறார்.

பரிமேலழகர் இக் குறளைத் தோழி தலைவியாகியோர்க்-காக்குதற்கு இடந்தருகிறார். நச்சினார்க்கினியர் கருத்தும் இதற்குடம்பாடாகின்றது. (109)

பிரிவாற்றுமை — 1151.

செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

பொருள் - மெய்ப்பாடு - 268.

நூ : "தெய்வமஞ்சல் புரையறந் தெளிதல்"

உரை :

அழிவில் கூட்டத்திற்குரிய பொருளுணர்த்துதல் நுதலிற்று. என்ற வழி நடுவணைந்திணைக்குரிய பொருள் என்ற வாறு.

இல்லது காய்தல் — தலைமகன் கண் இல்லாத குறிப்பினை யவன்மாட்டு உளதாகக் கொண்டு காய்தல் !

........யாரினும் காதலம்

பிரிவாற்றுமை........'செல்லாமை யுண்டேல்' ....

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினு மென்று [1314]

விளக்கம் :

பேராசிரியரும் இதே கருத்துடன் 'வரைந்தெய்திய பின்னர்த் தலைமகள் மனத்து நிகழ்வன இவையென்பது கூறினு-ணும் என்கிறுர்.

வள்ளுவர் கருத்தினை விளக்குமுகமாகப் பேராசிரியர் உரை யெழுதுகிறுர். (110)

பிரிவாற்ருமை — 1151.

செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

பொருள் - செய்யுள் : 502.

நூ : *ஒரு நெறிப்பட்டாங் கோரியல் முடியும்*
கரும நிகழ்ச்சி இடமென மொழிப.

நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலின்
நீங்கி னதனைப் பிற. [495]

உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்ருேரால்
எண்ணப் படவேண்டா தார். [922]

விளக்கம் :

இவற்றுள் "செல்லாமை" என்பதனை முன்னிலை இடத் திற்கும், 'உண்ணற்க' என்பதனைப் படர்க்கைக்கும் உரியதாக்கு கிறுர்.

நெடும் புனலுள் என்பது இடனறிதல் என்கிறுர். எனவே இடம் பற்றிய தெதுவும் இடம் எனப்படும் என்ருகின்றது. பேராசிரியர் இதனைக் "களம்" என்கிறுர். இளம்பூரணர் கருத் துடன் இசைந்தே யெழுதுகிறுர்.

நெடும்புனலுள் என்பதற்கு இளம்பூரணர் கருத்தினையே பரிமேலழகரும் அடியொற்றிச் செல்வதாகத் தெரிகின்றது. (111)

பிரிவாற்றுமை — 1152.

இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தாற் புணர்வு.

பாடபேதம் : *உடைத்தவாம்

பொருள் - கற்பு - **145.**

நூ : " அவனறி வாற்ற அறியுமாகலின் ஏற்றற்கண்ணும்
...........கிழவோள் செப்பல் "

உரை :

கற்பின்கண் தலைவி கூற்று நிகழுமிடங்கள் :

தலைவி, தனிமையுறுதல் பெரிதாகலின் ஆண்டு அலமரல்
பெருகிய காமத்தின் மிகுதியின் கண்ணும்...."வீழுநர்"....

தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கே நிகழும் வழியும்
....இன்கண் உடைத்தவர் – 1152.

தோழிக்குரியவை என்றதனல் தோழிக்குத் தலைவி கூறத்தகா
தனவும் உள என்று கொள்க.

" காணுங்கால் " .... எனவும் உவத்தல்பற்றி வந்தன.

வீழுநர் வீழப்°படுவார்க் கமையுமே
வாழுநம் என்னும் செருக்கு. [1193]

பாடபேதம் : °படுவோர்க்

காணுங்கால் காணேன் தவருய காணுக்கால்
காணேன் தவறல் லவை. [1286]

விளக்கம் :

இன்பமும் இடும்பையுமாகிய விடத்தும் என்ற தொல்-காப்பியர் கருத்தினை, 'இன்கண் உடைத்தவர் பார்வல்' புன்கண் உடைத்தாற் புணர்வு' என எவ்வளவு அழகாக 'இரண்டினையும்' வெளிப்படுத்துகின்றது குறள். (112)

பார்க்க : நச்சினர்க்கினியர்.

பிரிவாற்ருமை — 1153

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான் [பார்க்க : 1151] (113)

பிரிவாற்ருமை — 1160.

அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

(பாடம்) பிறிதாற்றிப் – பிரிதாற்றிப்.

பொருள் - கற்பு - 148

நூ : பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் .... தோழிக்குரிய.

உரை :

கற்பின்கண் தோழி கூற்று நிகழுமிடம்,

உணர்ப்புவயின் வாரா ஊடலுற்ருேள் வயின்
உணர்த்தல் வேண்டியகிழவோன்பானின்று
தான் வெகுண்டாக்கிய தகுதிக்கண்ணும் —
" உப்பமைந் தற்ருல் புலவி "........ எனவரும்.

பிரியுங்காலை எதிர்நின்று சாற்றிய மரபுடையெதிரும் உளப்-பட ....

இனித் தலைமகட்குக் கூறியதற்குச் செய்யுள் :
அரிதாற்றி............எனவரும்.

இதனைத் தலைவி கூற்ருக்குகின்ருர் பரிமேலழகர்.

உப்பமைந் தற்ருற் புலவி அதுசிறிது
மிக்கற்ருல் நீள விடல். [1302] (114)

படர்மெலிந்திரங்கல் ;

1165 *துப்பின் எவனுவர் மற்கொல் துயர்வரவு*
நட்பினுள் ஆற்று பவர் [பார்க்க : 1126] (115)

1166 *இன்பக் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்*
துன்பம் அதனிற் பெரிது [பார்க்க: 1126] (116)

1168 மன்னுயி ரெல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை [பார்க்க : 1126] (117)

கண் விதுப்பு அழிதல் — 1173.

கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து

பொருள் – பொருளியல் – 200

நூ : " உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை "

உரை :

உடம்பும் உயிரும் மெலிந்த விடத்தும், இவை என்னுற்றன எனக் கூறினல்லது கிழவோன் உள்வழிப்படர்தல் கிழத்திக்கு இல்லை.

ஓஒ இனிதே எமக்கு இந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது. [1176]

(பாடம்) இடர்ப்பட்டன

விளக்கம் :

கதுமென என்ற குறளில் 'தாமே' என்ற சொல்லால் தலைவி தனக்குத் தானே இரங்குவதல்லது, கிழவோனைப் படர்த லில்லை என்பதனைக் குறளாசிரியர் நுட்பமாகப் புலப்படுத்தி விடுகிறார். நச்சினார்க்கினியர் இவ்விரு குறள்களையும் எடுத்துக் காட்டுகின்றார். ஆனால் இவை என்ன வருத்தமுற்றன கொலென்று தனக்கு வருத்த மில்லது போலக் கூறினல்லது........ தலைவனைத் தானே சேர்தலில்லை எனச் சிறிது வேறுபடப் பொருள் செய்கிறார். (118)

கண்விதுப்பழிதல் :

1176 ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅ மிதற்பட் டது. [பார்க்க : 1173] (119)

பசப்புறு பருவரல் :

1188 பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பார் இல் [பார்க்க : 1126] (120)

தனிப்படர் மிகுதி :

1193 வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுநம் என்னும் செருக்கு [பார்க்க ; 1152] (121)

1199 நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு [பார்க்க : 1126] (122)

நினைந்தவர் புலம்பல் :

1203 நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும் [பார்க்க : 79] (123)

1209 விளியுமென் இன்னுயிர் வேறல்ல மென்பார்
அளியின்மை யாற்ற நினைந்து [பார்க்க : 1126] (124)

கனவு நிலையுரைத்தல் :

1215 நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது [பார்க்க : 79] (125)

1217 நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்னெம்மைப் பீழிப் பது [பார்க்க : 1126] (126)

பொழுது கண்டிரங்கல் :

1222 புன்கண்ணை வாழி மருண்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை [பார்க்க : 1126] (127)

உறுப்பு நலனழிதல் — 1233.

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

பொருள் - பொருளியல் - 199

நூ : "வண்ணம்திரிந்து புலம்புங்காலை உணர்ந்தது போல
உறுப்பினை .... புணர்க்கவும் பெறுமே"

உரை :

தலைமகள் வண்ணம் வேறுபட்டுத் தனிமையுறுங்காலைத் தலைமகன் பிரிவைத் தன் உறுப்புக்கள் உணர்ந்தன போலப் பொருந்தும் வகையாற் கூறவும் பெறும் என்றவாறு.

'தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை. [1277]

(பாடம்) *துறந்தமை*

விளக்கம் :

இவ்விரு குறள்களும் மிகப் பொருத்தமாகத் தொல்காப்பியத்திற்கு மேற்கோள் எழுதிய மாதிரியே அமைந்துள்ளன.

நச்சினார்க்கினியர் 'தணந்தமை' என்பதுடன் 'கண்ணுங் கொளச் சேறி' என்பதனையும் எடுத்துக் காட்டுகிறார்.

'புணர்ந்தவகை' என்றார். இதனானே இவற்றைத் தலைவன்பாற் செலவு வரவுடையன போலக் கூறலுங் கொள்க, என உரை கூறிக் 'கண்ணும் கொளச் சேறி' என்பதனை யெடுத்துக் காட்டுகிறார். (128)

நெஞ்சொடு கிளத்தல் — 1244.

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று.

பொருள் – பொருளியல் – *210*

நூ : *உண்டற்குரிய அல்லாப் பொருளை*
உண்டன போலக் கூறலு மரபே.

உரை :

உண்டற் றொழிலுக்குரிய வல்லாத பொருளை உண்டனவாகக் கூறலும் மரபென்றவாறு.

இஃதொருசார் வழுவமைத்தல் நுதலிற்று.

இது சொல்லின்கட் கிடந்ததோர் ஒழிபு என இளம்பூரணர் உரை காண்கிறார்.

விளக்கம் :

உண்பதற்குரிய பொருள்கள் பலவற்றிலும் மிகப் பொருந்திய கண்ணினை வள்ளுவர் தேர்ந்து கொள்கிறார்.

நச்சினார்க்கினியர் இக் குறளுடன்,

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக் கொள்வற்றே பசப்பு (1187)

என்பதனையும் காட்டுகிறார்.

அதற்கு, உம்மையால் பிறதொழில் பற்றி வருவனவுங் கொள்க எனக் குறிப்புத் தருகிறார். (129)

உறுப்பு நலனழிதல் :

1234 பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள் [பார்க்க : 1126] (130)

1235 கொடியார் கொடுமை யுரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள் [பார்க்க : 1126] (131)

நெஞ்சொடு கிளத்தல் — 1247.

காமம் விடுஒன்றோ நாண்விடு நல்நெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு.

பொருள் - களவு - 97

நூ : வேட்கை யொருதலை யுள்ளுதல் மெலிதல் ....
.... களவென மொழிப.

உரை :

மெய்யுறு புணர்ச்சி நிகழுங்காலம் உணர்த்துதல் நுதலிற்று.
நாணுவரை யிறத்தலாவது நாண் நீங்குதல் '
' காமம் விடு வொன்றோ....... '

விளக்கம் :

நச்சினார்க்கினியர் நாணுவரையிறத்தல் என்ற துறையை விளக்கும் பொழுது தலைவன் பாங்கற்கும் தோழிக்கும் உரைத்த லும் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றலும் போல்வன என் கிறார்.

" காமம் விடு " எனமட்டும் சொன்னால் போதாது என நாண் விடு எனவும் தெளிவாகக் கூறுகின்றார். (132)

குறிப்பறி வுறுத்தல் — 1272.

கண்ணிறைந்த காரிகை காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

(பா-ம்) மாமை

பொருள் - களவு - 113

நூ : களவலராயினும்........................செவிலி மேன

உரை :

செவிலிக்குரிய கிளவி யுணர்த்துதல் நுதலிற்று.

காமமேற்படுப்பினும் : தலைவி மாட்டுளதாகிய வேட்கை அளவிறப்பினும் தோழியை வினவும். 'மணியில் திகழ்தரு' ; அளவுமிகத் தோன்றினும் : பெதும்பை பருவத்தாளாகிய தலைவி புணர்ச்சியாற் கதிர்த்து வீங்குகின்றமுலையும் புதிதுற்றகவினும் கண்டவிடத்துத் தோழியை வினவும் : ' கண்ணிறைந்த '—

மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு. [1273]

(பா-ம்) மணியுள் ; அணியுள்

விளக்கம் :

நச்சினார்க்கினியரும் இவ்விரு குறள்களை எடுத்தாளுகிறார். மற்றும் இவ்விரு துறைகளையே இதே கருத்துடன் விளக்கப் படுத்துகிறார். பரிமேலழகர் இவற்றைத் தலைமகற்குரிய கிளவிகளாக்குகிறார். (133)

குறிப்பறி வுறுத்தல் :

1273 மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு [பார்க்க : 1272] (134)

1277 தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை [பார்க்க : 1233] (135)

குறிப்பறி வுறுத்தல் — 1279.

தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது.

பொருள் - பொருளியல் - 238

*நூ : உடனுறை யுவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே*

உரை :

உள்ளுறையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

அசையியற்குண் டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும். [1098]

விளக்கம் :

சுருக்கமாக நூலெழுதிய வள்ளுவர் பொருளைக் குறிப்பாக [உடன்படுத்து] உணர்த்துவதில் வல்லவர்.

சுட்டு : ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதோர் பொருட்படுதல் 'தொடிநோக்கி'

நகை : நகையில் பிறிதொரு பொருளுணர நிற்றல் 'அசையியற்கு'

பார்க்க : தெய்வச்சிலையார் (136)

புணர்ச்சி விதும்பல் — 1286

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை [பார்க்க : 1152] (137)

நெஞ்சொடு புலத்தல் — 1291.

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக் காகா தது.

பொருள் - பொருளியல் - 194

*நூ : நோயும் இன்பமும் இருவகை நிலையில்....... உவமம்
ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி.*

உரை :

ஒருசார் காமப் பொருண்மை பற்றி நிகழ்வதோர் கிளவி யுணர்த்துதல் நுதலிற்று.

இது மறுத்துரைப்பதுபோல் தலைவி கூற்று. இளிவரல் பற்றி வந்தது "அவர்நெஞ் சவர்க்காதல்"

விளக்கம் :

பரிமேலழகரும் இதைத் தலைவி கூற்றாகவே யுரைக்கிறார்.
(138)
பார்க்க : நச்சினார்க்கினியர்.

புலவி — 1302

உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல் [பார்க்க : 1160] (139)

புலவி — 1303.

அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

(பாடம்) தம்மை – காமம்

பொருள் – கற்பு – 155

நூ : *புலத்தலும் ஊடலு மாகிய விடத்தும்*
கிளவி தோழிக் குரிய.

உரை :

தோழிக்குரிய மரபுணர்த்திற்று. களவு, கற்பு ஆகிய இரண்டுக்-கும் உரிய மரபுகளில் இக்குறள் கற்புக் குரியன வுணர்த்து கிறது.

விளக்கம் :

இதே கருத்துடன் நச்சினார்க்கினியர் இக்குறளை மேற்-கோள் காட்டுகிறார்,

— இவை கற்பில்

தலைவி குறிப்பினால் தோழிக்கூற்று வந்தன என்றவர் எழுதுகிறார்.

பாடாண்டிணை கைக்கிளையாயின் தலைவி கூறவும் பெறு மென்று கொள்க என்று அவர் உரையைத் தழுவியது போலப் பரிமேலழகர் இதனைத் தலைவி கூற்ருக எழுதுகிருர். (140)

புலவி — 1307.

ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று.

பொருள் - கற்பு - 144

நூ : *கரணத்தின் அமைந்து முடிந்தகாலை ....*
மெல்லென் சீறடி புல்லிய இரவினும் கிழவோன் மேன

உரை :

தலைவற்குரிய கிளவி யெல்லாம் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று, பொறைமையும், பெருமையும் (பொய்யை) மெய்யெனக் கொள்ளுமாறு அருளி ஆய்தல் அமைந்த வாயிலொடு பொருந்தித் தலைவன் தன்னுன் ஆகிய தகுதிக்கண்ணும் கூற்று நிகழும்.

இவ்வழிக் கூறும் கூற்று காமமாகத் தோன்ருது பொருளாகத் தோன்றும். காமத்திற்கு மாருகக் கூற வேண்டுதலின்

'இன்பம் விழையான்'

யாரினும் காதலம் என்றேனு ஊடினுள்
யாரினும் யாரினும் என்று. [1314]

(பா–ம்) என்மோ

தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று [1318]

(பா–ம்) நுமருள்ள

தன்னை யுணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீர ராகுதிர் என்று [1319]

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று [1313]

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனு
கண்ணிறை நீர்கொண் டனள். [1315]

(பா–ம்) பிறப்போ; என்றேமா

ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா [1329]

(பாடம்) ஒளியிழாய்

ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும் [1322]

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்த்
துன்பம் துடைத்தூன்றும் தூண். [915]

விளக்கம் :

நச்சினார்க்கினியர் 'அறிதோ றறியாமை', 'தன்னை யுணர்த்தினும்', இம்மைப் பிறப்பில்', 'ஊடலின் உண்டாங்கோர்', 'ஊடுக மன்னோ' ஆகிய குறள்களைக் காட்டுகின்றார். (141)

புலவி நுணுக்கம் :

1313 கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று [பார்க்க : 1307] (142)

1314 யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினு மென்று [பார்க்க : 1151] (143)

1315 இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள் [பார்க்க : 1307] (144)

1318 தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று [பார்க்க : 1307] (145)

1319 தன்னை யுணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று [பார்க்க : 1307] (146)

ஊடலுவகை ;

1322 ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும் [பார்க்க : 1307] (147)

1329 ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா [பார்க்க : 1307] 148)

திருக்குறளும்
நச்சினார்க்கினியரும்

கடவுள் வாழ்த்து — 1.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு

எழுத்து - புள்ளி - 314:

நூ : அல்வழி யெல்லா மெல்லெழுத் தாகும்

உரை :

மகரஈறு அல்வழிக்கணெல்லாம் மெல்லெழுத்தாய்த் திரிந்துமுடியும். ' அகர முதல ' இவை இயல்புகணத்துக்கண் மகரங்கெட்டு முடிந்தன.

விளக்கம் :

மகர வீற்றுப் புணர்ச்சி பற்றிய இந் நூற்பாவில் மகரம் வலிதலையும் திரிதலையும் விட்டுக் கெடுதலைப் பற்றிய பகுதிக்கு வள்ளுவர் குறள் மேற்கோளாகியுள்ளது.

கெடுதலில் ஓரெழுத்து குறைகின்றது. முதற் குறளிலேயே வள்ளுவர் இங்ஙனம் (எழுத்து) சுருக்கத்தையும் குறுக்கத்தையும் காட்டியிருப்பது ஓர் அணி யெனலாம். மற்றும் எதிரில் மகரம் வருஞ் சீராக அஃதமைந்திருத்தலால், எழுத்துக் கெடுதலால் ஏதும் அழகு குன்றாமையுடன் வளர்ந்தே யிருக்கின்றது. (1)

தொல்காப்பியத்தில் நச்சினார்க்கினியர் உரையிற் காணப்பெறும் திருக்குறள் பகுதிகள் இங்குத் 'திருக்குறளும் நச்சினார்க்கினியரும்' என்ற தலைப்பின்கீழ்த் தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன.

கடவுள் வாழ்த்து — 1

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

சொல் - எச்சவியல் — 440

நூ : 'தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்'

உரை :

குறிப்பெச்சமும் இசை எச்சமும் முடியுமாறு கூறுகின்றது. இனிச் சேனாவரையர் இசை யெச்சத்திற்கு அகர முதல என்னும் குறள் வெண்பாவும் காட்டினுரால் எனின், அவர் இசைஎச்சம் என்ற அகரமுதல என்பதன்கண் 'அதுபோல' எனவிரிந்த உவமச்சொல் துணியுமாறு விரியாது இரண்டிற்கும் பொதுவாய் வேறுபடவந்த உவமத்தின்பாற்படுதல் அல்லது இசையால் பிற வாமையானும் அவை பொருந்தாமை உணர்க.

பார்க்க : சேனாவரையர்.

விளக்கம் :

இசை எச்சம் என்பதனைச் சேனாவரையர் பொருள் எச்சம் எனக்கொண்டிருக்கிறுர். பிற்காலத்தார் 'ஓசையெச்சத்தை' இசை எச்சமாகக் கொண்டுள்ளனர். இசைகெடின்; குன்றிசை மொழி வயின் என்ற அளபெடை பற்றிய விதிகளில் இசை யென்பதற்குப் பொருள் எனச் சேனாவரையர் கருத்துப்படி பொருளை வலி யுறுத்த வேண்டும். இவ்வாற்றுன் சேனாவரையரின் இப்பொருள் பொருத்தமுறத் தோன்றவில்லை. (2)

கடவுள் வாழ்த்து — 1

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

பொருள் - செய்யுளியல் — 32

நூ : 'நாற்சீர் கொண்டதடி யெனப்படுமே'

உரை :

நாற்சீர் கொண்ட அளவடியை அடியென்று சிறப்பித்துக் கூறப்படும். எனவே ஒழிந்த நாலடியும் சிறப்பில வாயிற்று.

அகர முதல வெழுத்தெல்லா மாதி என நாற்சீரடியால் சான்றோர் (மூன்று பாவும்) கூறியவா றுணர்க.

விளக்கம் :

செய்யுளியல் பற்றிய இவ்விதிக்கு நச்சினார்க்கினியர் அரிய குறிப்பொன்றை எழுதியிருக்கிறார்.

பார்க்க : இளம்பூரணர்

வள்ளுவரை நச்சினார்க்கினியர் 'சான்றோர்' எனக் குறித்துப் பாராட்டுகிறார். அளவடிக்குச் சான்றாக நூலெழுதியவர் ஆதலால் போலும்! சான்றாண்மையைப்பற்றி வள்ளுவர் ஓரதிகாரம் எழுதியுள்ளார். சாலும் என்பது போதும் என்னுமளவு நிறைவைக் குறிக்கும். அறிவிலும் பண்பிலும் வள்ளுவர் சான்றோர் ஆவார். சான்றோர்க்குக் கூறிய அவரிலக்கணத்திற் கவரே உவமையென நச்சினார்க்கினியர் கருதியிருக்கலாம். தனக்குவமை யில்லாதார், தனக்குத்தானே உவமையானவர் குறளாசிரியர் என்பது அவர் கருத்தாகலாம். 'சான்றோர் பலர் யான் வாழூமூரே' எனப் பொருள் பொதிவுடன் தான் இச்சொல்லை ஆன்றோர் குறித்துள்ளனர். ஊருக்குப் பலராகவன்றி நாட்டுக்கே ஒருவராகத் தோன்றிய வள்ளுவரை நச்சினார்க்கினியர் இங்குச் சான்றோர் எனக் குறித்தது, நச்சினார்க்கினியர்தம் சான்றாண்மையையும் குறிக்கின்றது. (3)

கடவுள் வாழ்த்து — 3

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

பொருள் - செய் — 11

நூ : அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோராறே

உரை :

அசைகளேயும் சீர்களேயும் ஓசையொடு சேர்த்தி வேறுபாடுணர்-
வித்தலும் செய்யுளிலக்கணத்துறை போயிஞரது நெறி.

விளக்கம் :

நிலமிசை நீடுவாழ்வார் (குறள்–3) இதனுள் வாழ்வாரென்னும் ஓசையை வகுத்து 'வார்' என நேரசைச் சீராக்க அசையான் இன்ஞேசைத் தாயிற்று. இதனே வகையுளியென வேருேருறுப் பாக்குவாருமுளர். யாப்பருங் கலக் காரிகையிலும் இது வகையுளிக்கு மேற்கோள் ஆயிற்று.

இனிச் சீர்வகையடிக்கும், 'யாதானு நாடாமல்' (397) என்ருற் சீர்வகைத்துள்ள லோசையும் 'என்ஞெருவன்' என்ருற் சீர்வகைச் செப்பலோசையும் பிறக்குமாறு இசையொடு சேர்த்தி யுணர்க.

பிற்காலத்தார் அசையையும் சீரையும் முதன்மையாகக் கொண்டமையால் இதனே வகையுளி (பொருள் கெடுமாறு பிரித்தல்) என்ற கருத்தினில் உரைகண்டனர்.

சங்ககாலத்தார் (பாவென்னும்) ஓசையே முதன்மையாகக் கொண்டமையால் நச்சிஞர்க்கினியர் போன்ருேர் இதனே 'இன்ஞேசைத்தாயிற்று' என் வெழுதுவர். நச்சர் இங்கு இசை யென்பதற்கு 'ஓசை' யெனப் பொருள் கொள்கிருர்.

இசையொடு சேர்த்தி யென்பதனே அசையும்சீரும் என்பதனுடன் தனியாகச் சேர்த்தலால் 'இசை' தனித்ததொரு சிறப்புப் பொருளாகிறது; அசையும் சீருமே பாவாகா என்பது புலஞகின்றது. (4)

கடவுள் வாழ்த்து — 5

இருள்சேர் இருவினேயும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

பொருள் – செய் — 75

நூ : *நிரைய வணிற்பின் நேருநேர்பும்*
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்.

உரை :

நேரீற்றியற்சீர் நின்ற இரண்டாஞ் சீரிடத்து நிரையீற்றியற் சீர் நின்றபின் அதன் பின்னொரு நேர்பும் வந்து தட்டல் நீக்கப்படா வென்பர் மெய்ம்மொழிப் புலவர்.

இருள்சேர் .. ....மாட்டு (5) எனத்தட்டன", பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார். இறைவனடி சேராதார் " எனத் தட்டன.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர் [1121]

அமிழ்தினும் ஆற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ் [64]

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று [100]

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண்ஆறும்
உடையான் அரசருள் ஏறு [381]

விளக்கம் :

தொல்காப்பியத்திற்கே யுரிய (செய்யுளியலின்) இவ்வுரியசை நூற்பாவிற்குக் குறளையும் காட்டியிருத்தலால் குறளாசிரியர் அரிய (நுண்ணிய) வழக்குக்களையும் விளக்குதற்குப் பயன் படுகிறார் என்பது போதரும்.

பார்க்க : இளம்பூரணர்; பேராசிரியர். (5)

கடவுள் வாழ்த்து — 7

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

பொருள் - செய் — 74

நூ : *நேரீற்றியற் சீர் நிரையும் நிரைபும்*
சீரேற் றிறூஉம்.............

உரை :

நிரையும் நிரையும் நேரீற்றியற் சீர்ப்பின்னே தளை கொண்டிறும் இயல்பின. தனக் குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான் மனக்கவலை மாற்றலரிது (,) இவைதேமா புளிமா என்னும் நேரீற்றியற்சீர் நிரையசைச் சீரோடும் நிரைபசைச் சீரோடும் தட்டன.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு

விளக்கம் :

முன்னது நிரைச்சீர்ப்பின்னே நேரும் நேர்பும் வருவது பற்றியது. இது நேரீற்றியற் சீர்ப்பின்னே நிரையும் நிரைபும் வருவது பற்றியது.

பார்க்க : இளம்பூரணர் (5–9) (6)

வான் சிறப்பு — 15

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
எடுப்பதூஉம் எல்லா மழை [பார்க்க : 7]

தொல் – பொருள் – புறத்திணை — 81

நூ : ' அமரர்கண் முடியும் அறுவகை யானும் '

உரை :

அமரர் கண்ணே வந்து முடியுமெனவே அமரர் வேறென்பதூஉம் அவர்கண்ணே வந்து முடிவன வேறென்பதூஉம் பெற்றும். அவை முன்வரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகுமாம். இவை தத்தம் சிறப்புவகையின் அமரர் சாதிப் பால வென்றல் வேத முடிவு.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் [28]

விளக்கம் :

இங்குத் தொல்காப்பியர் வணங்கத்தக்க தேவர்களுடன் மக்கள், மழை, பசு, அமரர் உலகம் ஆகியவற்றையும் இணைக்கிறார். தேவர், மக்களினும் தனித்துயர்ந்தோர், தனியுலகில் வாழ்வோர் என்ற கருத்தினை மறுத்து இவ்வுலகமே தேவருலகம் எனக் காட்டுகிறார். வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற கருத்திற்கு இது அரண் செய்கின்றது. முதலில் இயற்கையையும் பின்பு தனிக் கடவுளையும் வழிபட்டது வடவர் நாகரிகம். அதனைத் தமிழர் (திராவிடர்) இடமிருந்தே அவர்கள் மேற்கொண்டிருக்கலாம். வேந்தன் மேய — தீம்புனல் உலகம், மாயோன் மேய — காடுறையுலகம், சேயோன் மேய — மைவரை உலகம் என்கையில் புனலும் (மழை) வேந்தனும் (மனிதன்) மலையும் அக்கடவுளர்க்கு முன்பேயிருந்தன என்ற குறிப்பு கிடைக்கின்றது கொடிநிலை, கந்தழி வள்ளி (சூரியன், திங்கள், மழை) என்பன கடவுள் வாழ்த்தொடும் கண்ணியவருமே என்ற விதியும் இதற் கரண் செய்கிறது. இளங்கோவடிகளும் வள்ளுவரும் மாமழையையும் திங்களையும் ஞாயிற்றையும் சோழனையும் (நீத்தாரையும்) பாராட்டுவது இம்மரபுபற்றியே என்பர் அறிஞர். முன்வரும் பார்ப்பாரும் நீத்தார் வகையராய சான்றோர்கள். இங்ஙனம் தேவரையும் மக்களையும் உலகினையும் ஒன்றாக்குகிறது தொல்காப்பியம். (7)

வான்சிறப்பு - 15

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லா மழை [பார்க்க : 7] (8)

வான்சிறப்பு — 16

விசும்பின் துளிவீழி னல்லான் மற்றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது

பொருள் - செய் — *109*

நூ : வாழ்த்தியல் வகையே நாற்பாக்கு முரித்தே

உரை :

வாழ்த்தியலின் கூறுபாடு நான்கு பாவிற்குமுரித்து (இது முற் கூறிய மும்முதற் பொருட்கண் ...... வாழ்த்துதற் பொருட்குமாய் நாற்பாவிற்குமுரித்தா மென்கிறது) வகை யென்றதனுற் கடவுளரும் முனிவரும் பசுவும், பார்ப்பாரும் அரச ரும் மழையும் நாடுமென்னும் அறுமுறை வாழ்த்து வருதலே பெரும்பான்மை என்பதூஉம் அங்ஙனம் வாழ்த்துங்கால் தனக்குப் பயன்படுதலும் படர்க்கைப் பொருட்குப் பயன்படு-தலுமென இரு வகையுான்வரும் வாழ்த்து என்பதூஉம் முன் னிலையாகவும் படர்க்கையாகவும் வரும் வாழ்த்து என்பதூஉங் கொள்க.

விசும்பின்; உரனென்னும் இது முனிவரை —

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து [24]

விளக்கம் :

இதுவும் முன்னைய நூற்பாவும் தொடர்புடையன. இங்கு அறத்தொடு கடவுளர் முதலிய அறுவரைத் தொடர்பு படுத்து கிருர். அவரும் அறம்போல நாற்பாவிற்குமுரியர் என்பதாம். இங்குணர்த்தப்படும் பேருண்மை அறத்திற்கு மாருன கடவுள் நெறியும் முனிவர் பார்ப்பார் அசுரர் முதலோர் நெறியும் பசு நாடு ஆகியவற்றின் வளர்ச்சியும் தமிழ்ப் பண்பாட்டிற் குகந்தனவல்ல என்பதாம். (9)

நீத்தார் பெருமை – 24

உரனென்னுந் தோட்டியான் ஒரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து [பார்க்க : 16] (10)

நீத்தார் பெருமை — 27

சுவையொளி யூருேசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

சொல் - வினை - 226

நூ : 'குறிப்பொடு வரூஉம் காலக்கிளவி
அஃறிணை மருங்கின்
மேலைக்கிளவியொடு வேறுபாடிலவே'

உரை :

காலம் குறித்துக் கோடலோடு வரும் வினைச்சொற்கள் அ∴றிணை யிடத்து மேற்கூறிய தெரிநிலைவினையின் ஈறுகளோடு ஈறு வேறுபாடு இல.

தெரிநிலையுடன் கூடிய டகர உகரம் 'இடத்து என்னும் பொருண் மைக் கண்' வகைதெரிவான் கட்டே உலகு எனவும் ....

விளக்கம் :

குறிப்பு வினைபற்றிய இந் நூற்பாவிற்குக் குறளை மேற் கோளாக்கிய நச்சினார்க்கினியர் கருத்து எதுவோ தெரியவில்லை. குறிப்புவினை முக்காலத்திற்கு முரியது. முக்காலத்துக்கும் அறங் கூறிய வள்ளுவரை அவர் மேற்கொண்டது பொருத்தமாகலாம்.

நுண்பொருள் மாலையார், கட்டு என்பது கண்ணது என ஆறுவதனுருபு முற்றும் காமத்துட் பேரமர்க்கட்டு என்பது கண்ணையுடைத்து என இரண்டாவது விரிக்கும் குறிப்பு முற்றும் நின்றது, இதனுள் தத்துவவகை காண்க என எழுதுகிறார். (11)

நீத்தார் பெருமை — 28

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

பொருள் - செய் — 178

நூ : நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரமென்ப.

உரை :

சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் குறைவின்று

பயக்கச்சொல்லு மாற்றலுடையார் அவ்வாணையாற் கிளக்கப் பட்டுப் புறத்தார்க்குப் புலனாகாமை மறைத்துச் சொல்லும் சொற்றொடரெல்லாம் மந்திர மெனப்படும். அவை வல்லார் வாய்க் கேட்டுணர்க.

இதனான் 'நிறைமொழி மாந்தர் பெருமைநிலத்து மறைமொழி காட்டிவிடும் (28) என்றார்.

விளக்கம் :

நிறைமொழி மாந்தர் மறைமொழி யென்ற தொடர்கள் தொல்காப்பியத்திலும் குறளிலும் ஒரேமாதிரி வருகின்றன. எனவே தொல்காப்பியச் சூத்திரத்தை விளக்குவது போலவே இக் குறள் அமைந்துள்ளது. உலகிற்குயர் வாழ்க்கை மந்திரங்களை யுதவிய வள்ளுவர் மந்திரத்தை, மறைமொழியினை இன்னதென இக் குறளில் விளக்குகிறார். ஆரியம் நன்று தமிழ் தீதென்ற நக்கீரர் தம் சாபப் பாடல் தவறாத சொற்களையுடைய மந்திரம் என அங்கதப் பாட்டிற்கு எடுத்துக் காட்டுகிறார் நச்சினார்க்-கினியர். அவரே இக்குறளையும் எடுத்துக் காட்டுகிறார். ஆனால் வள்ளுவர் கருத்து இதுவா என்பது ஆய்தற்குறியது. நீத்தார் பெருமையில் இக் குறளை வைத்திருக்கிறார். பரிமேலழகர் ஒரு-வரே நச்சரைத் தழுவுகிறார். மற்றவர்கள் அவர் கூறிய மந்திரங் களை வேதங்களை மற்றுள்ள நூல்களை காட்டும் என்று எழுது கின்றனர். எக்காலத்தும் வாழ்க்கைக்குரிய உயர்ந்த உண்மை களைக் கொண்ட மொழியென்பதே வள்ளுவர் கருத்தாகலாம். பேராசிரியர் அகலத்தில் இக் குறளைக் காப்புத் தமிழ் மந்திரம் எனக் காண்க என்பர். (12)

நீத்தார் பெருமை — 28

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் [பார்க்க : 15] (13)

நீத்தார் பெருமை — 29

குணமென்னும் குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயும் காத்த லரிது.

சீவகசிந்தாமணி — 3

பாடல்: பன்மாண் குணங்கட் கிடனுய்ப் பகை
நண்பொடில்லான்

உரை :

இனி, குணங்கட் கிடனுய்ப் பகைநண்பில்லானெனின் பிறர்க் குள்ளது இவற்கின் றென்ருகும்.

விளக்கம் :

இது தன்ம சரணமும் சாது சரணமும் கூறிற்று. —

நீத்தார்க் (மக்கட்) குரிய குணங்களை இறைவன் குணங்களுடன் ஒப்பிட்டுப் பேசுதலால் குணநிறைவுடைய மனிதரும் இறைவர்க்கு நிகரானவரே என் ப து போதரும். குன்றில் பல பொருள்கள் அடங்கி யுண்மைபோலக் குணக்குன்றில் பன்மாண் குணங்கள் அடங்கி யுள்ளன வென்பதாம்.

நுண் பொருள் மாலையார், குணம் - சாதியொருமை என் றெழுதுகிருர்.

இல்வாழ்க்கை — 41

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

சொல் - எச்ச — 449

நூ : பெயர்நிலைக் கிளவியின் ஆஅகுநவும் ....கடப்பாடிலவே

உரை :

இதுவும் ஒருசார் வழுவமைக்கின்றது. பெயர்நிலை திசைநிலைக் கிளவிகள் தொன்னெறிமொழி மெய்ந்நிலை மயக்கு மந்திரப்

பொருள், அவ்வனைத்தும் வழங்கியவாறே கொள்வதல்லது இலக்கணத்தால் யாப்புறவுடைய அல்ல.

எனைத்துணைய ராயினு மென்னும் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல் [144]

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு [381]

என்றுற் போல்வன வெல்லாம் ஒருமைப் பொருள் கூறிற்றேனும் பன்மைப் பொருளை யுணர்த்தலின் மெய்ந்நிலை மயக்கமாயிற்று. மெய் — பொருள்.

விளக்கம் :

தொல்காப்பியர் காலத்து இவை 'வழங்கியல் நெறி' என்றமையான் சாதியொருமையென இவற்றிற் கிக்காலத்து இலக்கணங் கூறுதலெல்லாம் பிற்பட்ட வழக்கெனத் தெரிகின்றது. பன்மைப்பால் 'தேரான்' என்னும் ஒருமைப்பாலோடு பால் வழுவமைதியாக இணங்கி நின்றது என இராமானுசக்கவி எழுதுகிறார். (15)

வாழ்க்கைத் துணைநலம் — 51

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

பொருள் – கற்பு — 154

நூ : 'சொல்லியகிளவி அறிவர்க்கு முரிய'

உரை :

அறிவரது கூற்றுக் கூறுகின்றது.

நல்லவை யுணர்த்தலும் அல்லவை கடிதலுமாகிய கிளவி செவிலிக்கேயன்றி அறிவர்க்கு முரிய என்றவாறு.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை [55]

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் [56]

விளக்கம் :

இளம்பூரணர் இக் குறள்களைச் செவிலிக்குரிய கூற்றுக்களைப் பேசும்பொழுது எடுத்துக் காட்டுகிறார், அறிவர்க்குரிய தன்மைகளைச் 'செவிலிகட்கும்' ஏற்றுதலால் அறிவுடைய செவிலிகளையே குழந்தைகளை வளர்க்கப் பண்டு பயன்படுத்தியிருந்தனர் எனத் தெரிகின்றது. தெய்வந் தொழாஅள் என்பதில் நல்லவை யுணர்த்தலும் அல்லவை கடிதலுமாகிய இரண்டுமுள்ளன. தலைவன் தலைவியாகலின் இல்லறக் கற்பு நெறியைப் பற்றியே அறிவரும் செவிலியும் அறிவுறுப்பர் போலும்! இஃது இங்கெடுத்தாண்ட குறள்களால் தெரிகின்றது. தமிழ்க் குழந்தைகளை (மக்களை) என்றென்றும் எடுத்து வளர்க்கும் செவிலியாகவும் அறிவராகவும் இங்கு வள்ளுவர் காட்சியளிக்கிறார். (16)

வாழ்க்கைத் துணைநலம் — 52

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்

பொருள் - கற்பு — 155

நூ : 'இடித்துவரை நிறுத்தலும்'

உரை :

தலைவனும் தலைவியும் அவ்வறிவரது ஏவலைச் செய்து நிற்பராதலின் அவரைக் கழறி ஒரெல்லையிலே நிறுத்தலும் அவ்வறிவரது தொழிலாகும்.

விளக்கம் :

அழச்சொல்லி அல்லதிடித்து என வள்ளுவர் கூறுகையில் தொல்காப்பியத்து 'இடித்துவரை' என்றவரி அவருக்கு நினைவிருந்திருக்கலாம். மாட்சி இல்லாள் கண் இல்லாயின் என்கையில் அத்தொடர் ஒரு நல்ல அழுத்தமான இடித்துரை என்பதனைப்

புலப்படுத்துகின்றது. நாட்டின் கற்பு நெறியினைக் கட்டிக்காத்த பெருமை இவ் வரிகளுக்கெல்லாம் உண்டு போலும்! (17)

வாழ்க்கைத் துணை நலம் – 55

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை [பார்க்க : 51] (18)

வாழ்க்கைத் துணை நலம் – 56

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் [பார்க்க : 51] (19)

வாழ்க்கைத் துணைநலம் — 57

சிறைகாக்கும் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

சீவகசிந்தாமணி — 2890

பாடல்: பொன்னுர மார்ப சிறைப்பட்டனை போலுமென்றான்

உரை :

ஈங்குச் சாரணர் சிறைவைத்ததனாற் சிறைப்பட்டனை போலும் என்று 'கூறிய சிறையென்னும் சொல்லும் முன்னர்' கூறிப்போந்த கட்டென்னும் சொல்லும் பரியாயச் சொல்லன்றி வேறு வேறு பொருள் தரும் சொற்களாம்; என்னை? இத் தமிழ்ப்பாடையில் உலக வழக்காகிய இயற்சொற்களில் ஒரு வினையையுணர்த்துதற்கு ஒருசொல் வழங்குதலன்றி இருசொல் வழங்காமையின். சிறையென்பது தடுத்துக் காத்தலை யுணர்த்தலும் அன்றியும் சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் என்றாற் போல்வன பிறவற்றாலும் சிறைக்கால் நீர்ச்சிறை யென்னும் வழக்கானும் உணர்க.

சாரணர் கூறிய சிறையென்னும் சொல்லிடத்துக் கட்டென்னும் சொல்லின் பொருள் பிறத்தலின்மையின் முன்னர்க் கட்டென்று கூறியது ஈண்டைக்குப் பொருந்தாதாயிற்று. ஈண்டு இவர் கூறிய பாவம் காரணமும், ஆண்டுச் சிறைப்பட்டது காரியமு

மாகவே கோடல் வேண்டலின் சிறைப்பட்டானென்றே யாண்டும் பொருள் கூறுவதன்றிக் கட்டுண்டா னென்று பொருள் கூறலாகாமை யுணர்க.

விளக்கம் :

ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் என்பது ஒருமொழியின் சிறப்பென்பர். அதனால் கொள்ளும் பொருளில் குழப்பம் இராதாம். சிறை யென்ற சொல்லுக்கு வள்ளுவரைத் துணையாகக் கொண்டு நச்சினார்க்கினியர் இங்ஙனம் பொருள் செய்கிறார். கட்டுண்ணல் என்பதனை மறுத்துச் சிறைப்படுதலைச் சிறப்பாகப் பொருள் கூறலால் தமிழர் பெண்களைச் சிறைபடுத்தியதில் அவர்களைக் கட்டுப்படுத்தற்காகவன்று அங்கவர்க் குரிமையிருந்தது என்பது புலப்படும். அவர்க்கோர் பாதுகாப்பு, தடை என்ற அளவிலேயே சிறைப்படுத்துதல் (இற்செறித்தல்) இருந்திருக்கின்றது. (20)

மக்கட்பேறு — 63

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தத்தம் வினையான் வரும்.

சொல் - எச்சம் — 410

நூ : தநநுஎ எனும்...........

உரை :

முதலாகிய தொடர்ச்சிக் கிழமையைக் கருதின ஒட்டுப் பெயர்களும் தொகைச் சொற்போல இரு பொருள்பட்டு நிற்பினும் அவை போலப் பின்வரும் சொல் தம் பொருள் உணர்த்தாமையின் பிரிக்கப்படா ஒரு சொல்லேயாய் நிற்கும்.

தம்முடைய கிளை, எம்முடைய கிளையெனப் பன்மையுணர்த்துதலன்றி ஒருமையை யுணர்த்தாமை யுணர்க.

விளக்கம் :

இத்தகைய நுட்பமாகிய இலக்கண விதிகளுக்கும் விளக்கந்தரக் குறட் பாக்கள் பேருதவி புரிகின்றன. (21)

மக்கட்பேறு — 64

அமிழ்தினும் ஆற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ் [பார்க்க : 5] (22)

மக்கட்பேறு — 66

குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் பார்க்க : 254]

தொல் - செய் — 8

நூ : *“ஒற்றெழுத்தியற்றே குற்றிய லிகரம்”*

உரை :

குற்றியலிகரமாவது ஒற்றியல்பினை யுடைத்து; அதுவேயன்றி, எழுத்தியல்பினையு முடைத்து.

என்றது அலகு பெருதவழி ஒற்றும். அலகு பெற்றவழி எழுத்தாம். என்றவாறு.

அருளல்ல தியாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல் [256]

விளக்கம் :

குற்றியலிகரம் உயிராகவும் ஒற்ருகவும் ஆகிய இரு தன்மைகளையு முடையது. இரு நிலைகட்குமுரிய உதாரணங்கள் திருக்குறளிலேயே கிடைத்திருப்பது மிகவும் அருமையுடைய தாகும். அலகு பெருமைக்கு இது யாப்பருங்கலக்காரிகை மேற்கோள். செய்யுளியல் யாப்பமைதிகள் பலவும் இயல்பா யமையும் படி வள்ளுவர் நூல்செய்திருக்கிருர். (23)

அன்புடைமை — 76

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

பொருள் - களவு — 92

நூ : *“இன்பமும் பொருளும் அறனும்”*

உரை :

இன்பமும் பொருளும் அறனுமென்று முற்கூறிய மூவகைப் பொருள்களுள் ஒருவனேடு ஒருத்தியிடைத் தோன்றிய அன்போடு கூடிய இன்பத்தின் பகுதியாகிய புணர்தல் முதலிய ஐவகை ஒழுக்கத்தினுள்.....

ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி முதலியவற்றிற்கும் அன்பொடு புணர்தலும் கொள்ளப்படும். *'அறத்திற்கே' என்றலின்.*

விளக்கம் :

இம் மூன்றனையும் அறத்துவழிப் படூஉம் தோற்றமாய் அறம் பொருள் இன்பமென வகுக்கிருர் வள்ளுவர். தொல்காப்பியரும் வள்ளுவருமே இம் முப்பிரிவையும் திட்டமாகவும் வெளிப்படையாகவும் வகுத்துக் கூறுகின்றனர்.

[பார்க்க : இளம்பூரணர்] (24)

விருந்தோம்பல் — 84

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்

சொல் - வினை — 233

நூ : அம்முக் கிளவியும்... ...... வினையோரனைய

உரை :

வினை முதல் முடிபின என்ற அம்மூன்று (செய்து. செய்யூ, செய்பு) சொல்லும் சினைப் பொருளிடத்து வினையெச்சமாய்த் தோன்றின் தமக்குரிய சினைவினை கொண்டு முடியா, முதல் வினை கொண்டே முடியும். *அகனமர்ந்து - என்பன காரண காரிய* மின்றி வினை முதலோடு முடிந்தன.

விளக்கம் :

தெய்வச்சிலையார் அமர்தல் மேவல் என்ற நூற்பா விளக்கத்திற்கு இக்குறளை யெடுத்துக் காட்டுகிருர். எடுத்துக் கொண்டது மிக அழகிய பொருளுடைய குறளாகும். (25)

இனியவை கூறல் — 100

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று [பார்க்க : 5] (26)

செய்ந் நன்றியறிதல் — 110

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

சிந்தாமணி — 1405

பாடல் : நஞ்சினை யமுத மென்று..........

உரை !

அட்டதென்றது, பாம்பு பல்லுயிரையும் வருத்துந் தன்மையை; மயில் கொன்றஞ்சுவித்ததனை, 'செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்றாற்போல.

விளக்கம் :

கடிதோச்சி மெல்ல எறிக என்பதுபோலக் 'கொன்ற' என்ற சொல்லையிட்டு ஆனால் அப் பொருளைத் தராமல் வருத்திய என்ற பொருளைத் தரவைத்த வள்ளுவரது 'இடத்தை' எடுத்துக் காட்டி யிருக்கிறார் நச்சினார்க்கினியர். ஒரு சொல்லின் பல்வேறு பொருள் தரத்தை யெடுத்துக் காட்டுதற் கிஃதோர் இடமாகும். (27)

நடுவு நிலைமை — 114

தக்கார் தகவில ரென்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்

பொருள் - செய் — 94

நூ : ஆயிரு தொடைக்கும் கிளையெழுத் துரிய

உரை :

மோனைக்கும் எதுகைக்கும் கிளையெழுத்துக்களும் ஒன்றி வரப் பெறும்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு [299]

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார் [404]

விளக்கம் :

யாப்பருங்கல விருத்தியும் காரிகையும், 'தக்கார்' என்பதனை வல்லின எதுகைக்கு மேற்கோளாக்கும். (28)

நடுவு நிலைமை — 118

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

பொருள் — புறத்திணை - 76

நூ : கூதிர் வேனில் என்றிரு பாசறை........

உரை :

(1) ஒல்லார் நாணப் பெரியவர் கண்ணிச் சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும், இது ஒருவன் இன்னது செய்வலென்று அது செய்ய முடியாமையின் அவிப்பலி கொடுத்தவாறு காண்க.

இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். [779]

(2) கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும் - வேத முதலியவற்றாற் கட்டுதலமைந்த ஒழுக்கத்தோடு பொருந்திய காட்சியானும்.

இவை மனத்தான் இவ் வொழுக்கங்களைக் குறிக்கொண்டு ஐம்பொறியினை வென்று தடுத்தலாம். அவை இல்லறத்திற் குரியவாக நான்கு வருணத்தார்க்குங்கூறிய அடக்கமுடைமை; ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, பிறர்மனை நயவாமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை முதலியனவாம்.

(3) தம்மைப் பிழைத்தோரைப் பொறுக்கும் பாதுகாப்பானும்; காவலாவது இம்மையும் மறுமையும் அவர்க்கு ஏதம் வாராமற் காத்தலாதலால் இஃது ஏனையோரின் வெற்றியாயிற்று.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. [151]

(4) பொருளொடு புணர்ந்த பக்கத்தானும் – அரசர்க்குரிய வாகிய படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகியனவும் புதல் வரைப் பெறுவனவுமாகிய பொருட் புறத்துட்பட்ட வாகைப் பகுதியானும் :

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. [381]

ஒருமையு ளாமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. [126]

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். [131]

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற வொழுக்கு. [148]

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். [172]

அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்ற லினிது. [181]

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னும் செருக்கு. [201]

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் னெஞ்சத்து
அழுக்கா றிலாத இயல்பு. [161]

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். [158]

இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். [776]

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. [151]

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லாத வர்க்கு. [354]

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். [318]

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். [291]

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல். [287]

யாதனின் யாதனி னீங்கியான் நோதல்
அதனி னதனின் இலன். [341]

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய். [360]

விளக்கம் :

அவிப்பலியானும் என்ற பகுதியால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் (உயிர் கொடுத்தும் ஒழுக்கம் காக்கப்படும்) என்ற உயர்ந்த கோட்பாடு புலப்படுகின்றது. இங்கு வீர ஒழுக்கத்தை யும் சொல்லையும் காப்பாற்ற வீ ர ன் உயிரையே விடுகிறான். தமிழர் உயர்ந்த குறிக்கோளுக்காகவே வாழ்ந்தனர் அ ன் றி வீழ்ந்தனர் என்பதனை இது புலப்படுத்தும். அப்பரும் (குறிக்கோ-ளிலாது கெட்டேன்) இக் குறிக்கோள் வாழ்க்கையைக் குறிக் கிறார்.

கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யென்பதில் ‘மனத்தைக் கட்டியடக்கி இல்லறத்தில் கொண்டொழுக வேண்-டிய அடக்கம், நடுவு நிலைமை முதலிய அறத்துப் பாலிற் சிறந்த அதிகாரங்களையே நச்சினார்க்கினியர் வற்புறுத்துகிறார். இவை நான்கு வருணத்தார்க்கு முரியவாகுமென இவர் கொடுக்கும் குறிப்பு மிகவும் நுட்பமும் விளக்கமும் உடையதாகும். நாலாஞ் சாதி இழிந்ததென்ற வேறுபாட்டினை எப்படி யெல்லாம் இவர்கள் கலைகின்றனர் என்பது தெரிகின்றது. பொறையுடைமை இவற்றுள் அடங்கினாலும் பிழைத்தோர்ப் பொறுக்கும் பாதுகாப்பினைத் தனியே வற்புறுத்துகிறார் தொல்காப்பியர். உம்மை யெரிவாய் நரகத்து வீழ்வமென்றஞ்சுதலையும்

நன்னயஞ் செய்துவிடலையும் இங்குப் பொறையின் சிறந்த பகுதிகளாகக் கருதுவர் போலும் ! பிறர் தீமையைப் பொறுத்தலோடன்றி அவர்க்கே மீண்டும் நன்மை செய்தலென்ற மேலான பண்பினை இங்கு நினைவு கூறலாம்.

படை குடி முதலிய 'அரசர்க்குரிய பொருள்களை யுடை-மையை வாகை யென்றார். அவரவர் தத்தம் பொருளிற் சிறத்தல் வாகை யென்பதாம். அதனுட் சிறப்பாவது மெய்யுணர்வினைப் பெறுதலும் வாகையென நச்சர் விளக்கஞ் செய்ததாகும். அகப் பொருள் புறப்பொருள் போலப் புறப்பொருளுள்ளும் மெய்ப்பொரு ளுணர்வு அகப் பொருள் போல்வதாம். மக்கட் சுட்டு போல்வ-தது. அஃதின்றி வாகை நிரம்பாததாம். நுண்மாணுழைபுலம் எனப் பிறண்டும் அதனை மாந்தர்க்குச் சிறந்ததாக வற்புறுத்துவர்.

துறவறத்தில் அருளொடு பொருந்தி உற்ற நோய் நோன்-றலும் உயிர்க் குறுகண் செய்யாமையுமாகிய அறவெற்றி குறிக்கப் பெறுகின்றது. குறளில் துறவறம் என்பது இல்லறத் துறவன்று இல்லறத்திருந்தே மனத்துறவு கொள்வதென்பதே பலர் கருத்து. அஃதடுத்த பகுதியில் காமம் நீத்த பாலினானும் என்பதற்கு நச்சர் உரையால் புலப்படும். இல்லத்திருந்தே காம வெகுளி மயக்கங்கடிந்த வொழுக்கமென அவர் எழுதுகிறார். இப் பகுதியில் குறள் அறத்துப்பால் முழுவதற்கும் பொதுவான விளக்கம் கிடைக்கின்றது.

இளம்பூரணரும் பல குறள்களைக் கொண்டு இந்நூற் பாவினை விளக்குகிறார்.

பக்கமென்றதனான் மெய்ப் பொருளுணர்த்துதலும் கொள்க.

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லாத வர்க்கு

அருளொடு புணர்ந்த அகற்சியானும்

அருளுடைமையோடு பொருந்திய துறவறத்தானும்....
அருளொடு புணர்தலாவது :— ஒருயிர்க்கிடர்வந்துழித் தன்னுயி ரைக் கொடுத்துக் காத்தலும் அதன் வருத்தம் தனதாக வருந்து

தலும் பொய்யாமை கள்ளாமை முதலியனவுமாம். இக் கருத்து நிகழ்ந்த பின்னர்த் துறவுள்ளம் பிறத்தலின் இதுவும் அற வெற்றியாயிற்று.

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்.

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

அங்ஙனம் பிறந்த பின்னர் (காமம் நீத்த) உலகியலுள் நின்றே காமத்தினைக் கைவிட்ட பகுதியினையுங் கொள்க.

காமவெகுளி மயக்க மிவை மூன்றின்
நாமம் கெடக்கெடும் நோய். (29)

நடுவு நிலைமை — 120

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்.

பொருள் - புறத்திணை — 75

நூ : அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்........

உரை :

(1) 'எண் பொருளவாகச் செலச் சொல்லி'
இஃது ஓதுவித்தற் சிறப்பு.
'இல னென்னும் எவ்வம் உரையாமை ஈதல்'
இஃது ஈதல்.
'ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்'
இஃது ஈதற் சிறப்பு.

(2) ஐவகை மரபின் அரசர் பக்கமும்........ஓதல், வேட்டல், ஈதல் காத்தல், தண்டஞ் செய்தல்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

இது காவல் கூறிற்று.

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்'

இது தண்டம்.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. [424]

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள. [223]

ஈத்துவக்கு மின்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். [228]

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின். [560]

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். [550]

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர், [1033]

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. [126]

ஆரா வியற்கை அவாநீப்பின் அவ்வியல்பே
பேரா வியற்கை தரும். [370]

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். [168]

(3) 'ஈத் துவக்குமின்பம் அறியார் கொல்.'

இஃது இருவர்க்கும் ஈதற் சிறப்புக் கூறிற்று.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் —

இஃதுழவுத் தொழிற் சிறப்பு இருவர்க்குங் கூறியது.'

'வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம்'
இது வாணிகச் சிறப்பு இருவருக்கும் கூறியது.

(4) அறிவர் கூறிய ஆகமத்தின் வழிநின்று வீடுபெற முயல்வார்க்கு உரியவாகிய எண்வகை மார்க்கத்துத் தவம் புரியும் கூறும் :

இனி யோகஞ் செய்வார்க்குரியன இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என எட்டும்;

'பக்கம்' என்றதனுன் முட்டின்றி முடிப்போர் முயல்வோர் என்பனவும்.

'ஒருமையு ளாமைபோல் ஐந்தடக்கல்....'

'ஆராவியற்கை அவா நீப்பின்....'

(5) அறிமரபிற் பொருநர்கட் பாலும் .... 'போர்செய்வாரிடத்துக் கூறுபாடும்'

'விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்'
இது சொல் வென்றி.

விளக்கம் :

இது வாகைத்திணைப் பொது விலக்கணம் கூறுவது. அரசர் பார்ப்பனர் முதலியோர் அவரவர் முயற்சி செயல்களில் முற்றியவர்களாக இருத்தலே வாகையாம். தொல்காப்பியரும் வள்ளுவரும் முதற் பாலவரைப் பார்ப்பனர் எனப் பொதுவாகக் குறிக்கின்றனர்.

படைத் தலைவர்க்கும் படைஞர்க்கும் உரியதாகச் சொல் வென்றி – சொல்லாற்றல் குறிக்கப் பெறுகின்றது.

தாபத பக்கத்தை விளக்குகையில் நச்சர் ஆகமத்தின் வழிநின்று வீடுபெற முயல்வார்க்கு எனத் தென்னுட்டார்க்கும் (திராவிடர்) தென் மொழியினர்க்குமுரிய ஆகமத்தின் சிறப்பை *(வேதத்திற்கெதிரான அதன் தன்மையை)* எடுத்துக் காட்டுகிருர். மற்றும் தவத்திற்குரியவென ஊணுசையின்மை, நீர் நசை

யின்மை முதலியவற்றையும் யோகத்திற்கு முரியவென இயமம் நியமம் முதலியவற்றையும் பிரித்துக் காட்டுகிறூர்.

'எண் பொருளவாக' என்ற குறளில் ஓதல், ஓதுவித்தல் ஆகிய இரு செயல்களும் அடங்கியிருக்கின்றன.

இளம்பூரணரும் இத்துறைகளுக்கு விளக்கங் கூறியுள்ளார். (30)

அடக்கமுடைமை — 126

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. [பார்க்க : 118, 120] (31)

அடக்கமுடைமை — 128

ஒன்ருனும் தீச்சொல் பொருட்பய னுண்டாயின்
நன்ருகா தாகி விடும்.

சொல் – வினை — 230

நூ : செய்து செய்யூச் செய்பு .... வினையெஞ்சு கிளவி

உரை :

வினையெச்சம் உணர்த்துகின்றவற்றுள் சிறந்தன தொகுத்-துணர்த்து கின்றது

அற்ருல் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்ருன் நெடிதுய்க்கு மாறு.

என 'ஆல்' ஈறு ஆதலும்,

அவா வுண்டேல் உண்டாம் சிறிது

என்னும் ஏலும்........

ஒன்ருனும் தீச்சொல் பொருட்பய னுண் டாயின்
நன்ருகா தாகி விடும்.

ஆயினும் என்பது ஆனும் எனக் குறைந்து நின்றது.

நுணங்கிய கேள்வியர் அல்லால் வணங்கிய
வாயின ராத லரிது.

என்பது அன்றி என்னும் செய்தெனெச்சக் குறிப்பு

உணர்த்துவதோர் வாய்பாடு 'அல்லவாயின்' என்று பொருளா யின் இதன் குறிப்பாம்.

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி.

என மகர ஐகார ஈறுயும் வரும்.

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு. [943]

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது, [417]

(பாடம்) அல்லார்

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி. [701]

விளக்கம் :

பிற்காலப் புறனடை வழக்குகட் கெல்லாம் குறளில் இடங் காண்டலின் குறள் சங்கப் பிற்சான்றோர் எனப்படும் சான்றோர் கால நூலென்பது கருத்தாகலாம். கூறாமை முதலியவற்றின் அணியமைந்த விகுதிகளெல்லாம் அதனில் இடம் பெற்றுள்ளன. (32)

ஒழுக்கமுடைமை — 131

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும், [பார்க்க : 118] (33)

ஒழுக்கமுடைமை — 140

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

சொல் - வேற்றுமை — 74

நூ : மூன்றாகுவதே, ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

உரை :

இனி ஒடு, உலகத்தோடு ஒட்ட வொழுகல், எனவும் வரும்,

விளக்கம் :

மூன்றும் வேற்றுமை 'ஒடு' உருபினை விளக்கவந்த நச்சினார்க்கினியர் இத்தகைய அரியதொரு குறளை மேற்கோ-ளாகக் கொண்டிருக்கிறார். (34)

பிறனில் விழையாமை — 147

அறனியலான் இல்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

சொல் – கிளவியாக்கம் — 57

நூ : *குடிமை, ஆண்மை, இளமை ....*
அஃறிணை மருங்கின் கிளந்தாங்கியலும்

உரை :

உயர்திணைப் பொருளை யுணரப்படும் சொற்கள் எல்லாம் அஃறி-ணைப் பொருளை உணர்த்தி நின்றவழிப் போல அஃறிணை முடிபே கொள்ளும்.

848 ஏவவும் செய்கலான் தான்தேறா னவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

608 மடிமை குடிமைக்கண் தங்கின்றன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும்.

விளக்கம் :

பெண்மை, மக்களுயிர், குடிமை முதலிய உயர்திணைப் பெயர்கள் அஃறிணையை உணர்த்துமாற்றினை இவ்வரிய குறள்களைக்கொண்டு விளக்கம் செய்கிறார் நச்சினார்க்கினியர்.

எவ்வாறோ கிடைத்திருக்கும் குறள்கள் உயர்திணைத் தன்மையை இழந்து அஃறிணைத் தன்மையுற்ற பெயர்களைக் குறிக்கின்றன. பிறனியலாள் பெண், நோயாகிய உயிர், மடிக் குடிமை இவை அஃறிணைத் தன்மையுற்றன எனக் காண்கையில் மிகவும் வியப்பாகின்றது.

'இழிப்பின்கண் உயர்திணை, அஃறிணையானதற்கு மேற்கோள்'
(மயிலைநாதர்) (35)

பிறனில் விழையாமை – 148

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. [பார்க்க : 118] (36)

பொறையுடைமை – 151

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. [பார்க்க : 118] (37)

பொறையுடைமை – 158

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல். [பார்க்க : 118] (38)

அழுக்காறாமை – 161

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்றன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு. [பார்க்க : 118] (39)

அழுக்காறாமை — 168

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

சொல் – இடை — 260

நூ : *வினையே குறிப்பே இசையே பண்பே*
எண்ணே பெயரொடு ....எனவென் கிளவி

உரை :

அழுக்காறெனவொரு பாவி
(எனவென்னும் கிளவி) பெயர்பற்றி வந்தது.

விளக்கம் :

'என' என்பதனைப் பெயருடன் இங்கு வள்ளுவர் இணைத்தது, எனவென்பது 'பேர்போன ஒப்பற்ற' என்ற பொருளை, பெயருடன் இணையும்பொழுது குறிக்கும் என்றற்காகலாம். (40)

வெஃகாமை – 172

படுபயன் வெஃகிப் பழிபடுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். [பார்க்க : 118] (41)

வெஃகாமை — 178

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

செய் — 223

நூ : நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும் ;

உரை :

இது நலிபு வண்ணம் கூறுகின்றது.
அஃகாமை செல்வத்திற்கு.... எனவரும்.

விளக்கம் :

பேராசிரியரும் இவ்விடத்திற்கிதே குறளை மேற்கொள்ளுகிறார். எல்லாப் பொருளும் இதன்பாலுள என்பதற்கேற்ப ஆய்த வழகைக் கொண்ட யாப்பமைதியும் இதனுள் அடங்கியுள்ள தென்பதாம். அஃகாமை யென்ற சொல்லில் நலிபு வண்ணம் என்பதற் குரிய நலிதற் பொருளே (நலியாமை யென்பது) அமைந்துள்ளது ஓர் நயமாகும். (42)

புறங்கூறாமை – 181

அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்ற லினிது. [பார்க்க : 118] (43)

பயனில சொல்லாமை — 196

பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

சொல் – வினை — 228

நூ : முன்னிலை தன்மை ஆயீரிடத்தொடு
மன்னுதாகும் வியங்கோட் கிளவி

உரை :

ஏவற் பொருண்மையை முற்ற முடித்தலை உணர்த்தும் சொல் முன்னிலையும் தன்மையுமாகிய அவ்விரண்டிடத்துப் பொரு

ளோடும் அ∴றிணைக்கண் பெரும்பான்மையும் நிலைபெறாது உயர்திணைக்கண் பெரும்பான்மையும் நிலைபெறும்.

பயனில் சொல் .... என உடம்பாடும் மறையுமாய் வருதலும் கொள்க :

விளக்கம் :

உலகினை முன்னிலைப் படுத்தி அறங்கூறும் வள்ளுவரிட மிருந்து முன்னிலை யேவல் உதாரணம் கிடைத்துள்ளது.

சங்கர நமச்சிவாயர் போன்றோர் வியங்கோளும் எதிர் மறையுமாய்ப் பொருள் செய்தலை நுண்பொருள் மாலையார் மறுத்-துரைக்கிறார். (44)

தீவினையச்சம் - 201

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னும் செருக்கு. [பார்க்க : 118] (45)

தீவினையச்சம் — 204

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

செய் — 93

நூ : அஃதொழிந் தொன்றின் எதுகையாகும்

உரை :

இ∴து எதுகை கூறுகின்றது.

முற்கூறிய முதலெழுத்தினை யொழித்து இரண்டடியினும் சீர் முழுதும் ஒன்றினும் இரண்டாமெழுத்து ஒன்றினும், ... இவை ....யெதுகை.

விளக்கம் :

யாப்பு அழகு அமையப் பாவெழுதினார் வள்ளுவர் என்பதற் கேற்ப எதுகைக்கு அவர்தம் குறளை எடுத்துக் காட்டினார் நச்சினார்க்கினியர். (46)

ஈகை - 223

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள. [பார்க்க : 120] (47)

ஈகை - 228

ஈத்துவக்கு மின்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். [பார்க்க : 120] (48)

புகழ் — 235

நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

சிந்தாமணி — 547

பாடல்: *சங்குடைந்தனைய வெண்டாமரை மலர்த்தடங்கள் போலும்.*

உரை :

தடங்களிலே உடைந்த தன்மையவாகிய மலரும் சங்கும் போலும் நங்குடி. தூய்மைக்குவமை. இனிச் சங்கு சுட்டாலும் நிறங் கெடாதது போலக் கெட்டாலும் தன் தன்மை கெடாத குடியுமாம். நத்தம் போற் கேடும் என்ப (235 கு).

விளக்கம் :

காளிங்கர் நச்சினார்க்கினியரைத் தழுவி 'தன்னிலை குலைந்து பிறர்கைப் படினும் தன் பெருமை குன்றாதது போல என்கிறார். நத்தம் — நந்து' எனவே பரிமேலழகர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவரும் பொருள் கொள்கின்றனர். நத்தம் போல் என்பதனைத் தம் சொந்தக் கருத்தை விளக்குதற்காக (நச்சர்) கொள்கிறார்.
(49)

புகழ் — 237

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.

பொருள் – புறத்திணை — 90

நூ : கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தலும்........

உரை :

பிறர்க் கீவோரைப் பிறரினுயர்த்துக் கூறிப் பிறர்க் கீயாதாரை இழித்துக் கூறலும்;

'புகழ்பட', இவை கொடாஅர்ப் பழித்தல்.

விளக்கம் :

பரிமேலழகரும் இக்கருத்தைத் தழுவியே எழுதுகிறார். அழச்சொல்லி அல்ல்திடித்து (உலக) வழக்கறிய வல்லார் வள்ளுவர். எனவே அவர் கொடாஅர்ப் பழிக்கிறார். (50)

புலால் மறுத்தல் — 254

அருளல்ல தியாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். [பார்க்க : 66]

செய் — 8

நூ : ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம்.

உரை :

அருளல்லது எனக் குற்றிய லிகரம் அலகுபெருது ஒற்றியற்ருயிற்று.

குழலினிதி யாழினி தென்ப தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர். [66]

விளக்கம் :

குற்றியலிகரம் யாப்பில் அலகு பெறுவது பற்றியும் பெருதது பற்றியும் முன்பும் ஆராயப் பெற்றது. பேராசிரியர், யாப்பருங்கலக் காரிகை, விருத்தியாகியவற்றின் உரைகாரர்கள் குற்றியலிகரம் அலகு பெருமைக்கு இதனை எடுத்துக் காட்டுவர். (51)

கூடா வொழுக்கம் — 274

தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

சிந்தாமணி — 1116

பாடல் : சீருறு சிலம்பி நூலாற் சிமிழ்ப் புண்ட சிங்கமொத்தான்.

உரை :

நூலால் அகப்படுத்திக் கொண்ட சிங்கத்தை யொத்தானென்க – நூல் வீரர்க்குவமை: புதல் மறைந்து வேட்டுவன் புள் சிமிழ்த்தற்றே (274) என்றாற் போல்வன கொள்க.

விளக்கம் :

சிமிழ்த்தல் என்ற சொற்பொருளைத் திருத்தக்க தேவரும் திருவள்ளுவரும் எங்ஙனம் ஒரேமாதிரி ஆண்டுள்ளனர் என்பதனை இங்கு நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டுகிறார்.

சிமிழ்த்தல் — வாய்மேல் விரலெற்றி அதுபட விளித்தல் எனக் காளிங்கர் கூறுவர். (52)

கள்ளாமை — 282

உள்ளத்தான் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

சிந்தாமணி — 2439

பாடல் : கள்ளும் தேனும் ஒழுகும் குவளை........

உரை :

கள்ளும் – களவு காணும்; கள்ளத்தாற் கள்வேமெனல் (282) என்றார்.

விளக்கம் :

கள்ளுதல் என்ற சொல்லாட்சி பற்றி நச்சினார்க்கினியர் இக்குறளை மேற்கொண்டிருக்கிறார். கள்ளும் என்ற சிந்தாமணிச் சொல்லுக்குக் 'களவுகாணும்' எனப் பொருள் கொண்டதும் அதற்குக் குறளை மேற்கொண்டதும் எவ்வளவு பொருத்தமெனத் தெரியவில்லை. (53)

கள்ளாமை — 287

களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்க ணில். [பார்க்க : 118] (54)

கள்ளாமை — 290

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

சொல் - வேற்றுமை — 77

நூ : அதற்கு வினையுடைமையின்............

உரை :

நான்காவதன் பொருள்பற்றி வரும் வாய்பாடுகள்.

அவற்குப்பகை .... கள்வார்க்குத் தள்ளும் என்பதும் அது. அப்பொருளும் என்றதனனே பிணிக்கு மருந்து என்றாற் போல்வன கொள்க.

விளக்கம் :

இங்குப் பிணிக்கு மருந்து என்ற புதிய வழக்கொன்றனைத் திருக்குறள் தந்துள்ளது.

'பொருட்கு முறையாதியின் இதற்கிது வெனல் பொருளே' என்பதில் ஆதி என்றதனுல் நான்காம் வேற்றுமை, ஏனைய வேற்றுமைகள் போல அளவு பட்ட பொருண்மைத்தன்றி வரும். அவையும் இதற்கிஃது என்பதுபட உணர்த்திக் கொள்க என்பதற்கு மேற்கோள். (மயிலைநாதர் நன் : 297) (55)

வாய்மை — 291

வாய்மை எனப்படுவதி யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். [பார்க்க : 118] (56)

வாய்மை — 295

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை [பார்க்க : 1083] (57)

வாய்மை — 299

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு [பார்க்க : 114] (58)

இன்னா செய்யாமை — 318

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல் [பார்க்க : 118] (59)

கொல்லாமை — 326

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா துயிருண்ணும் கூற்று.

சிந்தாமணி — 2787

*பாடல்: வேள்விவாய்க் கண்படுத்தும் வாளின்வாய்க் கண்படுத்தும்
நாளுலப் பித்திட்டார்.*

என்றார் பிறரும்.

விளக்கம் :

உயிர்க்கொலை செய்தலால் வாழ்நாள் தேய்ந்து விடுமென்பதனையும் கொல்லாமையால் வாழ்நாள் நீளுமென்பதனையும் இக்குறளால் நச்சினார்க்கினியர் நிறுவுகிறார். (60)

துறவு — 341

யாதனின் யாதனி னீங்கியான் நோதல்
அதனி னதனி னிலன் [பார்க்க : 118] (61)

மெய்யுணர்தல் — 354

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு [பார்க்க : 118] (62)

மெய்யுணர்தல் — 355

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

சொல் - இடை — 298

நூ : கிளந்த வல்ல அன்ன பிறவும், கிளந்தவற்றியலா னுணர்ந்தனர் கொளலே.

உரை :

மேல் சார்பும் இடமும் குறிப்பும் பற்றிச் சொல்லப்பட்டன அன்றி அவை போல்வன பிறவரினும் அவற்றையும், அச் சொற்களின் மூவகையாகக் கூறிய இலக்கணத்தான் உணர்ந்து கொள்க.

அஞ்சுவதோரும்' எனஓரும், 'எப்பொருள்' எனவரும் எகரவிறுவும், 'நாடோறும்' எனத் 'தொறு' நீண்டும், வருவன கொள்க.

நாடோறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடோறும் நாடு கெடும் [553]

அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. [366]

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து [978]

விளக்கம் :

பிற்கால வழக்குப் பலவற்றிற்கும் இடமாவது திருக்குறள் என்பது இப் புறனடை உதாரணங்களால் தெரியவரும். (63)

மெய்யுணர்தல் — 360

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய் [பார்க்க : 118] (64)

அவாவறுத்தல் — 366

அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரு மவா [பார்க்க : 355] (65)

அவாவறுத்தல் — 370

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும் [பார்க்க : 120] (66)

இறைமாட்சி — 381

படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசரு ளேறு [பார்க்க : 8, 118] (67)

கல்வி — 391

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. [பார்க்க : 393]

பொருள் - செய் - 56

நூ : சீரியை மருங்கின் நேரசை யொப்பின்
ஆசிரியத்தளை யென்றறிதல் வேண்டும்

உரை :

இயற்சீர் பத்தும் பிறசீரோடியையுங்காற் றத்தமீற்றசை வருஞ் சீரின் முதலசையோ டொன்றின் அஃது ஆசிரியவடிகட்கு தட்கு முறைமை யென்றறிதல் வேண்டும்.

ஒப்பினெனவே ஒவ்வாதது இயற்சீர் வெண்டளை யென்றெதிர் மறுத்துக் கொள்ளப்படும்.

விளக்கம் :

வெண்பாவிற்குரிய இயற்சீர், வெண்சீர் ஆகியவற்றுள் இயற்சீர் மிகவும் சுருங்கியதாகும். குறள் சுருக்கம் என்றற் கேற்ப அதன் சீர்ச்சுருக்கத்திற்கும் இஃது எடுத்துக் காட்டப் பெற்றது.
(68)

கல்வி — 393

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் — பொழிப்பு மோனை

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. [391] — முற்று மோனை

கல்லா தவரும் நனிநல்லர் கற்றோர்முன்
சொல்லா திருக்கப் பெறின். [403] — ஒரூஉமோனை

பொருள் - செய் - 92

நூ : *அடிதொறும் தலையெழுத் தொப்பது மோனை*

விளக்கம் :

இங்கு ஓரிடத்திற்கு மேல் பலவிடத்தில் ஒன்றிவரும் மோனை கட்குதாரணம் காட்டப் பெற்றிருப்பது ஓர் சிறப்பாகும். முன்பு எதுகைக்குதாரணம் காட்டப்பெற்றது. (69)

தல்வி — 397

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

ஈரசைச் சீரும் மூவசைச்சீரும் வந்தன.

பொருள் - செய் - 12.

நூ : *ஈரசை கொண்டு மூவசை புணர்த்துஞ்*
சீரியைந் திற்றது சீரெனப் படுமே.

உரை :

ஈரசை இயைந்து பொருள் கொண்டும் மூவசை இயைந்து பொருள் கொண்டும் அற்று நிற்பது சீரெனப்படும்.

விளக்கம் :

மூவசைச் சீர்களால் செப்பலோசை செப்பமாக வெளிப்படு மென்பர். குறளில் மூவசைச் சீர்கள் மிகுதி. (70)

கல்வி — 397

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

செய் — 158

நூ : *நெடுவெண் பாட்டு முந்நா லடித்தே*
குறுவெண் பாட்டிற் களவெழு சீரே.

உரை :

இது வெண்பாவின் அடியளவைக் கூறுகின்றது.

'சிறப்புடைப் பொருளைப் பிறபடக்கிளத்தல்' என்பதனுற் குறு-வெண்பாவும் சிறப்புடைமை பெறுதும்.

(பார்க்க : இளம் : கு–2)

விளக்கம் :

வெண்பாவில் 12 அடி எல்லை சிறக்கவில்லை. பல நூல்க-ளாகப் பெருகவில்லை. எழுசீர்க் குறளும், நாலடி வெண்பாவும் சிறந்தபின் 12 அடி சிறக்கவில்லை போலும். 12 முதலிய நெடி லடிகளில் ஆசிரியப்பா தொகை நூல்களில் சிறந்து விட்டதாக-லின் அதனிலும் 12 அடி வெண்பா சிறக்கவில்லை போலும் !

செப்பலோசைக்குச் சுருக்கந்தான் சிறப்புப் போலும் ! (71)

கல்லாமை — 403

கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின் [பார்க்க : 393] (72)

கல்லாமை — 406

உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

சொல் - உரி — 307

நூ : பயப்பே பயனும்.

உரை :

பயப்பு பயன் என்னும் குறிப்புணர்த்தும்.

விளக்கம் :

சுருங்க நூல் எழுதியவர் வள்ளுவராகலின் கண்டபடிச் சொற்களை அவர் விரயம் செய்யவில்லை. குறிப்பிட்ட சொல்லைக் குறிப்பிட்ட பொருளில் ஆண்டிருக்கிறார். அவ்வகையில் குறளை மேற்கோளாகக் கொண்டதனைப் பலவிடங்களில் கண்டோம்.

'பயன்' என்பதனை விளக்கும் பயனுடைய குறளொன்றுயாத் திருக்கிருர்.

பார்க்க: தெய்வச்சிலையார். (73)

கேள்வி — 417

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்தும்
ஈண்டிய கேள்வி யவர் [பார்க்க : 128] (74)

கேள்வி — 419

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது.

(பாடம் - அல்லால்)

சொல் - வினை - 230

நூ : செய்து செய்யூச் செய்பு செய்தென........வினையெஞ்சு கிளவி

உரை :

இது வினையெச்சம் உணர்த்துகின்றவற்றுள் சிறந்தது தொகுத்துணர்த்துகின்றது.

அற்ருல் அளவறிந்துண்க (943) என ஆல் ஈறும் அவாவுண்டேல் உண்டாம் (1075) என ஏலும் பெறப்பட்டன. ஒன்ருனும் தீச்சொல் (128) என்புழி ஆயினும் என்பது ஆனும் எனக் குறைந்து நின்றது.

'நுணங்கிய கேள்வியர் அல்லால்' என்பது அன்றி என்னும் செய்தென் எச்சக் குறிப்பு உணர்த்துவதோர் வாய்பாடு அல்லா வாயின் எனப் பொருளாயின் இதன் குறிப்பாம்.

அற்ருல் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்ருன் நெடிதுய்க்கு மாறு [943]

அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது [1075]

ஒன்ருனும் தீச்சொல் பொருட்பய னுண்டாயின்
நன்ருகா தாகி விடும் [128]

விளக்கம் :

பிற்கால இலக்கணத்தார்க்குரிய வழக்கு பலவற்றைத் திருக்குறள் தன்னகத்தே கொண்டுள்ளது. (75)

அறிவுடைமை — 424

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு [பார்க்க :- 120] (76)

அறிவுடைமை — 429

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை
அதிர வருவதோர் நோய்

சொல் - உரி — 316

நூ : அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்.

உரை :

அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கமாகிய குறிப்புணர்த்தும்.

விளக்கம் :

அதிர்வு என்ற சொல்லாட்சிக்கு இஃது எடுத்துக்காட்டு.
பார்க்க : தெய்வச்சிலையார். (77)

குற்றங்கடிதல் — 435

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

சொல் - வினை - 231

*நூ : பின் முன் கால் கடை............காலங் கண்ணிய
என்ன கிளவியும்........*

உரை ;

முன் : வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் [879]

என இறப்புப் பற்றி வரும்.

இடத்து : இளைதாக முண்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து [879]

என இறப்புப் பற்றி வரும்.

நெஞ்சத்தார் காதலவராக.........வெய்துண்டல் அஞ்சுதும்
வேபாக்கறிந்து [1128]

என்பது வேதலை யறிந்து என்னும் பொருள் தருதலின் எச்சமன்று.

விளக்கம் :

இதுவும் பின் முன் முதலிய வினையெச்ச வாய்பாடுகளைப் பற்றியது. (78)

சிற்றினஞ் சேராமை — 454

மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகு மறிவு

பொருள் - செய் — 9

நூ : முற்றியலுகரமும் மொழி சிதைத்துக் கொளாஅ
நிற்றலின்றே யீற்றடி மருங்கினும் —

உரை :

குற்றியலுகரத்திற் கினமாகிய முற்றுகரத்திற்கு இலக்கணம் கூறுகின்றது, எனவே நிலைமொழித் தொழிலாகிய உகரமும் நிலைமொழியீறு கெட நின்ற உகரமுமே கொள்க.

அதுதான் இடையினன்றி ஈற்றடியிடத்தும் இயலசையாய் நிற்றலின்று, எனவே உரியசையாயே நிற்கும்.

இனத்துளதாகுமறிவு (454) இன்னாதினியார்ப் பிரிவு (1158) புன்கண்ணுடைத்தாற் புணர்வு (1152) இவை அடியிறுதிக்கண்

உரியசையாய் நின்றவாறு காண்க :-

இன்னாது இனனில்லூர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு [1158]

இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு [1152]

விளக்கம் :

செய்யுளியலில் தொல்காப்பியர் வகுத்த உரியசையாகிய சிறப்பிலக்கணத்திற்குக் குறளிலிருந்து கொண்ட மேற்கோள்கள் மிகவும் சிறப்புடையன. (79)

காலமறிதல் — 481

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தற்கு வேண்டும் பொழுது.

சீவகசிந்தாமணி — 1927

பாடல்: இடத்தொடு பொழுது நாடி........

உரை :

வீரத்தையே கருதாமல் காலமும் இடமும் அறிந்து செய்கவென்றார். பகல் வெல்லும் கூகையைக் காக்கை (481) என்றும், காலாழ் களரின் நரியடும் (500) என்றும் தேவரும் கூறினர்.

காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு. [500]

விளக்கம் :

காலமறிதல் இடமறிதல் என்பனவற்றிற்குக் குறளில் அவ்வதிகாரப் பாக்களை மேற்கோள் காட்டியிருக்கிறார். இக் கருத்துக்களை விளக்குதற்குரிய பொருத்தமான குறள்கள் இவை. (80)

காலமறிதல் — 484

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர் [பார்க்க : 1173] (81)

இடனறிதல் — 500

காலாழ் களரி னரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு [பார்க்க : 481]

சீவகசிந்தாமணி — 1928

உரை :

யாம் வீரமுடையேமென்று மகளிரைப்போலத் தாம் நினைத்ததே துணிந்து செய்யாராய்க் காலத்தையும் இடத்தையும் நாடி ஆண்டுச் செய்யும் வினையிடத்தும் – காலாழ் களரினரியடும் (500) என்றும் தேவரும் கூறினர்.

விளக்கம் :

இதனை யடுத்து முன்பும் இப்பொருள்களைப் பற்றியே கூறப்பெற்றது. (82)

பொச்சாவாமை — 537

அருவினை யென்ப உளவோ பொச்சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.

சொல் – வினை — 236

நூ : நிலனும் பொருளும் காலமும் கருவியும்..........
செய்யும் செய்த என்னுஞ் சொல்லே.

உரை :

செய்யும் செய்த என்னும் பெயரெச்சத்திற்குப் பொருள் முடிபு கூறுகின்றது.

கருவியாற் 'பொச்சாவாப் போற்றிச் செயின்' என்பது கருவிக்கண் அடங்கும். (83)

பொச்சாவாமை — 539

இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து [பார்க்க : 964] (84)

செங்கோன்மை — 542

வானோக்கி வாழு முலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

சொல் – வேற்றுமை மயங்கியல் — 94

நூ : *இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கமவ்*
விரண்டன் மருங்கின் ஏதுவுமாகும்.

உரை :

நோக்கல் நோக்கத்திற்கு ஏதுவும், செயப்படு பொருளும் ஒத்த உரிமைய என்கின்றது.

வானோக்கி வாழும் (542) வானை நோக்கி வாழும் என விரியும் வழி வானுன் வானின் எனச் செயப்படுபொருளும் ஏதுவும் ஒப்பப் பிறந்து நிற்றல் இச் சூத்திரத்திற்குக் கருத்து. இஃது உருபும் பொருளும் மயங்கிற்று.

இளம்பூரணரும் இக் கருத்தினரேயாவர்.

விளக்கம் :

ஈண்டு நோக்கு என்றது மனவெழுச்சி விசேடத்தையெனச் சிவஞான முனிவர் எழுதுகிறார்.

பார்க்க : சேனுவரையர். (85)

செங்கோன்மை — 543

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

சொல் – வேற்றுமை மயங்கியல் — 103

நூ : *உருபு தொடர்ந்தடுக்கிய வேற்றுமைக் கிளவி*
ஒரு சொல் நடைய பொருள்செல் மருங்கே.

உரை :

பலவுருபு தொடர்ந்து அடுக்கியவழிப் படுவதோர் இலக்கணம்.

பார்க்க ; சேனுவரையர் (86)

செங்கோன்மை — 544

இயல்புளிக் கோலோச்சு மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

சொல் – இடையியல் — 252

நூ : *அவைதாம்,*
புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதவுநவும்
....

உரை :

இடைச்சொற்களின் பாகுபாடுகளைக் கூறுகின்றது.

இயல்புளி என்புழி முறைமையிலே செங்கோல் நடாத்தும் என ஏழன் உருபு விரித்தலான் உளி என்பது மூன்றனுருபின் பொருள்பட வந்தது அன்று; பகுதிப் பொருள் விகுதியாய் நின்று தனக்கேற்ற உருபை ஏற்று நின்றது.

விளக்கம் :

உளி என்பது ஏழாம் வேற்றுமைப் பொருள்பட வந்ததோவென்ற ஐயமுண்டாகுமாறு செய்து அதற்கெனத் தனியாய-தோர் விளக்கம் சொல்லும்படி வைத்திருக்கிறார் குறளாசிரியர். அவ்வளவு நுட்பமான யாப்பமைதியுடையது குறள். (87)

செங்கோன்மை — 546

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்.

சொல் - வினையியல் — 222

நூ : *இன்றில உடைய் என்னும் கிளவியும்*
அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்

உரை :

வேலன்று எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும்.

விளக்கம் :

அஃறிணை வினைக்குறிப்புப் பற்றியது இந் நூற்பா. அஃ-தன்று இதுவெனக் குறிக்குமளவு ஆற்றலுடைய 'அன்று' எனும் வினைக் குறிப்பினை இவ்விடத்தே ஆண்டிருக்கிறார் குறளாசிரியர். (88)

செங்கோன்மை — 550

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர் [பார்க்க : 120] (89)

கொடுங்கோன்மை — 553

நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும் [பார்க்க : 355] (90)

கொடுங்கோன்மை — 560

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின் [பார்க்க : 120] (91)

ஒற்றாடல் — 582

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

எழுத்து – உருபியல் — 791

நூ : *எல்லாரும் என்னும் படர்க்கை யிறுதியும்*
....
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன.

உரை :

மகர ஈற்று உயர்திணைப் பெயர்க்கு முடிபு கூறுகின்றது.

நிற்றல் வேண்டும் ரகரப்புள்ளி என்றதனுன் தம்முப் பெருமல் வருபவையுங் கொள்க. எல்லார் தமக்கும் 'எனவர வேண்டிய இது தம்முப் பெருதது பற்றிய மேற்கோள்.

விளக்கம் :

இதுவும் ஓர் குறுக்கம் (குறள்) போலும். (92)

மடியின்மை — 608

மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும் [பார்க்க : 147] (93)

சொல்வன்மை — 648

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் [பார்க்க : 120] (94)

வினைத்தூய்மை — 653

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்.

சொல் – வினையியல் — 229

நூ : *பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை*
அவ்வயின் மூன்றும் நிகழும் காலத்துச்
செய்யுமென்னும் கிளவியொடு கொள்ளா.

உரை :

செய்யும் எனும் முற்றுப் பொருந்தாத இடம். ஓஒதல் என வருவனவற்றிற்கு 'தவிர்வாராக' எனவும் பொருளுரைக்க. தெய்வச்சிலையாரும் இக் கருத்தினரே யாவார்.

விளக்கம் :

வேறு பொருளில் வந்ததொரு புதுமையான இடத்தைக் குறளில் காண்கிறோம். (95)

வினைத்தூய்மை — 653

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅது மென்னு மவர்.

சிந்தாமணி — 267

பாடல் : நங்கை நீ நடக்கல் வேண்டும்.

விளக்கம் :

வேண்டுமென்பது ஒரு வியங்கோள். ஓஒதல் வேண்டும் என்றாற்போல சொல்வழக்கிற்கும், தொடர் வழக்கிற்கும் அடிக்கடி நச்சினர்க்கினியர் குறளை மேற்கோள் காட்டுகின்றார். (96)

வினைத்தூய்மை — 658

கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்

சொல் - உரியியல் — 383

நூ : *கடியென் கிளவி காப்பே கூர்மை........*

உரை :

கடி என்பதன் பொருள் 'கடிந்த' எனவரும். இவ்வுரிச் சொல் பெரும்பான்மை திரிந்து நிற்கும்.

விளக்கம் :

சேனாவரையரும் இவ்விடத்தே இக்குறளையே எடுத்துக் காட்டுகிறார். (97)

வினைசெயல் வகை — 674

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

சொல் - இடையியல் — 296

நூ : *என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி*
ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே

உரை :

வினையென்று, பொருளொடு, கருவியொடு, காலத்தொடு, வினையொடு என்று பிறவழிச் சென்றொன்றியவாறு காண்க.

பொருள்கருவி காலம் வினைஇடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் [675]

விளக்கம் :

என்றும் ஒடுவும் பிரிந்தொன்றிய விடங்கட்குக் குறளில் இடஞ்சுட்டப் பெற்றன. (98)

பார்க்க : சேனாவரையர் – சொல் – 294

வினைசெயல்வகை — 675

பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் [பார்க்க : 674, 112] (99)

குறிப்பறிதல் — 701

கூருமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும்
மாறுநீர் வையக் கணி [பார்க்க : 128] (100)

அவையறிதல் — 714

ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்

சிறுபாணாற்றுப்படை — 216

பாடல் : *அறிவுமடம் படுதலும் அறிவு நன்குடைமையும்........*

உரை :

தான் கூறுகின்றவற்றை யுணரும் அறிவில்லார் மாட்டுத் தான் அறியாமைப் பட்டிருத்தலையும், தன்னைப்போல அறிவுடையார் மாட்டு நன்றாக அறிவுடையனாயிருத்தலையும் 'ஒளியார்முன்' என்றார் பிறரும்.

விளக்கம் :

பலவிடங்களில் உடன்பாடு எதிர்மறை ஆகிய இரு பொருள்களையும் ஒரே இடத்தில் கூறுவதில் வள்ளுவர் மிகச் சிறப்புடையவரா யிருக்கிறார். இது முன்பும் காணப்பெற்றது. (101)

அரண் — 745

கொளற்கரிதாய்க் கொண்ட கூழ்த்தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர தரண்.

பொருள் - புறத்திணையியல் — 64

நூ : *உழிஞைதானே மருதத்துப்புறனே........*

உரை :

உழிஞைத் திணை அகத்திணையுள் மருதத்திற்குப் புறனாமென்கின்றது. மருதநிலத்து மதிலாதல் 'கொளற்கரிதாய்' என்றதனானும் உணர்க.

விளக்கம் :

கூழ்த்தாகி என்றவிடத்தும் ஒருவகையாக மருதத்தைக் குறிக்கிறார். (102)

படைச் செருக்கு — 771

என்னைமுன் னில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

பொருள் - பொருளியல் — 246

நூ : அன்னை என்னை என்றலு முளவே...... என்மனுர் புலவர்.

உரை :

சொல்லோத்தினும் எழுத்தோத்தினும் சொல்லப்படாத இலக்கணத்தனவாய்; பழைய நெறிமுறைமையானே தோழி தலைவியை அன்னை என்றலும், தலைவி தோழியை அன்னை யென்றலும் இருவரும் தலைவனை என்னை என்றலும் உளவென்று கூறுவர் புலவர் என்றவாறு. 'என்னைமுன்' என்பன கொள்க.

விளக்கம் :

ஐ என்ற பண்டைய வழக்கு குறளில் பயின்றுள்ளது. (103)

படைச்செருக்கு — 774

கைவேல் களிற்றெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

பொருள் - புறத்திணை — 72

நூ : தானை யானை குதிரை யென்ற........

உரை :

தும்பைத் திணைக்குத்துறை இனைத்தென்கின்றது. இனிப் போர்த் தொழிலாற் றுனை நிலை வருமாறு 'கைவேல் களிற்றெடு'....

விளக்கம் :

'களிறெறிந்து பெயர்தல்' என்ற புறநானூற்று வழக்கு இங்குக் காணப்படுகின்றது. களிறு—ஆண்யானை. 'கடாஅக் களிற்றின் மேல்'எனக் குறளில் பிறவிடங்களிலும் ஆளுகிருர். (104)

படைச்செருக்கு — 776

விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை யெடுத்து [பார்க்க : 118]

மதுரைக்காஞ்சி — 222

பாடல் : மறங் கலங்கத் தலைச் சென்று
வாள் உழந்து அதன் தாள் வாழ்த்தி........

உரை :

அவர்க்கு வாட்போரிலே வருந்தின படியாலே அவ் வருத்தத்தி-னாற் பின்பும் அதன் கண் பிறக்கின்ற முயற்சியை வாழ்த்தி;

உழந்தென்னும் செய்தனெச்சம் காரணப் பொருட்டு. 'விழுப்-புண்படாத நாளெல்லாம்....' என்றார் பிறரும்.

விளக்கம் :

போரெனிற் புகலும் பொருகழல் மறத்தன்மையை இங்குக் குறளில் காணும் தொடர் குறிப்பிடுகின்றது. தமிழரது மறத் தன்மையை இக்குறள் தொடர் என்றும் நிலையாக எடுத்துச் சுட்டி நிற்கின்றது. (105)

கூடாநட்பு — 824

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.

சிறுபாணாற்றுப்படை — 208

பாடல் ; இன்முகமுடைமையும் இனியனாதலும்

உரை :

முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்னாதவனாகாமல் நெஞ்சு முகத்திற்கேற்ப இனியவனாதலையும்....

விளக்கம் :

முகநக – அகநக என்றவிடங்கள் அகம், முகம் இரண்டும் பொருந்தி ஒழுகுதலைக் குறிப்பன. இதே கருத்து பத்துப் பாட்டு–குறள் ஆகிய இரு நூல்களிலும் காணப்பெறுகின்றது. (106)

கூடாநட்பு — 828

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரு மனைத்து.

சிந்தாமணி — 1891

பாடல் : தொழுததங் கையினுள்ளும்........ அழுத கண்ணீரினுள்-ளும்........ கொல்லும் படையுடனெடுங்கும்.......

உரை :

அரசர்க்கு ஒரு துன்பம் வந்தவிடத்து அவர் நட்புடையார் போல அழுத கண்ணீரும் கொலை சூழ்தலின் கண்ணீரினும் படையொடுங்கிற்றும்.... ஒன்னார் அழுத கண்ணீருமனைத்து (828) என்றார் தேவரும்.

விளக்கம் :

இங்குக் குறளை அப்படியே சிந்தாமணி அடியொற்றிச் செல்லுகின்றது. திருத்தக்க தேவர் மிகவாகிய இடங்களில் குறளை யாண்டிருக்கிறார் என்பது இத்தகு விடங்களால் மெய்-யாகும் போலும் ! (107)

புல்லறி வாண்மை — 848

ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய் [பார்க்க : 147] (108)

பகைத்திறந் தெறிதல் — 879

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து

சொல் – பெயரியல் — 159

நூ : தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
பொருண்மை நிலையே.

உரை :

சொல் : (சொன்ன மாத்திரத்தில் விளங்கியும், குறிப்பாலும்) இருவகையால் பொருளுணர்த்துவது.

சேனாவரையர் காட்டிய 'இளைதாக முள்மரம்' என்னும் உதா-ரணம் செய்யுளாதலின் 'சொல்லொடும், குறிப்பொடும்' என்ற

சூத்திரத்தினுள் (206) ஆசிரியர் குறிப்பெச்சம் எனக் கூறிய வாறு காண்க.

விளக்கம் :

சேனாவரையர் காட்டியதனை எடுத்துக் காட்டியதன்றி இக் குறளை நச்சினார்க்கினியர் இங்குத் தாமே எடுத்தாளவில்லை. (109)

பார்க்க : சேனாவரையர்.
பார்க்க : அடுத்த குறள்

பகைத்திறந் தெரிதல் — 879

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

சொல் - எச்சவியல் — 440

நூ : ' தத்தங் குறிப்பின் எச்சம் செப்பும் '

உரை :

இனிச் சேனாவரையர் குறிப்பெச்சத்திற்கு இளைதாக முள்மரம் கொல்க என்னும் குறள் வெண்பாவும்.... காட்டினாராலெனின், அவர் காட்டின குறிப்பெச்சம் செய்யுள் இலக்கணம் கூறுகின்ற செய்யுளியலில் சொல்லொடும் குறிப்பொடும் என்னும் சூத்திரத்தால் பலசொல் தொடர்ந்ததோர் செய்யுள் முடிந்தக்கால் வரும் என்று கொண்ட குறிப்பெச்சமாகலின், அதனைச் சொல்லிலக்கணத்திற் கூறுகின்ற குறிப்பெச்சத்திற்குக் காட்டின் ஆண்டைக் குறிப்பெச்சத்திற்கு வேறு பொருளின்றாம் ஆகலானும்.... அவை பொருந்தாமை யுணர்க.

விளக்கம் :

இங்கும் நச்சினார்க்கினியர் இக்குறளைத் தாமே எடுத்தாளாமல் சேனாவரையர் ஆண்டதனைத் தாம் எடுத்துக் காட்டுமளவில் நின்றுவிடுகிறார். இக்குறள் செய்யுளியல் விளக்கத்திற்கன்றி எச்சவியல் குறிப்பெச்சத்திற் காகாதென்பது அவர் கருத்தாகும். (110)

வரைவின் மகளிர் — 914

பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்.

பொருள் - கற்பியல் — 168

நூ : *தொல்லவை யுரைத்தலும் ....*
........அறிவுமெய்ந் நிறுத்தலும் கூத்தர் மேன

உரை :

இது அறிவு மெய்ந்நிறுத்தது. இது கூத்தர்க்குரிய கிளவி பற்றியது.

விளக்கம் :

செவிலிக்கும் அறிவர்க்குமுரிய கூற்றுக்களையும் கடமைகளையும் பற்றி முன்பும் கூறப்பெற்றது. (111)

மருந்து — 943

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு [பார்க்க : 128, 419] (112)

மானம் — 964

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

சொல் - வேற்றுமையியல் — 79

நூ : *வண்ணம் வடிவே.......*
அன்னபிறவும் அதன் பால என்மனார்....

உரை :

அன்னபிறவும் என்றதனான் 'இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக' என்பது காண்க.

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. [539]

விளக்கம் :

இது ஐந்தாம் வேற்றுமை வாய்பாடுகள் பற்றியது. மயிலைநாதரும் இக்கருத்தினைச் சார்ந்தே எழுதுகிறார். (நன்–298) (113)

மானம் — 969

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

சீவக சிந்தாமணி — 2120

பாடல் : மானக்கவரி மணிவண்ட கற்ற........வன்னார்.

உரை :

மானக்கவரி :

விளக்கம் :

தமிழர் தம் மானத்தைப் பற்றிய இவ்வுயர்ந்த கோட்பாட்டைக் குறள் தன்னகத்தே நிலைப்பித்துள்ளது. (114)

பெருமை — 978

பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து [பார்க்க : 355, 1173] (115)

உழவு — 1033

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் [பார்க்க : 120] (116)

நல்குரவு — 1046

நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

சொல் - இடையியல் — 274

நூ : ‘ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை’

உரை :

‘பல்குரைத் துன்பங்கள் சென்று படும்’, இஃதசை நிலை,

விளக்கம் :

அருகிய இந்த வழக்கையும் குறள் தன்னகத்தே நிலைக்க வைத்துக் கொண்டுள்ளது.

பார்க்க : இளம்பூரணர். (117)

கயமை — 1075

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது [பார்க்க : 419] (118)

தகையணங் குறுத்தல் — 1081

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு.

பொருள் - களவியல் — 94

நூ : சிறந்துழி யையஞ் சிறந்த'தென்ப -

உரை :

தலைவிக்கு ஐயம் நிகழின் அச்சமே யன்றிக் காமக் குறிப்பு நிகழ்தலாம். மகடுஉவின் ஆடுஉ சிறத்தல் பற்றிச் சிறந்துழி என்றார்.

விளக்கம் :

பிறப்பே குடிமை யென்ற நூற்பாவில் இருவர்க்குமுள்ள ஒப்புமையைப் பற்றியே கூறுகிறார். மிக்கோனாயினும் என்ற விதியால் ஆடுஉச் சிறத்தல் பற்றி என நச்சினார்க்கினியர் எழுதுகிறார் போலும்! தலைவிக்குத் தலைவனிடத்தன்றிப் பிறரிடம் காமக் குறிப்பு நிகழாமையின் அங்கு ஐயத்திற்கே இடமில்லை. (119)

தகையணங் குறுத்தல் — 1082

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.

பொருள் - களவியல் — 96

நூ : நாட்ட மிரண்டும் அறிவுடம் படுத்தற்கு....

உரை :

(தலைவன்) தலைவியைக் கூட்டத்திற்கு உடம்படுத்தற்குத் தன்னுடைய நோக்க மிரண்டானும் கூட்டி வார்த்தை சொல்லும்.

விளக்கம் :

நாட்ட மிரண்டும் என்பது நுட்பமுடையது. ஒரு நோக்கு நோய் நோக்கு ஒன்று மருந்து என்ற விடத்தும் கண்ணொடு கண்ணிணை என்ற விடத்தும் நாட்டமிரண்டும் பற்றியே ஆசிரியர் குறிப்பிடுகிருர். இரண்டாவது நாட்டமும் இணையும் பொழுதே அறிவுடம்படுத்த தாகின்றது. (120)

தகையணங் குறுத்தல் — 1083

பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.

சொல் - வேற்றுமையியல் — 75

நூ : *அதனி னியறல் அதற்றகு கிளவி........*
அன்னபிறவும் அதன்பால என்மனர்.

உரை :

'பெண்டகையாற் பேரமர்க் கட்டு' — இவை ஆன் ஒடுவாயின.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. [495]

விளக்கம் :

மூன்றும் வேற்றுமைப் பொருள் பற்றியது. ஆன் என்பது பிற்கால வழக்காகலாம். அதனை அதனினியறல் என்பதனுள் இணைத்துக்கொண்டனர். அதனுனியறல் என உடம்படுத்துக் கூடத் தொல்காப்பியர் இவ் 'ஆனைக்' கூறவில்லை. (121)

குறிப்பறிதல் — 1092

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாக மன்று பெரிது.

பொருள் - களவியல் — 97

நூ : குறிப்பே குறித்தது கொள்ளுமாயின் ஆங்கவை நிகழும்.

உரை :

தலைவன் குறித்த புணர்ச்சி வேட்கையையே தலைவி கருத்துத் திரிவு படாமற் கொள்ளவற்றாயின் மெய்ப்பாடு பன்னிரண்டனுள் பதினொன்றும் முறையே நிகழும்.

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.]1107]

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில. [1100]

விளக்கம் :

பன்னிரண்டாம் மெய்ப் பாடாகிய இருகையுமெடுத்தல் கூறவே முயக்கமும் உய்த்துணரக் கூறியவாறு காண்க.எனக் கூறி முயக்கத்திற்குத் தம்மிலிருந்து என்ற குறளையும் நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டியுள்ளார். காண்டல், முயக்கம் ஆகியவை பற்றிய மெய்ப்பாடுகள் சிறந்தமை பற்றி இரண்டற்கும் குறள் மேற்கொள்களை எடுத்துக் கொண்டார். (122)

குறிப்பறிதல் — *1100*

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில. [*பார்க்க :* 1092] (123)

புணர்ச்சி மகிழ்தல் — 1104

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.

பொருள் - களவியல் — 102

நூ : மெய்தொட்டுப் பயிறல் பொய் பாராட்டல்.

இது (இயற்கைப் புணர்ச்சி வழித் தோன்றும்) இடந்தலைப் பாடும் பாங்கற் கூட்டமும், தோழியிற் கூட்டமும் நிகழு

மிடத்துத் தலைவன் கூற்று நிகழ்த்துமாறும் அவன் மடன்மா கூறுமாறும் கூறுகின்றது.

உரை :

உறுதோறுயிர் தளிர்ப்பத் தீண்டலால் [1106]
— மெய்தீண்டலாயிற்று:

வேட்ட பொழுதினவையவை போலுமே தோள் (1105) இது நுகர்ச்சிபெற்றது நீங்கிற்றெனூஉம் - இது நீங்கிய வழிப்பிறந்த வருத்தம் கூறியது.

வாழ்தல் உயிர்க் கன்னள் (1124)

இது மூன்றும் கூட்டத்தினையும் கருதலின் ஈண்டுவைத்தார்

நாணொடு நல்லாண்மை பண்டு உடையேன் (1133)

இது இடன் என்றதால் தோழி பெரியோர்க்குத் தகாதென்ற வழித் தலைவன் மறுத்துக் கூறுவனவும் கொள்க.

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். [1105]

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள் [1106]

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து. [1124]

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றா ரேறும் மடல். [1133]

விளக்கம் :

இந் நூற்பாவிற்கு இளம்பூரணரும் இரண்டு குறள்களை 1105, 1104. எடுத்துக் காட்டியுள்ளார். (124)

புணர்ச்சி மகிழ்தல் — 1105

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள் [பார்க்க : 1104]

பொருள் – செய்யுளியல் – 186

நூ : காமப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும் பாங்கொடு தழாலும் தோழியிற் புணர்வும்........

உரை :

இது முறையே கைகோள் (களவு-கற்பு) செய்யுட் குறுப்பாமாறு கூறுகின்றது. இயற்கைப் புணர்ச்சியும் அந்நாற் பகுதிக் கண்ணும் பொருந்திய சார்பில் கள வொழுக்கம் இது வென்று செய்யுள் செய்தல் கந்தருவ வழக்கம் என்பர்.

இவை களவியலிற் கண்டு கொள்க.

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள் [1104]

விளக்கம் :

பிறர் செய்த பிரிவுகளை யெல்லாம் செய்யாவிட்டாலும் (109–115) ஏழு அதிகாரங்களை களவியல் என்றும் (116–133) பதினெட்டு அதிகாரங்கள் கற்பென்றும் குறளில் பிரிவிருக்கின்றது.

அவற்றுள் களவு மிகச் சிறப்பாகக் கற்பனை செய்யப் பெற்றுள்ளது.

இதனையே கந்தருவ வழக்கம் என ஒன்ருக்கி விடாமல் நக்கீரர், இறையனுர் களவியலுரையில் கந்தருவ வழக்கம் போன்றது என உரை செய்கிருர். (125)

புணர்ச்சி மகிழ்தல் — 1106

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள் [பார்க்க : 1104, 1106] (126)

புணர்ச்சி மகிழ்தல் — 1107

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்ருல்
அம்மா அரிவை முயக்கு [பார்க்க : 1092] (127)

புணர்ச்சி மகிழ்தல் — 1110

அறிதோ றறியாமை கண்டற்ருல் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு,

பொருள் - கற்பியல் — 146

நூ : கரணத்தினமைந்து முடிந்த காலை எஞ்சா மகிழ்ச்சி இறந்து வருபருவத்தும் ....

எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன

உரை :

சிறப்பாவன. ஊடலின்; இம்மைப் பிறப்பில் .. ....
கற்பிடத்துத் தலைவன் கூற்று தொகுத்துணர்த்திற்று.

ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவது அன்றுகொல் என்று. [1307]

ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா. [1329]

இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள் [1315]

தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று. [1319]

விளக்கம் :

சிறப்பின் என்ற இலேசானே ஊடல் பற்றிய குறள்களை யெல்லாம் நச்சினார்க்கினியர் தழுவிக் கொள்ளுகிறார். இதனால் வள்ளுவரின் ஊடல் பற்றிய பாடல்கள் அவரைக் கவர்ந்தன; அவற்றிற்கோர் ஏற்றந்தர வேண்டுமென அவர் கருதினார் எனத் தெரியவரும். (128)

நலம் புனைந்துரைத்தல் — 1112

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று,

பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். [675]

பொருள் - செய்யுளியல் — 235

நூ : சின்மென் மொழியாற் ருய பனுவலின் அம்மை.

விளக்கம் :

பேராசிரியரும் இவ்விடத்தில் இக் குறள்களையே எடுத்துக் காட்டியுள்ளார். தொல்காப்பியரின் இவ்விலக்கணத்தை விளக்கவே குறள் எழுந்தது போன்றுள்ளது.

சிலவாகிய மெல்லியவாகிய மொழிகளாலாகிய நூல்களை 'அம்மை' யென்னும் பிரிவில் அடக்குவர்.

பார்க்க : இளம்பூரணர் (129)

நலம் புனைந்துரைத்தல் — 1113

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

சொல்லதிகாரம் - எச்சவியல் — 414

நூ : உவமத் தொகையே உவம வியல.

விளக்கம் :

உவமத் தொகை பற்றிய இந் நூற்பாவிற்குரிய மேற்கோள் ஒரே குறளில் ஐந்து உவமத் தொகைகள் (ஏழுசீரில்) உள்ளன. (130)

நலம் புனைந்துரைத்தல் — 1114

காணின் குவளை கவிழ்ந்துநிலன் நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று.

பொருள் - களவியல் — 103

நூ : பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்

உரை :

இரந்து பி[illegible]னில்லை நிற்புழித் தலைவன் கூற்று நிகழுமாறு.
பரிவுற்று மெலியினும் : களித்தொறும்........
அவட்பெற்று மலியினும் : காணிற் குவளை

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. [1145]

விளக்கம் :

குறளில் நலம் புனைந்துரைத்தற் பகுதியும் இங்குள்ளது (131)

காதற் சிறப்புரைத்தல் — 1121

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். [பார்க்க : 5] (132)

காதற் சிறப்புரைத்தல் — 1124

வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து. [பார்க்க : 1106] (133)

நாணுத் துறவுரைத்தல் — 1133

நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல். [பார்க்க : 1106] (134)

நாணுத் துறவுரைத்தல் — 1137

கடலன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணிற் பெருந்தக்கது இல்.

பொருள் – அகத்திணையியல் — 35

நூ : எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை யின்மையான.

உரை :

பெருந்திணைக் குரியதோர் இலக்கணம் கூறுகின்றது.

விளக்கம் :

மடலேறுதலில்லை; ஆடவருடன் கலத்திற் செல்லுதலில்லை என்பன போன்ற பல பழக்கங்கள் பெண்கட்குரியவாகத் தொல்காப்பியம் கூறும். அச்சமும் நாணமும் மடனும் அவளை அவ்வாறு செய்ய விடுவதில்லை. நாணொடு நல்லாண்மை பண்டுடையே னெனத் தலைவன் தான் கூறுவான்; தலைவி கூறலில்லை. (135)

அலரறிவுறுத்தல் — 1145

களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது. [பார்க்க : 1114] (136)

அலரறிவுறுத்தல் — 1146

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்பு கொண்டற்று.

பொருள் - கற்பியல் — 162

நூ : களவுங் கற்பு மலவரை வின்றே.

உரை :

தலைவிக்கும் தோழிக்கும் உரிய கூற்றுக் கூறுகின்றது.

விளக்கம் :

இளம்பூரணர் அலர் வரைவின்றே என்ற பாடத்துடன் இக்குறளை மேற்கோள் காட்டுகின்றார்.

பரிமேலழகர் இதனைத் தலைவி கூற்றாக உரைக்கிறார். நூற்பாவில் இது பற்றிய கருத்து தோழிக்கும், தலைவிக்குமுரியதாகக் கூறப் பெறுகின்றது. (137)

அலரறிவுறுத்தல் — 1147

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்.

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல். [1148]

பொருள் - கற்பியல் — 163

நூ : அலரில் தோன்றும் காமத்து மிகுதி.

விளக்கம் :

கௌவை எருவாக ....நீளும்; கௌவையால் காமம் நுதுப்பேமெனல் என்கையில் தொல்காப்பியத்தைப் படித்து வள்ளுவர்

அதற்கப்படியே இலக்கியம் எழுதியது போலத் தோன்றுகிறது அலரில் காமம் மிகும் என்றார் தொல்காப்பியர். ஆனால் குறளாசிரியர் அலரே காமத்தை மிகுவிக்கும் என்கிறார். (138)

பார்க்க : இளம்பூரணர்.

பிரிவாற்றாமை — 1151

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

பொருள் - பொருளியல் — 226

நூ : வருத்த மிகுதி சுட்டுங்காலை
உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்.

உரை :

கற்புக் காலத்துத் தோழிக்கும், அறிவர்க்கு முரியதாய வழுஅமைக்-கின்றது.

அவரது இல்வாழ்க்கை நிகழ்ச்சிக்கண்ணே தமக்கு வருத்தம் தோன்றிற்றாகக் கூறுவராசிரியர்.

விளக்கம் :

தோழிக்கும் அறிவர்க்கு முரிய கூற்றாக நச்சினர்க்கினியர் பொருள் செய்கிறார். பரிமேலழகர் இதனைத் தோழி கூற்றாக்கு கிறார். (139)

பிரிவாற்றாமை — 1152

இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தாற் புணர்வு. [பார்க்க : 454]

எழுத்து - உருபியல் — 176

நூ : சுட்டு முதலுகரம் அன்னொடு சிவணி
யொட்டிய மெய்யொழித் துகரம் கெடுமே.

உரை :

உகர ஈற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது. ஒட்டிய என்றதனுற் சுட்டு முதலுகர மன்றிப் பிற உகரமும் உயிர் வரு வழியிற் கெடுவன கொள்க. (140)

பிரிவாற்றுமை — 1152

இன்கண் உடைத்துஅவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு

பொருள் - களவியல் — 111

நூ : மறைந்தவற் காண்டல்.

உரை :

இது முன்னிலைப் புறமொழி. இது தலைவி கூற்றுத் தொகுத்தல்.

வாராக்கால் துஞ்சாவரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண் [1179] (141)

பொருள் - கற்பியல் — 147

நூ: இன்பமும் இடும்பையு மாகிய விடத்தும்.

உரை :

தலைவி கூற்று நிகழுமிடம் கூறுகின்றது.

விளக்கம் :

இன்பமும் துன்பமுமாகிய இரண்டு வழக்குகளுக்கும் தொல்காப்பியத்திற் கேற்பக் குறள் மேற்கோள்களைக் கொண்டுள்ளது. (142)

பிரிவாற்றுமை — 1154

அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு.

சிந்தாமணி — 37

பாடல் : மின்றெளித் தெழுதியன்ன........

உரை :

மின்னை நிலைபெற நிற்கத் தெளிவித்து அதனிடத்தே மகளிர் அவயங்களை எழுதியன்ன நல்லாரென்க, தெளித்த சொற்றேறி யார்க்கு (1154) என்றாற் போல.

விளக்கம் :

குறிப்பிட்ட பொருளையுடைய சொல்லாட்சிக்கு அடிக்கடி நச்சினார்க்கினியர் போன்றோர் குறளாசிரியரை மேற்கோள் காட்டு கின்றனர். **(143)**

பிரிவாற்றாமை — **1158**

இன்னா தினனில்லூர் வாழ்தல் அதனினு
மின்னா தினியார்ப் பிரிவு. [பார்க்க : **454**] **(144)**

கண்விதுப் பழிதல் — **1173**

கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து. [பார்க்க : **1176**]

சொல் - இடை — 298

நூ : கிளந்த வல்ல அன்ன பிறவும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.

உரை :

'இடைச் சொற்களுக்குப் புறனடை' அஞ்சுவதோரு மறனே என ஒரும், பணியுமாம் - என ஆழம்... .... பொள்ளென - இவை விரைவுணர்த்தின.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. **[978]**

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். **[487]**

அஞ்சுவ தோரு மறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரு மவா. **[366]**

விளக்கம் :

வள்ளுவர் முற்றுப்பெற நூலெழுதியுள்ளார் என்பதில் பிற்கால வழக்குகள் பலவற்றையும் தொகுத்துப் பலவிடத்தில் உணர்த்துகிறார் என்பதும் பொருந்தும். (145)

கண்விதுப் பழிதல் — 1176

ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅ மிதற்பட் டது.

சொல் - இடை — 253

நூ ; *அவைதாம் முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும் –*

விளக்கம் :

இடைச்சொல் நிலைபெறும் இடமும் வேறுபாடும் கூறியது. (146)

கண்விதுப் பழிதல் — 1176

ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅ மிதற்பட் டது.

பொருள் - பொருளியல் — 203

நூ ; *உடம்பு முயிரும் வாடியக் காலும்*
என்னுற்றன கொல் இவை யெனினல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை.

உரை :

தலைவனோடுவேறு பட்டுழிப் பிறப்பதோர் வழுவமைதி கூறுகின்றது.

கதுமெனத் தானோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து. [1173]

விளக்கம் :

தலைவி முற் கூறியாங்கு (1137) நாணு மடனும் உடையளாதலின் தனக்குள் வருந்தலல்லது தலைவனிடத்தில் தானே சேற லில்லை என்பதாம். (147)

கண்விதுப்பழிதல் — 1179

வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
ஆரஞ ருற்றன கண் [பார்க்க : 1152] (148)

பசப்புறு பருவரல் — 1187

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.

பொருள் - பொருளியல் — 213

நூ ; *உண்டற்குரிய வல்லாப் பொருளை*
உண்டன போலக் கூறலு மரபே.

உரை :

சொல் வேறுபட்டுப் பொருளுணர்த்தும் வழுவமைக்கின்றது.

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று. [1244]

விளக்கம் :

இளம்பூரணரும் இங்கிவ்வாறே மேற்கோள் காட்டுகிருர். (149)

தனிப்படர்மிகுதி — 1200

உறுஅர்க் குறுநோய் உரைப்பாய்க் கடலைச்
செறுஅய் வாழிய நெஞ்சு.

எழுத்து - நூன்மரபு — 6

நூ : *நீட்டம் வேண்டின் அவ்வள புடைய*
கூட்டி எழூஉதல்.

உரை :

இது மாத்திரை நீளுமாறு கூறுகின்றது. (150)

தனிப்படர் மிகுதி — 1200

உறுஅர்க் குறுநோய் உரைப்பாய்க் கடலைச்
செறுஅய் வாழிய நெஞ்சு.

பொருள் - செய் — 7

நூ : *அளபெழினவையே அளபெடைத் தொடையே.*

விளக்கம் :

எல்லா வண்ணங்களையும் வைத்துப் பாவெழுதும் முதற் பாவலராம் வள்ளுவர் அளபெடை வண்ணத்தையும் (கட்டளை உயிரளபெடை) அமைத்துள்ளார். (151)

உறுப்பு நலனழிதல் — 1233

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

பொருள் - பொருளியல் — 202

நூ : *வண்ணம் பசந்து புலம்புறுகாலை*
உணர்ந்த போல வுறுப்பினைக் கிழவி

உரை :

" வருத்த மிக்கவழி இவையுமாம் என்கின்றது. "

கண்ணுங் கொளச்செறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று. [1244]

விளக்கம் :

முன்பும் (1187) இதே கருத்தினைப் பற்றிப் பேசப்பெற்றது. ***வண்ணந் திரிந்து*** என்ற பாடத்துடன் இளம்பூரணரும் இவ்வாறே எழுதுகிறார். (152)

நெஞ்சொடு கிளத்தல் — 1244

கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று [பார்க்க : 1187, 1233]
(153)

குறிப்பறிவுறுத்தல் — 1272

கண்ணிறைந்த காரிகை காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

பொருள் - களவு — 115

நூ : களவல ராயினும் காமமெய்ப் படுப்பினும் ....
செவிலி மேன.

உரை :

இது காமத்தால் நிகழ்ந்த பொலிவினைச் செவிலி கூறியது.

மணியிற் றிகழ்தரு நூல்போல் மடந்தை
அணியிற் றிகழ்வதொன் றுண்டு [1273]

விளக்கம் :

அணி - புணர்ச்சியினாய அழகு எனப் பரிமேலழகரும் கூறுகிறார். இளம்பூரணரும் இவ்வாறே எழுதுகிறார். (154)

குறிப்பறிவுறுத்தல் — 1273

மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
அணியிற் றிகழ்வதொன் றுண்டு. [பார்க்க : 1272] (155)

நெஞ்சொடு புலத்தல் — 1291

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீயெமக் காகா தது.

பொருள் - பொருளியல் — 196

நூ : நோயு மின்பமும் இருவகை நிலையில்
இருவர்க்கும் உரிய பாற்கிளவி.

உரை :

'தலைவர்க்கும் தலைவியர்க்கும் உரிய இலக்கணத்திற் பக்கச் சொல் என்றவாறு'

விளக்கம் :

இளம்பூரணரும் இக்கருத்தே யுடையர். (156)

புலவி — 1302

உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்,

பொருள் - கற்பு — 150

நூ : *பெறற்கரும் பெரும் பொருள் முடிந்தபின்*
.....................தோழிக்குரிய

உரை :

"புலவியுள் முழ்கிய கிழவோன்பால் நின்று கெடுத்தற் (தீர்த்தற்) கண்ணும்"

— இது தோழிக்குரிய (கற்பியல்) கூற்றுக் கூறுகின்றது.

விளக்கம் :

பெண்களறிந்த உப்பினைக் கொண்டே உவமை செய்தது.
பார்க்க : இளம்பூரணர். (157)

புலவி — 1303

அலந்தாரை யல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

பொருள் - கற்பு — 157

நூ : *புலத்தலும் ஊடலு மாகிய விடத்தும்*
சொலத்தகு கிளவி தோழிக்குரிய

உரை :

தலைவியையும் தோழியையும் அச்சுறுத்தற் பொருட்டுத் தலைவன் புலத்தற் கண்ணும் ஊடற் கண்ணும் தோழி கூற்று நிகழ்தற் கூறப்பட்டது.

விளக்கம் :

தலைமகள் புலந்து சொல்லியதெனப் பரிமேலழகர் எழுதுகிறார்.

இளம்பூரணரும் இதே பொருளை யெழுதுகின்றார். (158)

புலவி — 1307

ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று. [பார்க்க ; 1110] (159)

புலவி நுணுக்கம் — 1314

யாரினும் காதல மென்றேனா ஊடினாள்
யாரினும் யாரினு மென்று.

பொருள் - பொருளியல் -- 205

*நூ : தன்வயிற் கரத்தலும் அவன்வயின் வேட்டலும்
அல்வழியெல்லாம் மடனொடு நிற்றல் :*

உரை :

இது பெண்டிர்க் கியல்பாகிய மடமை யழிவதோர் வழுவமைக் கின்றது.

யாரினும் காதலம் – என்றாற் போல மடனழிய வருவனவுங் கொள்க.

விளக்கம் :

யாரினும் காதலமென்றேனா என்றவிடத்தில் தலைவன் ‘தன் வயிற் கரத்தலாகக்’ கருதுகிறார். (160)

புலவி நுணுக்கம் — 1315

இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். [பார்க்க : 1110] (161)

புலவி நுணுக்கம் — 1318

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று

எழுத்து - புள்ளிமயங்கியல் — 327

நூ : தொழிற் பெயரெல்லாம் தொழிற் பெயரியல.

உரை :

‘ தும்முச் செறுப்ப ’ என்பது மது.

விளக்கம் :

'தும்மு'ப் போன்ற தொழிற்பெயர் வழக்குகள் பிற்காலத்தில்கூட இலக்கியத்தில் மிகவாகக் காணப்படா விடினும் குறள் போன்ற நூல்கள் அவற்றைப் பாதுகாத்துள்ளன. (162)

புலவி நுணுக்கம் — *1319*

தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீர்
இந்நீர ராகுதி ரென்று. [பார்க்க: 1110] (163)

ஊடலுவகை — *1329*

ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா. [பார்க்க: 1110] (164)

திருக்குறளும்.
சேனவரையரும்

கடவுள் வாழ்த்து — 1

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. [பார்க்க : 1154]

சொல் - எச்ச - 440

நூ : அவைதாம், தத்தம் குறிப்பினெச்சஞ் செப்பும்,

உரை :

சொல், குறிப்பு, இசை யெனு மெச்சங்கள் சொல்லுவார் குறிப்பான் எஞ்சி நின்ற பொருளை உணர்த்தும். 'அகரமுதல', 'அளித்தஞ்சல்' என்றவழி முறையானே அது போல எனவும், நீத்தார்க்கே தவறு எனவும் வருவனவும் எஞ்சிய இசைப் பொருளுணர்த்தலான் இசையெச்ச மாயின.

அளித்தஞ்ச லென்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு [1154]

விளக்கம் :

நச்சினார்க்கினியர் இதனை மறுத்து வேறுபட வந்த உவம மென்கிறார். 'இசை யெச்சமென்ற 'அகர முதல' என்பதன்கண் அதுபோல என விரித்த உவமச்சொல் துணியுமாறு விரியாது இரண்டற்கும் பொதுவாய் வேறுபட வந்த உவமத்தின் பாற்படுவ தல்லது இசையால் பிறவாமையானும் அவை பொருந்தாமை யுணர்க' என்பது அவர் கருத்து.

தொல்காப்பியத்தில் சேனவரையர் உரையிற் காணப்பெறும் திருக்குறள் பகுதிகள் இங்குத் 'திருக்குறளும் சேனவரையரும்' என்ற தலைப்பின்கீழ்த் தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன.

பேராசிரியரும் வேறுபட வந்த உவமமாகவே (பொருள் – 307) இதனைக் கொள்ளுதலால் நச்சினார்க்கினியர் கருத்தே இங்குப் பொருத்த மாகலாம். பரிமேலழகரும் இதனை உவம வகை (எடுத்துக் காட்டுவமை) யாகவே கொள்ளுகிறார். (165)

அழுக்காறுமை — 168

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

சொல் – இடை – 258

நூ : *வினையே குறிப்பே........பெயரோ டவ்வறு கிளவியும்*
எனவென் கிளவி.

உரை :

வினை முதலாகிய ஆறு பொருண்மையும் குறித்து வரும் ‘என’ வென்னும் இடைச்சொல் என்றவாறு.

‘அழுக்காறென’ எனப் பெயர்ப் பொருண்மையுங் குறித்து என வென்னுஞ்சொல் வந்தவாறு கண்டு கொள்க.

விளக்கம் :

நச்சினார்க்கினியரும் இந் நூற்பாவிற்கு இதே குறளைப் பொருத்திக் காட்டுகிறார். (நன்னூல் – 424) சங்கர நமச்சிவாயரும் ‘என என்னும்’ இடைச்சொல் பெயரின்கண் வந்ததென்றே எழுதுகிறார். (166)

ஊழ் — 375

நல்லவை யெல்லாந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

சொல் – கிளவி — 22

நூ : *ஆக்கக் கிளவி காரண மின்றியும்*
போக்கின்றென்ப வழக்கி னுள்ளே

உரை :

'காரண முதற்றெனப்படும் ஆக்கச் சொல் காரணமின்றி வரினும் குற்றமின்று வழக்கினுள் என்றவாறு நல்லவை யெல்லாம். எனவும் செயற்கைப் பொருள் செய்யுட் காரணமின்றி வந்தன-வாலெனின், ஊழாலென்பது அதிகாரத்தான் வருமாகலானும் அவை காரணமின்றி வந்தன வெனப் படா வென்பது.

விளக்கம் :

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இக்குறளைக் கொடா-திருக்கச் சேனவரையர் இதனை யெடுத்து இவ்வாறு விளக்குதல் நுட்ப முடையதாகும் (167)

கல்லாமை — 406

உளரென்னு மாத்திரைய ரல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

சொல் - உரியியல் — 306

நூ : *பயப்பே பயனும்*

உரை :

'பயவா' — எனவும் பயப்பும், பசப்பும், பயனும் நிற வேறுபாடு மாகிய குறிப்பும் பண்பு முணர்த்தும் என்றவாறு.

விளக்கம் :

நச்சினார்க்கினியரும் இவ்விடத்தினை இக் குறளைக்கொண்டு விளக்குகிறார். (168)

அறிவுடைமை — 429

எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்

சொல் – உரியியல் — 316

நூ : *அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்.*

உரை ;

'அதிரவருவதோர் நோய்' எனவும் அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கமாகிய குறிப்புணர்த்தும் என்றவாறு.

விளக்கம் :

நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் இந் நூற்பாவினை இதே குறளைக் கொண்டே விளக்கம் செய்கின்றனர். நடுக்க மென்ற பொருளைத் தருவதில் இக்குறளைத்தவிர வேறிடம் இல்லை என்பது அவர்கள் கருத்துப் போலும்! (169)

பொச்சாவாமை — 537

அருவினை யென்ப வுளவோ பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்

சொல் – வினை — 234

நூ : நிலனும் பொருளும் காலமும் கருவியும்..........
செய்யும் செய்த வென்னுஞ் சொல்லே.

உரை :

பொச்சாவாக் கருவி யென்பது மது.

விளக்கம் :

செய்யும், செய்த என்னும் சொற்கள் நிலனும் பொருளும் காலமும் கருவியு முதலிய அவ்வறு வகைப் பொருட்கும் உரிமை யினை யுடையவாம் என நச்சினார்க்கினியர் உரைகூறி இக்குறள் கருவிக்கண் அடங்கும் என்கிறார். சேனாவரையரும் இதே கருத் துடன் உரை செய்கிறார். (170)

செங்கோன்மை — 542

வானோக்கி வாழு முயிரெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

சொல் – வேற்றுமை மயங்கியல் — 93

நூ : இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம்,

உரை :

‘ இரண்டாவதற்கோதிய நோக்கப் பொருண்மை நோக்கிய நோக்கமும் நோக்க ஞேக்கமுமென இரண்டு வகைப்படும். நோக்கிய நோக்கம் கண்ணுேக்குதல். நோக்க ஞேக்கம் மனத்தாலொன்றனை நோக்குதல். அந் நோக்க ஞேக்க மாகிய பொருள் மூன்ருவதற்கும் ஐ ந் தா வ த ற் கு முரிய ஏதுப் பொருண்மையுமாம் என்றவாறு.

“ வாஞேக்கி ” என்புழி வானை நோக்கி வாழும் என இரண்டாவது வருதலே யன்றி வாஞேக்கி வாழும் வானி ஞேக்கி வாழும் என மூன்ருவதும் ஐந்தாவதும் வந்தவாறு கண்டு கொள்க.

விளக்கம் :

வேற்றுமை மயக்கம் பற்றிய இந் நூற்பாவிற்கு இளம்பூரணரும் . நச்சிஞர்க்கினியரும் இதே குறளை எடுத்துக் காட்டு கின்றனர்.

செயப்படுபொருளும் ஏதுவும் ஒப்பப் பிறந்து நிற்றல் இச் சூத்திரத்திற்குக் கருத்து. இஃது உருபும் பொருளும் மயங்கிற்று என நச்சிஞர்க்கினியர் விளக்கம் தருகிருர்.

நோக்கி வாழ்தல் — இன்றியமையாமை என வெழுதிய நுண்பொருள் மாலையாரும் இதற்கிவ்வாறே பொருள் கூறுகிருர். (171)

செங்கோன்மை — 543

அந்தணர் நூற்கும் அறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்

சொல் – வேற்றுமை யியல் — 102

நூ : உருபு தொடர்ந்தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒரு சொன் னடைய

உரை :

பல உருபும் தம்முள் தொடர்ந்தடுக்கி வந்த வேற்றுமைச் சொற்க ளெல்லாம் முடிக்குஞ் சொல் ஒன்றனுன் முற்றுப்பெற்று நடக்கும். ‘ அந்தணர் நூற்கும் ’ எனவும் வரும்.

விளக்கம் :

நச்சினார்க்கினியரும் இதற்கிவ்வாறே பொருளெழுதி இக்குறளை மேற்கோளாகக் கொள்கிறார். (172)

ஆள்வினையுடைமை — 612

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு.

சொல் – உரியியல் — 396

நூ : *அன்ன பிறவும் கிளந்தவல்ல உரிச்சொல்லாம்*
ஒம்படையாணை யிற் கிளந்தவற்றியலான்........
பாங்குறவுணர்தல்.

உரை :

உரிச்சொல்லெல்லாம், இசையினும் குறிப்பினும் எனவும் முன்னும் பின்னும் ... நாடியெனவும் கூறிய நெறியைச் சேராமற் கடைப்பிடித்து எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல் எனவும்.... முறைப்படவுணர்க என்றவாறு. பொருளைச் சொல் இன்றியமையாயின் அதனைக் குறையென்றார். ஒருவன் வினையும் பயனும் இன்றியமையாமையின் வினைக்குறை தீர்ந்தாரின்....' பயக்குறையில்லை தாம் வாழு நாளே' என்றாற் போல.

விளக்கம் :

இஃதுரியியல் புறனடை (173)

வினைத்தூய்மை — 658

கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்

சொல் – உரியியல் — 383

நூ : *கடியென் கிளவி வரைவே கூர்மை........*

உரை :

கடியென்னும் உரிச்சொல் வரைவு முதலாகிய பத்தும் குறிப்புமுணர்த்தும் என்றவாறு. 'கடிந்த கடிந்தொரார்' என வரைவு உணர்த்திய வாறு கண்டுகொள்க.

விளக்கம் :

தெய்வச்சிலையாரும் நச்சினுர்க்கினியரும் இதே கருத்துடன் இக்குறளைக் காட்டுகின்றனர். இவ்விடைச் சொல் திரிந்தே வருமென நச்சினுர்க்கினியர் எழுதுகிருர். (174)

வினை செயல்வகை — 674

வினைபகை யென்றிரண்டி னெச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்

சொல் - இடையியல் — 294

நூ : ' என்று மெனவும் ஒடுவும் தோன்றி
ஒன்று வழியுடைய எண்ணினுட் பிரிந்தே

உரை :

என்றும் எனவும் ஒடுவும் என்பன ஒருவழித் தோன்றி எண்ணினுட் பிறவழியும் பிரிந்து சென்று ஒன்றுமிடமுடைய என்றவாறு.

பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் [675]

வினை பகை, எனவும் .

நின்றவிடத்தில் பிரிந்து பிறவழிச்சென்று ஒன்றிய வாறு கண்டு கொள்க.

பொருள் கருவி காலம் வினையிடனொடைந்தும் எனவும் நின்ற விடத்துப் பிரிந்து பிறவழிச் சென்று ஒன்றியவாறு கண்டு கொள்க.

விளக்கம் :

இவ்விடைச் சொற்களின் விளக்கத்திற்கு நச்சினுர்க்கினியர் இவ்விரு குறள்களையும், தெய்வச்சிலையார் 'பொருள் கருவி' யென்ற குறளையும் காட்டுகின்றனர். (175)

வினை செயல்வகை — 675

பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல் [பார்க்க : 674] (176)

குறிப்பறிதல் — 701

கூஉருமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாருநீர் வையக் கணி.

சொல் - வினையியல் — 229

நூ : பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்

உரை :

பின்னும் முன்னும் .... என்னு மீற்றவாய் வருவனவும்
அவை போலக் காலங்கண்ணி வருவன பிறவும்
வினையெச்சமாம் என்றவாறு.

'அற்ருல்' என்னும் ஆலீறும் கூஉருமை – மகரவைகார வீறும்
வேபாக்கு எனவரும் பாக்கீறும் கொள்க.

அற்ரு லளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்ருன் நெடிதுய்க்கு மாறு [943]

விளக்கம் :

வினையெச்சம் பற்றிய இந்நூற்பாவின் புறனடையாக இக்குறள்களைக் காட்டுகிருர் சேனுவரையர்.

பார்க்க : தெய்வச்சிலையார். **(177)**

பகைத்திறம் தெரிதல் — 879

இளைதாக முண்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து [பார்க்க : 1154]

சொல் – பெயரியல் — 15

நூ : தெரிபு வேறு நிலையலும் குறிப்பிற் ருேன்றலும்
இருபாற்றென்ப பொருண்மை நிலையே.

உரை :

பொருண்மை தெரிதல் சொன்மாத்திரத்தான் விளங்கி வேறு நிற்றலும் சொன்மாத்திரத்தாற் ருேன்ருது சொல்லொடு கூடிய

குறிப்பிற் றோன்றலுமென இரண்டு கூற்றை யுடைத்தென்று கூறுவர் ஆசிரியர்.

இனிதாக முண்மரம் என்னும் தொடர்மொழியான் குறிப்பின் தோன்றலாம்.

விளக்கம் :

பெயரியலில் சொற் பொருண்மை தெரிநிலைபற்றிய இச் சூத்திரத்தில் குறிப்புப் பொருள்களை யெல்லாம் சேனாவரையர் கொள்கிறார். அணிகளில் ஒட்டு (பிறிது மொழிதல்) போன்ற வற்றையெல்லாம் இங்குக் கொண்டு உரை செய்கிறார். நச்சினார்க் கினியர் சொல் 440 ஆம் நூற்பாவில் (தத்தங் குறிப்பின் எச்சம் செப்பும்) இக்குறளை மேற்கோள் காட்டியதனை மறுத்துப் பொருள் செய்கிறார். பரிமேலழகர் இக்குறளைப் பிறிது மொழிதல் என்றே கூறுகிறார்.

[பார்க்க : நச்சினார்க்கினியர்.] (178)

வரைவின் மகளிர் — 920

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

சொல் - கிளவியாக்கம் — 45

நூ : ***வியங்கோ ளெண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்***

உரை :

வியங்கோளொடு தொடரு மெண்ணுப்பெயர் திணை விராய் வருதல் வரையார் என்றவாறு.

'இருமனப் பெண்டிரும்' எனவும்........

படர்க்கைச்சொல்லும் அஃறிணைக் கிளவியும் விரா யெண்ணுதல் வழக்குப்பயிற்சி யுடைமையான். (179)

மருந்து — 943

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு [பார்க்க : 701] (180)

பெருமை — 978

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

சொல் - இடையியல் — 296

நூ : *கிளந்தவல்ல வேறு பிற தோன்றினும்*
கிளந்தவற்றியலான் உணர்ந்தனர் கொளலே

உரை :

மேற் சொல்லப்பட்டனவன்றி அவைபோல்வன பிறவரினும் அவற்றைக் கிளந்த சொல்லியல்பானுணர்ந்துகொள்க என்றவாறு. 'பணியுமாம்' எனவும் அசை நிலையாய் வந்தன.

விளக்கம் :

இஃது இடையியல் புறனடை. பிற்கால வழக்குகளையும், இலக்கணத்தில் குறிக்கப்பட்டதன் மிகுதியான வழக்குகளையும் இயல்பாகவே குறிக்கும் திறனுடையவர் வள்ளுவர் என்பதிதனுல் புலனுகும். (181)

[பார்க்க : நச்சினுர்க்கினியர்.]

நல்குரவு — 1045

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

சொல் - இடையியல் — 272

நூ : *ஏயுங் குரையும் இசைநிறை யசைநிலை*

உரை :

ஏயென்னு மிடைச்சொல்லும் குரையென்னு மிடைச்சொல்லும் இசைநிறையும் அசைநிலையுமென ஒரொன்றிரண்டாம் என்றவாறு.

'பல்குரை' – என்பது அசைநிலை.

விளக்கம் :

இவ்விடைச் சொற்களுக்குத் தெய்வச்சிலையாரும் நச்சினார்க்கினியரும் இதே குறளைக் காட்டுகின்றனர். (182)

காதற் சிறப்புரைத்தல் — 1128

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து [பார்க்க : 701] (183)

பிரிவாற்றாமை — 1154

அளித்தஞ்ச லென்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு [பார்க்க : 1]

சொல் - எச்சவியல் — 440

நூ : ***அவைதாம் தத்தம் குறிப்பினெச்சம் செப்பும்***

உரை :

சொல்லும் குறிப்பும் இசையுமாகிய எச்சமூன்றும்
சொல்லுவார் குறிப்பான் எஞ்சிநின்ற பொருளை யுணர்த்தும்.

இளைதாக முள்மரங் கொல்க களையுநர் (879)
கைகொல்லும் காழ்த்த இடத்து.

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி (1)
பகவன் முதற்றே யுலகு.

'அளித்தஞ்சல்' என்ற வழி

முறையானே அவைபோல எனவும்....எஞ்சிய
இசைப்பொருள் உணர்த்தலான் இசையெச்சமாயின

'இளைதாக முள்மரம்' — குறிப்பு

'அகர முதல எழுத்தெல்லாம்' — இசை.

விளக்கம் :

நச்சினார்க்கினியர் இளைதாக முண்மரம் பற்றிய குறிப்பெச்சத்தையும் அகரமுதல வென்பது பற்றிய இசை யெச்சத்தையும் மறுக்கிறார். (184)

[பார்க்க : நச்சினார்க்கினியர்.]

கண்விதுப்பழிதல் — 1176

ஓஒ வினிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅ மிதற்பட் டது.

சொல் - இடையியல் — 251

நூ : *அவைதாம் முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்*
தம்மீறு திரிதலும் பிறிதவ ணிலையலும்

உரை :

இஃதிடைச்சொல்லைப் பற்றிய பொது விலக்கண முணர்த்து-வது.

இடைச்சொல் இடைவருதலேயன்றித் தம்மாற் சாரப்படும் சொற்கு முன்னும் பின்னும் வருதலும் தம்மீறு வேறுபட்டு வருதலும் பிறிதோரிடைச்சொல் ஓரிடைச்சொல் முன் வருதலுமாகிய அத்தன்மையவெல்லாம் உரிய என்றவாறு.

ஓஒ வினிதே – பின்னடுத்து வந்தன.

விளக்கம் :

நச்சினார்க்கினியரும் இதே கருத்துடன் இக்குறளை மேற்கொள்கிறார். (185)

திருக்குறளும்

பேராசிரியரும்

கடவுள் வாழ்த்து — 1

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

பொருள் -- உவமவியல் - 307

நூ : *வேறுபடவந்த வுவமத் தோற்றம்*
கூறியமருங்கிற் கொள்வழிக் கொளாஅல்

உரை :

இது மேலெல்லாம் இருவகையுவமமும் கூறி இன்னும் ஏனை-யுவமப் பகுதியே கூறுவான் எய்தாததெய்துவித்தது. வேறுபட வருதலென்பது உவமைக்கும் பொருளுக்கும் ஒப்புமை மாறு-படக் கூறுதலும் ஒப்புமை கூருது பெயர் போல்வனவற்று மாத்திரையானே மறுத்துக் கூறுதலும் ஒப்புமை மறுத்துப் பொருளை நாட்டிக் கூறுதலும் .... இரண்டு பொருளானே வெவ் வேறு கூறியவழி ஒன்று ஒன்றற்கு உவமையென்பது கொள்ள வைத்தலும் இன்னோரன்ன வெல்லாம் (வேறுபட வந்த உவமத் தோற்றம் எனப்படும்).

அகர முதல என்ற வழி இரண்டு பொருள் வேறுவேறு கூறிய தன்றி அகரமுதல வெழுத்தெல்லாம் அதுபோல என்ருனும் ஆதிபகவன் முதற்றே உலகம் அதுபோல என்ருனும் ஒன்ருகத் துணியுமாற்ருன் உவமையும் பொருளும் கூருமையின் அதுவும்

தொல்காப்பியத்தில் பேராசிரியர் உரையிற் காணப்பெறும் திருக்குறள் பகுதிகள் இங்குத் 'திருக்குறளும் பேராசிரியரும்' என்ற தலைப்பின்கீழ்த் தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன.

வேறுபட வந்த உவமமாயிற்று. பிறவுமன்ன. இவை ஏனையுவமத் திற்கெல்லாம் பொதுவிலக்கணம்.

விளக்கம் :

நச்சினார்க்கினியரும் இதே கருத்தினராவார். சேனாவரையர் இக்குறளை இசை யெச்சத்திற்கு எடுத்துக்காட்டியதனை நச்சினார்க்கினியர் மறுக்கிறார். [பார்க்க] சேனாவரையர், நச்சினார்க்கினியர்: (1)

[பார்க்க : இளம்பூரணர் - சொல் : 410]

கடவுள் வாழ்த்து — 3

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

பொருள் – செய்யுள் – 323.

நூ : அசையுஞ்சீரும் இசையொடு சேர்த்தி வகுத்தனர்
உணர்த்தலும் ..

உரை :

இது சீர்க்கெல்லாம் புறனடை. அசைகளையும் சீர்களையும் ஓசை யொடு சேர்த்து வேறுபடுத்துணர்த்துதலும் அச்செய்யுளிலக்கணத் துறை போயினாரது நெறி என்றவாறு.

'மலர்மிசை' – இதனுள் வாழ்வாரென்னும் மொழியை வகுத்து வாரென நேரசைச் சீராக்கி வகுப்பவே அசையினை இசையொடு சேர்த்திற்றும்'

விளக்கம் :

நச்சினார்க்கினியரும் இந் நூற்பாவிற்கு இக்குறளையே எடுத்துக் காட்டி இதனை வகையுளியெனவும் விளக்கம் செய்கிறார். 'வார்' என்பதனைத் தனிச்சீராக்க இன்னோசையாகுமாற்றை இருவரும் வற்புறுத்துகின்றனர். யாப்பருங்கலக் காரிகையிலும் இது வகையுளிக் கெடுத்துக் காட்டாயிற்று. வகையுளி யென்பது பொருளை நோக்கிப் பிரிக்காமல் இசையொடு சேர்த்து ஓசை கெடாது அலகிடு முறை யென்பது ஒரு கருத்து. (2)

நீத்தார் பெருமை — 22

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

பொருள் - உவமம் — 286

நூ : அவைதாம் அன்ன ஏய்ப்ப....... அன்னபிறவும்
கூறுங்காலைப் பல் குறிப்பினவே.

உரை :

இஃது உவமத்தினையும் பொருளினையும் ஒப்பிக்குங்கால் இடைவருஞ் சொல் இனைத்தென்கின்றது.

இனி, பிறவும் என்றதனால் ஓதப்பட்டன வருமாறு.

'துறந்தார்' என்பதனுள் துணைப்ப வென்பதூஉம் அற்றென்பதூஉம் வந்தன.

'குன்றினனையாரும்' என்று அனைய வென்பது வந்தது.

குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின் [965]

விளக்கம் :

இளம்பூரணரும் இவ்விரு குறள்களையும் இதற்கெடுத்துக் காட்டுகிறார்.

பார்க்க : இளம்பூரணர். (3)

நீத்தார் பெருமை — 28

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

பொருள் - செய் – 490

நூ : நிறைமொழி மாந்தராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரமென்ப.

உரை :

இது மந்திரச் செய்யுளுணர்த்துதல் நுதலிற்று. இஃது ஒருவனை இன்னவாற்றாற் பெரும்பான்மையுஞ் சபித்தற் பொருட்டாகலின்

அப் பெயர்த்தாயிற்று. இக் கருத்தேபற்றிப் பிறரும் ' நிறை மொழி மாந்தர் பெருமை ' என்ருரென்க.

விளக்கம் :

நச்சிஞர்க்கினியர், சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லு மாற்றலுடையார் சொற்ருெடர் என இதற்கு விளக்கஞ் சொல்லுகிருர். பரிமேலழக-ரும் 'அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் மொழி' யெனவே கூறுகிருர்.

நிரம்பிய கல்வியையுடைய மாந்தரது பெருமை, நிறைந்த மொழியினையுடைய துறந்தார் பெருமையெனப் பொதுவாகவே மணக்குடவரும் பழையவுரைகாரரும் பொருள் கூறுவர். நச்சி-ஞர்க்கினியர் மணக்குடவர் போன்ருேர் கருத்தே வள்ளுவர் கருத் தாகலாம்.

தொல்காப்பியத்தைக் கற்றே இக்குறளை வள்ளுவர் யாத்திருக்கலாம். (4)

இனியவை கூறல் — 95

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

பொருள் - செய்யுள் — 426

நூ : *செவியுறைதானே பொங்குதலின்றிப் புரையோர் நாப்பண் அவிதல் கடனெனச் செவியுறுத்தன்றே.*

உரை :

இஃது செவியுறை யுணர்த்துகிறது. பெரியோர் நடுவண் அடங்கி வாழ்தல் கடப்பாடெனச் சொல்லி செவிக்க ணறிவுறுத்துவது. 'பணிவுடையன்' எனவரும்.

விளக்கம் :

இப்பணிவிற்கு அடக்கமுடைமை என ஓரதிகாரத்தையே வள்ளுவர் வகுத்தார். '' கல்லாமை '' யதிகாரத்தில் ' கல்லாதவரும்

நனிநல்லர் கற்ருர்முன் சொல்லாதிருக்கப் பெறின்' என்றதும் இக்கருத்தைப் பற்றியேயாகும்.

செவியுறை – செவிமருந்து என்கிருர் பேராசிரியர்.

நல்லவையுணர்த்தலும் அல்லவை கடிதலும் இடித்துவரை நிறுத்தலும் (பொருள் 154 – 155) பற்றித் தொல்காப்பியர் கூறுவனவெல்லாம் பெரிதும் இக் கருத்தினைக் குறிப்பவேயாகும். இக் குறளைப் பார்க்கையில் பொதுவாக யாரிடத்தும் பணிவுடைமை செவியுறை யென்பதாகலாம். (5)

பார்க்க : நச்சிஞர்க்கினியர் – குறள் : 51-52

செய்ந்நன்றியறிதல் — 109

கொன்றன்ன இன்ஞ செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

பொருள் - உவமம் — 276

நூ : வினைபயன் மெய்யுரு.........வகைபெறவந்த உவமத்தோற்றம்.

உரை :

தொழிலும் பயனும் வடிவும் வண்ணமும் என்னும்

நான்கெனப்படும் கூறுபடவரும் உவமத்தோற்றம் என்றவாறு. இவை உவமையும் பொருளும் ஆகிய வினைபற்றி வந்தனவாகலின் அதன் வகையெனப்பட்டன. அன்ன ஆங்க என்பன இடைச்சொல்லாகலின் வினைப்பின்னும் வந்தன.

கொன்றன்ன இன்ஞசெயினும் (109) என்பதுமது.

இணரெரி தோய்வன்ன இன்ஞ செயினும்
புணரின் வெகுளாமை நன்று [308]

விளக்கம் :

இளம்பூரணர் இதனை அன்ன....என்ற வினைப்பாலுவமவுருபிற்கு எடுத்துக்காட்டுகிருர்.

இணரெரி தோய்வன்ன ....

என்பது வினைப்பெயர் பற்றி உவமம் சென்றது.

நுட்பமாக உவமைகளைக் கையாளும் வள்ளுவர் உவமை யிலக்கணங்களுக்கெல்லாம் இடந்தருகிறார் தொல்காப்பியர் கூறும் சிறப்பாய இலக்கண விதிகளுக் கெல்லாம் மேற்கோள் தருகிறார். (6)

வெஃகாமை — 178

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

பொருள் - செய்யுள் — 535

நூ : நலிபுவண்ணம் ஆய்தம் பயிலும்.

விளக்கம் :

செய்யுள் (நலிபு) வண்ணத்தைப் பற்றிய இந் நூற்பாவிற்கு *நச்சினார்க்கினியரும் இக்குறளை மேற் கொள்ளுகிறார். (7)

ஒப்புரவறிதல் — 214

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

பொருள் - உவமம் — 283

நூ : உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்.

உரை :

உவமானமும் பொருளும் தம்முள் ஒத்தனவென்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும்.

ஈண்டு ஒத்தவென்பதனை "ஒத்ததறிவான்" (214) என்பது போலக் கொள்க.

விளக்கம் :

மக்களே போல்வர் கயவர் என்பது போன்று ஒப்பல் ஒப்புக்களை எள்ளி நகையாடும் வள்ளுவரிடமிருந்து பொருளொடு ஒத்த உவமைக்கு எடுத்துக்காட்டெடுத்தது மிக்க பொருத்தமாகும்.

இங்கு ஒத்த என்ற சொல்லாட்சிக்கே பேராசிரியர் குறளை மேற்கொள்ளுகிறார்.

உலகநடை, ஒப்பரவு எனப் பிறர் எழுதக் காளிங்கர் ஒருவரே நெஞ்சை எரிப்பது ஒத்ததாகிய ஒப்பரவு என எழுதுகிறார்.

அவரே ஒத்தது என்ற பேராசிரியர் கருத்துடன் ஒத்து உரை செய்பவராதற் கூடும். (8)

புலான் மறுத்தல் — 254

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல்.

பொருள் - செய்யுள் — 320

நூ : *ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம்.*

உரை :

எழுத்திலக்கணவகையானும் அசைக்குறுப்பா மாற்றானும் எல்லாம் குற்றியலிகரம் ஒற்றெழுத்தியற்றேயாம்.

அருளல்லது எனவும் இவை இயலசை சார்ந்து ஒற்றியற்றாகிக் குற்றிகரம் வந்தவாறு.

விளக்கம் :

குற்றியலிகரம் அலகுபெறாது ஒற்றியற்றாகும் என்னும் இந் நூற்பாவிற்கு, நச்சினார்க்கினியரும் இதனையும் 'குழலினிதியாழினிது' என்ற குறளையும் காட்டுகிறார். (9)

புலான் மறுத்தல் — 259

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று

பொருள் - செய்யுள் — 470

நூ : *நெடுவெண்பாட்டே முந்நாலடித்தே*
குறுவெண்பாட்டின் அளவெழு சீரே

உரை :

இது வெண்பாவின் அடியளவு கூறுகின்றது.

அவிசொரிந்து — இவை குறுவெண்பாட்டு.

சிறப்புடைப்பொருளை பிற்படக்கிளத்தல் என்பதனுன் அவ்விரண்டனுள்ளும் அதனைப் பிற்கூறியது அச்சிறப்பு நோக்கியன்றே வென்பது.

விளக்கம் :

'சிறப்பு நோக்கியன்றே' வென்ற பேராசிரியர் இக் குறிப்பின் மூலம் திருக்குறளுக்கு ஒரு பாயிரம் தந்து விடுகிருரென்னலாம்.

அவிசொரிந் தென்ற மேற்கோளால் அது வேள்வியனைய, புலாலுண்ணுமையனைய சிறப்பிற்றென்பதாம் (10)

வெகுளாமை — 308

இணரெரி தோய்வன்ன இன்ன செயினும்
புணரின், வெகுளாமை நன்று [பார்க்க : 109] (11)

இறைமாட்சி — 381

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

பொருள் - செய்யுள் — 440

நூ : *துகளொடும் பொருளொடும் புணர்ந்தன்றுயின்*
செவியுறைச் செய்யுள் ....

உரை :

அங்கதச் செய்யுட் பகுதியிரண்டனுள் ஒன்று கூறுகின்றது. துகளாவது படைகுடி கூழமைச்சு நட்பரணென்னும் இவற்றைப் பாது காவாதிருத்தல்.

விளக்கம் :

செம்பொருளும் பழிகரப்புமெனப் பட்ட இரண்டும் அங்கதச் செய்யுளெனப்படுதலே யன்றி அதனுனே அரசர்க்குப் பொருள்

வருவாயாகச் செய்தானே யெனினும் அது செவியுறையங்கத மெனவும் படும் என்பது பேராசிரியர் உரை.

இதற்கு விளக்கமாகவே மேற்குறளை எடுத்துக் காட்டினர். செவி யுறையையும் அங்கதத்தையும் புதிதாக இணைத்தற்கு இவ் வரிய குறளை மேற்கோள் காட்டுகிறார். (12)

பார்க்க : தெய்வச்சிலையார்.

கல்லாமை — 407

நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று.

பொருள் - மரபியல் — 665

நூ : ஒத்த காட்சி யுத்திவகை.

உரை :

சிறப்புப் பாயிரத்தானே நூலிலக்கணம் ஒருவகையான் உணர்த்தப் படும். பொதுப்பாயிரத்தானே ஆசிரியரும் மாணுக்கரும் நூலுணர்த்தலும், நூல்கேட்டலும் மாசறவறிந்து உரை நடாத்து-வராப. அதனுனே இவை நான்முகத்தினின்று நிலாவுமென்-பது.

விளக்கம் :

நுண்மா ணுழைபுலம், முப்பத்திருவகை யுத்தியும் அதி-காரம் மூன்றற்கும் புறனடையும் கூறும் கடைசி நூற்பாவில் இதனைக் காட்டுகிறார். (13)

இடனறிதல் — 500

காலாழ் களரி னரியடும் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு

பொருள் – செய்யுளியல் – 321

நூ : முற்றிய லுகரம் மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்ற லின்றே யீற்றடிமருங்கினும் ...

உரை :

முற்றியலுகரம் வருமொழியைச் சிதைத்தலைப் பிரித்து அவற்றினின்று வாங்கிக் கொடுக்கப்படா. அடியிறுதிக் கண்ணல்லது முற்றுகரப் புணர்ச்சி வகையான் இடை நில்லாதன வாயின, கண்டாயென்பது உணர்த்தியவாறு.

காலாழ் களரின் எனவும்

இடையும், இறுதியும், குற்றுகரம் நிரைபசையாயினவாறு.

விளக்கம் :

செய்யுளில் முற்றுகரம் பற்றியது இந்நூற்பா. (14)

பார்க்க : தெய்வச்சிலையார் : சொல் : 443

பார்க்க : நச்சினுர்க்கினியர் : சீவக : 1928

ஒற்றுடல் — 585

கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

பொருள் - செய்யுளியல் — 329

நூ : அளபெடை யசைநிலை யாகலு முரித்தே.

உரை :

அளபெடை, மேற்கூறிய இயற்சீர் நிலைமையேயன்றி ஓரசையாய் நிற்றலும் உரித்தென்றவாறு.

கடாஅ என்புழி அளபெடையதாகாரம் பிரித்துக் குறினெடிலாயினுற்போல ஆகாரத்துப் பின்னின்ற அகரமும் குற்றுகரமும் குறிலிணையெனப் பட்டமையின். (15)

பார்க்க : இளம்பூரணர்.

அமைச்சு — 632

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்ட தமைச்சு.

பொருள் - மெய்ப்பாடு — 273

நூ : *பிறப்பே குடிமை யாண்மை யாண்டோடு*
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே....

உரை :

பத்துவகைய தலைமகளொப்பினது பகுதி என்றவாறு. உருவு என்ற சொல்லைத் தனியாகக் கொண்டு பொருள் செய்தற்கே இக் குறளைக் காட்டுகிறார் பேராசிரியர். உருவு சிறப்புடைமையின் அதனை நாம் பகுத்தெண்ணிக் கொண்டாமென்பது. என்னை? 'வண்கண்' — என் புழிக் கற்றறிதலென்பதனை இரண்டாக்கி ஐந்தென்பவாகலின்.

விளக்கம் :

பரிமேலழகரும் கற்றறிதலென்பதனை இரண்டாகப் பிரிக்கு மாற்றைக் குறிப்பிடுகிறார். பேராசிரியர் காலத்திலேயே இக் கருத்திருந்துள்ளது. (16)

பார்க்க : இளம்பூரணர்.

வினைத்திட்பம் — 667

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து

பொருள் - உவமையியல் — 295

நூ : *உவமப் பொருளினுற்ற துணரும்*
தெளிமருங்குளவே திறத்திய லான.

உரை :

உவமை எனப்பட்ட பொருளான், உவமிக்கவரும் பொருட்குற்ற தெல்லாம் அறிந்து துணியும் பகுதியுமுள; அங்ஙனம் துணியப்படும் பொருட்டிறம் பலவாகி வரும் இலக்கண வகையான் என்றவாறு.

இனி வாளாதே உவமஞ் செய்து உற்றதுணர்த்தாத வழித் தெளியு-மாறு.

'உருவுகண் டெள்ளாமை வேண்டும்'

என்பதனுள் அவன் செய்கை வன்மை கூறுராயினும் அச்சாணி யென்று உவமப் பொருள்தானே அச்செய்கை வன்மை கூறிற்று.

விளக்கம் :

செய்யுளே உய்த்துணரும் தன்மையுடைய சுருக்கமுடை-யது அதனினும் குறள் மிக்க சுருக்கமுடையது. வள்ளுவர், உவமையினும் பொருளினும் என்றும் உய்த்துணருமாறு செய்-யுள் செய்துள்ளார் என்பது உலகறிந்தது. (17)

வினை செயல்வகை — 675

பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்

பொருள் - செய்யுள் — 547

நூ : *வனப்பியல்தானே வகுக்குங்காலைச்*
சின்மென் மொழியாற் றுய பனுவலோ
டம்மை தானே அடிநிமிர் பின்றே.

உரை :

செய்யுட்குரிய வனப்பு எட்டனுள் அம்மை பற்றியது இந் நூற்பா. சிலவாய மெல்லிய சொல்லோடும் இடையிட்டு வந்த பனுவ-லிலக்கணத்தோடும் அடிநிமிர்வில்லது அம்மையாம்.

பொருள் கருவிகாலம் என்பது
இலக்கணம் கூறியதாகலிற் பனுவலோடென்றான்.
'மலர்காணின் மையாத்தி நெஞ்சே' என் இஃது
இலக்கிய மாகலாற் றுய பனுவலெனப்பட்டது.

விளக்கம் :

திருக்குறளுக்கே இலக்கணஞ் சொல்லினார் தொல்காப்பியர் என்பதா, அன்றி தொல்காப்பியர் கூறிய இலக்கணத்திற்கு வள்ளுவர் இலக்கியஞ் செய்தாரா, தெரியவில்லை. (18)

பார்க்க : இளம்பூரணர், சேனாவரையர்
நச்சினார்க்கினியர்.

மானம் — 965

குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்

[பார்க்க : 22]

உழவு — 1033

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

பொருள் - மரபு — 635

நூ : *வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது*
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

உரை :
வேளாண் மாந்தர்க்குக் கூறப்படும் தொழில் கூறுகின்றது.

விளக்கம் :

உழுதுண்டு வாழ்வதென்பது (1033) இதன் பொருளாயிற்று. நான்காவது வருணத்தாரைத் தொல்காப்பியரும், வள்ளுவரும் அடிமைகள், சூத்திரர் என்னவில்லை. வேளாண்மாந்தர் உழுதுண்டு வாழ்வோர் எனவே கூறினர்.

உழுதுண்டு வாழாதவரையே வள்ளுவர் தொழுதுண்டு பின் செல்லும் அடிமைகள் என்றனர். அடியோர் வினைவலர் என்ற பிரிவுகளை நால் வருணத்தினும் வேறாகவே தொல்காப்பியர் வகுத்தார்.

ஒன்னார்க்கடிமை புகுத்திவிடும் என அடிமைகளைக் குறள் தனியே குறிக்கின்றது.

குடிசெயல் வகைக்கடுத்து இதனை வைத்த வள்ளுவர், பலர் வழங்குவதைப் போல உழவரைக் குடித்தனக்காரர் என வழங்குவார்போலும். (19)

பார்க்க : நச்சினார்க்கினியர்

கயமை — 1071

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்.

பொருள் - உவமம் — 307

நூ : *வேறுபட வந்த உவமத் தோற்றங்*
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்........

உரை :

இருவகையுவமும் கூறி இன்னும் ஏனையுவமப் பகுதியே கூறுவான் எய்தாத தெய்துவித்தது. வேறுபாடு தோன்ற வந்த உவமைச் சாதி கொள்ளுமிடனறிந்து கொளுத்துக என்ற வாறு.

மக்களே போல்வர் கயவர் .... என்பது

ஒவ்வாப் பொருளை ஒப்புமை கொண்டது.

அகர முதல........ என்றவழி அதுவும்

வேறுபட வந்த உவமமாயிற்று. (20)

பார்க்க : நச்சினார்க்கினியர் - குறள் – 1.

தகையணங்குறுத்தல் — 1081

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.

பொருள் - உவமம் — 278

நூ : உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை

உரை :

உவமை யெனப்பட்டது உயர்ந்த பொருளாகல் வேண்டும். எனவே உவமிக்கப்படும் பொருள் இழிந்து வரல் வேண்டுமென்பது.

உள்ளுங்காலை என்றதனுன் முன்னைத்தினுணருங் கிளவியான் உவமம் கோடலும்....

அணங்குகொல் என்பது

ஐயுற்று முன்னத்தான் உவமம் செய்தது.

விளக்கம் :

நச்சினார்க்கினியர் தலைவிக்கு நிகழும் ஐயம் பற்றிய விடத்து இக் குறளைக் கொள்கிறார். (21)

குறிப்பறிதல் — 1094

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

பொருள் - மெய்ப்பாடு — 261

நூ : புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்....

உரை :

[அகத்திணையுள், களவிற்குச் சிறந்து வரும் மெய்ப்பாடு கூறுவான் தொடங்கியது]

அவன் தான் காண்பினல்லது தற்காண்டலை நயவான், அது தலைமை யன்றாகலினென்பது. அது, 'யானோக்குங்காலை' என வரும்.

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு [1274]

விளக்கம் :

களவியலையும் அகத்திணையையும் தொல்காப்பியத்தை நினைவு கொண்டே குறள் இயற்றியிருக்க வேண்டும் என்பது புகு முகம் புரிதலென்ற முதல் மெய்ப்பாட்டிற்கே குறளில் மேற்கோ ளிருப்பது கொண்டு தெளியலாம். (22)

நலம் புனைந்துரைத்தல் — 1118

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி

பொருள் - உவமம் — 308

நூ : ஒரிஇக் கூறலு மரீஇய பண்பே.

உரை :

ஒக்குமெனக் கூருது ஒவ்வாதெனக் கூறுதலும் அதுவும் உவமை யாதற்கடிப்பட வந்த வழக்கு என்றவாறு.

விளக்கம் :

உவமையைத் திறம்படக் கையாளும் வள்ளுவர் இஃதிதற் குவமை யாகாதெனக் கூறியும் பொருளை விளக்குவார். அஃது இலக்கணத்தோடு யாத்த வழக்கே யாகும். (23)

பார்க்க : இளம்பூரணர் - பொருள் : 108

தனிப்படர் மிகுதி — 1200

உருஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செருஅய் வாழிய நெஞ்சு.

பொருள் - செய்யுள் — 466

நூ : தரவும் போக்கும் யாப்பிடை மிடைந்து
வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்.

உரை :

இது மேல் ' வெளிப்படும் பொருட்டு ' எனப்பட்ட வெண்கலி விரவுறுப்புடைமையின் அதனை வேறு கூறுகின்றது.

உருஅர்க்கு.... என்பதனை வெண்பா என்பாமாயிற்றென்பது.

விளக்கம் :

இக்குறளை நீட்டம் வேண்டின் என்ற எழுத்ததிகார இலக்கணத்திற்கெடுத்துக் காட்டுகிறார் நச்சினார்க்கினியர். (24)

குறிப்பறிவுறுத்தல் — 1274

முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு [பார்க்க : 1094] (25)

புலவி நுணுக்கம் — 1318

தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

பொருள் - உவமம் — 312

நூ : நிரனிறுத் தமைத்த நிரனிறை சுண்ணம்

உரை :

அவையும் அலங்காரமெனப்படு மென்பது.

' தும்முச்செறுப்ப ' — என்பது புலவியுளழுத மங்கலம்.

விளக்கம் :

இனிச் செய்யுட்கு அணி செய்யும் பொருட் படைப்பு எல்லார்க்குங் கூருது சிலவே கூறி மொழியின் அது குன்றக் கூறலாமென்பது என உவமவியல் கடைசியில் ஒரு புறனடைக் கருத்துப்போல் மகவுநிலே, புலவிபுள் அழுத மங்கல முதலாய வற்றைக் கூறுகிருர் பேராசிரியர். (26)

பார்க்க : இளம்பூரணர் – பொருள் : 144

திருக்குறளும்
அடியார்க்கு நல்லாரும்

வான்சிறப்பு — 17

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்

சிலம்பு - ஆய்ச்சியர் — 31

பாடல் : முந்நீரினுள் புக்கு........

உரை :

முதிய நீரெனின் நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் (17) என்பத-
னுல் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது.

விளக்கம் :

முத்தொழிலேச் செய்யும் நீர் எனப் பொருள் செய்து, முதிய நீர் என்பதனை மறுக்கையில் (மழைநீர் முந்நீருள் ஒன்-ருகக் கொள்ளுதலால்) அடியார்க்கு நல்லார் இக்குறளைப் பெருந்துணையாகக் கொள்கிருர். (1)

அறன் வலியுறுத்தல் — 35

அழுக்காறு அவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

சிலம்பு - நாடுகாண் — 16

பாடல் : அவல நீத்தறிந்து....

தொல்காப்பியத்தில் அடியார்க்கு நல்லார் உரையிற் காணப்பெறும் திருக்குறள் பகுதிகள் இங்குத் 'திருக்குறளும் அடியார்க்கு நல்லாரும்' என்ற தலைப்பின்கீழ்த் தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன.

விளக்கம் :

அழுக்காறவா முதலியவற்றைக் கைவிட்டு ....அழுக்காறவா என்பது ஒரு தொடராகப் பயன்படுத்தும் கருத்தாகலாம். டாக்டர் சாமிநாதய்யர் அவர்களே இவ்விடத்தில் இக்குறளை எடுத்துக் காட்டுகிறார். அவலம் என்பது அழுக்காறவா முதலியனவே என்பதோர் கோட்பாடிருந்துள்ளது. (2)

இல்வாழ்க்கை — 42

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

சிலம்பு – ஊர்காண் – 11

பாடல் : அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்

உரை :

அதன் துறையாவன : தன்னை யொழிந்த மூவர்க்கும்

விளக்கம் :

துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்........ அறத்தைப்பற்றிய அன்றைய வழக்கு வள்ளுவர் குறளில் இடம் பெற்றுள்ளது. (3)

அன்புடைமை — 77

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

சிலம்பு - பதிகம் — 55

பாடல் : அரைசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றுவதும்.

உரை :

அறம் கொல்லுமென்பது ‘என்பிலதனை வெயில் போலக் காயுமே அன்பிலதனை யறம்’ என்பதனுணர்க.

விளக்கம் :

அறமே மனிதனின் முதுகு எலும்பு என்பது இதனாற் புலப் படும், (4)

அழுக்காறாமை — 169

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

சிலம்பு - வேனில் — 55

பாடல் : திங்கட் செல்வனும் செவ்விய னல்லன்.

உரை :

செம்மை - நடுவு நிலைமை, செவ்வியான் கேடும் (169) எனவும் கூறினமையின்.

விளக்கம் :

உரையாசிரியர் பலரும் சொல்லாட்சிக்கு வள்ளுவரை மேற்கோளாகக் கொள்ளுகின்றனர். (5)

வெஃகாமை — 171

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

சிலம்பு - மனையறம் — 8

பாடல் : குலத்திற் குன்றுக் கொழுங்குடிச் செல்வர்.

உரை :

குலத்திற் குன்றுதல் - நடுவின்றி ஒண்பொருள் வெ∴கலுமாம். குலத்திற் குன்றுதலைக் 'குடிபொன்றி குற்றமு மாங்கே தரும்' என்கிறார்.

விளக்கம் :

குறள்மூலத்தைக் கொண்டே மிக அழகிய விளக்கத்தைத் தருகிறார் நல்லார். (6)

ஈகை — 228

ஈத்துவக்கு மின்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

சிலம்பு – மனையறம் — 45

பாடல் : கருப்புவில் இருகரும் புருவமாக வீக்க.

உரை :

ஈக்க — ஈத்துவக்கு (228) மென்றாற் போல நின்றது.

'ஈ' என்பதைக் கொண்ட வினைச் சொல்லாக்கத்திற்கு இது எடுத்துக் காட்டாய் வந்தது.

விளக்கம் :

வீக்க எனவும் கொள்ளக்கூடியதனை எதிர்பாராதவிதமாக "ஈக்க" என எடுத்துக்கொண்டு குறளை மேற்கோள் காட்டி விளக்குகிறார் நல்லார். (7)

புகழ் — 233

ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

சிலம்பு – காடு காண் — 114

பாடல் : செம்மையினிற்பதும் செய்யுமின்

உரை :

செம்மையினிற்பது : இம்மை மறுமைகட் கின்பத்தைத் தந்து பூமியுள்ளளவும் நிற்பது. புகழெனலுமாம்.

விளக்கம் :

பூமியுள்ளளவும் என்ற அடியார்க்கு நல்லார் கருத்தினைக் குறள் 'ஒன்றிய' என்பதனால் நன்கு தெளிவிக்கின்றது. (8)

அருளுடைமை — 247

பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை அருளில்லார்க்கு
அவ்வுலகம் இல்லாகி யாங்கு

சிலம்பு-அடைக்கலக்காதை — 100

பாடல் : பிணிப் பறுத்தோர்தம் பெற்றியெய்தவும்

உரை :

பிணிப்பு — பற்று. ஆவது அன்பாகிய ஒரு தளை. அதனையறுத்-தோர் அருளுடையோர்; அவர் பெற்றியாவது சுவர்க்கமெனக் கொள்க.

விளக்கம் :

பரிமேலழகர் அவ்வுலகம் என்பதனை வீட்டுலகென்கிறார்; அடியார்க்கு நல்லார் சுவர்க்க மென்கின்றார். காலிங்கர் பரிமே-லழகரையும், பரிதியும், மணக்குடவரும், அடியார்க்கு நல்லாரையும் ஒத்தெழுதுகின்றனர். இங்குச் சுவர்க்கம் வீடுபேறு ஆகிய இரண்டும் ஒன்று என்பதோர் குழப்பம் ஏற்பட்டுள்ளது. (9)

புலான் மறுத்தல் — 260

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிரும் தொழும்

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற [300]

சிலம்பு - காடுகாண் — 158

பாடல் : வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓம்புநர்க்கு.

உரை :

யாமெய்யாக் கண்டவற்றுள் (300) கொல்லான் புலாலை (260) எனவும் உட்கொண்டவாறெனக் கொள்க. இரண்டையும் வள்ளுவர் துறவறவியலிலேயே வைத்துள்ளார். (10)

வாய்மை — 300

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற [பார்க்க : 260] (11)

கல்வி — 391

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக,

சிலம்பு - கனாத்திறம் —

பாடல் : கேள்வித் துறைபோ யவர் முடிந்த பின்னர்

உரை :

துறைபோதல் — அதற்குத் தக நிற்றல் (391)

விளக்கம் :

குறளை நினைவுகொண்டே அடியார்க்கு நல்லார் உரையெழுதுகிறார் என்பது இதனாற் புலனாகும். (12)

கண்ணோட்டம் — 576

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்தகண் ணோடா தவர்.

சிலம்பு - இந்திர — 30

பாடல் : மண்ணீட்டாளரும்.

உரை :

மண் — சுதை.

விளக்கம் :

இங்கு மணக்குடவர் உரையுடன் அடியார்க்கு நல்லார் உரை ஒன்றுபடுகின்றது. சுதைமண்பாவை என்ற இவர்களுரையைப் பரிமேலழகர் மறுக்கிறார். அடியார்க்கு நல்லார் காலத்தால் முந்தியவர். எனவே அவருரை-மரபு பழமையான தாகலாம். (13)

மன்னரைச் சேர்ந்தொழுகல் — 693

போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கு மரிது.

சிலம்பு - கனாத்திறம் — 45

பாடல் : கடுக்குமென் நெஞ்சம் கனவினாலென்கை.

உரை :

கடுக்கும் — ஐயுறும். கடுத்தபின் தேற்றுதல் யார்க்குமரிது என்றாற்போல.

விளக்கம் :

தொல்காப்பியரையும் வள்ளுவரையும் அடியொற்றி இங்கு நல்லார் உரை செய்கிறார். (14)

உழவு — 1033

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

சிலம்பு - இந்திரவிழா — 43

பாடல் : வீழ்குடி யுழவரொடு.

உரை :

யாவரும் விரும்பும்குடி யென்றுமாம். உழுதுண்டு வாழ்வாரே என்பதனாற் கொள்க.

விளக்கம் :

தாம் வீழ்வார் மென்றோள் என்ற குறளில் 'வீழ்' என்பதற் குரிய பொருளை இங்கு நல்லார் எடுத்துக்கொள்கிறார். அன்றி மற்றவரெல்லாம் இவரைத் (உழவரை) தொழுதுண்டு பின் செல்பவர் எனப் பொருள்கொண்டு யாவரும் விரும்பும் குடி என எழுதுகிறாரோ என ஆராயவேண்டும். அவ்வாறாயின் நல்லார் உரை இங்குப் புதியதாகும். (15)

புணர்ச்சி மகிழ்தல் — 1101

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.
என நலம் பாராட்டப்பட்டன.

சிலம்பு - மனையறம் —

பாடல் : காசறுவிரையே கரும்பே தேனே.

விளக்கம் :

வள்ளுவர் காட்சி யின்ப முதலாகக் 'கண்டு' எனத் தொடங்குகிறார். நல்லாரும் மாசறு பொன்னே எனத் தொடக்கத்தில் காட்சியின்பத்தை விளக்கஞ் செய்கிறார். (16)

திருக்குறளும் தெய்வச்சிலையாரும்

வான்சிறப்பு — 11

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று

சொல் - வேற்றுமை மயங்கியல் — 102

*நூ : யாதனுருபிற் கூறிற்றாயினும் பொருள்செல் மருங்கின்
வேற்றுமை சாரும்.*

உரை :

யாதொன்றன் உருபிற் கூறினும் பொருள் செல்லும் வழி வேற்றுமையும் செல்லும்.

இவை வேற்றுமையுருபான் வந்தில வாயினும் பொருண் முகத்தான் வேற்றுமையாதலின் இவை இவ்வாறு வரப்பெறும் என்று வழுவமைத்த வாறும்.

விளக்கம் :

புலமை யுரிமையால் (Poetic Licence) இவ்வாறெல்லாம் வள்ளுவர் செய்யுள யாப்பர் போலும். (1)

அறன் வலியுறுத்தல் — 33

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல் [பார்க்க : 1002] (2)

தொல்காப்பியத்தில் தெய்வச்சிலையார் உரையிற் காணப்பெறும் திருக்குறள் பகுதிகள் இந்தத் 'திருக்குறளும் தெய்வச்சிலையாரும்' என்ற தலைப்பின்கீழ்த் தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன

விருந்தோம்பல் — 84

அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

சொல் – உரியியல் — 375

நூ : *அமர்தல் மேவல்*

உரை :

அமர்தல் என்பது மேவல் என்பதன் பொருள்படும். (3)

பார்க்க : நச்சினார்க்கினியர்.

அழுக்காறாமை — 165

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

சொல் – எச்சவியல் — 424

நூ : *வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்.... முடிபாகும்மே.*

உரை :

'வினையெச்சமாகவுடைய சொல்லிற்கு வினையும் வினைக் குறிப்பும் நினையத் தோன்றிய முடிபாகும்'

நினையத் தோன்றும் என்றதனால் ஆராயத்தோன்றுமென்று கொள்க. எனவே வினையியலுள் கூறிய வினையெச்சம் ஆராய்தல் வேண்டாமையின் அஃதன்றென்று கொள்ளப்படும்.

பகைவர் கெடுதல் தப்பியும் .... வேண்டுதலின் வரும் என்பது எஞ்சி நின்றது. ஒருவன் தான் தேடின பொருள் வைத்ததற் கிடம் பெற்றான் ஆம் என உரைக்க வேண்டுதலிற் ஆம் என்னும் வினைக் குறிப்பு எஞ்சி நின்றது.

அற்றா ரழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. [226]

விளக்கம் :

உரையாசிரியர்கள் காணும் நுட்பமான உரைகளுக்கெல்லாம் குறள் மேற்கோள் தரும் ஆற்றலுடையதாகின்றது. (4)

புறங்கூறுமை — 189

அறனேக்கி யாற்றுங்கொல் வையம் புறனேக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

சொல் – வேற்றுமை மயங்கியல் — 89

நூ : *இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம்அவ்*
இரண்டன் மருங்கினேதுவு மாகும்.

உரை :

இரண்டாம் வேற்றுமைக்கண் ஓதப்பட்ட பொருண்மையின் நோக்குதலல்லாத நோக்கம் மூன்ருவதிலும் ஐந்தாவதிலும் ஓதப்பட்ட ஏதுவினும் ஆம்.

விளக்கம் :

சுருங்கிய செய்யுளில் விரிந்த பொருள்களை வைத்தது குறளென்ருல் பல வேற்றுமைப் பொருள்களை யெல்லாம் ஒரு வேற்றுமையுளடக்கிக் கொள்ளலும் பொருந்துவதே யாகும். (5)

பயனில சொல்லாமை — 196

பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். [பார்க்க : 653] (6)

ஈகை — 226

அற்ரு ரழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி [பார்க்க : 165] (7)

புலான் மறுத்தல் — 257

உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

சொல் - கிளவியாக்கம் — 45

நூ ; "எண்ணுங்காலை யதுவதன் மரபே"

உரை :

வேறுவேறு வினையுடைய பொருளைப் பொதுப் பெயரால் கூறுதலன்றி எண்ணுமிடத்திலும் அதன் மரபு பொதுவினையாற் கிளத்தல்.

கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு [930]

விளக்கம் :

பல்வேறு கோட்பாடுகளுக்கும் பொதுவானவற்றையே எடுத்துப் பேசும் வள்ளுவர்க்கு இப் பொது வினைகளும் உடன் பாடேயாம். (8)

வெகுளாமை — 307

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

சொல் - இடையியல் — 255

நூ : என்றென் கிளவியும் அதனோரற்றே.

உரை :

என்று என்னுமிடைச் சொல்லும் மேற்சொல்லப்படும் அறுவகைப் பொருண்மையும் குறித்து நிற்கும்.

'சினத்தை' என்பது பெயர் குறித்து நின்றது. மற்றவை வினை, குறிப்பு, இசை, பண்பு, எண் என்பன. (9)

வெகுளாமை — 309

உள்ளிய வெல்லா முடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின் [பார்க்க : 1091] (10)

நிலையாமை — 334

நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின் [பார்க்க : 487] (11)

அவாவறுத்தல் — 366

அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

சொல் - இடையியல் — 292

நூ : *கிளந்தவல்ல அன்ன பிறவும்*
கிளந்தவற்றியலான் உணர்ந்தனர் கொளலே.

உரை :

அஞ்சுவதோரும் .... என்றவழி ஓரும் என்பது அசை நிலையாயிற்று. எடுத்தோதப்பட்ட இடைச் சொல்லன்றி அத்தன்மைய பிறவும் இசைநிறை யசைநிலையாகிவரும் .... பொருள்படுமாறும் அறிந்து கொள்க.

விளக்கம் :

நேரான இலக்கண விதிகளுக்கு மட்டுமன்றிக் குறள் புறனடை விதிகளுக்கும் மேற்கோள் காட்டுகின்றது. (12)

இறைமாட்சி — 381

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

சொல் - இடையியல் — 285

நூ : *அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்*
யாவயின் வரினும் தொகையின் றியலா.

உரை :

எனு, என்று என்பனவற்றுள் வரும் எண்ணி றுதியும் பெயர்க்குறி- மரபிலெண்ணப்படும் செவ்வெண் இறுதியும் ஏகாரத்தான் எண்ணப்பட்ட எண்ணின் முடியும் யாதானும் ஒரு நெறியான் வரினும் தொகையின்றி வழங்கா.

படை குடி கூழமைச்சு நட்பரண் எனவும் எண்தொகைபெற்றவாறு கண்டுகொள்க.

விளக்கம் :

வள்ளுவர் எண்ணி (நினைத்து)த் தொகை கொடுத்து நூல் யாத்தவர் என்பதிதனுல் தெரியும் போலும் ! (13)

கல்லாமை — 406

உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

சொல் - உரியியல் — 303

நூ : பயப்பே பயனும்.

உரை :

பயப்பு என்னும் சொல் பயன் என்னும் பொருள்படும்.

விளக்கம் :

நச்சினார்க்கினியர் இவ்விடத் திக் குறளை மேற்கோள் காட்டியுள்ளார். எதிர்மறை முகத்தானும் பொருளை விளக்கும் நல்ல குறள். (14)

கேள்வி — 419

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

சொல் - உரியியல் — 369

நூ : நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை.

உரை :

நொசிவு என்பதும் நுழைவு என்பதும் நுணங்கு என்பதும் நுண்மை என்பதன் பொருள் படும்.

விளக்கம் :

நுண்மையைப் பற்றிய இந் நூற்பாவிற்கு நுண்மையாகிய கேள்விபற்றிய குறள் யாத்துள்ளார் ஆசிரியர். (15)

அறிவுடைமை — 429

எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

சொல் - உரியியல் - 313

நூ : *அதிர்வும் விதிர்வும் நடுக்கஞ் செய்யும்.*

உரை :

அதிர்வு என்பதூஉம் விதிர்வு என்பதூஉம் நடுக்கம் என்பதன் பொருள் உணர்த்தும்.

விளக்கம் :

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இவ்விதிக்கு இதே குறளை மேற்கொண்டெழுதி யுள்ளனர். (16)

காலமறிதல் — 487

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்

சொல் - இடையியல்— 254

நூ : *வினையே குறிப்பே இசையே பண்பே எண்ணே பெயரொடு ... . எனவென் கிளவி.*

உரை :

வினை முதலாகப் பெயரீருகச் சொல்லப்பட்ட ஆறு சொல்லினைக் குறித்த நிலைமைத்து என என்னுஞ் சொல்.

காலம் பார்த்து — குறிப்புணர நின்றது.

'நாளென' — என்ற வழிப்பெயர் குறித்தது.

நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின். (17)

இடனறிதல் — 495

நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற.

சொல் - எச்சவியல் — 433

நூ: *சொல்லெனெச்சம்.*

உரை :

சொல் என்னும் எச்சம் அச்சொல்லாவதற்கு முன்னும் பின்னும் மற்றொரு சொல் எஞ்சி நிற்றலிலது.

காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு. [500]

விளக்கம் :

பிறிது மொழிதல் முதலிய அணிக் குறிப்புக்களை இச் சொல்லெச்சத்தில் தெய்வச்சிலையார் அடக்குகிறுர். இக் கருத்தைப் பரிமேலழகர் முதலியோர் குறிப்பெச்சம் என்ற வகையுள் அடக்குவர். (18)

இடனறிதல் — 500

காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு [பார்க்க : 495] (19)

வெருவந்த செய்யாமை — 570

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

சொல் - எச்சவியல் – 412

நூ : *பண்புதொக வருஉம் கிளவியானும்*
........அன்மொழித் தொகையே.

உரை :

கடுங்கோல் என்பது .... பண்பு பற்றிவந்தது
— அன்மொழித் தொகை.

பண்பு தொக வரும் பெயர்க்கண்ணும் உம்மை தொக்க பெயர்க் கண்ணும் வேற்றுமை தொக்க பெயர்க்கண்ணும் இறுதி .... அன்மொழித் தொகை. (20)

மடியின்மை — 608

> மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஹென்னுர்க்
> கடிமை புகுத்தி விடும்.

சொல் – கிளவியாக்கம் — 54

நூ : *குடிமை யாண்மை இளமை மூப்பே........*
அஃறிணை மருங்கின் கிளந்தாங் கியலும்.

உரை :

இது திணைவழுவமைதி யுணர்த்துதல் நுதலிற்று. குடிமை முதலாக எண்ணப்பட்டனவும் எல்லாம் — உயர்திணை மருங்கின் நின்றன வாயினும் அஃறிணையிடத்துச் சொல்லாற் வழங்கப்படும்.

மடிமை குடிமை என்றவழிக் குடி எனப் பொருளாக்கியவாறு கண்டு கொள்க. (21)

வினைத்தூய்மை — 653

> ஒஓதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
> யாஅது மென்னு மவர்.

சொல் – வினை — 219

நூ : *முன்னிலை தன்மை யாவீரிடத்தொடு*
மன்னுதாகும் வியங்கோட் கிளவி.

உரை :

வியங்கோட் சொல் முன்னிலையும் தன்மையுமாகிய இடத்து நிலை பெறு.

'ஒஓதல் வேண்டும்'

> பயனில் சொல் பாராட்டுவானை மகனெனல்
> மக்கட் பதடி யெனல். [196]

'மகனெனல் மக்கட் பதடி யெனல்'

என்றமையான் உடன்பாட்டினும் மறையினும் அல்லீருகி வருதலுங் கொள்க.

பார்க்க : நச்சினுர்க்கினியர் — (குறள் – 196) (22)

வினைத்தூய்மை — 658

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும்.

சொல் - உரி — 378

நூ : கடியென் கிளவி..........

உரை :

கடியென்னும் சொல் வரைவு முதலாக ஓதப்பட்ட பத்துச் சொல்லி-
னும் தெளியத் தோன்றும் பொருளையுடைத்து.

பார்க்க ; சேனாவரையர்; நச்சினார்க்கினியர். (23)

வினைத்தூய்மை — 655

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

பாடம் – ஏற்று என்று.

சொல் - உரி — 332

நூ : ஏற்றம் நினைவும் துணிவு மாகும்.

உரை :

ஏற்ற மென்னும் சொல் நினைவு என்பவற்றின் பொருள்படும்.

விளக்கம் :

யாருங் கொள்ளாத பாடத்தை இங்குத் தெய்வச்சிலையார் கொள்ளுகிறார். (24)

வினை செயல்வகை — 675

பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்து
மிருள்தீர வெண்ணிச் செயல்.

சொல் - கிளவி — 289

நூ : என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி.......,

உரை :

என்றும் எனவும் ஒடுவும் எண்ணினுட் பிரிந்து ஒருவழித் தோன்றி எல்லாப் பெயரோடும் ஒன்றும் நெறியுடைய.

'பொருள் கருவி ....'

இவை ஒரோவழிப்பிரிந்து நின்று எல்லாப் பெயரோடும் ஒன்றி முடிந்தவாறு கண்டுகொள்க. (25)

குறிப்பறிதல் — 701

கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக் கணி.

சொல் - வினை — 225

நூ : *ஏனையெச்சம் வினைமுதலானும் — வினை நிலையானும் முடியுமென்று.*

உரை :

வினை யெச்சங்களுள் முந்துற்ற மூன்றுமல்லாதன வினைமுதல் வினை யானும் அவ்விடத்தில் பொருந்தும் பிறவினையானும் தாம் நடக்கும்.

மருங்கினுன் முடியும். செய்து, செய்யூ, செய்பு என்பன முதல் மூன்று. செய்யிய, செய்யியர், செய்தென, செயின், செய, செயற்கு என்பன மற்றையவை.

அற்று லளவறிந் துண்க
கூறாமை நோக்கி – இவை அன்ன மரபிற் கொள்ளப்படுவன

அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு. [943] (26)

பேதைமை — 833

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

சொல் - இடை — 288

நூ : *வினையொடு நிலையினும் எண்ணு நிலை திரியா.......*

உரை :

மேற் சொல்லப்பட்ட எண்ணின் வேறுபாடெல்லாம் வினையோடு நிற்பினும் எண்ணு நிலை திரியா.......ஆண்டு அவற்றவற்றியல்பு ஆராய்தல் வேண்டும்; எனவே ஒரு முடிவுடையவல்ல, தொகை பெற்றும் பெறுதும் வரும் என்றவாறும்.

நாணுமை.... இது தன் தொகை பெறுது வந்தது.

விளக்கம் :

தொகை பெறுமல் வருதலும் (குறள் என்பதற்கேற்ப) ஒரு சுருக்கம் போலும். (27)

கள்ளுண்ணுமை — 930

கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு [பார்க்க: 257] (28)

மருந்து — 943

அற்ரு லளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்ருன் னெடிதுய்க்கு மாறு. [பார்க்க : 701] (29)

நன்றியில் செல்வர் — 1002

பொருளானு மெல்லாமென் றீயா திவறு
மருளானு மாணுப் பிறப்பு.

சொல் - உரி — 39

நூ : *அன்ன பிறவுங் கிளந்த வல்ல.........கிளந்தவற்றியலான் பாங்குற வுணர்தல்.*

உரை :

உரிச் சொல்லெல்லாம் அவை செய்யுளகத்து வழங்கிய நெறியைக் கடைப்பிடித்து அதிகாரப் புறநடையாகச் சொன்ன .... என்னும் - விதியிங்கு குறிப்பானும் பண்பானும் பொருள்படுமாறறிந்து கொள்க.

இது உரிச் சொற்கெல்லாம் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும் வாயெல்லாம் செயல். [33]

ஊரவர் கௌவை யெருவாக அன்னைசொன்
னீராக நீளுமிந் நோய். [1147]

ஒல்லும் வகையானென்றவழி ஒல்லென்பது செயற்படும் என்பது குறித்து நின்றது. பொருளானுமென்ற வழி இது வென்பது இலாபம் குறித்தது. ஊரவர் கௌவை என்ற வழிக் கௌவை யென்பது அலர் குறித்து நின்றது.

விளக்கம் :

இவ்விடங்களில் வள்ளுவர் சில சொற்களுக்கு நுட்பமான பொருள்களைக் கொண்டு நூலெழுதி யுள்ளார். (30)

நல்குரவு — 1045

நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

சொல் - இடை — 267

நூ : *ஏயுங் குரையும் இசைநிறை அசைநிலை.*

உரை :

ஏ என்னும் சொல்லும் குரையென்னும் சொல்லும் இசை நிறைத்தலாகியும் அசை நிலையாகியும் வரும் அவ்விரண்டு நிலையையும் உடைய.

விளக்கம் :

'குரை' போன்ற அரிய இடைச்சொல் வழக்குகளையும் குறளாசிரியர் ஆண்டுள்ளார். (31)

குறிப்பறிதல் — 1091

இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

சொல் - கிளவி —'59

நூ : கண்ணும் தோளும் முலேயும் பிறவும்....பன்மை
கூறும் கடப்பா டிலவே

உ.ரை :

கண்ணும் ....ஆகிய பன்மை சுட்டிய சினை யுணரவருஞ் சொல் .... பன்மை யுணர்த்தும் மரபில.

உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின். [309]

இரு நோக்கு; உள்ளிய தெல்லாம் என்றவழி ஒருமை குறித்து வந்தது. (32)

அலரறிவுறுத்தல் — 1147

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய். [பார்க்க : 1002] (33)

புலவி நுணுக்கம் — 1313

கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று.

சொல் - வேற்றுமை மயங்கியல் — 107

நூ : ஏனை யுருபும் அன்ன மரபின....

உரை :

நான்காவதொழிந்த உருபுகளும் ஏனைப் பொருளோடு மயங்கும் மரபினையுடைய.

கோட்டுப்பூ — இதனுள் ஒருத்திக்கு எனற்பாலது ஒருத்தியை யென இரண்டாவதனோடும் மயங்கி வந்தது. (34)

குறிப்பறிவுறுத்தல் — 1279

தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது.

சொல் - எச்ச — 448

நூ : *முன்னத்தி னுணருங் கிளவியு முளவே*

உரை :

சொல்லினது தொடர்ச்சிக்கண் மனக்குறிப்பினுல் பொருளுணரப் படும் சொல்லும் உள.

விளக்கம் :

குறள் என்பதற் கேற்பக் குறிப்பிறுற் சொல்லுதல் என்பது ஒரு சுருக்கமாயிற்று. (35)

புலவி நுணுக்கம்— 1315

இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனுக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

சொல் - எச்ச — 427

நூ : *எதிர்மறை யெச்சம் எதிர்மறை முடிவின.*

உரை :

எதிர் மறைப் பொருண்மையை எச்சமாகவுடையது, அவ் வெதிர் மறைப்பொருள் முடிவு பெறும்.

இம்மைப் பிறப்பில் என்பதனுள் மறு பிறப்பில் பிரிவேம் என நினைத்துக் கண்ணிறை நீர் கொண்டனள் எனப் பொருளாக்க வேண்டுதலின் எதிர்மறை எஞ்சிநின்ற தன் எதிர்மறைப் பொருளோடு முடிந்தவாறு கண்டு கொள்க — என்பது.

தெய்வச்சிலையார் உரை.

விளக்கம் :

இவ்வுரை நுட்பமாகவும் வள்ளுவர் கருத்தொட்டியும் எழுந்துள்ளது. யானே கொள்வேன் என்பது யானே கொள்ளேன் என முடியும் என்பது போலச் சேனுவரையர் காட்டுகிறுர். (36)

திருக்குறளும் நக்கீரரும்

தவம் — 265

> வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
> மீண்டு முயலப் படும்.

களவியல் 1 — பாயிரம்

நூ : *அன்பி னைந்திணைக் களவெனப் படுவது*

உரை :

தான் ஒழுகா நின்றதோர் இணை விழைச்சினுள்ளே மிக்கதோர் ஒழுக்கங்காட்டினன். காட்டவே கண்டு இதுபெறுமாறு என்னை கொல்லோ என்னும்; எனவே மக்கட் பாட்டினாலும், வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவதன்று,

தவஞ் செய்தாற் பெறலாம். என்னை? வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ மீண்டு முயலப்படும் என்பதாகலான் என்பது.

விளக்கம் :

இல்லற இன்பத்திற்கும் தவம் காரணம் என்பது பற்றி நக்கீரர் ஒரு கருத்துச் சொல்லுகிறார்.

இலர் பலராதற்கும் (உளர் பலராதற்கும்) நோற்றலைக் காரணமாக்கும் வள்ளுவர் இல்லற இன்பத்திற்கும் தவத்தினைக் காரணமாக்குதலில் வியப்பில்லை.

தொல்காப்பியத்தில் நக்கீரர் உரையிற் காணப்பெறும் திருக்குறள் பகுதிகள் இங்குத் 'திருக்குறளும் நக்கீரரும்' என்ற தலைப்பின்கீழ்த் தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன.

நக்கீரர் கருத்திற்கேற்ப மணக்குடவர் 'போக நுகர்ச்சியும் இதனுல் வரும் என்றது' என நுட்பமாக எழுதுகிருர்.

பரிமேலழகர் காளிங்கர் போன்ருேர் மேற்கதி வீடுபேறு சித்திகள் ஆகியவற்றிற்கே தவம் துணையாகும் என்கையில் நக்கீரரும் மணக்குடவரும் போக நுகர்ச்சிக்கும் அது துணையாம் என்றனர். (1)

வாய்மை — 292

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

களவியல் — 29

நூ : *காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்........*

உரை :

நிகழ்ந்த வொழுக்கம் மறைத்துக் களைந்து படைத்து மொழிந்தமையாற் பொய்யுரைத்தவாருும் பிறவெனின், பொய்யுரைக்கப்பட்டதாகாது; என்னை, பழியும் பாவமும் அதனுல் வாராமையின்.

பொய்மையும் வாய்மையிடத்த, என்ருராகலின் குற்றமின்றென்பது.

விளக்கம் :

வாய்மை பற்றியதோர் இலக்கணத்தை இங்கு நக்கீரர் திறம்பெற எடுத்துக் காட்டுகிருர்.

தமிழ் இலக்கண இலக்கியங்களில் பேசப்பெறும் 'களவியல்' என்ற பெரும்பகுதிக்கு அமைதி கூறுவதற்காகப் 'பொய்ம்மையும்' என்ற இக்குறளை நக்கீரர் பயன்படுத்துகிருர். இவ்விடத்தில் ஒரு (பேரொளி) உண்மையொளி தோன்றுகிறது. இக் குறளை விளக்குதற்குப் பரிமேலழகர் முதலோர் பெரும்பாடு படுகின்றனர். ஆனுல் நக்கீரரின் இவ்விலக்கணத்தைப் பார்க்கையில எவ்வளவு இலேசாக உண்மைப் பொருள் இக் குறளுக்குக் கிடைத்து விடுகிறது என்பது தெரியவரும். (2)

மெய்யுணர்தல் — 355

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

களவியல் — 2

அதுவே

நூ : *தானே அவளே தமியர் காணக்*
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்.

உரை :

தலைமகற்கு அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்பன குணம். அறிவு என்னேவெனின்,

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு [355]

என்ருராகலின்....... எப்பொருளாயினும் அப்பொருட் கண் நின்று அம்மெய்ம்மையை யுணர்வது அறிவு.

விளக்கம் :

இச் சூத்திரவுரையில் அறிவு என்பதுபற்றி ஒரு நுட்பம் காட்டுகிருர். [தாமியராதல் - தம் உணர்வினர் அல்லராதல் என்பது]

பரிமேலழகரும் இங்கு ' அப்பொருளின்கண் நின்று ' மெய் யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது என்றெழுது-கிருர்.

மெய் என்பதூஉம் அறிவென்பதூஉம் ஒன்று........ எல்லாப் பொருளையும் காண்டலால் அறிவாயிற்று என்கிருர் மணக்குடவர்.

இங்ஙனம் நக்கீரரும் பரிமேலழகரும் மெய்யறிவின் ஓர் நல்லிலக்கணத்தை வெளிப்படுத்துகின்றனர்.

பார்க்க : நச்சிஞர்க்கினியர் - சொல் - 298) (3)

வாழ்க்கைத் துணைநலம் — 57

சிறைகாக்கும் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

களவியல் — 29

நூ ; *காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்........*
....

உரை :

அறத்தொடு நிற்றல்........

நிறைகாவல் என்பது – காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகுதல் என்றவாறு;

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்;

என்பதாகலான்.

விளக்கம் :

கற்பு என்பது பற்றிய ஒரு விளக்கம் தருகிறார் நக்கீரர்.

நிறை – நெஞ்சைக் கற்பு நெறியினிறுத்தல் எனப் பரிமேலழகர் எழுதுகிறார். நிறைகாவலில்வழிச் சிறைக்காவலாற் பயனில்லை யென அவர் மேலும் விளக்கந் தருகிறார்.

மற்ற குறளுரையாசிரியர் பலரும் நிறை — கற்பு என்றே விளக்கஞ் செய்கின்றனர். இதனால் கற்பு என்பதனிலக்கணம் காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகுதலாகத்தான் கொண்டனரா என்றுராய வேண்டும். (4)

புணர்ச்சியில் மகிழ்தல் — 1101

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.

களவியல் — 40

நூ : *காதற் பரத்தை யெல்லார்க்கு முரித்தே ...*

உரை :

இப் பரத்தையரைத் தலைமகன் தலைமகளை எய்தியிருந்தே உடை-யனுயினுனே யெனின், தலைமகள் குணமேயுமன்றிப் பிறவும் இன்பஞ் செய்வன உளவாகக் கருதினுனும்; ஆகவே

கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்

என்பதனெடு மாறு கொள்ளுமென்பது.

விளக்கம் :

உண்மையின்பமென்பது தலைவி யிடத்துத்தான் என இங்கு நக்கீரர் விளக்குகிருர்.

எனவே ஐம்புலவின்பமும் தலைவியிடத்துத்தான் உண்டா-மென்பது நக்கீரர் கருத்தாகும் 'மாசறு பொன்னே' என்பது முதலாகக் கோவலன் பாராட்டுதலில் 'ஐம்புலவின்பமும்' இருப்ப தாக அடியார்க்கு நல்லார் கருதுவதும் (மாதவியிடத்தன்று) தலைவியாகிய கண்ணகியிடத்துத்தான் என்பதும் இங்கு நோக்கத் தகும்.

பார்க்க : இளம்பூரணர் : பொருள் : 99. (5)

திருக்குறளும்
திருவாய்மொழி வியாக்கியானமும்

கடவுள் வாழ்த்து — 1

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு. [பார்க்க : 27]

உரை : 10-10-9

ஆதி என்கையாலே இவ்வண்டங்கட்குக் காரணமான ஆவரணங்களைச் சொல்லுகிறது. ஆக மூன்று உலகங்கள் தொடக்கமாக ஒன்றொழியாமல் எல்லாவற்றுக்கும் மூன்று வித காரணங்களும் ஆனவனே என்றபடி.

விளக்கம் : ஆதி காரணமான பகவன் என்றபடி.

உரை : 7-9-2

பிரமனைப் படைத்து அவனை அத்யயனம் செய்வித்து அது தன்னைப் பிரமன் செய்தான் என்று அவன் தலையிலே ஏறிட்டும் சிவனுக்கு அந்தராத்மாவாய்ப் புக்கு நின்று முப்புரங்களை எரிவித்து சிவன் செய்தான் என்று அவன் தலையிலே ஏறிட்டும் விருது பிடிக்கப் பண்ணினாற் போல.

விளக்கம் ; பிரமன் சிவன் முதலோர்க்கும் ஆதிபகவன்

உரை ; 8-4-2

இராசத குணத்தால் மிக்க பிரமனோடு தாமத குணத்தால் மிக்க சிவனோடு திவ்விய மங்கள விக்ரகத்தோடு வாசியற்றிருக்கை என்னலுமாம்.

திருவாய்மொழி வியாக்கியானம் உரையிற் காணப்பெறும் பகுதிகள் இங்குத் 'திருக்குறளும் திருவாய்மொழி வியாக்கியானமும்' என்ற தலைப்பின்கீழ்த் தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன.

விளக்கம் : எனவே கடவுட்டன்மைக்குரிய சத்துவ குணம் திருமாலுக் காகிறது. இது பரிமேலழகர் கருத்து.

பார்க்க : கடவுள் வாழ்த்து – முன்னுரை. (பரிமேலழகர்)

உரை : 8–5–4

சுத்த சத்துவ மயம் ஆகையாலே எல்லையற்ற ஒளியுருவான விக்கிரஹத்துக்கு.

விளக்கம் : சத்துவம் ஒளிமயம் என்கின்றது. வாலறிவன் என்பதில் ஒளிக் குறிப்புள்ளது.

பார்க்க : கடவுள் வாழ்த்து – முன்னுரை.

உரை : 5–2–1

பகவானுடைய நிறைவிற்கு மங்களாசாசனம் செய்து பின்பு பாகவதர்களுடைய கூட்டத்திற்கு மங்களாசாசனம் செய்ய வேண்டாவோ.

விளக்கம் : ‘அகர முதல’ ‘மலர்மிசை ஏகினன்’ ஆகிய இரு குறள்களும் வியாக்கியானக் கருத்தை அடியொற்றி யுள்ளன.

உரை : 4–3–3

சாத்வீக அகங்காரத்தின் காரியம் பதினேரிந்திரியங்கள். தாமச அகங்காரத்தின் காரியம் மண்முதலான ஐம்பெரும் பூதங்கள். இரண்டற்கும் உபகாரமாய் நிற்கும் இராஜச அகங்காரம். ஆக பதினேரிந்திரியங்களையும் குணங்களோடு கூடிய ஐம்பெரும் பூதங்களையும் சொல்லி அவற்றைத் திருமேனியாக வுடையனுயிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது.

விளக்கம் : ஐந்தன் வகை தெரிதலைக் (27) கூறுகிறது. இறைவன் சத்துவ குணப் பொருள் என்பதனைப் பரிமேலழகர் முதலிலேயே குறிக்கிறர்.

பார்க்க : கடவுள் வாழ்த்து – முன்னுரை – பரிமேலழகர்.

உரை : 3–7–1

ஆக சுத்த சத்துவ மயமாய் ஸ்வரூபப் பிரகாசமான விக்ரகத்தையுடையன் என்கை. நிஷ்கிருஷ்ட சத்துவமேயாய் அந்த

முக்குணங்களுள்ளே பரிசுத்தமா யிருப்பதனுலே ஸ்படிகம் போன்று பிரகாசிக்கிறதும் சாந்தமாயிருப்பதுமான சத்துவ குணம் என்றும்....

விளக்கம் : சத்துவ முதலிய குணங்களான் மூன்ருகிய உறுதிப் பொருட்கு அவற்ருன் மூவராகும் முதற் கடவுளோடு இயை-புண்டாகலான் – பரிமேலழகர். கடவுள் வாழ்த்து – முன்னுரை.

உரை : *3-4-7*

வானவர் ஆதி என்ற விடம் பிரமன் முதலாஞேர்கட்குக் காரணன் என்னுமிடம் சொல்லிற்று. இங்கு வானவர் ஆதி என்பது நித்திய சூரிகட்கு நிர்வாஹகனுய் அவர்கள் சத்துக்குக் காரணனுயிருக்கும் படியைச் சொல்லுகிறது. பிரமன் முதலாயினேர்கட்கு அவர்கள் உற்பத்தியிலே உதவி செய்வானித்தனையே. அங்ஙனமின்றி நித்திய சூரிகளுக்கு எல்லாம் கண்ணன் என்கிறபடியே எல்லாம் தானேயா யிருப்பான்.

விளக்கம் : நித்திய சூரிகளாகிய மக்களுக்கும் பிரமர்களாகிய கடவுளர்க்கும் ஆதி யென்றது.

உரை : *3-3-5*

உலகங்கட்கெல்லாம் காரணப் பொருளே தியானத்திற் குரியது என்றும் கூறியது. அப்படியே இவரும் எல்லாவுலகும் தொழும் என்று அடைகின்ற பொருள்களைக் கூறி ஆதி மூர்த்தி என்று அடையக்கூடிய பொருளை அருளிச்செய்தார்.

விளக்கம் : ஆதி – காரணப் பொருள் என்றது.

உரை : *1-1-7*

இச் சரீரத்துக்கு ஆத்மா தாரகனுய் நியாமகனுய் சேஷியாய் இருப்பன போன்று இச் சரீராத்மாக்களுக்குத் தான் தாரகனுய் நியாமகனுய் சேஷியாய் இருப்பான்.

விளக்கம் : உலகிற்கு மக்களுயிரும் அவ்வுயிர்க்கு இறைவனும் தலைமையேற்கும் தன்மை பற்றியது.

உரை : *1–3–6*

ஞானம் சக்தி செல்வம் முதலியவைகளால் சிறிது மேன்மை யுடையவர்களையும் பகவான் என்ற பெயரால் கூறும் வழக்கு உண்டாகலின் பகவான் என்னும் பெயர் முக்கியமாக வகிப்பது இவன் பக்கலிலே அல்லாதார் பக்கல் ஔபசாரிகம் என்பார் அப்பகவன் என்கிறார்.

விளக்கம் : பகவன் என்பதன் பெயர்ப் பொருளையும் பகவன் கடவுளர்க்குத் தலைவன் என்பதையும் கூறுகின்றார். (1)

கடவுள் வாழ்த்து — 2

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். [பார்க்க : 5]

உரை : *7 8-11*

அவன் கொடுத்த அறிவு கொண்டு அறிவார்க்குக் குறையில்லை யன்றோ.

விளக்கம் : அவனறிவாலே அவன்தாள் வணங்குதல்.

உரை :

ஞானியானவன் எனக்கு உயிர்போன்றவன் என்பது என்னுடைய மதம்.

விளக்கம் : ஞானி — 'மாணடி சேர்ந்தார்' என்பதாகலாம்.

உரை : *5–7–3*

இறைவனைப் பற்றிய ஞானமில்லாதவன் இல்லாதவனாக ஆகின்றான். இறைவனைப் பற்றிய ஞானமுள்ளவன் உள்ளவன் என்று அறிகின்றார்கள்.

விளக்கம் : இறை ஞானமே ஞானம்; அஃதில்லாதவன் மனிதனல்லன் என்பது கருத்து.

உரை : *1–1–1*

பகவானை அறிகிற அந்த ஞானந்தான் ஞானம் என்று சொல்லப்படும். மோக்ஷத்தை உண்டாக்கும் கல்வியே கல்வி.

விளக்கம் : மெய்யறிவிற் குரிய கல்வியே கல்வி; கடவுளுக் கெதிரான, கடவுளோடு தொடர்பில்லாத கல்வி கல்வியன்று என்பது பண்டைக் கொள்கை.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. [356]

உரை :

அறிவைத் தந்த போதே உன் திருவடிகளைப் பெற்றேனே யன்றோ என்று பொருள் கோடலுமாம்.

விளக்கம் : அறிவு திருவடி ஞானமென்பது இங்குப் பெறப்படுகின்றது.

உரை : 3-2-7

பரம்பொருளை யறியும் அந்த ஞானமே ஞானமென்று சொல்லப்படும். மற்றை ஞானமெல்லாம் அஞ்ஞானமென்று சொல்லப்டும்.

விளக்கம் : கடவுள் தொடர்பில்லாத கல்வி கல்வியன்று என்பது பலர் கொள்கையாகும்.

உரை : 3-2-10

பல கலைகளாலும் அறியப்பட்ட ஏற்றத்தை யுடையனுயிருந்து

விளக்கம் : கற்றது என்பது இங்குக் கலைகள் எனப்படுகின்றது.. (2)

கடவுள் வாழ்த்து — 3

மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

உரை : 4-1-1

ஒரு முகூர்த்த காலமாவது ஒரு கண நேரமாவது வாசுதேவனை நினைக்கவில்லை என்பது யாதொன்றுண்டு; ஆகவே இவனுக்கு இல்லாதவனாகிறான் என்னும்படி வருகிற கேடு ஆகிறது,

விளக்கம் : சேர்தல் — இடைவிடாது நினைத்தல் என்ற பொருளைப் பரிமேலழகர் இதுபோன்ற இடங்களிலிருந்துதான் பெற்றார் போலும்.

உரை : 3-7-5

என்னையே அடைகின்றவன் மகாத்மா ஆவான்.

உரை :

இவருக்குக் குணங்களால் அடிமைப்பட்டவன் என்னுமாறு போன்று அக்குணங்களுக்குத் தோற்று அடியேன் என்கிறார்

விளக்கம் : அடிசேர்தல் – குணங்களுக்கு அடிமைப்படுதல் என்றபடி.

உரை :

அநாதிகாலம் பிறவிகளிலே உழன்று திரிந்த ஆன்மா சர்வேசுவரனைக் கிட்டுகையாவது........

கெடுமரக் கலம் கரை சேர்ந்தது போன்று இருத்தலின் சேர்ந்தார் என்கிறார்.

விளக்கம் : அவனைக் கிட்டுகையே மாணடி சேர்தல்.

உரை : 2-9-4

என்னுடைய மனதிலே வந்து புகுதல் வேண்டுமென்பார் என் மனத்தே வந்து என்கிறார்.

விளக்கம் : வியாக்கியானம் "ஏகுதல்" என்பதனை நன்கு விவரிக்கின்றது.

உரை :

நெஞ்சம் நாடு கலவியாலும் பிரிவினாலும் ஒரு பரமபதத்தைப் போலே ஆக்கினாயிற்று இவர் திருவுள்ளத்தை.

விளக்கம் : பாகவதர்கள் இறையவர்கள் என்றது அங்கு;
பாகவதர்கள் இனியர் என்கிறது இங்கு.

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு [1103]

உரை : *10-1-1*

கமலம் உலகளந்த சேவடிபோல் உயர்ந்து காட்ட.

உரை : *7-3-1*

அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து என் நெஞ்சினூடே புள்ளைக் கடாகின்ற

விளக்கம் : ஏகினுன் என்பதனை 'வந்து புகுந்து' என்கிறது வியாக்யானம்.

உரை : *1-1-2*

மனனக மலமற மலர்மிசை எழுதரும்.

விளக்கம் : மலர் என்பது மனம் எனப் பரிமேலழகர் எழுதுதற்கு ஊக்கமளித்தவை இத்தகைய இடங்களே யாகலாம். (3)

கடவுள் வாழ்த்து — 4

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

உரை : *4-9-1*

நான் எல்லா ஆத்மாக் களுக்கும் சிநேகிதன்.

விளக்கம் : சமய, இன, மொழி, நாடு என்ற வேறுபாடற்ற நிலை.

உரை : *7-9-5*

விசேஷஜ்ஞர், விசேஷஜ்ஞர் அல்லாதார் என்னும் வேற்றுமை யின்றியே எல்லாரும் கொண்டாடும்படிச் செய்தான்.

விளக்கம் : இறைவன் எல்லோர்க்கும் வேண்டியவன்.

உரை : *1-6-5*

கொள்கை கொளாமை யிலாதான். இவன் பிறவியாலும் தொழிலாலும் ஞானத்தாலும் உயர்ந்தா னொருவன். இவனிடத்தில் அந்தரங்கத் தொண்டினைக் கொள்வோம். இவன் அவற்றால் தாழ்ந்தா னொருவன். இவனிடத்தில் புறத்தொழில்

கொள்வோம் என்னுமவை யில்லாதான் திருவுள்ளத்தாலே சிலரை இகழ்ந்திருத்தல் சிலரை ஆதரித்தல் செய்யான்.

விளக்கம் : இறைவனுக்கு அந்தரங்கமானவர் அயலானவர் என்பது இல்லை. (4)

கடவுள் வாழ்த்து — 5

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

உரை : 3-6-8

துயரத்தையே தரக் கூடியதான புண்ணிய பாப ரூபமான கர்மங்களுக்கு நியாயமகனுய் .. .... பகவானுக்குச் சேஷமாயிருக்கும் தன்மைக்கு விரோதியாய்க் கொண்டு பந்தமாதல் இரண்டற்கும் ஒத்திருத்தலால்,

விளக்கம் : இருவினை இறை நெறிக்கும் பந்த மென்கிறார்.

உரை : 4-2-4

வண்புகழ் - கல்யாண குணங்கள். ஒரு குணத்தை அநுசந்தித்தால் மற்றைய குணங்களில் போகாதபடி காற் கட்டுகை.

விளக்கம் : வண்புகழே பொருள்சேர் புகழ்.

உரை : 1-6-8

கரும்பு தின்னக் கூலிபோன்று ஒரு பலன் இன்றே யாயினும் தொழுகைதானே பலன் ஆதலின் தொழுமின் என்றவர் மீண்டும் தொழுதான் என்கிறார்.

அழிவின்றி ஆக்கந் தரும். மீண்டும் வருந்தன்மை யில்லாத மோட்சத்தைத் தருவான்.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின் [2]

விளக்கம் : பரிமேலழகரும் 'பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் நற்றாள் என்றார்' என விளக்குகிறார்.

உரை : 10-2-11

பரமபதத்தை விட்டுத் திருவனந்தபுரத்திலே வந்து அடியார்களுக்காக திருக்கண் வளர்ந்தருளுகையாலே புகழிற்கு ஒரு முடிவு இல்லையாயிற்று அவனுக்கு. இவனை அடிமை கொள்ளுகையாலே புகழிற்கு எல்லையில்லை யாயிற்று அவனுக்கு.

விளக்கம் : புகழின் காரணங்களைச் சொல்லுகிறார்.

உரை : 5-9-10

நலன் ஏந்தும், அவனுடைய கல்யாண குணங்களைக் கொண்டாடி வசிக்கின்றன; அன்பாலே மங்களாசாசனம் செய்து வசிக்கின்றன; அன்பாலே மங்களா சாசனம் செய்து வகுத்துக் கொண்டிருக்கும்.

விளக்கம் : கல்யாண குணங்களைப் பேசுதலே புகழ் புரிதல்.

உரை : 1-6-9

நல்வினை தீவினைகட்குத் தம்மில் தாம் வேற்றுமை யுண்டாயினும் மோட்சத்திற்குத் தடையென்னும் தன்மையில் இரண்டு வினைகளும் ஒக்கு மாதலின் இருமை வினைகடிவார் என்கிறார்.

விளக்கம் : 'நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாகலின் இருவினையும் எனப் பரிமேலழகர் எழுதுகிறார்.

உரை : 2-3-9

பகவத் குணானுபவம் களிப்பே யாதலின் களித்தேனே யெனத் தேற்றேகாரம் கொடுத்தோதுகிறார்.

விளக்கம் : குணானுபவம் என்பது புகழ்புரிதலே யாகும். (5)

கடவுள் வாழ்த்து — 6

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

உரை : 4-3-5

இவை பொய்யில் பாடல் ஆகையாலே கூடும்.

விளக்கம் : பொய்யில் – பொய்தீர். எவ்வளவு பொருத்தமான தொடர்கள்.

உரை :

உழக்காலே கடலை முகக்க வொண்ணாதது போன்று அளவிற் குட்பட்ட பொருள்களை அறியும் இந்திரியங்களாலே அளவிற் குட்படாத பரம்பொருள் அறிய முடியாதன்றோ? ஆதலால் ஐம்புலன்கள் அறியா வகையால் என்கிறார்.

உரை : 2-3-8

இறைவன் எவ்வெவ் வழியில் செல்லுகிறான், இவ்வுயிரும் அவ்வவ் வழியெல்லாம் கூடவே செல்லுகிறது என்கிற படியே. அவன்பின்னே நெறிப்பட்ட நெஞ்சினையுடையனாய் இதனால் தவ மெய்தினான் என்கிற பலத்தைச் சொல்கிறா-ராதல்.

விளக்கம் : இறை நெறி, தவநெறி, சமய நெறி இவையாவும் ஒன்றே யாகும்.

உரை :

சில பொருள்களை வரை நாற்றத்தைக் காட்டி முடிக்குமாறு போன்று புலன்களிலே மூட்டி நசிப்பிக்கையாலே இந்திரி-யங்களைப் பொறி யென்கிறது.

விளக்கம் : பொறி என்பதன் பெயர்க் காரணம் நுட்பமாக விளங்கு கின்றது.

உரை : 4-8-6

ஆத்மாக் களினுடைய பேதங்களைப் போலே போகுமேயன்றோ உபாயங்களினுடைய பேதங்களும் ஆகலின் நெறியெல்லாம் என்கிறது; என்றது. கர்ம ஞான பக்திகள் அவதார ரகஸ்ய ஞானம், புருஷோத்தம வித்யை ஆத்மாவினுடைய உண்மைத் தன்மை, விரோதிகள் போவதற்குப் பிரபத்தி; கைவல்யத்தை அடைவதற்குப் பிரபத்தி; பகவானை அடைவ தற்குப் பிரபத்தி இவையடங்க.

விளக்கம் : நெறி அல்லது சமயம் (கடவுளையடையும் நெறி) மக்கள் குழுவிற்கேற்ப அமையும். (6)

கடவுள் வாழ்த்து — 7

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

உரை : *4-5-7*

ஒத்தாராயும் மிக்காராயு மிருப்பாரை இன்றிக்கே யிருப்பவனை என்றபடி .... ஒருபடிக்கு ஒப்பு இன்றிக்கே இருக்கிறது. பரத்துவத்தில் அன்று என்னை மனிதனுகவே நினைக்கிறேன் என்கிறபடியே அவதரித்து மனிச்சு ஏறிட்டுக் கொண்டு நிற்கிற நிலையிலே என்ருராம்.

விளக்கம் : இறைவன் மனிதருள் உயர்ந்தவன் (அறவாழி அந்தணன்) என்பதனை இங்கே காட்டுகிருர்.

உரை : *1-7-2*

மனிதர்களுடைய ஆனந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகம் தேவர்களுடைய ஆனந்தம். அவர்களுடைய ஆனந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகம் இந்திரனுடைய ஆனந்தம். அவனுடைய ஆனந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கதிகம் சிவனுடைய ஆனந்தம். அவனுடைய ஆனந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கதிகம் பிரமனுடைய ஆனந்தம் என்றிப்படி ஏற்றிக்கொண்டே சென்று கூறப்படுகின்றதாய் இதைக் காட்டிலும் மேம்பாடற்றதாயுள்ள ஆனந்தத்தை யுடையவன் என்றபடி. ஆனந்தமயம் என்பது வேதமொழி.

விளக்கம் : ஆதி பகவன் மற்றை இறையவர்களைவிட எவ்வகையில் தன்னிகரில்லாதவன் என்பதனை இங்கு அவர்களது ஆனந்தத்தைக் கொண்டு விவரிக்கிருர்.

உரை : *1-1-3*

தன்னையும் ஏவக் கடவதொரு வேறு பொருள் உளதோ எனின் மேம்பட்டாரை யுடைய னல்லன். (7)

கடவுள் வாழ்த்து -- 8

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

உரை : 8–4–4

நான் என்னை மனிதனாகவே நினைக்கிறேன் என்றும் நான் உங்களுக்கு உறவினனாகவே பிறந்திருக்கிறேன் என்றும் பத்தும் பத்தாக நின்ற என் சுவாமி.

விளக்கம் : மனிதனுக்கும் கடவுளுக்குமுள்ள தொடர்பினை இங்கு விளக்குகிறார். (8)

கடவுள் வாழ்த்து — 9

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

உரை : 3-8-3

நித்திய சூரிகளைப் போலே வாக்கிற்கு உன்னை ஏத்துகையே இயற்கை யென்னும்படி கொடுத்தவனே.

விளக்கம் : வாக்கின் பயனாகிய பொருள்சேர் புகழ் புரிதலை வியாக்கியானம் கூறுகிறது.

உரை : 6–10–6

வழிபடுதலாவது வேறு பிரயோஜனங்களுக் குறுப்பாகாத கரணங்களைக் கொண்டு அடைந்து வணங்குதல்.

விளக்கம் : வணங்குதற்கே பிரயோஜனமாகும் கரணங்கள் என்றபடி.

உரை : 1–4–10

இறைவனை நிவேதிக்கும் பொருட்டே கை கால் முதலிய உறுப்புக்களை யுடைய விசித்திரமான இச் சரீரமானது முற்காலத்தில் உண்டாக்கப்பட்டது. (9)

வான் சிறப்பு — 11

வானின் றுலகம் வழங்கி வருதலான்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று

உரை : 9–2–10

இவ்வமுதத்தைப் பெறுதற்குக் கடல் கடைதல் சுவர்க்கத்திற்குப் போதல் செய்யவேண்டா; .... அண்மையிலே இருக்கிற இவ்வமுதம் என்கிறார்.

விளக்கம் : இங்குப் பெண்ணை அமுதமென்கிறார்.

உரை :

அமுது உப்புச் சாறு.

விளக்கம் : வியாக்கியானக் காரர்கள் பல இடங்களில் அமிழ்தம் என்பதனை உப்புச்சாறு என எழுதுகின்றனர். கடலிலிருந்து தோன்றியதனாலோ இப்பொருள்? அறிகிலம். உப்பு என்பதற்கு இன்பம் எனப் பரிமேலழகர் எழுதுவது இதனாலே யாகலாம். (10)

நீத்தார் பெருமை — 21

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

உரை : 4–5–5

அருச்சுனனுக்கு........ பிரகிருதி புருஷ விவேகத்தைச் சிறப்பித்து கருமயோகத்தை விதித்து அது தன்னை நான் செய்கிறேன் என்ற எண்ணத்தைப் போகட்டு. பலத்தில் விருப்பமில்லாமல் செய்வாய் என்று பின்னர் ஆத்ம ஞானத்தைப் பிறப்பித்து பின்பு பகவத் ஞானத்தைப் பிறப்பித்து எப்பொழுதும் நீங்காத நினைவினுருவான உபசாரக் கிரமத்தை யறிவித்து இவ்வளவும் கொண்டு போந்து இதன் அருமையை அவன் நெஞ்சிலே படுத்தி இவை என்னால் செய்யத்தக்கவை யல்ல என்று கூறிச் சோதித்த பின்பு ஆகில் என்னைப் பற்றிப் பாரம் அற்றவனாயிரு என்று தலைக் கட்டினாற்போலே யாயிற்று.

விளக்கம் : பகவத்கீதைக் கருத்தினை வியாக்யானம் விளம்பு-கின்றது. என்னைப்பற்றிப் பாரமற்றவனுயிரு என்பதையே பற்றுக் களை அற்றிருத்தலெனப் பரிமேலழகர் கூறுகிருர். (11)

நீத்தார் பெருமை — 24

> **உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்**
> **வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.**

உரை :

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் விஷயங்களிலே பட்டி போகாதபடி வென்றிலேன்.

விளக்கம் : ஐந்தன் வகை தெரிதலும் இதுதான். (12)

நீத்தார் பெருமை — 25

> ***ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்***
> ***இந்திரனே சாலுங் கரி*** [பார்க்க : 27]

உரை :

இந்திரியங்களால் உண்டாகின்ற ஞானத்துக்கு எட்டா-திருக்கும்.

விளக்கம் : இந்திரிய நெறியும் ஞான நெறியும் ஒன்ருகா.

உரை : 1-2-1

தாம் இறைவன்பால் காதல் கரைபுரண்டு நிற்பது போன்று அவர்கள் ஐம்புல வாசையில் அறிவு மயங்கி யிருந்தார்கள்; கண்டதும் அவர்கள் கேட்டினை நீக்கியல்லது நிற்கவொண்-ணுத நிலையினை யடைந்தார். என்னையெனின் வைணவ தர்மம் அதுவாதலின்.

விளக்கம் : அறிவோடு கூடியது பக்திநெறி யென்கிருர்.

> **அறிவினு னுகுவ துண்டோ பிறிதின்நோய்**
> **தந்நோய்போற் போற்ருக் கடை** [315] (13)

நீத்தார் பெருமை — 26

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

உரை : 8-10-3

சிறுமா மனிசர் - வடிவு சிறுத்துப் பிரபாவம் பெருத்திருக்கு மவர்கள்.

விளக்கம் : 'சில்வாழ் நாள் பல்பிணிச் சிற்றறிவினோர் ... . (பரிமேலழகர்)

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து [667]

உரை :

எல்லார்க்கும் ஒவ்வொரு காலத்தில் எளிமை கூடும். இவனுக் கெளிமை சொரூபம் என்பதனைத் தெரிவிப்பதற்கு எளிவரு மியல்பினன் என்கிறார் என்றபடி.

நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது [124]

விளக்கம்: அடக்கம் அல்லது எளிமையின் பெருமை இங்கு விவரிக்கப் பெறுகின்றது.

உரை :

வேறு சிலரிடத்திலே கண்டால் ஆச்சரியப் படுதற்குக் காரண மாயிருப்பவை இவன் பக்கலிலே கண்டால் இயல்பா யிருக்கும்.

விளக்கம் : பெரியர் சிறியர் இருவர் இயல்புகளையும் இங்குக் காட்டுகிறார். (14)

நீத்தார் பெருமை — 27

சுவைஒளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இத்திரனே சாலுங் கரி. [25]

உரை : 6–3–2

ஐங்கருவி கண்ட இன்பம் என்னுமாறு போலே அளவிற்கு உட்பட்ட சுகம்.

விளக்கம் : ஐம்புல வின்பம் சிற்றின்பம். ஐம்புலத்திற்கு அறிவின்பத்திஞல் வருவது பேரின்பம்.

உரை : 4–9–8

மண் முதலிய பூதங்கள் ஒன்ருே டொன்று கலந்து எல்லா வற்றிலும் எல்லாம் உள்ளன என்கிறபடியே.

விளக்கம் : பூதங்களுக்கும் இந்திரியங்களுக்குமுள்ள தொடர்பு முன்பும் காணப்பட்டது.

உரை :

ஆகாயத்திற்குக் காரணமான மூலப் பகுதியைத் தரித்திருப்பதால் அக்ஷரம் என்று சொல்லப் படுபவன் பரம்பொருளே என்பது பிரம சூத்திரம்.

விளக்கம் : இங்கு ஐம்பூதத்திற்கும் எழுத்திற்கும் (நாதத்திற்கும்) இறைவனுக்கும் உள்ள தொடர்பு புலஞகின்றது.

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு [1]

உரை :

தமசு என்கிற சொல்லுக்குரிய பொருளாக்கி அதனை அக்ஷரமாக்கி, அக்ஷரத்திலிருந்து அவ்யக்தத்தை யுண்டாக்கி அவ்யக்தத்திலிருந்து மஹானை யுண்டாக்கி, மஹானிலிருந்து அகங்காரத்தை யுண்டாக்கி அகங்காரத்தினின்றும் பூத தன் மாத்திரைகளை யுண்டாக்கி அவற்றைப் பூதங்களாக முற்றுவித்து அண்டத்தைப் படைத்தலை முடிவாகவுடைய உலகத்திணைப் படைத்தல் செய்கிற திவ்விய சங்கல்பத்திணை யுடையனுடைய பகவான்.

விளக்கம் : இங்கு எழுத்தையும் இறைவனையும் கூடத் தொடர்பு படுத்துகிறார்.

உரை :

பஞ்ச பூதங்களாலாக்கப்பட்ட இவ்வுடலிலே உயிர் வழியாக உள்ளே புகுந்து அவை பெயர் பெறுதல் உண்டாகும்படிச் செய்து இவை யெல்லாம்தான் என்னலாம்படி யிருப்பினும்

விளக்கம் : ஐம்பூதம் ஐம்பொறிகள். அவற்றுள் இறைவன் ஆகிய வற்றின் தொடர்பினையறிதல் பற்றியது .... குறளுக்கு வியாக்கியானமும் விளக்கம் தருகிறது.

நீத்தார் பெருமை — 28

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

உரை : 3–1–10

நாஸ்திகரா யிருப்பார்க்குத் தன் படிகளை மறைக்கையாலே மறை யென்றும் ஆஸ்திகரா யிருப்பார்க்குத் தன் பொருளை வெளிக் காட்டுகையாலே வேதம் என்றும் —

விளக்கம் : மறை வேதம் ஆகியவற்றிற்கு ஒரு நல்ல விளக்கந் தருகிறார்.

அறன் வலியுறுத்தல் — 31

சிறப்பீனும் செல்வமு மீனு மறத்தினூங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

உரை : 4–1–8

இனி பலத்தில் நோக்கம் இல்லாதவனுய்த் தான தர்மங்களைச் செய்து எம்பெருமானையே பலமாகப் பற்றுமல், பலத்தில் நோக்கமுள்ளவனுய்த் தான தர்மங்களைச் செய்து சுவர்க்க முதலான உலகங்களை விரும்பினுல் அவை நிலைநில்லா.

விளக்கம் : பகவத்கீதைக் கருத்தை வியாக்யானம் சொல்லுகிறது. குறள் அறப்பயனை மட்டும் சொல்லுகிறது.

அறன் வலியுறுத்தல் — 33

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்

உரை : 10-6-11

நினைவும் சொல்லும் செயலும் ஒருபடிப் பட்டிருக்கையாலே.

விளக்கம் : செல்லும்வாய் என்பதற்குத் திரிகரணங்கள் எனப் பரிமேலழகர் பொருள் செய்வார். (18)

அறன் வலியுறுத்தல் — 40

செயற்பால தோரு மறனே ஒருவற்
குயற்பால தோரும் பழி

உரை : 1-3-3

பலத்தோடு சேர்ப்பிக்கின்ற அறத்தின் வழிகள் எல்லாவற்றுலும்.........இவ்வறத்தில் இவனுக்கு அவ்வருகு ஒருவருமிலர் எனும்படி அமைந்திருக்கை.

விளக்கம் : அறத்தின் இன்றியமையாமையைக் குறிக்கிறார். (19)

வாழ்க்கைத் துணை நலம் — 51

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

உரை : 9-1-2

துணையாகையாவது துக்கமும் சுகமும் நம் இருவர்க்கும் ஒன்றே என்கிறபடியே இன்ப துன்பங்களை ஒக்க அனுபவித்தல். சார்வு ஆகையாவது போக்கடி அற்ற நிலையில் தாங்களே புகலிடமாதல்.

விளக்கம் : துணை என்பதனை மிக அழகாக விளக்குகிறார். (20)

வாழ்க்கைத் துணைநலம் — 52

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

உரை : 5-6-8

மாண்பு — மாட்சிமை; பெண் தன்மை; மாண்பு என்பதற்கு அழகு என்றும் சொல்லுப.

விளக்கம் : மாட்சி மாண்பு என்பதற்கு அழகு என்று பொருள் கொள்ளுதல் சிறப்புடையதாகும். (21)

வாழ்க்கைத் துணை நலம் — 53

இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணுக் கடை

உரை :9-1-1

கொண்ட பெண்டிர் — தான் தன் மனத்திலே உறவாக நினைத்திருக்கும் மனைவி, அன்றி ஒரு காரணம் இல்லாமல் வந்தவள் அன்றிக்கே பொருள் முதலான காரணங்களால் கொள்ளப் பட்ட மனைவி என்னுதல் அன்றிக்கே ஆசாரியனும் பரம்-பொருளும் செல்வமும் முதலானவைகள் எல்லாம் இவளேயாகக் கொண்ட பெண்டிர் என்னுதல் என்றது. இவள் இருப்பதனுல் அல்லவா எல்லாம் என்று இருக்கையைத் தெரிவித்தபடி.

விளக்கம் : மனையாளின் பல்வகைத் தன்மைகளை வகுக்கிருர். கடைசியில் சொல்லுவது மிகவும் பொருத்தம். (22)

வாழ்க்கைத் துணை நலம் — 54

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்

உரை : 6-6-5

கற்பு — **கல்வி; அதாவது** ஞானம்.

விளக்கம் : கற்பனை ஞானத்துடன் தொடர்புறுத்துகிருர்.

உரை : 10-10-2

திருமகளாலே சர்வேஸ்வரன் தெய்வத் தன்மை யடைகிருன். யாவர் ஒருவர்க்கு அந்த சனக குலத்திற் பிறந்த பிராட்டி

மனைவியாக இருக்கிருளோ அவனுடைய ஆற்றல் அளவிட்டு அறியக் கூடாததாக இருக்கிறது. (23)

அன்புடைமை — 73

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு.

உரை :
அன்புக்கு இருப்பிடமாகை தவிர்ந்து அன்புதான் ஒருவடிவு கொண்டாற் போலே இரா நின்ற தென்பர்.

விளக்கம் : அன்பு'என்போடியைந்த தொடர்பே, "வடிவு கொண்டாற் போல்வது"

உரை : 1–1–5
இறைவனை விட்டகன்று நீங்கியிருத்தல் தமக்கு விருப்பமாயினும் அதனைச் செய்ய வொவ்வாது தடுக்கின்றமையின் அன்பினை அருவினை என்கிருர்.

விளக்கம் : அன்பு ஒருவனை–இறைவனை–மறவாமல் இருக்கும்படிச் செய்கின்றது. (24)

இனியவை கூறல் — 91

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

உரை : 9–1–5
அகவாய் மயிர்க்கத்தியாய் இருக்கச் செய்தேயும் அன்பு கலந்த இனிய வார்த்தைகளாலே வசீகரிக்க வல்லவர்களாக லின் இன்மொழியார் என்கிருர். (25)

செய்ந்நன்றியறிதல் — 105

உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

உரை : *4-5-6*

இரக்கின்றவர்கள் அளவு பார்த்தல் தன்னளவு பார்த்தல் செய்கை யன்றிக்கே வந்து பிறந்தபடி காணும் இவரை வருத்துகிறது. தான் இரப்பாளனுய்க் காரியம் செய்யுமவன் பிறர் இரந்தால் பொறுக்க மாட்டானேயன்றே. (26)

செய்ந்நன்றியறிதல் — 107

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு

உரை : *4-6-9*

ஏழ்மை — எல்லாம் நன்மை. ஒரு நன்மையுண்டானுல் அதனை ஏழ் ஏழாகச் சொல்லக் கடவதன்றே.

விளக்கம் : எழுமை என்பது எல்லாம் என்பதைக் குறிப்பதாகலாம். (27)

செய்ந்நன்றியறிதல் — 102

காலத்தி ஞற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

உரை :

பகவானைப் பற்றிய ஞானத்தை எவன் கொடுக்கிருனே அவ-னுக்குப் பணிவிடை செய்தல் வேண்டும். பூமண்டலம் முழு தினையும் விண்ணுலகத்தையும் கொடுத்தாலும் ஆக அவன் செய்த செயலுக்கு ஒப்பாக மாட்டாது என்கிற படியே ஐந்நூறு கோடி யோசனை பரப்புள்ள தான பூமியும் ஒப்பன்று என்றது சாஸ்திரம்.

விளக்கம் : இப்படி உலகை யொப்பிடுவது ஓர் வழக்கு. உலகிற்கு வியாக்கியானம் ஓர் ' அளவு ' குறிக்கின்றது. (28)

அடக்கமுடைமை — 124

நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது [பார்க்க : 26] (28)

அடக்கமுடைமை — 129

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு

உரை : 9-7-4

அம்புபட்ட புண் மருந்திட்டு ஆற்றலாம்; குணத்தால் வந்த புண்ணுக்கு மாற்றில்லை யன்றோ.

விளக்கம் : குணப்புண்ணே நாவினாற் சுட்டது. (30)

ஒழுக்கமுடைமை — 131

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

உரை : 9-7-9

சீலம் சொருபத்திற்கு ஆபரண மன்றோ. (31)

ஒழுக்கமுடைமை -- 133

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

உரை : 10-2-5

ஆக வருணச்சிரம தர்மங்களின் பலமான பத்தியின் உருவத்தை அடைந்த ஞானத்தைச் சொல்லுகிறது.

விளக்கம் : பரிமேலழகர் ஒழுக்கத்திற்கும் வருணத்திற்கும் தொடர்புறுத்துகிறார். வியாக்யானம் பத்தி ஞானங்களை வருணச்சிரமங்களுடன் தொடர்புறுத்துகின்றது. (32)

ஒழுக்கமுடைமை — 134

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

உரை : 1-7-1

அந்தணன் – பிராமணன். சாணிச் சாற்றைப்போன்று சுத்தன் என்று கொண்டார்கள் இத்தனை. இனிமையில் நெஞ்சு

சென்றதில்லை; சுத்தி குணத்தோடு கூடியவன் என்றுயிற்று, அவர்கள் நினைப்பது.

விளக்கம் : இவ் விளக்கங்களால் அந்தணர் பார்ப்பார் ஆகிய இருவருக்கும் சிறு வேறுபாடு காண்கிறுர் ஆசிரியர் என்பது புலனுகின்றது.

உரை : *3-1-6*

ஓத்தெல்லாம் என்கையாலே இருக்கு முதலான நான்கு வேதங்களையும் குறிக்கிருர். ஆக ஓதுவார்கள் பேதத்தாலே பலவகைப்பட்ட கிளைகளாகப் பிரிவுண்ட வேதங்களெல்லாம் என்றபடி.

விளக்கம் : ஒத்து என்பது வேதம் (33)

ஒழுக்கமுடைமை — 140

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

உரை : *5-7-4*

சத்துவ குணத்தினின்றும் ஞானம் உண்டாகின்றது.

விளக்கம் : ஓரைந்தும் காத்தல் சத்துவம். அதுவே உரம்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். [997] (34)

பிறனில் விழையாமை — 141

பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

உரை :

கண்ணிநுண் சிறுத்தாம்பு உரை

இங்கும் வேறு ஒருவர்க்கு உடைமையாக இருப்பவர்களையே விரும்பினேன் என்பார் மடவாரை நம்பினேன் என்கிருர். (35)

ஒப்புரவறிதல் — 211

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு,

உரை : 10-7-1

கவிக்குச் செவ்வையாவது வேறொரு பிரயோஜனத்தை விரும்பாமல் இருத்தல்.

உரை :

சர்வ விஷயமாக உதவி செய்த படியும் பிரதியுபகாரம் கொள்ள இராமையும் நோக்கி முகில் வண்ணனே என்கிறார். (36)

ஈகை — 226

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

உரை : 9-1-3

தன் அருள் கொள்வாரை உதாரர் என்னுமவன் அன்றோ இவன்.

விளக்கம் : கொடுப்பர் அல்லர், கொள்பவர் உதாரர் என்று புதிய இலக்கணம் படைக்கிறார். (37)

புகழ் — 232

உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ்

உரை : 3-1-2

புகழ்வு எல்லாம் - உள்ளதுஞ் சொல்லி இல்லாதவற்றை யெல்லாம் இட்டுக் கொண்டு சொல்லப் படுகின்றவை யெல்லாம் .... புன்மையையே காட்டா நின்றது.

விளக்கம் : உள்ளதும் இல்லாததும் சொல்லியும் அவற்றுள் அவன் புகழ் அடங்கவில்லை என்பதாம்.

உரை :

கீர்த்தி உருவமாய்க் கனிபோலே இருக்கிற கவிகளை.

விளக்கம் : உரையும் பாட்டும் எனப் பரிமேலழகர் கூறுவதில் பாட்டினை இங்கே கூறுகிறார். (38)

புகழ் — 235

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

உரை : 1-3-1

வித்தகன் – ஆச்சரியப் படத் தக்கவன். இங்கு ஆச்சரியப் படவேண்டிய தென்னெனில் யசோதை முதலியவர்களுக்கு எளியவனுயிருந்த அந்நிலையில் தானே அவனே சகடாசுரன் இரட்டை மருதமரங்கள் முதலியவர்கட்கு அவமதிக்க முடியாதவனுக இருத்தல்.

விளக்கம் : வித்தகன் இருவகைத் திறமையு முடையவன். (39)

புகழ் — 236

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றுமை நன்று.

உரை : 6-8-11

தோற்றம் – தோன்றுதல். பகவானுடைய அவதாரம் போலே தோன்றின என்றபடி.

விளக்கம் : பெருமிதப் பிறப்பிற்கே தோற்றம் என்று பெயர். (40)

அருளுடைமை — 241

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

உரை : 10-1-2

அருளுடைமையே வேதார்த்தம்.

விளக்கம் : எச்சமயத்தின் வேதார்த்தமும் அதுவே யாகலாம் (41)

அருளுடைமை — 242

நல்லாற்றுன் நாடி அருளாள்க பல்லாற்ருல்
தேரினும் அஃதே துணை

உரை : 6-9-8

உன்னருள் ஒழிய வேறொன்றை அறியாத எனக்கு அருள வேணும். வையகத்தில் பல்லார் அருளும் பழுதேயன்றே.

விளக்கம் : பல்லார் அருள் – பல சமயத்தார் அருள் அல்லது பல கடவுளர் அருளுமாம். (42)

அருளுடைமை — 243

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்

உரை : 9-1-3

மக்கள் மனத்திலே இருள் புகும்படியான செயல்களை யுடைய அசுரக் கூடம்.

உரை : 1-4-6

அருளார் திருச்சக்கரம். சர்வேஸ்வரன் பக்கல் அருள் மறுத்தாலும் அருள் கூடுகட்டி நிற்குமிடமன்றே இது.

விளக்கம் : அருள் சேர்ந்த நெஞ்சம் என்பதனை 'அருள் கூடுகட்டி நிற்கும் இடம்' என்பது மிக்க அழகியதோர் கற்பனை யாகும். (43)

அருளுடைமை — 247

அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.

உரை : 8-7-5

இரண்டு தலைக்கும் நிரமாம் படியான தன் திருவருளை என் பக்கலிலே செய்து....

விளக்கம் : அருள் கடவுட்டன்மை யுடையது. (44)

வினைத் தூய்மை — 656

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

உரை : 5-9-6

உலக நடைக்கொத்த தல்லாத பாவத்தைச் செய்தேனென்பான் தன்னை வினையேன் என்றான்.

விளக்கம் : உலக நடைக் கொத்தவர் சான்றோர். **(45)**

தவம் — 261

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

உரை : 6-2-முன்னுரை

மனிதர்களுக்குத் துக்கம் வருகின்ற காலத்தில் அவர்களது துக்கத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமான துக்கத்தைத் தானடைகிறான்.

அறிவினா னாகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்னோய்போல் போற்றாக் கடை **[315]**

உரை : 1-3-5

பக்தி, ஞானத்தின் விசேடமாகையாலே தவம் என்ற சொல்லால் அதனைச் சொல்லுகிறார். அவனுக்குத் தவமானது ஞானத்தின் மயமாக விருக்கிறது என்கிற நியாயத்தாலே யாதல், இவனுடைய அன்பினையே தவமாக நினைக்கின்ற பகவானுடைய அபிப்பிராயத்தாலே யாதல்.

விளக்கம் : பக்தி அல்லது தவம் என்பது ஞானம்; அன்பு ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது.

உரை : 1-3-6

இவரும் பக்தியை வணக்குடைத் தவநெறி என்கிறார். பக்தியானது காதலியோடு கலக்கும் கலவிபோன்று இன்பமயமாக விருக்குமாதலின் அப்பகவன் தவநெறி யென்கிறார்.

விளக்கம் : பக்தி அல்லது பக்தியோகம் என்பதனையே இங்குத் தவம் எனக் குறிக்கிறார். **(46)**

தவம் — 262

தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது [பார்க்க : 269] (47)

தவம் — 269

கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு

உரை : 5–7–1

நோயற்ற நோன்பு இலேன் – கர்ம யோகத்தில் நிஷ்டையுடையேன் அல்லேன்.

உரை : 2–3–8

பல கல்பங்கள் கூடிக் கேட்டலாய் மனனமாய்ப் பாவனையால் இங்ஙனம் வரக்கூடியதான தவத்தின் பயனே.

தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது. [262]

விளக்கம் : தவம், நீண்ட முயற்சியின் பயனென்பது. (48)

வாய்மை — 299

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

உரை : 7–7–3

விளக்காகிறது தான் சிறிது நேரம் இருப்பதுமாய் ஓர் இடத்திலே இருப்பதுமாய் அன்றே இருப்பது. இது அங்ஙனமின்றிக்கே எப்போதுமாய் எங்கும் உண்டாய் இராநின்றது.

விளக்கம் : எப்போதும் எவ்விடத்தும் இருப்பது பொய்யா விளக்கு. (49)

இன்னா செய்யாமை — 315

அறிவினா னாகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக் கடை [பார்க்க : 25, 261]

உரை : 6-10-4

ஒருவனுக்குப் பிறர் துக்கத்தைக் கண்டால் சகிக்க முடியாத தன்மை வந்ததாகில் அவனுக்கு பகவத் சம்பந்தம் உண்டு என்று அறுதியிடலாம்.

உரை : 1-4-3

நீர்மை யுடையார்க்குத் தத்தமது இழவிலும் பிறருடைய இழவே நெஞ்சில் முற்படப் படுவதாம்.

விளக்கம் : இங்குக் குறளிலும்வி யாக்கியானம் ஓரடி முன்னே செல்கிறது. தன் இழப்பையும் பிறர் இழப்பையும் ஒக்க நினை-யாமல் தன்னுடைய தனினும் பிறர் இழப்பையே முற்படக் கருத-லால்.

உரை : 7-10-8

அநு கூலரிலே ஒருவ்னுக்கு ஒரு நன்மை உண்டானுல் அது தன்னதாக நினைத்திருக்கையும் கேடு வந்தால் அது தனக்கு வந்ததாக நினைத்திருக்கையுமாகிற இவ்விரண்டும் உண்டானுல் அன்றோ வைணவத்வம் உண்டாயிற்றுவது என்றபடி.

விளக்கம் ; பிறர் நன்மை தீமைகளைத் தன்னதாக நினைத்தல். (50)

துறவு — 345

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பும் மிகை

உரை :

பிரகிருத் சம்பந்தப்பட்ட பொருள்களில் தொற்று அற்றவாறே ஆத்மாவை அடைதலாகிற அதுவே மோக்ஷமாக இருக்கும். (51)

துறவு — 346

யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்.

உரை : 8-1-5

ஐஸ்வர்யத்தாலும் பெருமையாலும் மனிதர்களுக்குத் தேவர்கள் இருக்குமாறு போலேயாயிற்று. அந்தத் தேவர்களைக் காட்டில் சர்வேசுரன் இருக்கும்படி.

விளக்கம் : இறைவன் மக்களுக்கும் வானோர்க்கும் உயர்ந்தவன்.

உரை : 1-2-3

யான் எனது என்னும் தன்மைப் பெயர்களை நீர் நுமது என முன்னிலையாக அருளிச் செய்கிறார். இனி செருக்கினைப் புலப்படுத்து வதிலும் அச் சொற்களைத் தாம் தம் திருவாயால் கூறுதற் கஞ்சி நீர் நுமது என்கிறார் எனலுமாம். கூறின் நாக்கு வேம் என்பது கருத்து. நன்று என்னுடைமை என்னுமது. வேணுமாகில் தவிர்க்கிறேன், நான் என்னுமது தவிரும்படி. என்என்னில் இவன் இவன் அஹம் என்றால் இராவணன் முதலியோர் நான் என்றாற்போன்று பிறருடைய நாணைத் தவிர்த்துக் கொண்டன்றே யிருப்பது, சரீரத்தில் அஹம் புத்தி பண்ணிப் போகுமது தவிர வேணுமே.

விளக்கம் : யான் எனது என்பதன் பெயர்களைக்கூடச் சொல்ல லாகாதாம். (52)

மெய்யுணர்தல் — 356

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி [பார்க்க : 2]

உரை : 1-1-3

அந்தமில் இன்பத் தழிவில் வீடு.

விளக்கம் : வியாக்கியானம் குறட் கருத்தினையே வேறொரு வகையில் விவரிக்கின்றது. (53)

மெய்யுணர்தல் — 357

ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

உரை : 1-2-8

வெளிப் பொருள்களில் விருப்பத்தைச் செலுத்தும் மனத்தை உட்பொருளை நோக்கும்படிச் செய்தால் அது இறைவனை நினைத்தற்குக் காரணமாகும்.

உரை : 8-8-9
அஞ்ஞானம் கழிதலே மோட்சம்.

விளக்கம் : அற்றது பற்றெனில் வீடென்பார் ஓரிடத்தில். இங்கு ஞானமே வீடென்கிறார். (54)

ஊழ் — 377

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது

உரை : 6-3-4
சேதனனுடைய முற்பிறவியின் கர்மங்களுக்குத் தகுதியாக நடத்துவிக்குகின்ற காரணத்தாலே அதுவும் அவன் கிருபையாலே யாம் அத்தனை.

விளக்கம் : இங்கு ஊழும் இறைவனும் ஒன்றாகவே கருதப் படுகின்றன. (55)

கல்வி — 391

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

உரை : 4-8-11
இத்திருவாய் மொழியைக் கற்றவர்கள் காழ்ப்பேறின சம்சாரத்தினது கலக்கம் நீங்கிப் பரமபதத்திலே புகழ் பெறுவார்கள்.
விளக்கம் : கலக்கம் நீங்குதலே கசடறுதல் (56)

கல்வி — 395

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை [400]

உரை : 2-3-3
தாய் தந்தையர்கள் சரீரத்தை மட்டும் கொடுத்தார்கள். ஆசாரியன் மாணுக்கனைக் கல்வியால் வேறொரு சரீரத்தையடை

யும்படிச் செய்கிறுன். கல்வியாலாய பிறவியே சிறந்தது என்கிற படி.

விளக்கம் : வேறொரு சரீரத்தை யளிப்பதாற்ருன் அவர் 'உடையார்' ஆகிருர். (57)

கல்வி — 400

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை [பார்க்க : 395] (58)

கேள்வி — 412

செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்

உரை : 5–8–1

அமுதே – செவிக்கதுவாய் நாவிற்கு வேறொன்று தேட வேண்டாதபடி இனிய பொருளாயிருக்கை.

விளக்கம் : செவிக்குணவே அமுதம். (59)

கேள்வி — 418

கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி

உரை : 7–5–3

செவியில் தொளையுடையவர்கள் பகவத் குணங்களை கேட்கை யன்ருே செவிக்குப் பிரயோசனம். கேளாச் செவிகள் செவியல்ல. கேட்டோமே என்று நின்றது எறும்பு வளையைப் போன்றதே யன்ருே.

விளக்கம் ; கேள்வி இங்குப் பகவத் குணங்களாகின்றன. (60)

அறிவுடைமை — 425

உலகந் தழீஇய தொட்பம் மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு

உரை : 3-2-7

ஆத்மாக்கள் நித்தியப் பொருள்களாகவிருந்தும் ஞானம் வளர்தல் குறைதல்கட்குத் தகுதி யுடையனவாக விருக்கின்றன. இறைவன் அங்ஙனமல்லனுதலின் மெய்ஞ்ஞானச் சோதி என்கிறது.

விளக்கம் : இறைஞானமே மலர்தல் கூம்பலில்லாதது.

உரை : 3-1-8

இனி மலராது குவியாது என்பதற்குத் தன் சொரூபத்திற்குத் துல்லியமான ஒரே தன்மையை யுடைய திவ்விய மங்கள விக்கிரகத்தை யுடையவன் என்கிறபடியே, குறைதல் வளர்தலின்றி யிருக்கின்ற திருமேனியை யுடையையாய் என்று பொருள் கூறலுமாம்.

விளக்கம் : அவன் திருமேனி முழுவதும் ஞான சொரூபம். (61)

சிற்றினஞ் சேராமை — 458

மனநலம் மன்னுயிர்க் காக்கும் இனநலம்
எல்லாப் புகழுந் தரும்

உரை : 2-3-1

ஈண்டு உயிர் என்றது மனத்தினை.... மனிதனுக்கு மனமே பந்தங்கட்கும் மோட்சத்திற்கும் காரணம் என்கிறபடியே.

விளக்கம் : அடுத்து 'மன நலத்தினுகு மறுமை' யென்றலால் அது பிறவி வீடுகட்குக் காரணமென்பதனை விளக்கியவாறுயிற்று. வள்ளுவர் இங்கு மனத்தை உயிர் வளர்ச்சிக் காரணமாக்குகிறுர். (62)

சிற்றினஞ் சேராமை — 459

மனநலத்தா ருகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தி னேமாப் புடைத்து

உரை : 6-6-7

மனம் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணமாக நிற்கிறது. (63)

செங்கோன்மை — 543

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்

உரை : 8-3-2

அன்றிக்கு நால்மறைகளும் நூல்களும் எனப்பிரித்து நூல்கள் என்பதற்கு ஆகமம் முதலானவைகள் என்று பொருள் கூறலுமாம்.

விளக்கம் : இங்கு வேதங்களையும் ஆகமங்களையும் பிரித்து ஆகமங்களை நூல் என்ற பெயரால் அழைக்கிறார். (64)

கண்ணோட்டம் — 573

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னும்
கண்ணோட்ட மில்லாத கண்

உரை : 9-10-11

மலர் மணத்தோடே மலருமாறு போலே இசையோடே கூடிப் பாடின தமிழ்.

விளக்கம் : பண்ணும் பாடலும் பிரிக்க வியலாதன. (65)

வினைத்தூய்மை — 655

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று

உரை : 3-3-6

உத்தராகமாவது ஞானம் பிறந்த பின்பு அஜாக்கிரதையினால் செய்து போந்த தீவினைகள் ஞானம் பிறந்த பின்பும் விரோதியான சரீர சம்பந்தம் தொடர்ந்து வருகையினாலே பாவங்களிலே செல்லுவான். பின்னர் ஞானம் பிறந்து கடுக மீண்டும் முன்பு செய்ததற்கு நாம் என்ன செய்தோமானோம் என்று கழி விரக்கம் கொண்டு வருந்துவான்.

விளக்கம் : ஞானம் பிறந்த பின்னும் மனிதன் நிறைய திருந்த வேண்டிய நிலையுள்ளது. (66)

இடுக்கணழியாமை — 621

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்

உரை : 10-6-5

பரமபதம் கிட்டிற்று என்று கடுகுங்கால் வாங்கிப் போகப் பாராதே காண். பலநாட்கள் நம்மைக் குடிமக்கள் ஆக்கி எளிவரவு படுத்தின இவ்வுலக வாழ்க்கையைப் புரிந்து பார்த்துச் சிரித்துப் போருங்காண். உன்னை வென்றோமன்றோ என்று புரிந்து பார்த்துச் சிரித்துப் போரும். (67)

விளக்கம் : கடவுள் பக்தர் உலகியலைப் பார்த்து நகுதலைத் தெரிவித்தல்.

வினைத்திட்பம் — 667

உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து [பார்க்க : 26] (68)

குறிப்பறிதல் — 709

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்

உரை : 7-3-1

திருமேனிக்குத் திவ்விய ஆயுதங்கள் பிரகாசமாய் இருக்குமாறு போல ஆத்ம குணங்களுக்குத் திருக் கண்கள் பிரகாசமாய் இருக்கின்றபடி என்றது. அகவாயில் தண்ணளி யெல்லாம் கண் வழி யன்றோ தோன்றுவது என்றபடி. (69)

பொருள் செயல்வகை — 751

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்

உரை : 6-7-11

உண்டு என்ன உயிர் நிற்கும்படியாய் உடையவன் காலிலே எல்லாரும் விழும்படியாய் உடையவனுக்கு அறவிட்டு

ஜீவிக்கலாம் அறவிட்டு ஜீவித்தானென்று ஏசாதபடியாய் அவன் தனக்குப் பெருமதிப்பைக் கொடுப்பதாய் உடையவனுக்கு, ஒன்றுக்கும் கரைய வேண்டாதபடியாய் எல்லாம் தன்னைக்கொண்டே கொள்ளலாய் எல்லா ரசங்களும் போகங்களும் தன்னைக் கொண்டே கொள்ளலாய் இந்தவிதமான குணங்களையுடைத்தா யிருக்கையைப் பற்ற நிதி என்கிறது.

விளக்கம் : பொருள் அல்லது நிதியின் தன்மையை வியாக்யானம் அழகாக விவரிக்கின்றது. (70)

நட்பு — 782

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு

உரை :

பொறிகள் புலன்களோடு பொருந்தி யுண்ணும் இன்பமானது தொடக்கத்தில் அமிர்தம் போலாம். பரிணும நிலையில் விஷத்தைப் போலாம் என்பது.

இராச சுகம் என்று சொல்லப்படும்.

விளக்கம் : சிற்றின்ப மென்பது போகப் போகச் சிறுகு மின்பம் என்பதாகலாம். (71)

மருந்து — 944

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் [948]

இன்றுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு [987]

உரை : 1–4–முன்னுரை

சரணடைந்த பகைவன் ஆர்த்தனுயினும்சரி திருப்தனுயினும் சரி அவன் ரக்ஷிக்கத் தக்கவன் என்று கூறிய இறைவனை

......பசியில்லாத காலத்தில் உணவு நோயினைத் தருவதாம் எனப்படுதலால் நோயின் மூலத்தை அறியும் மருத்துவர்கள்.

விளக்கம் : பசித்து உண்டலுக்கும் நோயின் மூலத்தை அறிதலுக்கும் இங்குத் தொடர்பு காட்டுகிறார். (72)

மருந்து — 948

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் [பார்க்க : 944] (73)

சான்றாண்மை — 987

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு [பார்க்க : 944] (74)

சான்றாண்மை 989

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்

உரை : 8-3-10

கரை கண்டோர் முக்தர்.

விளக்கம் : கரைகாணுதல் ஆழியாதல். (75)

நன்றியில் செல்வம் — 1003

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை

உரை :

செல்வமாகிய புருஷாத்தம் ஒன்றனையே விரும்பி நன்மை தீமைகளை நிருபணம் பண்ணார் என்னுதல்.]

விளக்கம் : நன்மை தீமைகளை நிருபணம் பண்ணுதல் இசை வேண்டுதல். (76)

நன்றியில் செல்வம் — 1009

அன்பொரீஇ தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்

உரை : 4–9–4

அறிவின்மையால் மூடப்பட்டவனும் பேராசையாலே முன்பு அழிதற்குக் காரணமான அச் செல்வத்தை ஏற்றுக்கொள்வான். **(77)**

உழவு — 1033

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

உரை : 3–2–4

எல்லாம் பிறனுக்கு உரிமைப் பட்டிருப்பது துக்கம் என்றும் பிறரிடம் சேவிப்பது நாய்த் தொழில என்றும் அவற்றைச் சொல்லுகையாலே அதனைத் தாழ்ச்சி யென்றும்

விளக்கம் ; அடிமைத் தொழிலை அப்பட்டமாக விளக்கம் செய்கிருர். **(78)**

கயமை — 1080

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து

உரை :

கயவர் – பழகப் பழக அன்பு இல்லாதவர்களாய் இருப்பவர்.

விளக்கம் : அடியிலிருந்து கரும்பு தின்ருற் போன்றவர் போலும். **(79)**

தகையணங்குறுத்தல் — 1084

கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்

பெண்ணினுற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினுல்
காமநோய் சொல்லி இரவு [1280]

உரை : 1–4–3

கலவியாலுண்டான பரவசத் தன்மை யடங்கலும் நடையிலே தோற்றப் புறப்பட்டாற் போன்று இராநின்றது இவற்றின்

நடையழகும் என்பான் பெடை மணக்கும் மென்னடைய அன்னங்காள் என்கிறுர்.

விளக்கம் : பெண்ணின் (தலைவியின்) உறுப்பசைவு ஒவ்வொன்றும் தலைவனின் காம இன்பத்தினை கிளறவோ நினைவூட்டவோ செய்கின்றது. (80)

தகையணங்குறுத்தல் — 1085

கூற்றமோ கண்ணே பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து

உரை :
மடம் – பெண்மை முதலான ஆத்ம குணங்கள்.

விளக்கம் : இவை பெண்ணுக்குரிய ஆத்ம குணங்கள். (81)

தகையணங்குறுத்தல் — 1087

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்

***உரை :** 8-2-1*
அனுபவிக்கும் நாயகனுல் உண்டறுக்க வொண்ணுத பரப்பையுடைய முலையாதலின் தடமுலை யென்கிறது.

விளக்கம் : தடமுலைத் தன்மை படாமுலைக்கு மொக்கும். (82)

புணர்ச்சி மகிழ்தல் — 1102

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து

உரை :
ஈண்டுப் பிணி என்கிறது சரீர சம்பந்தங் காரணமாக வருகின்ற எல்லா நோய்களையும்.

விளக்கம் : பிணி நோய் இரண்டனுக்கும் வேறுபாடு காட்டுகிறுர். (83)

உரை :

மாமருந்து - பெரிய மருந்து. வியாதியினளவல்லாத மருந்து என்றது. என் சொல்லியவாறே எனின் மேற் காற்றுலே காட்ட நோய் தீருமாயிருக்கையைத் தெரிவித்தபடி. இனி மாமருந்து என்பதற்கு ஏக மூலிகையாய் எப்பொழுதும் உண்ணக்கூடியதாக இருக்கிற மருந்து என்னுதல். இனி பத்தியமில்லாத மருந்து என்னுதல்........

விளக்கம் : வியாக்கியானப் பிற்பகுதி மருந்திற்கு நல்ல விளக்கம் வருகிறது; (84)

புணர்ச்சி மகிழ்தல் — 1103

தாழ்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு

உரை :

பேரின்பத்துக்குத் தாமரைக் கண்ணனுலகு என்னக் கடவ தன்றே.

உரை : 9-9-3

பரமபதத்தை அடைந்தவனாக ஆகின்றேன் என்கிறபடியே இவளோடே கலந்தா னயிற்று. (85)

புணர்ச்சி மகிழ்தல் — 1104

நீங்கின் தெறூஉம் குறுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்

உரை :

இந்நோய் பரிகரிக்க வேண்டா. கைக்கூலி கொடுத்துக் கொள்ள வேண்டும் நோய் என்பாள் நல்நோய் என்கிறாள்.

விளக்கம் : குளிர்ச்சியான தீயை விலைகொடுத்து வாங்க வேண்டு-வதே யாகும். (86)

புணர்ச்சி மகிழ்தல் — 1108

வீழும் இருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு

உரை :

அவனுடைய சேர்க்கையாலே ஆயிற்று இவளுக்குத் தண்ணளி விஞ்சியிருப்பது. இவளுடைய சேர்க்கையாலே ஆயிற்று அவனுக்கு வாத்சல்யம் விஞ்சியிருப்பது. ஆக காதலாலே இருவர்க்கும் இரண்டும் குறைவற்றிருக்கும்.

விளக்கம் : காதலும் இன்பமும் இருவர்க்கும் எங்ஙனம் ஒரே யளவாக இன்றியமையாதன வென்பதை இங்கே விவரிக்கிறார். (87)

நலம் புனைந்துரைத்தல் — 1113

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு

உரை :

அந்நோக்குக்குத் தப்பினார்க்கும் தப்ப வொண்ணாதபடி யிருக்கின்ற புன்முறுவலைச் சொல்லுகிறது. அந்த முறுவலிலே அகப்பட்டாரை மீளாதபடி ஆழங் காற்படுத்தும் வடிவழகைச் சொல்லுகிறது.

விளக்கம் : முறுவல் முதலியவற்றின் கவர்ச்சியை வருணிப்பது. (88)

புணர்ச்சி மகிழ்தல் — 1109

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்

உரை :

மூன்றனையும் பிரயோசனமாகச் சொன்னார்கள் தமிழர்கள். இவற்றுள் ஊடலாவது எதிர்த்தலையோடு கூடினால் காரண மில்லாமல் வருவதொன்று. ஆக தான் என்னையொழிய குளித்தாய் என்னை யொழியப் பூவைப் பார்த்தாய் என் உடம்பு பூ நாறிற்று என்றாற் போல கூறுபவை. உணர்த்த லாவது உனக்கு என்று குளித்தேன் உனக்கு ஆம் என்று பார்த்தேன் உன் வரவுக்கு ஒப்பித்தேன் என்றாற் போல கூறுபவை. இவை யிரண்டற்கும் பின்னே நிகழ்வது கலவி,

விளக்கம் : முன்றனுக்கும் வியாக்கியானம் ஒரு அழகிய விளக்கத்தைத் தருகிறது. (89)

நலம்புனைந் துரைத்தல் — 1118

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி

உரை :
சீதாபிராட்டியால் பார்க்கப்பட்ட சந்திரனை நான் பார்க்கிறேன் ஆதலால் கண்ணின் கலவி யுண்டாயிற்று.

விளக்கம் : பரிமேலழகரும் மதியைப்பற்றி இதே கற்பனையைச் செய்கிறார். (90)

நலம்புனைந் துரைத்தல் — 1119

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி

உரை :
மலர்ந்த மலர்போன்று மிருதுவான வடிவினை. (91)

காதற் சிறப்புரைத்தல் — 1122

உடம்போ டுயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு

உரை : *4–9–6*
தேகத்திற்கு வேறுபட்டதா யிருப்பதொரு ஆத்ம வஸ்து உண்டு. (92)

நாணுத் துறவுரைத்தல் — 1136

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்

உரை :
மடல் ஊர்தல் என்பது தான் தலைவியைப் பிரிந்த ஆற்றாமை யாலே தலைவன் தலைவியை ஒரு படத்திலே எழுதி வைத்த

கண் வாங்காதே அவ்வுருவைப் பார்த்துக் கொண்டு........ தலைவியைப் பிரிந்தபோது தொடங்கிக் கண்ட போக உப கரணங்கள் எல்லாம் நெருப்பினாலே கல்பிக்கப் பட்டதாகத் தோற்ற .... தலைமயிரை விரிதலைக் கொண்டு திரியா நின்-றால் ....

விளக்கம் : மடலூர்தலைப் பற்றிய ஒரு நல்ல விளக்கம் கிடைத்துள்ளது. (93)

நாணுத் துறவுரைத்தல் — 1137

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது [1166]

உரை :

கடல்போன்று சிரமத்தைப் போக்குகிற காண்பதற்கினிய திருக் கண்களையுடையவனே .... ஆழியம் கண்ணா என் கையாலே திருக் கண்களாலே குளிர நோக்க வேண்டும் என்பது போதரும்.

விளக்கம் : காதல் கண்கள் குளிரும்; (94)

பிரிவாற்றாமை — 1151

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை

உரை :

அவர் இவ் வாற்றாமையாலே உண்ணாது உறங்காது ஒலிகடலை யூடறுத்துக் கொண்டு வரவிட யான் தண்ணீர்ப்பந்தலில் வந்ததும் சால் உருண்டு கிடத்தலைப் போன்று ஆக வொண்ணாதென்று நோக்கியிட்டு வைத்தேன். அத்தனை அவரைக் கண்ட பிற்றை நான் இருந்தேனாகில் காண். நீ இவ் வார்த்தை சொல்லுவது என்று கூறியது போன்று தலைவராகிய உம்பொருட்டுத் தங்கின் தங்கலாம் என்றபடி.

விளக்கம் : இங்குப் பிரிந்தபின் மீண்டுவரும் தலைவனுக்காக உயிர் வைத்திருக்கும் தலைவியின் நிலையை விவரிக்கிறார். (95)

படர்மெலிந்திரங்கல் — 1162

கரத்தலு மாற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலும் நாணுத் தரும்

உரை :

பரதந்திர ஜன்மமாகையினாலே முடிந்துபோகவும் பெறாமல் மிருதுத்தன்மையுடையவர்களாதலாலே பிரிவும் பொறுக்கப் படமாட்டாமல் இருக்கின்ற பெண்கள்.

விளக்கம் : நாணுத்தரும் என்பது பரதந்திரத் தன்மையைக் குறிப்பிடுகின்றது. (96)

படர்மெலிந்திரங்கல் — 1166

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது [பார்க்க : 1137] (97)

படர்மெலிந்திரங்கல் — 1169

கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா

உரை :

உட்கண்ணினைக்காதல் மறையா நின்றது. புறக்கண்ணை இரவு மறைத்தது.

விளக்கம் : அகக்கண்ணும் புறக்கண்ணும் மறைந்தன. (98)

கண்விதுப்பழிதல் — 1175

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்

உரை :

கலவியில் அவன் உறங்கவொட்டான். பிரிவில் விரக நோய் உறங்கவொட்டாது. ஆகையால் இவனுக்கு இரண்டு படியாலும் உறக்கம் இல்லாமையாலோ, (99)

பசப்புறுபருவரல் — 1183

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையும் தந்து

உரை :

சாயலொடு மணி மாமை தளர்ந்தேன். நான் சமுதாய சோபை யோடு நிறத்தின் நிறை வையும் இழந்தேன்.

விளக்கம் : இங்குச் சாயல் மாமை என்பதனை நன்றாக வருணிக்கிறார். (100)

தனிப்படர் மிகுதி — 1196

ஒருதலையான் இன்னாது காமங்காப் போல
இருதலை யானும் இனிது

உரை :

சிற்றின்பம் நுகர வேணும் என்று புக்கால் இரண்டு தலையும் ஒக்க ரசமான போகத்திற்கு ஒரு தலையிலே பொருளை நியமித்து போக காலம் வருமளவும லீலையாலே போது போக்கி போக காலம் வந்தவாறே புறப்படத் தள்ளி விடுவார்கள்.

விளக்கம் : இரு பக்கலிலும் இன்பம் சமமாகும் வழி சொல்லுகிறார். (101)

நினைந்தவர் புலம்பல் — 1210

விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி

உரை :

ஏ காற்றே ! என் அன்புக்குரிய சீதை எங்கிருக்கிறாளோ அங்குச் சென்று அச் சீதையைத் தொட்டு மீண்டும் வந்து என்னையும் தொடு என்பது போன்று.

விளக்கம் : காற்றும் மதியும் இருவர்க்கும் பொதுப் பொருள்களாகின்றன. (102)

கனவு நிலையுரைத்தல் — 1219

நனவினால் நல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர்

உரை :

கனவு என்றும் இந்திர ஜாலம் என்றும் முடிவு இல்லாத கலவியைச் சொல்லக் கடவது. (103)

பொழுதுகண்டிரங்கல் — 1227

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்

உரை :

இருள் தானே போகத்தை வளர்ப்பதே யன்றோ. (104)

பொழுதுகண்டிரங்கல் — 1228

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை

உரை :

மதம்பிடித்த யானையானது முன்னே தலைப்பறை கொட்ட வருமாறு போல வாடையை முன் நடக்கவிட்டுக் கொண்டாயிற்று மாலை வருகிறது.

விளக்கம் : குழலும் வாடையும் தூதுகள். (105)

நிறையழிதல் — 1258

பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை

உரை :

தன் ஆண் தன்மைக்குரிய செயல்களை யெல்லாம் காட்டி இவளுடைய பெண் தன்மையைக் கொண்டான்.

உரை :

கள்வன் பணிமொழி – இச் சாற்று வெள்ளத்துக்கு ஊற்றுவாய் காணும் எழுதிக் கொள்ளுகிற தாழ்ந்த பேச்சுக்கள். பிரி

வினை நினைத்துச் சொல்லுகிற வார்த்தை யாகையாலே மனத்தினை யழிக்கக்கூடியது தாய் அன்றோ இருப்பது.

விளக்கம் : மனத்தினை அழிக்கக் கூடியதா யிருப்பது பணிமொழி. (106)

குறிப்பறிவுறுத்தல் — 1280

பெண்ணினற் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு [பார்க்க : 1084] (107)

புணர்ச்சி விதும்பல் — 1283

பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணா தமையல கண்

உரை :

கலக்கிறபோது அவன் செய்த காரியங்கள் தன்னள வல்லாமல் பெரிதாய் இருத்தலின் இரும் கலவி என்கிறது.

விளக்கம் : பெரிதாய் இருத்தலே பெட்பவே செய்தல். (108)

நெஞ்சொடுபுலத்தல் — 1295

பெறாஅமை அஞ்சும் பெறின்பிரி வஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு

உரை :

புண்ணியத்தின் பலமான கலவி பாவத்தின் பலமான பிரிவு. (109)

ஊடலுவகை — 1323

புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து

உரை :

வன்னிலத்தில் மழை பெய்தால் பதமாமாறுபோல புணர்ச்சிக் காலத்தில் அவனுடைய சேர்க்கையால் மெல்கிக் குழைந்த-படி. (110)

திருக்குறளும்
திருப்பாவை வியாக்கியானமும்

கடவுள் வாழ்த்து — 5

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

உரை : 22

புகழ்ந்து - எங்களைத் தோற்பித்த குணங்களைச் சொல்லி....

விளக்கம் : குணத்தால் வருவதே புகழென்பது. (1)

கடவுள் வாழ்த்து — 9

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

உரை : 2

ஜகத் ரக்ஷணார்த்தமாக வந்து கண் வளர்ந்தருளுகையாலே குணத்தினேற்றத்தைச் சொல்லிற்றாகவுமாம்..........

விளக்கம் : எண்குணத்தான் ஏற்றம் சொல்லியது. (2)

வாழ்க்கைத் துணைநலம் — 60

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

உரை : 5

(அணிவிளக்கு) திருவாய்ப்பாடிக்கு மங்கள தீபமென்றுமாம்....

திருப்பாவை வியாக்கியானத்திற் காணப்பெறும் பகுதிகள் இங்குத் ‘திருக்குறளும் திருப்பாவை வியாக்கியானமும்’ என்ற தலைப்பின்கீழ்த் தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன.

விளக்கம் : மனைக்கு விளக்கம் மடவாள் என்ற கருத்தினை விளக்குவது வியாக்கியானம். (3)

அன்புடைமை — 72

அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

உரை : 3

பிறரை இம்சித்துத் தன் வயிற்றை வளர்க்க வேணுமென்றிருக்குமவன் அதமன். பிறரும் ஜீவிக்க வேணும் நாமும் ஜீவிக்க வேணும் என்றிருக்குமவன் மத்யமன். தன்னை அழிய மாறியாகிலும் பிறர் ஜீவிக்க வேணுமென்னுமவன் உத்தமன்.

விளக்கம் : அன்புடையவர் உத்தமர். (4)

பயனில சொல்லாமை — 195

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்

உரை : 1

சீர் – குணஸம்ருத்தி கோஸம்ருத்தி.

உரை : 1

சீர் – இவ்வூரில் ஐஸ்வர்யம் வழிந்துபோய் வேறோர் ஊர்க்கு வெள்ளமிடப் போந்திருக்கை.

விளக்கம் : குணச்சீரும் பொருட்சீரும் இணைந்தது சீர் என்பது. (5)

ஈகை — 228

ஈத்துவக்கு மின்ப மறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்

உரை : 3

ஓங்கி – பிறர் காரியஞ்செய்யப் பெறுகையாலே வளர்ந்தபடி யென்னவுமாம்.

விளக்கம் : உவக்குமின்பம் என்பதனையே வியாக்கியானம் 'செய்யப் பெறுகையாலே வளர்ந்தபடி' என்கின்றது. **(6)**

புகழ் — 236

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று

உரை : *21*

தோற்றமாய் நின்ற – என்றும் ஓலைப் புறத்திலே கேட்டுப் போகையன்றிக்கே எல்லாரும் காணலாம்படி அஜஹத் ஸ்வபாவனுய்க் கொண்டு அவதரித்து ஸகல மநுஷ நயன விஷயதாங்கதனானவனே

விளக்கம் : தோற்றம் என்பதை நன்கு விவரிக்கிறது. (7)

தவம் — 262

தவமும் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது.

உரை : 14

தவத்தவர் – சாத்விகாரண சந்நியாசிகள்....

விளக்கம் : தவம் சத்துவ குணத்தின் பாலது. (8)

மெய்யுணர்தல் — 353

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

உரை : 2

வையம் – இங்குத்தை வாழ்ச்சிக்குப் பரமபதமும் ஸத்ரிசமன்று. அங்கு மேன்மை காணலா மித்தனை போக்கி. நீர்மை கண்டனுபவிக்கலாம்படி யிருப்பது இங்கேயிரே. அங்கு போக்தாக்கள் அசங்குசிதரா யிருப்பார்கள். இந்த போக்யம் அசங்குசிதமாயிருக்கும். தயநீயருண்டான இடத்திலே யிரே தயாதி குணங்கள் அனுபவிக்கலாவது........

விளக்கம் : வையத்திற்கும் பரமபதத்திற்கும் தராதரம் காட்டுகிறார். (9)

மெய்யுணர்தல் — 356

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

உரை : 28

பகவத் ஞானத்துக் கடியான ஆத்ம ஞானமில்லை. தத்சத்ய மான பக்தியுமில்லை. பக்தியாவது ஞான விசேஷமாகை யாலே........ (10)

விளக்கம் : கற்றல் பக்தியாகலாம்.

கல்வி — 395

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

உரை : 2

ஐயமாவது – யோக்ய விஷயத்திலே குருவாக வியயிக்குமது. பிச்சையாகிறது பிரமசாரிகளுக்கும் சந்நியாசிகளுக்கும் இடுமது. இங்கு கிருஷ்ணனுபவம் பண்ணுவோம் என்பார்க்கு அவனை அனுபவித்தும் ததீயரை யனுபவிப்போம் என்பார்க் கவர்களை அனுபவிப்பதிலும் போகக் கடவோம்.

விளக்கம் ; உடையார் அங்குக் குருவாவார்.
ஐயம் – ஏங்கிக் கேட்டல். (11)

இடுக்கணழியாமை — 630

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு.

உரை : 27

கூடாரை வெல்லும் : அவர்களை வெல்லுமா போலே கூடினார்க் குத்தான் தோற்கு மித்தனை........

(சீர்) எல்லாரையும் வெல்லுவது குணத்தாலே.

விளக்கம் : வெற்றியில் ஒரு தோல்வியையும் நயம்படக் காட்டு கின்றது வியாக்கியானம். (12)

புல்லறிவாண்மை — 850

உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

உரை : 7

பேய்ப்பெண்ணே – அறிவில்லாதவளே....

விளக்கம் : அலகையும் பேயும் ஒன்ருகும். (13)

வரைவின் மகளிர் — 916

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்

உரை : 20

தகவன்று - தர்மமன்று....

விளக்கம் : தகுதி தகவு என்பன தர்மமே யாகும். (14)

சான்ருண்மை — 989

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்ருண்மைக்
காழி யெனப்படு வார்.

உரை : 4

ஆழி - கடல்போலே கம்பீரமான

விளக்கம் : ஆழியனைய கம்பீரமானவர் என்றபடி. (15)

தகையணங்குறுத்தல் — 1088

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணரும் உட்குமென் பீடு.

உரை : 18

ஓடாத (தோள்வலியன்) – பிரதி பக்ஷத்தைக் கண்டால் பிற்காலியாத தோள்வலியை யுடையவன். நாட்டில் நடையாடாத தோள்வலியன் என்னவுமாம்....

விளக்கம் : மற்றெதற்கும் ஓடாத வியாக்கியானம். (16)

நலம் புனைந்துரைத்தல் — 1115

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை

உரை : 20

சிறுமருங்குல் – மேலும் கீழுங் கொண்டு இடையுண்டு என்று அறியும்படி பயஸ்தாந மாயிருக்கை.

விளக்கம் : நுசுப்பின் தன்மையை அணிபெற விளக்குவது வியாக்கியானம். (17)

திருக்குறளும் பத்துப்பாட்டு உரையும்

கடவுள் வாழ்த்து — 1

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு

திருமுருகா — 1

உரை : உலகம் : ஒழுக்கம்; சீவான்மாக்கள்.

விளக்கம் : படைத்தல் காத்தல் அழித்தலாகிய ஒழுக்கம். உயிர்களும் மக்களும் இறைவனிடத்திருந்து தோன்றின என்பது குறிப்பு. (1)

கடவுள் வாழ்த்து — 2

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்

திருமுருகா — 4

உரை : நோன்றாள் : அறியாமையை உடைத்தற்குக் காரணமாகிய வலியினை யுடைய தாள்.

விளக்கம் : பரிமேலழகர் பிறவியை யறுப்பதெனவும் நச்சினார்க்கினியர் அறியாமையை அறுப்ப தெனவும் எழுதுவர். (2)

கடவுள் வாழ்த்து — 5

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

பத்துப்பாட்டு உரையிற் காணப்பெறும் பகுதிகள் இங்கு 'திருக்குறளும் பத்துப்பாட்டு உரையும்' என்ற தலைப்பின்கீழ்த் தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன.

பட்டினப் — 1

உரை : வசையில் புகழ் – குற்றங் கூறுதலில்லாத புகழ்.

விளக்கம் : பரிமேலழகர் குற்றங் கூறுதலில்லாத புகழ் என்பதனை உரையில் குறிப்பிடுகின்றார். (3)

வான்சிறப்பு — 13

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி

நெடுநல் — 1 - 2

உரை : பொய்யா வானம் – பருவம் பொய்யாத மேகம். (4)

வான்சிறப்பு — 15

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

மலைபடு — 1

உரை : திருமழை – செல்வத்தை யுண்டாக்கும் மழை.

விளக்கம் : செல்வத்தை யுண்டாக்குதலே எடுப்பது. (5)

வான்சிறப்பு — 18

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு

நெடுநெல்—89 - 92

உரை : சிறப்பு – தலைமை.

விளக்கம் : தலைமையொடு கூடிய பூசனை என்ற பொருள் மேன்மை யுடைத்து. (6)

நீத்தார் பெருமை — 23

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல் [38]

பட்டினப் — 42 - 50

உரை : புகழ் – இம்மைக்குப் புகழ். அறம் – மறுமைக்கு அறம்

விளக்கம் : எனவே புகழுக்கே யுரியது அறமன்று. மறுமைக் குரியதே அறமென்பது. (7)

நீத்தார் பெருமை — 24

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து

சிறுபாண் — 115

உரை : உரன் – அறிவு.

விளக்கம் : அறிவு உள் உரன் ஆகும். (8)

நீத்தார் பெருமை — 25

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி

பெரும்பாண் — 1

உரை : அகல் இருவிசும்பு – தன்னை யொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயம். (9)

நீத்தார் பெருமை — 30

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

திருமுருகா — 94 - 96

உரை : அந்தணர் – வேதாந்தத்தையே நோக்குவார்.

விளக்கம் : செந்தண்மை என்றதால் அந்தண்மை யுடையார் எனக் கொள்வதே பொருத்தம். அந்தத்தை நோக்குதல் இரண்டாவது பொருள். (10)

அறன் வலியுறுத்தல் — 31

சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு

பட்டினப் — 155 - 160

உரை : மையறு சிறப்பு – பிறப்பறுப்பதற்குக் காரணமான தலைமை. (11)

அறன்வலியுறுத்தல் — 38

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். [பார்க்க : 23] (12)

இல்வாழ்க்கை — 46

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்

குறிஞ்சிப் — 23

உரை : ஆற்றின் – அறத்தொடு நிற்பின்.

விளக்கம் : ஆற்றிற்கும் அறத்திற்கும் தொடர்பு கண்டனர் தமிழர். (13)

இல்வாழ்க்கை — 47

இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

குறிஞ்சிப் — 245, 246

உரை : இயல்பு நினைஇ – இல்லற நிகழ்த்துதலே நல்லொழுக்கமென்று.

விளக்கம் : இயல்பென்பதே இல்லறமென்பது வியாக்கியானம். (14)

வாழ்க்கைத் துணைநலம் — 51

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

குறிஞ்சிப் — 31

உரை : துணை - சுற்றத் துதவிகள். (15)

வாழ்க்கைத் துணைநலம் — 54

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்

திருமுருகா — 6

உரை : மறுஇல் கற்பு - மறக் கற்பில்லாத அறக் கற்பு.

விளக்கம் : ஆறிய கற்பு அறக்கற்பென்பன மறுவில் கற்புத்தான் போலும். அறக் கற்பு மறக் கற்பு என்ற பிரிவு உரையாசிரியர்கள் காலத்த தாகலாம். (16)

வாழ்க்கைத் துணைநலம் — 59

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை

முல்லைப் — 53, 54

உரை : ஓங்குநடை - பெரிய ஒழுக்கம். (17)

புதல்வரைப் பெறுதல் — 67

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

மதுரைக் — 492

உரை : அவையம் - திரள்.

விளக்கம் : திரள் இங்குச் சமூகமுமாம். (18)

அன்புடைமை — 72

அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

குறிஞ்சிப் — 248

உரை : நல்குஞ் செலச் சாஅய் – தன்னலம் போம்படி நுணுகி. (19)

அன்புடைமை — 74

அன்பீனும் ஆர்வ முடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு

மலைபடு — 170 - 188

உரை : ஆர்வம் – ஆசை

மதுரைக் — 489

உரை : ஆர்வம் – பற்றுள்ளம்.

விளக்கம் : பற்றுள்ளம் என்பதும் தொடர்புடையார் மாட்டுச் செய்யும் அன்பு எனப் பரிமேலழகர் எழுதுவதும் ஒன்றே யாகும். (20)

இனியவை கூறல் — 91

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

சிறுபாண் — 91 - 93

உரை : ஈரம் – அருள்.

விளக்கம் : ஈரம் – அன்பு என்கிறார் பரிமேலழகர். (21)

இனியவை கூறல் — 92

அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்

உரை : முகனமர்ந்து என்றார் அவன் தெய்வத் தன்மையைக் கண்டபொழுது அச்சம் பிறவாது நிற்க வேண்டுமென்றற்கு.

விளக்கம் : விருந்திற்கும் வரவேற்போரது செல்வம் தலைமை பற்றிய அச்சமாகாது.

உரை : முகனமர்ந்து – அகமலர்ச்சி தோன்ற முகம் பொருந்தி.

விளக்கம் : வியாக்கியானம் அகத்தோடு சேராத முகமலர்ச்சி யென ஒன்றில்லை யென்கிறது. (22)

செய்ந்நன்றியறிதல் — 108

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

உரை : செய்ந்நன்றி யறிதல்– பிறர் தனக்குச் செய்த நன்றியை யறிந்து அவர்க்குத் தானும் நன்மை செய்தல்.

விளக்கம் : நன்றியைத் திருப்பிச் செய்தலை இங்கு வற்புறுத்துகிறார். (23)

நடுவுநிலைமை — 118

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி

திருமுருகா — 98 - 100

உரை : சமம் – நடுவு நிலைமை. (24)

வெஃகாமை — 180

இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னும் செருக்கு

மலைபடு — 544

உரை : விறல் – ஐம்பொறிகளைத் தன் வசமாக்கின வெற்றி.

விளக்கம் : இஃது அகவெற்றி (உண்மைவெற்றி) யாகும். (25)

பயனில சொல்லாமை — 195

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்

திருமுருகா — 126

உரை : சீர் – அழகு,

திருமுகா — 220

உரை : சீர் – தலைமை.

விளக்கம் : சீர் – அழகு என்பது புதுப்பொருளாகும். (26)

ஒப்புரவறிதல் — 211

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு

உரை : வரையாது கொடுத்தல் – தனக்கென ஒன்றும் வரைந்து வையாது கொடுத்தல்.

விளக்கம் : இஃதொரு நல்ல பொருள். (27)

ஈகை — 226

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

சிறுபாண் – 140

உரை : அழி பசி – அறிவு முதலியன அழிதற்குக் காரணமான பசி.

விளக்கம் : மனிதரைப் பற்றிப் பேசுகையில் அறிவு அழிக்கும் பசியென எழுதியது மிகவும் பொருத்தமாகும். (28)

புகழ் — 234

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு

திருமுருகா — 62, 63

உரை : புலம் – மெய்ஞ்ஞானம்.

விளக்கம் : தேவர்களுடன் இங்கு மெய்ஞ்ஞானியரும் புலவராகின்றனர். (29)

புகழ் — 336

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று

உரை : தோன்றல் - உயர்ச்சி. (30)

அருளுடைமை — 242

நல்லாற்றான் நாடி யருளாள்க பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை

திருமுருகா — 2

உரை : பலர்புகழ் - எல்லாச் சமயத்தாரும் புகழும்....

விளக்கம் : ஒன்றையொன் றொவ்வாத மதவேறுபாடுகள் என்று இங்குப் பரிமேலழகர் எழுதுகிறார். (31)

தவம் — 266

தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு

திருமுருகா — 89

உரை : தம் தொழில் - தவத்தொழில்.

விளக்கம் : எனவே உயிருக்குரிய தொழில் தவமே என்பது கருத்து. (32)

வெகுளாமை — 304

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவே பிற

திருமுருகா — 86

உரை : நகை - ஒளி.

விளக்கம் : உடலில், உள்ளத்தில் உள்ள ஒளியாகலாம். (33)

வெகுளாமை — 306

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்

திருமுருகா — 135

உரை : சினம் – கோபத்தின் பின்னுகச் சிறு பொழுது நிற்பது சினம்.

விளக்கம் : இது செற்றம் போன்றே பொருள் விரிவுடையது. சினம் – கோபம் நீட்டித்து நிற்கின்றது சினம். (34)

நிலையாமை — 338

குடம்பை தனித்தொழிய புட்பறந் தற்றே
உடம்பொ டுயிரிடை நட்பு

குறிஞ்சிப் — 228

உரை : புள்ளினம் ஒலிப்ப – பறவைகள் குடம்பைக் கண்ணே நின்றுர வாரிக்க.

விளக்கம் : வியாக்கியானம், குடம்பையைக் கூடு என்கிறது. (35)

ஊழ் — 377

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது

பட்டினப் — 227

உரை : ஊழின் எய்தி – முறையாலே பெற்று. (36)

இறைமாட்சி — 387

ஈன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு

உரை : ஒருகுடையான் ஒன்று கூற – ஒருகுடையானும் தனது ஆணையே உலகம் கூறும் படியாகவும். (37)

கல்வி — 395

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றுர்
கடையரே கல்லா தவர்

உரை : ஏக்கறுதல் – இத்தன்மை பெற்றிலேமே யென்று விரும்புதல். (38)

கல்வி — 396

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு

பட்டினப் — 51

உரை : கேணி - சிறிய குளம். (39)

கேள்வி — 420

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்

முல்லைப் — 55

உரை : மாக்கள் - அறிவில்லாதோர்.

விளக்கம் : " விலங்கொடு மக்கள் " என்ற விடத்துப் புலனாகின்றது. (40)

கேள்வி — 427

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்

கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு [981]

உரை : அறிந்தோர் - சான்றோர்; அறிவுடையார்.

விளக்கம் : அறிவின்றி சான்றாண்மை இல்லை. (41)

சிற்றினஞ் சேராமை — 451

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமா சூழ்ந்து விடும்

உரை : சிற்றினம் - அறிவும் ஒழுக்கமும் இல்லாத மாக்கள்.

விளக்கம் : இப்பொழுது மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள வேறுபாடு தெரிகின்றது. (42)

தெரிந்து வினையாடல் — 512

வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை

பட்டினப் — 190

உரை : வாரி - பொருள். (43)

தெரிந்து வினையாடல் — 519

வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்குந் திரு

சிறுபாண் — 157

உரை : திரு - அமைதி.

விளக்கம் : கண்டாரால் விரும்பப்படும் தன்மைகளுள் அமைதியும் ஒன்று. (44)

கொடுங்கோன்மை — 554

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு

பட்டினப் — 163

உரை : கூழ் – நெல்லுமரிசியும். (45)

இடுக்கணழியாமை — 630

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு

மலைபடு — 73

உரை : இகழுநர் பிணிக்கும் ஆற்றல் - தன்னை இகழ்ந்திருக்கும் பகைவரை அரசு கெடாமற் சுருக்கும் அறிவின் வலியும். (46)

சொல்வன்மை — 642

ஆக்கமும் கேடும் அதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு

பட்டினப் — 191
உரை : ஆக்கம் - நுகரும் பொருள். (47)

வினைத்தூய்மை — 660

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று

மதுரைக் — 112
உரை : சலம் - மாறுபாடு. (48)

நாடு — 734

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு

பெரும்பாண் — 253
உரை ; பசி - மிடி.
குறிஞ்சிப் 1 - 12
உரை : வீவரு கடுநோய் - மருந்துகளாற் கெடுத்தற்கரிய கடிய நோய்.

விளக்கம் : நீங்காத கடுநோயெனப் பரிமேலழகர் எழுதுகிறார். (49)

பொருள் செயல் வகை — 753

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

நெடுநல் — 77
உரை : தேஎம் - திசை.

விளக்கம் : தேயம் - திசை என்ற பொருளை எந்தத் திருக்குறள் உரைகாரரும் கூறவில்லை. (50)

நட்பாராய்தல் — 792

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்

குறிஞ்சிப் — 21

உரை : ஆய்ந்த - பெருமையும், உரனும், அச்சமும், நாணமும் நுணுகிய. (51)

படைச்செருக்கு — 774

கைவேல் களிற்றெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்

திருமுருகா — 61

உரை : எக்காலமும் போர் செய்தலிற் செவ்வேல் என்ருர். (52)

தீ நட்பு — 811

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது

திருமுருகா — 77

உரை : பருகுவன்ன - கண்ணுற் பருகுந் தன்மையொத்த. (53)

பேதைமை — 840

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்ருல் சான்ருேர்
குழாஅத்துப் பேதை புகல்

பட்டினப் — 53

உரை : பள்ளி – அமண்பள்ளி, பௌத்தப்பள்ளி.

விளக்கம் : சமயப்பள்ளிகள் என்ற உரையை யாரும் எழுதவில்லை. (54)

பகைத்திறந் தெரிதல் — 880

உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்

